# நேநோ



சாரு நிவேதிதா

நேநோ

நேநோ

சாரு நிவேதிதா

# மின்நூலாக்கம் முரளிதரன்

எழுத்து பிரசுரம்

நேநோ

Nano © 2018 Charu Nivedita

First Edition : 2008
First Edition by Ezutthu Prachuram : December 2018
(An imprint of Zero Degree Publishing)
ISBN: 978 93 87707 53 5
Title No. EP: 26

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, psychic, or otherwise, without the prior permission of the publishers.

**Zero Degree Publishing**
No. 55(7), R Block, 6th Avenue,
Anna Nagar,
Chennai - 600 040

Website : www.zerodegreepublishing.com
E Mail : zerodegreepublishing@gmail.com
Phone : 98400 65000

*Cover Art* . Rishi
*Cover Design & Layout:* Creative Studio

அய்யனார் விஸ்வநாத்துக்கு...

# காற்றில் பறந்த சிறகு

இந்தத் தொகுப்பிலுள்ள சிறுகதைகளை இப்போது மீண்டும் ஒருமுறை படித்துப் பார்க்கும் போது கால எந்திரத்தின் மூலம் இருபத்தைந்து ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று விட்ட குதூகலமும் உவகையும் ஏற்படுகிறது. என்னுடைய இயக்கத்திற்கு வழிவகுத்துக் கொடுத்த *கணையாழி, மீட்சி* போன்ற பத்திரிகைகளை இத்தருணத்தில் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். *முள்* என்ற சிறுகதை வெளிவந்து இப்போது முப்பது ஆண்டுகள் ஆகின்றன. அதற்கு முன்பும் பல கதைகளை நான் எழுதியிருந்தபோதும் அதையே என்னுடைய முதல் கதையாகக் கொள்ளலாம். முதல் கதையிலேயே என்ன மாதிரியான ஒரு கரு.

என்னுடைய நாவல்கள் பேசப்பட்ட அளவுக்கு சிறுகதைகள் பேசப்படவில்லை. ஒன்றிரண்டு பேரைத் தவிர யாரும் படித்திருப்பார்களா என்றும் தெரியவில்லை. *கர்னாடக முரசும் நவீன தமிழ் இலக்கியத்தின் மீதான ஓர் அமைப்பியல் ஆய்வும், நேநோ, the joker was here* போன்ற கதைகள் உலக மொழிகள் எவற்றிலேனும் எழுதப்பட்டிருக்கிறதா என்பது கூடச் சந்தேகம்தான்.

நான்–லீனியர் கதைகளான இவை தமிழ் அரசியல், சமூகம், கலாச்சாரம் ஆகியவற்றின் மீது வைக்கப்பட்ட மிகக் கடுமையான விமர்சனங்களை உள்ளடக்கியது. நான் லீனியர் என்பது எழுத்து உத்தியோ வடிவ சோதனையோ அல்ல. அது ஒரு நுண் அரசியல் சார்ந்த வாழ்வியல் தத்துவம். மனித வாழ்வின் மீது அக்கறை கொண்ட எவ்வளவு சிறந்த அரசியல் நெறியாக இருந்தாலும் அங்கே அதிகாரம் என்பது சேகரமாகி அடக்குமுறைக்கு வழி வகுத்துவிடுகிறது. அதே போல், மனித உறவுகளிலும் அன்பு, பாசம், காதல் என்று எத்தனை விதமாகப் பெயர் சொல்லி அழைத்தாலும் அதனூடே அதிகாரமானது மாறு வேடத்தில் புகுந்துவிடுகிறது.

நான்–லீனியர் முறையில் கதை எழுதுவதற்கு ஒருவர் இவ்வாறான வாழ்க்கையும், தத்துவப் பார்வையும் கொண்டிருக்க வேண்டும். கேத்தி ஆக்கரும், வில்லியம் பர்ரோஸும் ஏன் தங்கள் உடலையே பரிசோதனைக்கூடமாக மாற்றிக்கொண்டார்கள்?

அதிகாரம் என்பது நமது வாழ்வின் அத்தனை அம்சங்களிலும் மிக நுண்மையாக ஊடாடி இருக்கிறது. மொழியிலிருந்தும், சிந்தனையிலிருந்துமே அது துவங்குகிறது. அந்த அதிகாரக் கட்டமைப்பைக் கூறுகூறாகப் பிரித்துப் போடுவதே நான்லீனியர் எழுத்து முறை. டொனால்ட் பார்த்தல் மே, ரொனால்ட் சுகேனிக் என்று உலக இலக்கியத்திலேயே இதைச் செய்தவர்கள் ஓரிரண்டு பேர்கள்தான்.

நாகார்ச்சுனனும் நானும் இந்தக் களத்தில்தான் இயங்கினோம். இது வெறும் இலக்கியம் சார்ந்த விஷயம் அல்ல; இது ஒரு அரசியல் செயல்பாடு. பின்னர் அந்த அரசியல் காரணங்களாலேயே நாங்கள் பிரிந்தோம். இலக்கிய ரீதியாக மிகப் பின் தங்கிய நிலையிலும், கட்டுப்பெட்டித் தனமான வாழ்வியல் அணுகுமுறையும் கொண்ட தமிழ் இலக்கிய உலகத்தில் இந்தக் கதைகள் விவாதிக்கப்படாததில் எனக்கு எந்த ஆச்சரியமும் இல்லை. இலக்கியவாதிகள் அறுபதாம் கல்யாணம் (சஷ்டியப்த பூர்த்தி) செய்து கொள்வதும், சக எழுத்தாளர்கள் அந்த அறுபதைக் கடந்த எழுத்தாளரின் காலில் விழுந்து ஆசி பெற்றுக் கொள்வதுமான இந்தச் சூழலில்

இன்னும் முப்பது ஆண்டுகள் சென்றாலும் கூட இது நடக்குமா என்று தெரியவில்லை. மற்றொரு விஷயம், இந்த நான்–லீனியர் கதைகளை வேறு மொழியில் மொழியாக்கம் செய்வது கூட கடினம். *கர்னாடக முரசு* கதையை வாய் விட்டுப் படித்துப் பார்த்தேன். ஒரு நாடக நிகழ்வைப் போல் இருந்தது அது.

மற்ற சிறுகதைகளைப் பற்றியும் சொல்ல நிறைய இருக்கிறது. நான் பிறந்து வளர்ந்த ஊரை விட எனது வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய ஊர் தில்லி. எனக்கு ஊர்களின் மீதோ மனிதர்களின் மீதோ எவ்வித உணர்வுபூர்வமான ஈடுபாடும் இல்லை என்றே நினைக்கிறேன். இருந்தாலும் அந்த மண்டி ஹவுஸ், பாரகம்பா சாலை, பெங்காலி மார்க்கெட், பிரகதி மைதான் போன்ற இடங்களை ஒரு நவம்பர் மாத மாலையில் பார்க்க வேண்டும் என்றே மனம் அவாவுறுகிறது. கர்ஸன் ரோட்டில் இருந்த இப்போது (கஸ்தூர் பா காந்தி மார்க்) தி. ஜானகிராமனின் வீட்டில் நீண்ட நேரம் அவரோடு உரையாடியதும், கூச்ச சுபாவம் மிக்க ஆதவனோடு பிரகதி மைதானில் பேசிக்கொண்டிருந்ததும் ஞாபக அடுக்குகளில் பதிந்து கிடக்கின்றன. அதேபோல் க.நா.சுவும், வெங்கட் சாமிநாதனும், டாக்டர் செ. ரவீந்திரனும், எப்போதேனும் சந்திக்கும் இந்திரா பார்த்தசாரதியும் மறக்க முடியாதவர்கள்.

*திர்லோக்புரி* என்று ஒரு கதை. என்ன சொல்வது? படித்துப் பார்த்துவிட்டு நீங்கள் தான் சொல்ல வேண்டும். *உன்னத சங்கீதம்* – என்னுடைய நாவல், சிறுகதை என்று எல்லாவற்றிலுமே எனக்கு ஆகப் பிடித்தமான கதை இது. என்னுடைய உச்சபட்சமான சிருஷ்டித் திறனை வெளிப்படுத்திய கதை. ஐரோப்பாவில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்களிடையே வெகுவாக விவாதிக்கப்பட்டு, கண்டிக்கப்பட்டு, ஒரு சிலரால் சிலாகிக்கப்பட்டதுமான கதை. தமிழ்நாட்டில் யாருக்கும் தெரியாது.

இந்தக் கதைகளையெல்லாம் படித்துப் பார்க்கும்போது ஏதோ சென்ற நூற்றாண்டுக் கதைகளைப் படிப்பது போல் தோன்றுகிறது. மண்ணெண்ணெய் ஸ்டவ்வில் திரி போட்டு விரல்கள் கொப்புளித்துப் போவதை இன்று சென்னையிலேயே

மாதச் சம்பளமாக ஒரு லட்ச ரூபாய் வாங்கும் இளைஞர்கள் அறிவார்களா? ஆமாம், அந்த நூதன் ஸ்டவ் இன்னமும் இருக்கிறதா என்ன? இந்தக் கதைகளை கணையாழியில் வெளியிட்டு என்னை உற்சாகப்படுத்தியவர் அசோகமித்திரன். அவற்றை சிலாகித்து அவர் எழுதிய போஸ்ட் கார்டுகளை பல ஆண்டுகளாக பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். இன்னமும் என்னுடைய புத்தகங்களோடுதான் இருக்க வேண்டும். ஐம்பது ஆண்டுகள் சென்று யார் கையிலாவது கிடைக்கலாம்.

சென்னை-4 — சாரு நிவேதிதா

19.12.2008

# உள்ளே


1. முள் ........ 11
2. பிரஸ்ஸில் இருக்கிறது ........ 23
3. கிரிக்கெட்டை முன்வைத்து புத்திஜீவிகளுக்கு ஒரு முட்டாள் சொல்லிக்கொண்டது ........ 36
4. கர்நாடக முரசும் நவீன தமிழ் இலக்கியத்தின் மீதான ஓர் அமைப்பியல் ஆய்வும் ........ 50
5. The joker was here ........ 72
6. நேநோ ........ 80
7. நட்சத்திரங்களிடமிருந்து செய்தி கொண்டு வந்தவர்களும் பிணந்தின்னிகளும் ........ 90
8. சைக்கிள் ........ 110
9. சிதைவு ........ 116
10. இணைகோடுகள் ........ 123
11. கண்மணிக்கு ஒரு கடிதம் ........ 129
12. கண்ணிநுண் சிறுத் தாம்பு ........ 140
13. பிள்ளைப்பூச்சி ........ 148
14. ரங்கையன் கோட்டை ........ 164
15. என் முதல் ஆங்கிலக் கடிதம்! ........ 171
16. உடல் ........ 185
17. மயக்கம் ........ 193
18. உள்முகம் ........ 199
19. நடிகை சுஷ்மாவுடன் ஒரு பேட்டி ........ 207
20. நாகமணி ........ 220
21. ஷங்கர்லால் இசை விழா ........ 229
22. காஞ்சனா ........ 236
23. பாக்தாத் பேரழகி (அல்லது) இட்டி மிளகாய்ப்பொடி செய்வது எப்படி? ........ 244
24. சிக்கனம் ........ 260
25. பின்தொடரும் நிழல் ........ 267
26. கையருகே ஆகாயம் ........ 272
27. வெளியிலிருந்து வந்தவன் ........ 278
28. அவ்வா ........ 285
29. உன்னத சங்கீதம் ........ 294
30. காற்றில் கலந்த வார்த்தைகள் ........ 311

# முள்

இன்றோடு பதினஞ்சு நாளைக்கு மேல் இருக்கும் தொண்டையில் இந்த முள் சிக்கி. மீன் சாப்பிட்ட போதுதான் சிக்கியிருக்க வேண்டும். இதுக்குத்தான் நான் ருசியா இருக்கிற மீனாயிருந்தாலும் முள் மீனாக இருந்தால் தொடுவதேயில்லை. சில மீன்களில் நடுமுள் மட்டும் இருக்கும், கோழிச் சிறகு மாதிரி. சில மீன்களில் சதைக்கு உள்ளேயெல்லாம் ஒரே முள்ளாயிருக்கும். கார்த்திகை வாளை, முள்ளு வாளை எல்லாம் இந்த வகையறாதான். ஆனால் இந்த இரண்டு ரகத்திலும் சேராத ஒரு மீன்... கோலா மீன். இதுக்கும் நடுமுள் உண்டு. அதோடு பாதி பாகம் சதையோடு முள் கலந்தும், பாதி வெறும் சதையாகவும் இருக்கும். இந்தக் கோலா வருஷம் பூரா கிடைத்துக்கொண்டிருக்காது. வைகாசி, ஆனி மாசங்களில் மட்டும்தான் கோலா... ஆடி வந்தாலே கோலா குறைய ஆரம்பித்து விடும். இதுக்குக்கூட ஒரு சொல் வழக்கு... 'ஆடி மாசம் வந்தா கோலா ஆத்தா வூட்டுக்குப் போய்டும்.'

கோலா மீன் பிடிப்பதே ஒரு அலாதி... அதைப் பார்க்க வேண்டு மென்று கட்டுமரத்தில் ஒருமுறை போயிருக்கிறேன்... கோலா பிடிக்க லாஞ்சில் போவது கிடையாது... காரணம், கோலா

பிடிக்க குறைந்தபட்சம் இருபது மைலிலிருந்து அறுபது மைல் வரையிலும் கூட போவது உண்டு... லாஞ்ச் என்றால் இத்தனை மைல்கள் போக டீஸல் செலவு...?

ஆறு அல்லது ஏழு பேர் ஒரு கட்டுமரத்தில் காலை மூன்று மணிக்குக் கிளம்பினார்கள் என்றால் வருவதற்கு இரண்டு நாள் கூட ஆகும்! ஒரு தடவைக்கு மூணாயிரத்திலிருந்து இருபதாயிரம் மீன்கள் வரை அகப்படும். கட்டு மரத்திலேயே தாழை, புல் தழை இவற்றையும் எடுத்து வந்து விடுவார்கள்... இதை ஒரு மரச்சதுரத்தில் பிணைத்துக் கட்டி ஒரு சின்ன பசுந்தழைத் தீவு மாதிரி தண்ணீரில் மிதக்க விட்டு விடுவார்கள்... கோலா இந்தப் பச்சையைப் பார்த்ததும் கூட்டம் கூட்டமாகத் துள்ளி வரும், பசுந்தழையில் முட்டையைப் பீச்ச... சில சமயம் இந்தத் 'தீவுகளை' கரைக்கு எடுத்து வந்த பிறகும் கூட அவற்றில் தங்கியுள்ள இந்த முட்டைகளைப் பார்க்க முடியும். இன்னொன்று... கோலாவை வலை 'வீசிப்' பிடிப்பது இல்லை. இதுதான் கண்ணால் பார்த்துப் பிடிக்க முடிகிற மீன்... கோலாவுக்குத் தனி வலை.. அந்த ஏந்து வலையை வைத்துக்கொண்டு அப்படியே ஏந்தி ஏந்திப் போட்டுக்கொள்ள வேண்டியதுதான்... இந்த வலையைத்தான் கச்சா வலையென்று சொல்வது...

சில சமயங்களில் ஒரு கோலா கூடக் கிடைக்காமல் போவதும் உண்டு. இதுக்குக் காரணம் 'பர்லா'... இந்தப் பர்லா மீன் வந்தாலே அந்த இடத்துக்கு ஒரு கோலா கூட வராது... மற்றபடி அமாவாசை நாளில் கோலா அதிகம் கிடைக்கும் என்று ஒரு நம்பிக்கை. பொதுவாக கோலா சீஸன்தான் இவர்களின் 'அறுவடைக் காலம்'...

கோலாவுக்காக ஒரு தடவை கடலுக்குச் சென்றால் ஒரு ஆளுக்கு முன்னூறு ரூபாய்கூடக் கிடைக்கும். ஆனால் இதை விட அபாயமான வேலை உலகத்தில் ரொம்பக் குறைச்சல்... முன்னேயெல்லாம் கோலா பிடிக்கப் போகிறவர்களுக்கு 'வாய்க்கரிசி' போட்டு அனுப்புவார்களாம். இப்போதெல்லாம் அந்தப் பழக்கம் கிடையாது.

இந்த வைகாசி வந்தாலே போதும்... எல்லார் பேச்சிலும்

ரொம்ப அடிபடுவது கோலாதான்.... கொஞ்சம் வேகமா காற்று அடித்தால் கூடப் போச்சு... 'சே... சே.... என்னா காத்து... முகம் வாயெல்லாம் ஒரே மண்ணு... சனியன் புடிச்ச கோலா காத்து' என்று அலுத்துக் கொள்வார்கள்.

அத்தையும், மாமாவும் வந்து இன்னையோட பதினஞ்சு நாளா ஆவுது...? பதினஞ்சு நிமிஷமா ஓடிப்போச்சு... எனக்கு இந்த முள் தொண்டையிலெ சிக்கியதே இவர்கள் வந்த அன்றைக்குத்தான்... மாமா வந்ததுமே நைனா மார்க்கெட் கிளம்பிட்டாங்க.... மீன் இல்லாவிட்டால் சாப்பாட்டையே தொடமாட்டார் மாமா... அதுவும் கோலா மீன் என்றால் அவருக்கு உயிர்...

அவரோடு அன்று சாப்பிட்டபோது சிக்கியதுதான்... அதுக்குப் பிறகு மீனையே தொடவில்லை நான்... இந்த முள்ளை நினைத்தால் மீன் ஆசையே விட்டுப்போய்விடுகிறது... என் அத்தை மீனெல்லாம் சாப்பிடுவதில்லை... எப்பவாவது எங்கள் கட்டாயத்துக்காக சாப்பிடும் போதெல்லாம் சாப்பிட்ட பிறகு வாந்தி எடுக்கவும் தவறுவதில்லை... மாமாவுக்கு நேர் எதிர் என் அத்தை... படிப்பது என்றால் அத்தைக்குக் கொள்ளை ஆசை... சமையல் முடிந்து விட்டால் கையில் புத்தகம்தான்... மாமாவோ ஏதாவது படிக்கிறார் என்றால் அது வாரா வாரம் ராசிபலன் மட்டுமாகத்தான் இருக்கும்!

எழுதுவதிலும் அப்படித்தான்... அத்தை எனக்கு எழுதின எல்லா கடிதங்களையும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். கவித்துவமிக்க அந்தக் கடிதங்களை எத்தனை முறை படித்திருக்கிறேன் தெரியுமா...!

மாமாவோ தன் பேனாவைத் திறப்பது கையெழுத்துப் போட அல்லது தன் அம்மாவுக்குக் கடிதம் எழுத இந்த இரண்டுக்கு மட்டும்தான். (தேவரீர் அம்மாவுக்கு உங்கள் மகன் எழுதிக் கொள்வது. க்ஷேமம், க்ஷேமத்திற்கு பதில். நான் வரும் பத்தாந்தேதி அங்கு வருகிறேன். வேறு ஒன்றும் விசேஷம் இல்லை. இப்படிக்கு...) ஆரம்பத்தில் தன் அம்மாவுக்குக் கூட அத்தையின் மூலம்தான் எழுதிக்கொண்டிருந்தாராம். ஆனால் அவர் அம்மாவிடமிருந்து "எனக்கு நேரடியாக ஒரு லெட்டர் எழுதக்கூட உனக்கு நேரம்

இல்லையா? இனிமேல் உன் பெண்டாட்டியை விட்டு எழுதாதே... இஷ்டமிருந்தால் நீயே உன் கைப்பட எழுது" என்று 'பாட்டு' வாங்கிய பிறகுதான் அந்தக் கடிதம் கூட அவர் எழுதுகிறார். இதுக்குப் பிறகு மாமா எழுதச் சொன்னாலும் அத்தை எழுதுவதில்லை. இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே போகலாம்.

"டேய் ராஜா.... நான் வெளியே போறேன்... வர்றீயா...?"

மாமாவின் பிசிறான குரல் கேட்டு என் சிந்தனை அறுந்தது. அப்போது அங்கு வந்த அத்தை என்னை முந்திக் கொண்டு சொன்னார்கள்.

"ராஜாவுக்கு உடம்பு சரியில்லை... அது வராது."

"சரி சரி... நீயே அவனைப் பூட்டி வச்சுக்க..."

மாமா கோபத்துடன் சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார்.

மாமாவுக்கு சாயங்காலம் ஆறு மணியிலிருந்து ஒன்பது மணி வரை வெளியே போய் ஊர் சுற்றாவிட்டால் தலையே வெடித்துவிடும்... பாவம்... அத்தை... வீட்டில் தனியாவே இருந்திருந்து எப்படித்தான் பைத்தியம் பிடிக்காமல் இருக்கிறதோ...?

அத்தையின் பேச்சில் இப்போதெல்லாம் ஒன்றைக் கவனித்தேன். கொஞ்ச நாளாக அத்தை என்னிடம் 'டா' போட்டுப் பேசுவதில்லை. பத்து வருஷ வித்யாஸம் பெரிசு இல்லையா? ஆனால் இப்படிப் பேசுவதுதான் எனக்குப் பிடிக்குது...

நெற்றியில் ஒரு மென்மையான ஸ்பரிஸத்தை உணர்ந்து நிமிர்ந்து பார்க்கிறேன்...

அத்தை...!

"ராஜா... நெத்தியெல்லாம் ரொம்ப சுடுதே..." என்று சொல்லிக் கொண்டே படுத்திருந்த என் பக்கத்தில் அமர்ந்து என் கையை எடுத்துத் தன் கைகளுக்குள் வைத்துக்கொண்டார்கள். நெற்றி சுடுவதென்ன...? இந்தத் திண்ணை இருட்டில் இப்படிக் கிடைத்த

அத்தையின் இந்த அண்மைக்காக அப்படியே நான் எரிந்து போவதற்கும் தயார்...

வெகு நேரம் இருவரும் பேசவே இல்லை.

திடீரென்று அத்தை கேட்டார்கள்.

"தொண்டையிலெ முள் சிக்கிட்டுன்னியே.... பேய்டுச்சா...?"

"ம்ஹூம்... இல்லெ..."

"அப்படின்னா நான் சொல்ற மாதிரி செய்... சாப்பிடும்போது சூடான வெறும் சாதத்தை ஒரு பெரிய உருண்டையா உருட்டி வாயில்போட்டு விழுங்கு. போய்டும்..."

இதுக்கு நான் பதில் சொல்லவில்லை... என் கையைப் பிடித்துக் கொண்டிருக்கிற அத்தையின் கைகளை அப்படியே எடுத்து ஒரு முத்தம் கொடுத்தால் என்ன என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்... ஆனால்?

இதைச் செய்ய என்னைத் தடுப்பது எது?

'Love has no taboos' என்று படித்திருக்கிறேன். ஆனால் அத்தையின் மேல் நான் கொண்டுள்ளது காதலா...? காதல்... சே... தொடர்கதைகள்ளேயும், சினிமாவிலேயும் இந்த வார்த்தையைப் போட்டு ரொம்ப அசிங்கப்படுத்தி விட்டார்கள்.

Is it sex-love ...?

நோ... அப்படி என்னால் நினைக்க முடியவில்லை. இது ஒரு tender devotion... ஆனா இதன் எல்லை எதுவாக இருக்கும்...?

அனாவசியமாக மனசைப் போட்டுக் குழப்பிக்கொண்டிருக்கிறேன்... அத்தையின் மேல் எனக்குள்ள ப்ரேமை இன்று நேற்று ஏற்பட்டதா என்ன?

அப்போது ஆறு வயசிருக்கும்... அத்தை அடிக்கடி என்னிடம் "ராஜா... நீ யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போற...?" என்று

கேட்பார்கள். நான் ஒவ்வொரு முறையும் 'உங்களைத்தான்... உங்களைத்தான்' என்று சொல்வேன்.

கொஞ்சங்கூட மறக்கவில்லை.

"அத்தை... உங்களைத்தான் நான் கட்டிக்குவேன். ஆனா நான் உங்களைக் கட்டிக்கிறப்போ உங்க கை தோலெல்லாம் அவ்வாவுக்கு இருக்கிற மாதிரி கொழகொழன்னு சுருங்கி இருக்கக் கூடாது... இப்ப இருக்கிற மாதிரியே இருக்கணும்" என்று சொல்லி அத்தையின் கைச்சதையைத் தொட்டுக் காண்பிப்பேன்...

உடனே அத்தை சிரித்துக்கொண்டே என் அம்மாவிடம் "பார்த்தீங்களா வதினை... ராஜா சொல்றதெ" என்று ஆரம்பித்து நான் சொன்னதையெல்லாம் சொல்லிச் சொல்லி சிரிப்பார்கள்.

இப்போது மீண்டும் அதை நினைத்துப் பார்க்கிறேன்... ஆனால் இப்போதெல்லாம் அத்தை ஏன் அந்தக் கேள்வியைக் கேட்பதே இல்லை...?

'ராஜா நீ யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போற...?'

அப்படியே அத்தை கேட்டாலும் முன்பு சொன்னது போல் என்னால் பதில் சொல்ல முடியுமா?

'அத்தை... உங்களைத்தான் நான் கட்டிக்குவேன்... ஏன்னா உங்கள் கை பதினஞ்சு வருஷத்துக்கு முந்தி இருந்த மாதிரி இல்லன்னாலும் உங்க மனசு அப்படியேதான் இருக்கு...'

திடீரென்று தெரு நாய்களின் காதைக் கிழிக்கிற சத்தம் கேட்டு தூக்கம் கலைந்தது. அட எப்படி இங்கே வந்து படுத்திருக்கிறேன்...? கடைசியில் அத்தையோடு பேசிக் கொண்டிருந்தது நினைவிருக்கு... அப்புறம் தூக்கக் கலக்கத்தில் இங்கே வந்து படுத்தது நினைவு இல்லை. இனிமேல் எப்படித் தூக்கம் வரும்? விடிகிற நேரம்... கொஞ்ச நேரம் புரண்டு கொண்டிருந்து விட்டு எழுந்தேன்...

பாத்ரூமுக்குப் போய் பேஸ்ட்டும், ப்ரஷ்ஷும் எடுத்துக்கொண்டு கொல்லைப் பக்கம் போனேன். ப்ரஷ் பண்ணிக்கொண்டிருக்கும் போதே முள் நெருடுவது தெரிகிறது... பல்லைத் துலக்கிவிட்டு

கட்டை விரலால் நாக்கை வழித்தேன். இதுக்கு நான் tongue cleaner பயன்படுத்துவது இல்லை. Tongue cleaner என்றால் நாக்கில் ஒரு குறிப்பிட்ட 'ஏரியா'வைத்தான் சுத்தப்படுத்த முடியும். அடி நாக்குக்கெல்லாம் அது போகாது... அதனால் உசிதம், கட்டை விரல். ஆனால் விரல் நகத்தில் எதாவது பிசிறு இருந்தால் நாக்கைக் கீறி விடும்... எச்சிலோடு ரத்தமும் வரும்... அப்புறம் அது க்ஷயரோக ரத்தமா அல்லது நாக்குக் கீறலின் ரத்தமா என்று சந்தேகப்பட்டு பயப்பட வேண்டியிருக்கும்! அதுக்காக கட்டை விரல் நகத்தை மட்டும் பிசிறு இல்லாமல் வைத்திருக்க வேண்டும். சரி... இன்று எப்படியும் இந்த முள்ளை எடுத்துவிட வேண்டும்... கட்டை விரலையும், சுட்டு விரலையும் மாற்றி மாற்றித் தொண்டைக்குள் விட்டுக் குடைந்தேன்... ஏகமாய் வாந்தி வந்ததுதான் மிச்சம்.

முள் அப்படியேதான் இருந்தது...

இதுக்கு முன்னால் கூட மீன் சாப்பிட்டபோது முள் சிக்கியிருக்கிறது... ஆனால் இந்த மாதிரி பதினஞ்சு நாள் இருபது நாளென்று உயிரை வாங்கியதில்லை.

சின்ன வயசில் நடந்த ஒரு வேடிக்கை நினைவு வருது. அப்போது நான் அவ்வா வீட்டில் இருந்தேன். ஒரு நாள் சாப்பாட்டுக்கு கருணைக்கிழங்கு வறுவல் செய்திருந்தார்கள். அந்த வயதில் அது கருணைக்கிழங்கு என்றெல்லாம் எனக்குத் தெரியாது... ஏதோ ருசியாய் இருக்கவும் நிறைய சாப்பிட்டேன். சாப்பிட்டு முடித்ததுதான் தாமதம்... 'அய்யோ... அம்மா...' என்று அலற ஆரம்பித்துவிட்டேன். தொண்டையில் பயங்கர அரிப்பு... அதை அரிப்பு என்று சொல்லத் தெரியாமல் 'தொண்டையிலே முள் குத்திடுச்சி' என்று ரகளை பண்ணிக்கொண்டிருந்தேன். அப்பறம் மெதுவாக வேலைக்காரி வந்து 'இது கருணைக்கிழங்கு சமாச்சாரந்தான்' என்று சொல்லி எல்லார் பயத்தையும் போக்கி என்னைத் தேற்றினாள்.

டிஃபனை முடித்துவிட்டு அத்தையுடன் பேசிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். தம்பி வந்து சொன்னான், யாரோ கூப்பிடுவதாக. வெளியே வந்து பார்த்தால்... பேபி.

"என்னடா இது அதிசயமாக இருக்கு... பதினொரு மணி வரைக்கும் மார்க்கெட்லெயில்ல சுத்திக்கிட்டு இருப்ப..."

"இன்னைக்கு நான் மார்க்கெட்டுக்கு போலெ... சரி வா... கொஞ்சம் ஈச்சந்தோட்டம் வரைக்கும் போயிட்டு வரலாம்."

"இதோ வர்றேன்... சித்த இரு" என்று அவனிடம் சொல்லிவிட்டு உள்ளே வந்தேன். அத்தையிடம் போய் "கொஞ்சம் வெளியே போய்ட்டு வந்திர்றேன் அத்தை..." என்றேன்.

"சீக்கிரமா வந்திடு ராஜா..."

நான் இப்போது வெளியில் போவதை அத்தை விரும்பவே இல்லை. இருந்தாலும் பேபியின் முகத்தில் தெரிந்த அந்த சீரியஸ்னஸ்...

கிளம்பிவிட்டேன்.

பேசிக்கொண்டே ஈச்சந்தோட்டம் வந்தோம். பெயர்தான் ஈச்சந்தோட்டம். ஆனால் ஒரு ஈச்சமரம் கூடக் கிடையாது... எப்பவோ ஈச்சந்தோட்டமாக இருந்திருக்கலாம்... இப்போது எஞ்சி நிற்பதென்னவோ பெயர் மட்டுந்தான்... பேசாமல் புளியந்தோப்பு என்று பெயரை மாற்றி விடலாம். அவ்வளவு புளிய மரங்கள்...

ஒரு புளிய மரத்தடியில் அமர்ந்தோம்... ஒரு பெரிய வேரில் முதுகைச் சாய்த்து திண்டில் அமர்ந்திருக்கும் செட்டியார் மாதிரி உட்கார்ந்துகொண்டான் பேபி...

மெதுவாக விஷயத்தை ஆரம்பித்து பிறகு சரமாரியாகப் பொழிய ஆரம்பித்தான்...

விஷயம் வேறொன்றுமில்லை... இவன் அப்பாவுக்கு ஏகமான சொத்து இருக்கு... இருந்தாலும் மகன் தன்னை மாதிரி நிலத்தில் இறங்காமல் ஒரு டாக்டராகிவிட வேண்டும் என்று தீவிரமான ஆசை. இவனோ பி.யூ.சி.யைத் தாண்டவில்லை. பயாலஜி, ஜூவாலஜி புத்தகத்தை எடுத்தாலே தூக்கம்

வருதுங்கிறான். விவசாயத்தில்தான் ஈடுபாடு. இவன் M.B.B.S. போகாததால் ஜன்ம எதிரியாகப் பார்க்கிறார் தந்தை... அப்புறம் சச்சரவுக்கு கேட்கணுமா... இன்னும் கட்டிக்கிட்டுப் புரளலை... அவ்வளவுதான்.

உணர்ச்சி வேகத்தில் என்னென்னவோ முடிவுகள் எடுத்துக்கிட்டு இருக்கான்.....

"சரி வா, ரொம்ப தாகமா இருக்கு... அந்த வீட்லே போயி கொஞ்சம் தண்ணி குடிப்போம்."

பேச்சை மாற்றி அவனைக் கிளப்பினேன்.

தண்ணீரைக் குடித்துவிட்டு அங்கேயே தீப்பெட்டி வாங்கி சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான்... எனக்குத் தண்ணீரைக் குடித்ததும் முள் அதிகமாக நெருட ஆரம்பித்தது...

குமட்டியது.

இவனுக்கும் தெரியும். கோலா மீனைச் சாப்பிட்டு எனக்கு முள் சிக்கிக்கொண்டது. அதுதான் எந்நேரமும் புலம்பிக் கொண்டே இருக்கிறேனே...

"ராஜா... இந்த முள் இவ்வளவு நாள் போகாம இருக்கிறதப் பாத்தா இது முள்ளுதானான்னே எனக்குச் சந்தேகமா இருக்கு. ஒரு வேளை முடி கிடி சாப்பாட்டில் கிடந்து சிக்கிக் கொண்டிருந்தால்...?"

எனக்கு முடி என்றதும் பயமாகி விட்டது... அதோடு விடாமல், "ஒருவேளை ஒன்னோட ப்ரமையாவும் இருக்கலாம்" என்றான்.

எனக்கு எரிச்சல் வந்துவிட்டது.

"அப்படின்னா... உன் அப்பாவோட நான் நேத்து ராத்திரி சினிமா பார்த்தேனே... அவர் எப்படி அந்த நேரத்துலெ உன்னோட சண்டை போட்டிருக்க முடியும்... ஏதாவது கனவு கினவு கண்டிருப்பெ..."

"எனக்குக் கோபம் வரல்லெ..."

என் எரிச்சல் இன்னும் அதிகமாகியது.

"என்ன ராஜா... இவ்வளவு நேரம்? இனிமே நீ வெளியே போகக் கூடாது. நாளைக்கு நாங்க ஊருக்குப் போற வரைக்கும் வீட்லயேதான் இருக்கணும்..."

வீட்டில் நுழைவதற்குள் அத்தையின் ஆர்டர்...

"இப்ப என்ன ஊருக்கு அவசரம்? இன்னும் அஞ்சாறு நாள் கழிச்சுக் கிளம்பறது..."

"நான் என்ன பண்றது ராஜா... உன் மாமாதானே..."

"ஆமா, நீங்களும்தான் ஊருக்குப் போகணும் போகணும்னு பறக்கறீங்க..."

இதுக்கு அத்தை பதில் சொல்லவில்லை...

நான் போய் கொல்லைக் கிணற்றில் குளித்துவிட்டு, திண்ணைக்கு வந்தேன்... அத்தை இல்லை. அறையில் படுத்திருக்கலாம் என்று அறைக்கு வந்தேன். அங்கே...

டேபிளின்மீது தலையைக் கவிழ்த்துக்கொண்டு சின்னக் குழந்தை மாதிரி குலுங்கிக் குலுங்கி...

"அத்தை... என்ன இது?"

தலையின் மீது கைவைத்து நிமிர்த்தினேன்.

"இப்ப உனக்குத் திருப்திதானே ராஜா... இவ்வளவுதான் நீ என்னத் தெரிஞ்சுக்கிட்டது..."

எனக்கு என் மேலேயே வெறுப்பு ஏற்பட்டது. எவ்வளவு மென்மையான மனசைப் புண்படுத்தி இருக்கிறேன்.

தலையின் மீது வைத்த கையை நான் எடுக்கவே இல்லை.

இன்னும் சில நிமிஷங்கள் தான்.... அப்புறம் வீடே வெறிச்சோடிக் கிடக்கும்...

இதோ புறப்பட்டு விட்டார்கள்... அத்தையும், மாமாவும்... நானும் கிளம்பினேன், ஸ்டேஷன் வரைக்கும்...

ட்ரெய்ன் எட்டு மணிக்குத்தான் கிளம்பும்... ஒரு மணி நேரம் முன்னாலேயே வந்தாச்சு... தம்பியும், மாமாவும் ஜன்னலோரத்தில் இடம் பிடித்துவிட்டார்கள்.

அத்தை என்னுடனேயே நின்று கொண்டிருக்கிறார்கள். "அடிக்கடி லெட்டர் எழுதுவியா..." என்று கேட்டுக்கொண்டே என் கைகளைப் பற்றிக் கொள்கிறார்கள்...

கண்ணீர்...

எனக்கு அப்படியே அத்தையைக் கட்டிக்கொண்டு கதற வேண்டும் போல் இருக்கு... ஆனால் கண்களில் ததும்பிய கண்ணீரைக்கூட கீழுதட்டைப் பற்களால் கடித்துக்கொண்டு அடக்கிக் கொள்கிறேன்...

எவ்வளவு நேரம் இப்படிப் போனதோ தெரியவில்லை. திடீரென்று அத்தை கண்களைத் துடைத்துக்கொண்டு உள்ளே போய் தம்பி உட்கார்ந்திருந்த இடத்தில் அமர்ந்தார்கள். தம்பி கீழே இறங்கினான்...

நான் ஜன்னலருகில் போய் அத்தையின் கையைப் பிடித்துக் கொண்டேன்.

'இந்தக் கைக்கு இப்படியே ஒரு முத்தம் கொடுத்தால் என்ன...?'

ட்ரெய்ன் லேசாக நகர்ந்தது. நான் கைகளை எடுத்துக்கொண்டேன்... ட்ரெய்ன் கொஞ்சங் கொஞ்சமாக வேகம் பெறுகிறது.

வெளிச்சம் தெரிகிறவரை ஒரு கை மட்டும் அசைந்து கொண்டிருந்தது தெரிந்தது.

வீட்டிற்கு வந்து அறைக்குள் போய் லைட்டை ஆஃப்

பண்ணிவிட்டு நாற்காலியில் அமர்ந்தேன். ஒரு பெண்ணின் குரல். 'கோலா... கோலா... ரூபாய்க்கு ஏழு கோலா... கோலா...' என்று ஒரு ராகத்துடன் ஒலித்தது...

கொல்லைப்பக்கம் போய் சுட்டுவிரலைத் தொண்டைக்குள் விட்டுக் குடைந்தேன்...

குமட்டல்தான் வந்தது...

முள்...?

**கணையாழி**

டிசம்பர், 1979

## பிரஸ்ஸில் இருக்கிறது

ஆபிதீன் எனக்கு எழுதிய கடிதங்கள் யாவும் இலக்கியத்தரம் வாய்ந்தனவாக நான் உணர்ந்ததால் அவற்றை நகலெடுத்து-கிட்டத்தட்ட நூறு பக்கங்கள் வந்தது - ஆபிதீனின் சம்மதத்துடன் ஒரு சிறு சஞ்சிகைக்கு அனுப்பி வைத்திருந்தேன். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த சஞ்சிகை நின்று போய்விட்டது. கடிதங்களும் திரும்பி வரவில்லை. எனக்கு மறுபடியும் அத்தனை கடிதங்களையும் நகலெடுக்கப் பொறுமை இல்லை. அனுப்பி வைத்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் இருக்கும். ஆனால் அந்த சஞ்சிகையின் ஆசிரியரையும் குறைசொல்ல முடியாது. பாவம், அவர் தன் வயிற்றுப் பாட்டுக்கே சிங்கியடித்துக் கொண்டிருந்த நிலையில் அந்த சஞ்சிகையை விடாமல் நான்கு வருடங்கள் நடத்தியதே பெரிய காரியம்.

ஆபிதீன் கடிதத்தின் விஷயம் எதுவாகவாயினும் இருக்கும். நண்பர்களுடன் தண்ணியடித்தது பற்றி, சூர்யோதயம் பற்றி, சமீப காலமாக தனக்குக் கவிதையே எழுத வரவில்லை என்பது பற்றி, ஒரு பெண்ணைத் தீவிரமாகக் காதலித்து கடைசியில் அவளைக் கைவிட்டது பற்றி, தன் பக்கத்து வீட்டுப் பையனோடு ஒருநாள் திண்ணையில் படுத்திருக்கையில் காம உணர்ச்சியால் உந்தப்பட்டு

அவனைத் தொடலாமா வேண்டாமா - தொட்டு எழுப்பிக் கேட்டு அவள் ஒருவேளை மறுத்து விட்டால் தன் 'இமேஜ்' என்னவாகும் என்ற நினைப்புகளுடனேயே அன்று இரவைக் கழித்தது பற்றி, தான் சமீபத்தில் படித்த ஒரு நாவல் பற்றி, மல்லிகார்ஜுனன் மன்ஸுரின் 'கேஸட்' ஒன்று அதிர்ஷ்டவசமாகக் கிடைக்கப்பெற்று அதை ரசித்துப் புளகித்ததைப் பற்றி, டூரிங் டாக்கீசில் பழைய எம்ஜியார் படம் பார்க்கப் போனது பற்றி, அப்போது மகளிர் இருக்கைகளில் கை நுழைத்து விளையாடியது பற்றி, இப்படி.

அவனுடைய சமீபத்திய கடிதத்தில் அவன் எழுதியிருந்த ஒரு வரி என்னை என்னவோ செய்துவிட்டது. அவன் எழுதியிருந்தான் - அங்கே என்ன சிகரெட் குடிக்கிறீர்கள்? Wills King தானே? இதற்கு நான் கீழ்க்கண்டவாறு பதில் எழுதியிருந்தேன்: பேஸ்ட்டுக்கு பதில் பல்பொடி பயன்படுத்துகிறேன்; மட்டன், மீன், கோழி இதெல்லாம் சாப்பிடுவதை நிறுத்திவிட்டேன்; காய்கறி மாதம் ஒருமுறை; காலை – பழைய சோறு, மதியம் – தாளித்த சோறு, இரவு - சோறும் சாம்பாரும், தொட்டுக்கொள்ள – காற்று; "ஊறுகாய் போடு பாப்பா", "குசுதான் இருக்கு"; ஆஃபீசில் ஒரு டீ; தினம் ஒரே பேண்ட் - முகத்தில் ஒரு மாத தாடி. ப்ளேடு வாங்க முடியவில்லை. தில்லி கோடையில் தாடி ரொம்ப அரிக்கிறது.

நிறைய மோர் சாப்பிட்டால் மூலத்துக்கு நல்லது. அதற்காக ஒரு லிட்டர் ரூ. 3.60 என்று பால் வாங்க முடியாது. காலையில் பீயுடன் ரத்தம், ரத்தம் வருவதால் மயக்கம், எரிச்சல், கடுப்பு, கண்ணீர். கடுப்பு தாங்காமல் ஒருநாள் பாத்ரூமுக்குள் நுழைந்து குழாயைத் திறந்து விட்டு கொட்டும் தண்ணீரில் ஆசன வாயைக் காட்டிக்கொண்டிருந்தேன். குளிக்க வந்த பாப்பா அதைப் பார்த்து விட்டுச் சிரித்தாள். பாப்பாவுக்கு துக்கத்தின் வெளிப்பாடு கூட சிரிப்பாகத்தான் வரும். ஆனால் அதெல்லாம் அந்த நேரத்தில் ஞாபகம் வருமா? "நான் செத்துப் போகும்போதுகூட இப்படியே சிரி" என்று குலைத்தேன். முகம் சுண்டிப்போன பாப்பா இரண்டு நாட்கள் என்னுடன் பேசவே இல்லை. இரண்டாம் நாள் இரவு என் மடியில் விழுந்து கதறினாள். "இன்னுமாடா என்னை உனக்குப் புரியவில்லை."

புரிகிறது. தூரமாயிருக்கும்போது கூட என் ஆசைக்கு இணங்கி பிறகு வலியால் துடித்து ஒருநாள் பயந்தே போனேன். என் இடுப்புக்குக் கீழே பூராவும் ரத்தம்.

"ஆமா... பாப்பா, உனக்கு DA arears வந்திடுச்சா. எங்களுக்கெல்லாம் வந்திடுச்சே?" "ஆமாண்டாப்பா.... ஒங்கிட்ட சொல்லணும்னு இருந்தேன். மறந்துடுத்து... DA arrears வந்து, அப்படியே வைகறைக்கு எம்.ஓ. பண்ணிட்டேன்." – வைகறைக்கு மாதம் ஐம்பது ரூபாய் அனுப்ப வேண்டும் என்று அனுப்பிக்கொண்டிருந்தேன். பணம் இல்லாததால் அந்தக் காலாண்டுப் பத்திரிகை ஒன்பது மாதங்களுக்கொருமுறை வந்துகொண்டிருந்தது. என்னால் ஒரு நான்கைந்து மாதங்கள்தான் அனுப்ப முடிந்தது. என்ன, இப்படி அனுப்ப முடியாமல் போய்விட்டதே என்று புலம்பிக் கொண்டிருந்தேன் ரெண்டு மாதம். மூன்றாம் மாதம் என்னிடம் சொல்லாமல் அனுப்பிவிட்டு வந்தவள் பாப்பா. புரிகிறது.

முதுகு உடைய டைப் அடித்து, O.T.யில் எனக்கு சட்டை வாங்கி வந்தவள். புரிகிறது.

குளிரில் கால் பாதத்தில் வெடிப்புகள் உண்டானதால், பேசினில் வெந்நீரை ஊற்றி என் கால்களை எடுத்து வைத்து சோப்பு போட்டு தினம் கழுவி விட்டு வெடிப்புகளைப் போக்கியவள். புரிகிறது.

இருந்தாலும் காலையில் முக்கி முக்கி மலத்தை எடுக்கும்பொழுது, ரம்பத்தால் ஆசன வாயை யாரோ அறுக்கும்பொழுது தினம் தினம் இதற்கு ஆளாகிறதால் முந்தா நாள் நான் என் வசமிழந்து மிருகமாகி விட்டேன். புரிகிறது.

ஆபரேஷன் செய்துகொள்ளலாம். ஆனால் பயமாயிருக்கிறது. ஏதேனும் இசகு பிசகாசி உயிர் போய்விடுமோ என்று.

மாடியிலிருந்து கீழே பார்த்தால் பயமாயிருக்கிறது. எலியைப் பார்த்தால் பயமாயிருக்கிறது. (எலி கடித்தால் வரும் வியாதியின் பெயர் மறந்து போய்விட்டது - ஒருநாள் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது ஒரு எலி அடித்துப் பிடித்துக்கொண்டு ஓடி வந்து என் கால்களுக்கிடையே புகுந்து சென்றது. வந்த

வேகத்தில் தப்பித் தவறி பேண்டுக்குள் புகுந்திருந்தால் – அப்போது நான் பெல் பாட்டம் போட்டிருந்தேன் – நிச்சயம் கடித்திருக்கும். எலி கடித்தால் வரும் வியாதியால் நான் செத்துப்போயிருப்பேன். ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பித்தோம் என்று நினைத்துக்கொண்டே வீடு போய்ச் சேர்ந்தேன்). இடி இடித்தால் பயமாயிருக்கிறது. கடவுள் பெயரை உச்சரிப்பதில்லை. கடவுள் இல்லை என்று தெரிந்துபோனதால் பயமாயிருக்கிறது. பொது கக்கூஸில் ஒன்னுக்குப்போக பயமாயிருக்கிறது; எவனாவது STD உள்ளவன் எனக்கு சற்றுமுந்தி அந்த இடத்தில் கிருமிகளை விட்டுப் போயிருக்க சாத்தியம் இருப்பதால். பஸ்ஸில் முன்சீட்டில் உட்கார்ந்து போக பயமாயிருக்கிறது. சாலைகளில் நடக்கவோ குறுக்கே செல்லவோ பயமாயிருக்கிறது. (இதனாலேயே சைக்கிள் ஓட்டக் கற்றுக்கொள்ளவில்லை). மண்ணெண்ணெய் ஸ்டவ்வில் டீ போட பயமாயிருக்கிறது. (வெடித்து விடும் சாத்தியம் இருப்பதால்).

ஆபிதீன், நீ சூரியோதயம் பார்க்கப் போகிறாய். நானும் உன்னோடு சில தடவைகள் வந்திருக்கிறேன். ஆனால் அத்தனை பெரிய சமுத்திரத்தைப் பார்க்கும்போது பயமாகத்தான் இருக்கிறது. அதில் என்னத்தை ரசிக்கிறது?

நான் ஊருக்கு வந்திருந்தபோது ஒருநாள் சாயங்காலம் பாலத்தடிக்குப் போனோம். அன்றோ அதற்கு மறுநாளோ பௌர்ணமி. கடலோடு வெட்டாறு சங்கமிக்கும் இடம். ஆற்றோரம் தென்னை மரங்கள். ஆற்றின் நடுவே ஒரு 'குட்டியூண்டு' தீவு. ஆற்றில் ஒன்றிரண்டு படகுகள். நீ பாலத்தின் மேல் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாய். நான் உட்காரவில்லை. நீ உட்காரச்சொன்னபோதும் மறுத்து விட்டேன். தவறிக் கீழே விழுந்தால் என்ன ஆவது? உன்னையும் வேண்டாமென்று சொன்னேன். இங்கு வந்து உட்காராமல் நின்று கொண்டிருந்தால் இங்கு வருவதிலேயே அர்த்தமில்லை என்று சொன்னாய். ரொம்ப நேரம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தாய். நான் 'ம்' கொட்டிக்கொண்டே வேறொரு முக்கியமான விஷயத்தைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். ரொம்ப நேரம் கழித்து நீ பேச்சின் இடையே ஏதோ கேட்க அதற்கும் நான் 'ம்' கொட்டவேதான்,

உனக்கு உன் பேச்சை நான் கேட்கவில்லையென்று புரிந்து ஆச்சரியப்பட்டு "என்ன தூங்குகிறீர்களா?" என்று கேட்டாய்.

அப்போது நான் சொன்ன பதில் கேட்டு நீ வயிறு வலிக்கச் சிரித்தது ஞாபகம் இருக்கிறதா? ஆம், நான் உன் பேச்சைக் கேட்கவே இல்லை. நீ தவறிக் கீழே விழுந்தால் நான் உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியே அத்தனை நேரமும் யோசித்துக் கொண்டிருந்தேன். முதலில், நீ விழுந்த உடனேயே நானும் குதித்து உன்னைக் காப்பாற்றுவது குறித்த சாத்தியக் கூறுகள் பற்றி. எனக்கு நீச்சல் தெரியும். உனக்குத் தெரியாது. எனவே லபக் லபக்கென்று தண்ணீரைக் குடித்துக்கொண்டு, உன்னைக் காப்பாற்ற வருகிற என்னையும் பிடித்து இழுப்பாய். ஏற்கனவே உனக்கு ராக்ஷஸ உடம்பு. இப்போது மரண பயம் வேறு. என்னதான் எனக்கு நீச்சல் தெரிந்தாலும், பலம்? முதலில், மேலேயிருந்து குதிக்கவேண்டுமே? நீச்சல் குளங்களில் என்னால் ஒரு தடவை கூட மேலேயிருந்து குதிக்க முடிந்ததில்லை. தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மேலே பலகை வரை போய் திரும்பி வந்து விடுவேன். நண்பர்கள் மேலும் ஊக்குவிப்பார்கள். அவர்களே குதித்தும் காட்டுவார்கள். சிலர் குதிக்கும்போதே குட்டிக் கரணம் வேறு போடுவார்கள். நானும் தெம்பு வந்து பலகைக்குப் போவேன். கீழே பார்த்தால் பயமாயிருக்கும். கீழிருந்து மேலே பார்க்கும்போது 'இத்தினியூண்டு' தெரிகிற உயரம் மேலிருந்து கீழே பார்க்கும்போது பிரம்மாண்டமாக மாறி விடும். மறுபடியும் திரும்பி வந்து விடுவேன். சரி. என்னால் குதிக்க முடியாமல் போனால் அதற்கடுத்து, உடனடியாக உன்னைக் காப்பாற்ற நான் செய்ய வேண்டுவது என்ன? நாம் இருந்த இடத்திலிருந்து உடனே பாலத்தின் முனைக்கு ஓடி அங்கிருந்து ஆற்றின் கரை வழியாக நீச்சலடித்து உன்னிடம் வருவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி யோசித்து இதுவும் அவ்வளவு உசிதமில்லை என்று ஒதுக்கினேன். நான் கரையிலிருந்து உன்னை அடைவதற்குள் நீ தண்ணீரைக் குடித்து உள்ளே போயிருப்பாய். ஆக, மேலேயிருந்து குதிப்பதைத்தவிர வேறு வழியில்லை. ஆனால் அதற்கு எனக்குத் தைரியம் வருமா? ஆபத்தான சமயங்களில் தைரியம் தானாக வரும் என்பார்களே... வருமா? சரி, அப்படியே தைரியம் வந்து, குதித்து, உன்னைக் காப்பாற்றி உன் தலைமுடியைப் பற்றியிழுத்துக்கொண்டு

கரைக்கு நீச்சலடித்தாலும் வாளக்கடியானிடமிருந்து தப்பிப்பது எப்படி? இந்த வெட்டாற்றில் வாளக்கடியான் கடித்து எத்தனை பேர் நிமிட நேரத்தில் நுரை கக்கி செத்துப் போயிருக்கிறார்கள்!

இப்படி 'உயிரை விட்டு' இயற்கை அழகை என்னால் ரசிக்க முடியாது. ஆபரேஷனும் பண்ணிக் கொள்ள முடியாது.

'பைலக்ஸ்' மாத்திரை தின்றால் ரத்தம் நிற்கும், எரிச்சல் அடங்கும். பைலக்ஸ் நூறு மாத்திரை அடங்கிய டப்பா ஏழு ரூபாய். ஏழு ரூபாய்க்கு எங்கே போவது? பஸ் டிக்கட்டுக்கு நாற்பது பைசா இல்லாமல் சில நாட்களில் திருட்டுப்பயணம். திருட்டுப்பயணம் செல்லப் பயமாயிருந்தால் 'காஷுவல் லீவ்.'

இந்த மாதம் ஒரு வக்கீலிடம் பார்ட்டைம் வேலைக்குச் சேர்ந்தேன். சென்ற ஞாயிறு காலை ஒன்பது மணிக்கு வரச்சொல்லியிருந்தான். ஐந்தரைக்கே எழுந்து குளித்துவிட்டு பாப்பா சமைத்ததை சாப்பிடக் கூட நேரம் இல்லாமல் (முதல் தடவையே தாமதமாகப் போய் பெயரைக் கெடுத்து கொள்ளலாமா) வக்கீலிடம் வந்தேன். நிறைய நேரம் சும்மாவே உட்கார வேண்டியிருந்தது. டீ வந்தது. குடித்தேன். கடும் பசியில் குடித்தனாலோ என்னவோ குமட்டியது. சரி, சொல்லி விட்டுப் போய் ஏதாவது சாப்பிட்டு வரலாம் என்று எழுந்தேன். வக்கீல் பேப்பரும் கையுமாக வந்தான். என் பக்கத்தில் அமர்ந்து 'நான் சொல்லச் சொல்ல டைப் அடி' என்றான். அவசரம், அவசரம் என்று சொல்லிக்கொண்டே இருந்தான். இடையில் எங்கோ போய் விட்டு ஒரு மணி நேரம் கழித்து வந்தான். அப்போதும் சிலவற்றைக் கொடுத்து முடித்து வைத்திருக்கும்படிச் சொல்லிவிட்டுத்தான் போனான். கண்மண் தெரியாத வேகத்தில் டைப் அடித்தேன். அவன் வருவதற்குள் முடித்துவிட்டால் சாப்பிடப் போய் வரலாம் என்று நினைத்தேன். முடியவில்லை. அவன் வந்த பிறகே அந்த வேலை முடிந்தது. அதை வாங்கிக்கொள்ளும்போது 'Had your lunch?' என்று கேட்டான். இல்லை என்று தலையசைத்தேன். 'அப்படியானால் கிளம்பு. மீதி வேலையைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று கிளம்ப அனுமதியளித்தான். வீட்டுக்கு வந்து சேரும்போது ஐந்து மணி. இரண்டு மணிக்கே வந்துவிடுவேன் என்று சொல்லி இருந்ததால் பாப்பா இரண்டு மணியிலிருந்து என்னை எதிர்பார்த்து

கவலையுடன் அழுதுகொண்டு – அம்மா அழவே அதைப்பார்த்து பயந்து குழந்தையும் அழுது – பின்னர், நாலரை வரை என்னைக் காணாதலால் ஒரு நண்பர் வீட்டுக்குப் போய் அவரை விட்டு. என்னைத் தேடச் சொல்லவென்று பாப்பா கிளம்பிப்போய், அவர் வீட்டில் இல்லாததால் திரும்ப வீட்டுக்கு வந்தபோது நான் வந்தேன். அழுதுகொண்டே என்னை அணைத்துக் கொண்டு "நமக்குப் பணம் வேண்டாம். நீ ஞாயிற்றுக்கிழமையெல்லாம் என்னைவிட்டுப் போக வேண்டாம்" என்று பாப்பா.

ஒருநாள் பாப்பாவுக்கும் ஆஃபீஸ் போக நாற்பதும் நாற்பதும் எண்பது பைசா இல்லாமல் போய்விட்டது.

புஷ்பராஜுக்கு அவசரமாக முன்னூறு ரூபாய் கேட்டு எழுதியிருந்தேன். "எனக்குக் கைச்செலவுக்காக ஒதுக்கிய 150 ரூபாயில் நூறு ரூபாய் எல்லா சஞ்சிகைகளுக்கும் சந்தா அனுப்பிவிட்டு ஐம்பது ரூபாயில் வேறு ஏதோ பாக்கெட் செலவுகள் + ஒரு பாட்டில் பீர், அவ்வளவுதான். வாழ்க்கையே நரகம். வேலை கிடைக்காதபோதும் நரகம். இப்போதோ அதைவிடக் கொடுமை." –புஷ்பராஜ் எழுதியிருந்தான்.

"என்னிடமிருந்து நாவலை[1] வாங்கிப் படிக்கச் சொல்லி பேபிக்கு எழுதியிருந்தீர்களாம். பேபி சொன்னார். என்ன அநியாயம்?

---

1. ஆபிதீன் 'பழைய வீடு' என்ற பெயரில் ஒரு நாவல் எழுதியிருக்கிறான். நான் ஊருக்குப் போயிருந்த போது அதை என்னிடம் படிக்கக் கொடுத்தான். அங்கேயே படித்து முடிக்க முடியாததால் இங்கு எடுத்து வந்தேன். தமிழ் நாவலில் இது ஒரு மைல்கல்லாக அமையும் என்று தோன்றியது. சில பிரசுரகாத்தர்களை எழுதிக் கேட்டேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணம் கூறி மறுத்துவிட்டார்கள். ஒரு பிரசுரகர்த்தர் ரொம்பவும் மனிதாபிமானி போலிருக்கிறது. மறுத்துவிட்டு 'இருந்தாலும் உங்கள் வேண்டுகோளை கவனத்தில் கொண்டிருக்கிறோம்' என்று எழுதியிருந்தார். அதோடு மட்டும் அவர் மனிதாபிமானம் திருப்தியுறவில்லை போலும். ஆபிதீனின் முகவரியையும் எப்படியோ கண்டுபிடித்து ஆறுதல் கடிதம் எழுதியிருக்கிறார். 'என்னவோ அந்த நாவல் பிரசுரமாகும் வரை நான் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு சாலையில் அலைவதாக அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார் போல் இருக்கிறது. எழுத்து எனக்கு அப்படியில்லை. என்னிடமோ உங்களிடமோ பணம் வந்தால்தான் அந்த நாவலைப் பிரசுரிக்கலாம்' என்று ஆபிதீன் எனக்கு எழுதியிருந்தான்.

எப்போது நாவலை அனுப்பினீர்கள்? தபாலில் தொலைத்து தமிழ் இலக்கியத்திற்கு அரிய சேவை செய்து விட்டீர்கள்."
– ஆபிதீன் கடிதம்.

"நாவலை அனுப்பி வைக்கவேண்டும் பாப்பா, பதிவுத் தபாலில்... பணம் வேண்டுமே?"

"அனுப்பலாண்டா கண்ணூ... சம்பளம் வந்ததும் முதல் வேலையா அனுப்பிட்டு வந்திடு... என்ன?" முத்தம்...

அன்பு நண்பர்க்கு,

'வைகறை' பிரஸ்ஸில் இருக்கிறது. வெளியே கொண்டுவர பணம் தேவைப்படுகிறது. உங்களிடமிருந்து ரூ. 100 எதிர்பார்க்கிறோம். எழுதுங்கள்.

அன்புடன்
சிவகுரு.

அன்புள்ள ரவிக்கு,

உன் நைனா எழுதியது. இங்கு அம்மா, உமா, விஜயா, ரெங்கன் யாவரும் நலம். அங்கு உன் நலத்துக்கும் பாப்பா, பப்பி நலத்துக்கும் உடன் பதில்.

நான் சென்ற மாதம் கடிதம் எழுதினேன். சென்ற வாரம் விஜயா எழுதியது. எதற்கும் நீ பதிலே போடவில்லை. சென்ற மாதம் பணம் அனுப்புவாய் என்று எதிர்பார்த்தேன். வரவில்லை. இந்த மாதமாகிலும் அனுப்புவாய் என்று எதிர்பார்த்தேன். இன்றுவரை வரவில்லை. ஏன், உன்னால் மாதம் நூறு ரூபாய் அனுப்ப முடியாதா? மற்ற செலவு எவ்வளவோ இருக்கும். அதோடு இதையும் ஒரு கடனாக எண்ணி அனுப்பக்கூடாதா? நாங்கள் காரைக்கால் வந்து பத்து மாதம் ஆகிறது. இரண்டு மாதம் இருநூறு, இருநூறு ரூபாய் அனுப்பினாய். இங்கு வந்தபோது

நூறு ரூபாய் கொடுத்தாய்.

உன்னால் பணம் அனுப்ப முடியாவிட்டால் சொல்லிவிடு. உன்னை பணம் அனுப்பச் சொல்லி எழுதமாட்டேன். ரெங்கனை வரும் ஜூனில் I.T.I.யிலாவது சேர்க்க வேண்டும். விஜயாவுக்குக் கல்யாணம் நடக்கும் வரையிலுமாவது பணம் அனுப்ப முயற்சி செய். இதையெல்லாம் நான் உன்னிடம் சொல்லியா செய்யவேண்டும்? ஒரே ராமாயணம் எழுதியிருக்கிறேன் என்று எண்ணாதே. இருக்கும் நிலைமையை உனக்கு விளக்கினேன். மேலும், வீட்டுக்காரர் வீட்டைக் காலி பண்ணச் சொல்லிவிட்டார். வாடகை ரூ. 150 ஆனாலும் பரவாயில்லை என்று பார்த்து வருகிறேன். ஆனால் அட்வான்ஸ்தான் ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள். அவ்வளவு கொடுக்க முடியாது என்று ஐந்நூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுப்பதாக வேறு வீடு பார்க்கிறேன். இந்தக் கடிதம் கிடைத்தவுடன் உடனே எப்படியாவது 200 ரூபாய் அனுப்பி வை. மாதா மாதம் முடிந்த அளவு அனுப்பி வை. உடன் பதில், அன்புள்ள உன் நைனா, கிருஷ்ணசாமி.

இந்த மாதம் சம்பளம் வாங்கியவுடன் பாப்பா எனக்கு இரண்டு டப்பா 'பைலக்ஸ்' வாங்கித் தந்துவிட்டாள். ரத்தம் வருவதில்லை. ஆனால் வெளிக்குப் போனால் மலத்துக்குப் பதிலாக காற்று வருகிறது. இந்தக் காற்று ஒரு வருடமாகவே வந்து கொண்டிருக்கிறது. அதுவும் பெரும் சப்தங்களுடன். அங்கே ஊரில் ஆற்றங்கரைப் பக்கத்தில் என்றால் கவலை இல்லை. இங்கே, கக்கூஸ், கிச்சன், பெட்ரூம் எல்லாம் பக்கத்துப் பக்கத்திலேயே இருப்பதால் சமையல்கட்டில் சமைத்துக்கொண்டிருக்கிற பாப்பா வெடிச்சத்தத்தில் பயந்து கையிலிருக்கும் சாமானைப் போட்டுவிட்டால் என்ன செய்வது? இதோடு மட்டுமில்லை, நாள் பூராவுமே காற்று வந்துகொண்டிருந்தது, பெரும் சப்தத்துடன். ஒரு நாள் India International Centre-இல் ஒரு இசை நிகழ்ச்சிக்குப் போயிருந்தேன். மேற்கத்திய சாஸ்திரீய இசை. நிகழ்ச்சியின் முதல் பகுதி முடிந்ததும் Conductor பார்வையாளர்களை நோக்கி "இசை நிகழ்ச்சியின் போது யாரும் இரும வேண்டாம். இருமினால்

அது நிகழ்ச்சிக்குத் தடையாயிருக்கிறது" என்று வேண்டுகோள் விடுத்தார். இதைச் சொல்லிவிட்டு சிரித்துக்கொண்டே "தும்மினாலும் இடைஞ்சலாகத்தான் இருக்கிறது. கூடியவரை அதையும் தயவுசெய்து தவிர்க்கவும்" என்றார். அடுத்த பகுதியில், யாரும் தும்மவோ இருமவோ இல்லை. ஆனால் நிகழ்ச்சி முடிந்தவுடனே அரங்கத்தின் பல பக்கங்களிலிருந்தும் இருமல் சத்தமும், செருமலும் கேட்டது.

பல இசை நிகழ்ச்சிகளில் சிலர் இருமல் வந்து வெளியே போய் இருமிவிட்டு வருவதைப் பார்த்திருக்கிறேன். ஒருமுறை நானும் இந்த அவஸ்தைக்கு ஆளானேன். இருமல் வருகிறாற்போல் இருந்தது. நான் இந்தக் குறிப்பிட்ட பகுதி முடிந்ததும் இருமிக் கொள்ளலாமே என்று சற்று முயன்று இருமலை அடக்கினேன். அவ்வளவுதான்... கடலில் குளிக்கையில் ஆண் அலை வரும் போது எம்பிக்குதிக்கத் தவறிப்போய், அசுர பலத்துடன் வரும் அந்த ஆண் அலையோடே புரண்டு உருண்டு கரையில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டதும் மூச்சு விடுவோமே, அதுபோல் இருமல் பீறிட்டுக்கொண்டு வந்து விட்டது. உடனே வெளியே ஓடிவந்து தொடர்ச்சியாக ஐந்து நிமிடம் இருமினேன். கண்களிலிருந்து ஒரே கண்ணீர். வேண்டும் வரை இருமிவிட்டு தண்ணீர் குடித்துவிட்டு பிறகுதான் உள்ளே போனேன். அன்றிலிருந்து இருமல் வரும்போல் இருக்கும்போதே வெளியே வந்துவிடுகிறேன்.

நிகழ்ச்சிக்குத் தடையாயில்லாமல் அது முடிந்த பின்னரே பார்வையாளர்கள் இருமியதையும், செருமியதையும் பார்த்து Conductor சிரித்துக்கொண்டே நன்றி சொன்னார்.

பிறகு அடுத்த பகுதி துவங்கினபோதுதான் அது நடந்தது. என் ஆசன வாயிலிருந்து ஒரு பெரும் சப்தம். இது நான் எதிர் பாராமல் நடந்ததில்லை. பொதுவாக, காற்று வெளிவருவதற்கு முன் அது எனக்குத் தெரிந்துவிடும். வயிற்றில் கடக் முடக்கென்று புரளும். பிறகுதான் வெடிக்கும். அன்றும் அப்படித்தான் செய்தது. என்றாலும் எனக்கு என்னைப்பற்றி இருக்கும் அதீத நம்பிக்கையின் காரணமாக அது கெட்டது. சத்தம் கேட்காமல் நசுக்கி நசுக்கி விட்டுவிடுவோம் என்று நினைத்து காற்றை

அங்கீகரித்தேன். தவறிவிட்டது. முன்னால் அமர்ந்திருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். இதில் இன்னொரு விசேஷம் இதன் நாற்றம். எரியும் பிணம், அழுகல் முட்டை, மல வண்டி, குப்பைக் கிடங்கு, சாக்கடை என்று எதனோடும் இந்த நாற்றத்தை ஒப்பிட முடியாது. இதையெல்லாம் மீறிய ஒரு நாற்றம். சப்தம் இல்லாமல் வந்தாலாவது நானும் மூக்கை கைக்குட்டையால் மூடிக்கொண்டு இங்குமங்கும் பார்க்கலாம். அதற்கும் வழி யில்லாமல் செய்துவிடுகிறது இந்த சப்தம். பொதுவாக சப்தமாக வந்தால் குசு நாறாது என்பார்கள். ஆனால் அது எனக்குப் பொருந்தாது.

இந்த அனுபவத்திற்குப் பிறகு வயிற்றில் புரளும்போதே வெளியே போய் அதை வெளியேற்றி விட்டுத்தான் உள்ளே போகிறேன். Garlic pearls சாப்பிட்டால் சரியாகிவிடும் என்று கேள்விப்பட்டு அதன் விலையை விசாரித்துப் பார்த்துவிட்டு விலகிவிட்டேன். எவ்வளவுதான் சாப்பாட்டில் பூண்டு சேர்த்தாலும் அதனால் ஒரு மாற்றமும் நிகழவில்லை. சமைக்கும்போது பூண்டு தன் வீர்யத்தை இழந்து விடுவதாக Garlic pearls விளம்பரத்தில் கண்டிருந்தது. சமைத்தால்தானே வீர்யமிழக்கிறதென்று பச்சைப் பூண்டை நெருப்பில் சுட்டு சாப்பிட்டுப் பார்த்தேன். (மெழுகுவர்த்தியைப் பற்ற வைத்துக்கொண்டு, பூண்டை ஒரு குண்டூசியால் செருகிப் பிடித்துக் கொண்டு சுடவேண்டும்.) ஆனால் அதிலும் பலன் இல்லாமல் போய்விட்டது. பூண்டிலேயே குணமாகாத்தால் இனி இயற்கை வைத்தியத்தில் பயனில்லை என்று விட்டுவிட்டேன். (பச்சைப் பூண்டை சாப்பிட்டுப் பார்க்காமல் எப்படி இந்த முடிவுக்கு வந்தீர்கள் என்று கேட்காதீர்கள்). பிறகு டாக்டரிடம் சென்று மருந்து மாத்திரை வாங்கிச் சாப்பிட்டேன். ஐந்து நாட்களுக்கு ஒரே வயிற்றுபோக்கு. டாக்டரிடம் சொன்னேன். அவர் வேறு மருந்து மாத்திரை கொடுத்தார். வயிற்றுப்போக்கு நின்றது. ஆனால் மலம் இறுகிப்போய் ஆட்டாம்புழுக்கை மாதிரி கருப்பு கருப்பாக வந்தது. பயந்து போய் வேறு ஒரு டாக்டரிடம் போனேன். அவர் ஒரு மருந்து கொடுத்தார். அதில் ஏதோ 'laxative' என்று எழுதியிருந்தது. அஜீர்ணத்தைப் போக்கும் மருந்து என்றும், ஆனால் இதைத் தொடர்ந்து சாப்பிட்டால் இதுவே பழக்கமாகிவிடும், எனவே 'laxative' அதிகம் பயன்படுத்தக்கூடாது

என்றும் அதிலேயே எழுதியிருந்தது. டாக்டரிடம் இந்த மருந்தில் எனக்கு நம்பிக்கை இல்லை என்று சொன்னேன். அவர் அஜீர்ணம்தான் இதற்கு அடிப்படைக் காரணம் என்றும், தினம் படுக்கைக்குச் செல்லும் முன் இரண்டு வாழைப்பழம் சாப்பிடுமாறும் கூறினார். இரண்டு வாழைப்பழம் எட்டணா. மாதம் பதினைந்து ரூபாய். இதற்குப் பேசாமல் Garlic pearlsஐயே சாப்பிட்டு விடலாம். கிட்டத்தட்ட அதுவும் இதே விலைதான்.

ஒரு ஹதீஸ்:

ஒரு பெண்மணி கடையில் ஏதோ சாமான் வாங்கிக் கொண்டிருக் கிறார். அப்போது அவருக்கு சத்தமாகக் குசு வந்துவிட்டதாம். அவருக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது. பக்கத்தில் நின்ற ஆளுக்கு நிச்சயம் கேட்டிருக்கும். அவரும் கேட்டார்தான். அவருக்கு இந்தப் பெண்மணியின் நிலை புரிந்துவிட்டது. அப்போது அவரிடம் கடைக்காரர் என்ன வேண்டும் என்று கேட்க 'என்ன சொல்கிறீர்கள்? எனக்குக் காது மந்தம். சற்று சத்தமாகக் கேளுங்கள்' என்று சொன்னாராம். அந்தப் பெண்மணிக்கு அப்போது எவ்வளவு நிம்மதியாய் இருந்திருக்கும்!

ஒருவன் எந்த அளவுக்கு நாசுக்கானவனாக, நாகரிகமுள்ளவனாக இருக்க வேண்டும் என்பது மேற்கூறிய ஹதீஸால் நாம் அறிந்து கொள்ளும் நீதி. ஆனால் என் குசுவின் நாற்றத்தையும் சப்தத்தையும் பார்க்கும்போது எத்தகைய நாகரிக மனிதான யிருந்தாலும் இதைச் சகிக்க முடியாதென்றே தோன்றுகிறது.

எல்லாம் இந்த மூலத்தை அறுவை சிகிச்சை செய்து அகற்றி விட்டால் சரியாகிவிடும். ஆனால் எனக்குத் தெரிந்த ஒருவர் மூலத்தை அகற்ற அறுவை சிகிச்சைக்குப் போய் ஏதோ கோளாறாகி செத்துப் போய்விட்டார்.

இன்று காலையில் நடந்தது இது :

ஒரு முக்கியமான கட்டுரை எழுத வேண்டியிருந்ததால் இரண்டு நாட்களுக்கு சமையல் வேலையில் கலந்துகொள்ள மாட்டேன் என்று பாப்பாவிடம் சொல்லியிருந்தேன். அவளே எல்லா வேலைகளையும் செய்ததால் சற்று நேரமாகிவிட்டது.

இருவரும் தினமும் ஒன்பது மணிக்கு சேர்ந்துதான் கிளம்புவோம். குழந்தையை கிரஷ்ஷில் விட்டு விட்டு 9.20 பஸ்ஸைப் பிடிப்போம். வீட்டிலேயே ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது. நான் தயாராகி விட்டேன். பாப்பா இன்னும் உடையணிய வேண்டும். பப்பிக்கு 'லஞ்ச்' எடுத்து வைக்க வேண்டும். எங்கள் அலுவலகத்தில் இப்போது அடிக்கடி 'செக்கிங்' நடந்து கொண்டிருக்கிறது. தாமதமாக வருகிறவர்களுக்கு 'மெமோ'. மூன்று முறை மெமோ வாங்கினால் 'சர்வீஸ்' புத்தகத்தில் குறிக்கப்படும். இது இன்னும் பதினைந்து வருடம் கழித்துக் கிடைக்கப்போகும் உத்தியோக உயர்வைப் பாதிக்கும். இதற்கு மேலும் தாமதமாக வந்தால் Suspensionம் உண்டு என்று எஸ்.ஓ. சொல்லிக்கொண்டிருக்கிறார். அதனால் பாப்பாவிடம் சொல்லிவிட்டு நான் மட்டும் வேகமாக வந்து பஸ்ஸைப் பிடித்தேன். வரும்போது வீட்டிலிருந்து பஸ் நிறுத்தம் L வடிவ சாலை என்பதால் வருகிறாளா என்று திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வந்தேன். வரவில்லை. அடுத்த பஸ்ஸைத்தான் இனி அவளால் பிடிக்க முடியும். அவளுக்கு அலுவலகம் பத்தேகாலுக்குதான், அதனால் தாமதமாகப் போக வேண்டியிருக்காது. இப்படி ஏதோ யோசித்துக்கொண்டு நின்று கொண்டிருக்கும்போது பின்னால் வந்து 'ஏய்' என்று தோளில் தட்டுகிறாள் பாப்பா. ஓடிவந்திருக்கிறாள். இரைத்துக்கொண்டே குதூகலத்துடன் "பிடித்துவிட்டேன்..." என்று சிரித்தாள். "பாவம் பப்பியும் என்னுடன் ஓடிவந்தாள்" என்றாள்.

என்னால் நம்பவே முடியவில்லை. ஓட்ட நடையில் வந்திருந்தால் கூட நான் திரும்பிப் பார்க்கும்போது பார்த்திருப்பேனே. தென்படவில்லையே? 'குறுக்கே தோப்புக்குள் புகுந்து வந்தேன்' என்றாள்.

பக்கத்தில் இருப்பவரின் கையிலிருந்து மணியைப் பார்த்தேன். பஸ் கிளம்ப ஓரிரண்டு நிமிடங்களே இருந்தன. பாப்பாவின் கையை யாருமறியாமல் அழுத்தமாகப் பிடித்தேன். இவளுக்குக் கூடிய சீக்கிரம் ஒரு வாட்ச் வாங்கித் தரவேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

மீட்சி
ஜனவரி, 1984

# கிரிக்கெட்டை முன்வைத்து புத்திஜீவிகளுக்கு ஒரு முட்டாள் சொல்லிக்கொண்டது

என் பெயர் முஹையத்தீன். இந்தப் பெயர் உங்களுக்கு அறிமுகமானதுதான். ஆம். முன்பு ஒருமுறை இந்தப் பெயரில் உங்கள் சிற்றேடு ஒன்றில் சில கவிதைகள் எழுதியிருக்கிறேன். அது நான்தான். அந்தக் குப்பைகளை நானறியாமலே எடுத்துப் பிரசுரம் செய்துவிட்டான் ரவி. பாஸ்டர்ட். பிரசுரமானதும் அதை என்னிடம் அவன் காண்பித்த அன்று இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் அவன் என் வீட்டுப்பக்கமே இரண்டு நாட்கள் வரவில்லை. ஏதோ பொழுது போவதற்காகக் கிறுக்கியதை யெல்லாம் எடுத்து பிரசுரித்துவிடுவதா? இலக்கியமாம் இலக்கியம். லவ்டே கா பால்.

நேற்று அவன் ஒரு நாவலைக் கொடுத்து படித்துப் பார்க்கச் சொன்னான். பெயர்கூட ஏதோ நினைவுப் பாதையோ எதுவோ. யாரோ உங்கள் ஆள் ஒருத்தர்தான் எழுதியது. இந்த எழவெல்லாம் வேண்டாம், எடுத்துப்போய் விடு என்று சொன்னேன். கேட்காமல் கட்டாயப்படுத்தினான். தமிழின் முதல் எக்ஸிஸ்டென்ஷியல் நாவல் என்று சொன்னான். தமிழில் முதலானால் எனக்கென்ன? கடைசியானால் எனக்கென்ன?

எக்ஸிஸ்டென்ஷியலிசம் என்றதும் கொஞ்சம் படிக்கலாமே என்று தோன்றியது. எக்ஸிஸ்டென்ஷியலிச எழுத்து ஒரு சிலவற்றைப் படித்திருக்கிறேன். படித்ததெல்லாம் ஒரு துப்பறியும் நாவல் மாதிரி விறுவிறுப்பு கொண்டவை. Being and Nothingnessஇல் கூட பல இடங்கள் அப்படித்தான் இருக்கிறது. துப்பறியும் நாவல் பற்றிக் குறிப்பிட்டேன் அல்லவா? அது பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். பிறகு சொல்கிறேன். இப்போது நேற்று அவன் கொடுத்த குப்பை பற்றி. நாவலாய்யா அது? ஒரு விறுவிறுப்பு இல்லாத எழுத்து எழுத்தா? தஸ்தயேவ்ஸ்கியைச் சொல்லுங்கள், ஒத்துக்கொள்கிறேன். Being and Nothingness-இல் துப்பறியும் நாவல் தரும் விறுவிறுப்பைத் தேடி உங்களிடம் குறைவான மதிப்பெண் பெற்ற என்னை தஸ்தயேவ்ஸ்கி என்றதும் உயர்வாக நினைத்திருப்பீர்கள். பொறுங்கள், சொல்கிறேன். தஸ்தேயேவ்ஸ்கியில் காணும் விறுவிறுப்பு எனக்கு எம்.ஜி.ஆர். படங்களிலும் கிடைக்கிறது.

“பரவாயில்லை, எங்கள் ஆட்களிலேயே மிகச்சிறந்த எழுத்தைப் படைக்கும் சிலர் ரஜினிகாந்தின் ரசிகர்கள்தான்.”

அப்படியானால் நான் ஒரு பட்டியல் தருகிறேன். அப்போது தான் நான் சொல்லும் விறுவிறுப்புக் குறித்து உங்களுக்குப் புரியும்.

1. மேரி கொரெல்லி:

இவளுடைய நாவலை ஒரு நாளில் பதினைந்து பதினாறு மணி நேரத்திற்குமேல் படித்திருக்கிறேன். ஒரே அமர்வில் நாலைந்து நாட்களில் படித்து முடித்துவிட்டுத்தான் குளிப்பது கொள்வது எல்லாம். முக்கியமாக அவளுடைய தெல்மா என்ற நாவலைப் படித்துப் பார். நிறையவே எழுதியிருக்கிறாள். ஆம், இது மிக முக்கியமான ஒரு அம்சம். ஒரு நாவல் என்றால் அது நாநூறு பக்கத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

2. ஜான் ஜெனே.

3. ஹென்றி ஷாரியர்.

4. அலெக்ஸ் ஹெய்லி.

5. பெரிய எழுத்துக் கதைகள்.

6. காப்ரியல் கார்ஸியா மார்க்கேஸ்.

7. அலெக்ஸாந்தர் துய்மா.

8. கல்கியின் பொன்னியின் செல்வன். (இதில் பழுவேட்டரையர், நந்தினி போன்றவர்கள் வரும் பகுதிகள் அலுப்புத் தட்டக் கூடியவையே என்றாலும் மற்றவையெல்லாம் திரும்பத் திரும்ப படித்தாலும் இன்பம் தரக்கூடியவை).

அநேகமாக என் ஞாபகத்தில் வந்தவரை நான் படித்த சுவாரசியமான எழுத்து இவ்வளவுதான். இந்தப் பட்டியலில் துப்பறியும் கதைகள் அடங்கா. அவற்றில் விறுவிறுப்பு உண்டென்றாலும் அது ஒரு ஏமாற்று விறுவிறுப்பு, கட்டுப்பாடின்றி கடைசிப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்துவிட்டால் தொலைந்தது. அப்புறம் கதையைக் கையில் எடுக்க முடியாது. ஆனால் துப்பறியும் சினிமாவில் இந்தப் பிரச்சினை இல்லை. படங்கள்தான் ரொம்பவும் சொற்பம். அதனாலென்ன? மற்றவகைப் படங்களில் சுவாரசியமானவை ஏராளம் உண்டு.

புதுக்கவிதை என்று ஒரு படம். முடியும் வரை இருக்கை முனை யிலேயே இருக்க வைத்த படம். இந்தப் படத்திற்கு ரவியையும் கூட்டிப் போயிருந்தேன். ஸ்டுப்பிட் என்று திட்டிக்கொண்டே உட்கார்ந்திருந்தான். ப்ளடி ஸ்கௌன்ட்ரல். அவனுக்கும் படம் சுவாரசியமாகத்தான் இருந்திருக்கும். ஆனாலும் அவனுடைய தரத்திற்கு இந்தப் படத்தை ரசித்தால்? ஒரு இடைச்செருகல் - ஒருவேளை அவன் என்னுடன் கொண்டுள்ள நட்புறவும் கூட இதேமாதிரிதானோ என்று ஒரு சந்தேகம் இருந்து கொண்டிருக்கிறது. முட்டாள்தனங்களைத் தானே இனம் கண்டு விட்டதால், அவனால் அவற்றுடன் நேரடி உறவு கொள்ள முடியாமல் போய், ஒரு ஏக்கப் பிரதிபலிப்பாக என்னுடன் நட்பு கொண்டிருக்கிறானோ? தெரியவில்லை.

எனக்கானால் நான் முட்டாளாகத் தெரியவில்லை. உங்களைத்தான் நான் முழு மூடர்களாக நினைக்கிறேன். சிற்றேடுகள் நடத்தும் முழு மூடர்கள். இந்தச் சிற்றேடுகளைக் கண்டாலே எனக்குப் பற்றிக் கொண்டு வருகிறது. புல்ஷிட். யாருக்கும் புரியாமல்

பிதற்றிக்கொண்டு, ஒருத்தனுக்கு ஒருத்தன் திட்டிக்கொண்டு, இதில் இன்னொரு கூட்டம், நாங்கள் மக்கள் பக்கம் என்று சொல்லிக்கொண்டு பசி பட்டினிக் கதைகள். இதில் ரவியும் சேர்த்தி. அவன் எழுதியிருந்த டீ என்ற கதையைப் படித்தேன். ஒரு டீ குடிக்க படாத பாடு படுகிறானாம் ஒருத்தன். டேய்... பனாதைப் பயலே... பசித்தால் போய் திருடு. இல்லாவிட்டால் குப்பி கொடு. ஏன் பயமாக இருக்கிறதா? வெட்கமாக இருக்கிறதா? அப்படியானால் நீ உயிரோடு இருக்க லாயக்கில்லை. செத்து ஒழி.

பொழுது போவது பெருத்த சிரமமாக இருக்கிறது. இந்த நினைவுப் பாதை – அது ஒரு கொடுமை. மைக்கேல் ஜாக்ஸன், கங்குபாய் ஹங்கல், பிஸ்மில்லா கான் இவர்களின் கேஸட் கிடைத்தால் ரவியைக் கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன். அதுவரை கொஞ்சம் எழுதலாம் என்று சாய்ந்து உட்கார்ந்தேன்.

இங்கிலாந்துக்கும் பாரதத்துக்கும் நடந்து கொண்டிருக்கும் போட்டியில் இன்று ஐந்தாவது நாள். இன்றைய ஆட்டத்தில் அவ்வளவு விறுவிறுப்பு இருக்காது. பாரதத்துக்கு ஏற்கனவே வெற்றி நிச்சயமாகி விட்டது. இன்று வெளியே எங்காவது போக வேண்டியதுதான். வெளி உலகம் பார்த்து நான்கு நாளாகிறது.

ரவியைப் பார்க்கப் போகலாமா என்று ஒருகணம் யோசித்தேன். ம்ஹூம். பயனில்லை. அவன் இந்நேரம் அலுவலகம் கிளம்பி யிருப்பான். சரி, மிஸ்ராவையாவது பார்க்கலாம் என்று கிளம்பிப் போனேன்.

வெயில் சுகமாக காய்ந்தது. இன்னும் சிறிது நேரம் இந்த வெயிலில் நிற்கலாமே என்று ஒரு பஸ்ஸை விட்டுவிட்டு அடுத்து வந்த பஸ்ஸில் ஏறினேன்.

I.T.O.வில் எப்போதும் போலவே அலுவலகம் போகும் கூட்டத்தை போலீசாரும் N.S.S. பையன்களும் பெண்களும் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள். சாலையின் நடுவில் நின்று கைகளை மடக்கி நீட்டி வாகனங்களுக்கும், மனிதர்களுக்கும் சைகை காண்பித்துக் கொண்டிருந்த கான்ஸ்டபிளின் அருகில் அடிக்கடி அதே இடத்தில் நான் பார்க்கும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர்

இன்றும் நின்றுகொண்டு இருந்தான். ஆறரை அடி உயரம் இருப்பான். அதற்கேற்ற பருமன். இந்த வேலைக்கென்றே பிறந்தவன் போலிருந்தான். I.T.O.வில் போக்குவரத்து விதிகளை அனுசரித்து நடப்பது மிகவும் சிரமமான ஒன்று. நான் நிற்கும் இடத்திலிருந்து பஸ் நிறுத்தத்தை அடைய மூன்று நான்கு முறை சிக்னலுக்காகக் காத்து நிற்க வேண்டியிருந்தது.

குறுக்கே புகுந்தேன். ஒரு பெண் என் தோளைத் தொட்டு ஒழுங்கான பாதையில் போகும்படிச் சொன்னாள். இறுக்கமாகக் கவ்வி இழுத்துப் பிடித்திருந்த ஜீன்ஸையும், பனியனையும் பார்த்தபோது அவள் வலக்கையில் கட்டி இருந்த N.S.S. அடையாளத் துணி தெரிந்தது.

ரவி முதன்முதல் அவன் ஊரிலிருந்து சென்னை வந்து கொஞ்ச காலம் தங்கி இருந்தபோது ஒருநாள் இதைப்பார்த்து அதிர்ச்சியுற்று, என்ன செய்வதென்று புரியாமல் சாராயக் கடைக்குள் நுழைந்து கணக்கு வழக்கில்லாமல் குடித்தது இப்படியாகத்தான் என்று சொன்னான். இன்னமும் அவன் தில்லி வந்து இத்தனை வருடங்கள் ஆகியும்கூட, அவனால் இதை ஜீரணிக்கவோ, பழக்கமாக்கிக் கொள்ளவோ முடியவில்லை. “என்னடா இது, பெண்கள் இப்படி நிர்வாணமாக நடக்கிறார்கள். எல்லார் மீதும் விழுந்து புரண்டு செய்யலாம் போலிருக்கு... கட்டுப்படுத்தவே முடியவில்லை” என்று சொல்லுவான்.

திடீரென்று ஒரு குதிரை வண்டியைத் துரத்திக்கொண்டு போலீஸ்காரன் ஒருவன் விசிலை ஊதிக்கொண்டே ஓடிவந்தான். குதிரை வண்டி நிற்கவில்லை. போலீஸ்காரனும் விடாமல் துரத்தி வந்தான். I.T.O. நாற்சந்தியை அடுத்து இருக்கும் பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த பேருந்துகளால் குதிரை வண்டிக்குப் போக இடமின்றி நிறுத்த வேண்டி வந்தபொழுது போலீஸ்காரன் அதைப்பிடித்தான். ஒரு தட்டு தட்டினால் செத்துவிடுவான் போலிருந்தான் போலீஸ்காரன். குதிரை வண்டிக்காரன் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான். குதிரை வண்டிக்காரன் என்று அவனைச் சொல்வது சரியாயிருக்காது. அவன் ஒரு பதினாறு, பதினைந்து வயதுச் சிறுவன். வண்டியில்

நாலைந்து பெண்களும், ஒரு கிழவியும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களும் இந்தச் சிறுவனும் ஒரே குடும்பத்தை அல்லது கிராமத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கலாம். அவனைப் பார்த்தால் அந்த வண்டியை வாடகைக்கு ஓட்டுபவனாகத் தெரியவில்லை. போலீஸ்காரன் நலிந்த குரலில், அவனைக் கீழே இறங்கச் சொல்லிக் கொண்டிருந்தான். சிறுவன் பதிலுக்கு அவனைத் திட்டினான். இதற்கிடையில் அந்த உயரமான இன்ஸ்பெக்டர் 'பைக்'கில் வந்து சேர்ந்தான். சிறுவனிடம் 'டேய், இறங்கு கீழே' என்று அடிப்பது போல் சொன்னான். சிறுவன் இறங்கவில்லை. அப்போதும் அவன் உரத்த குரலிலேயே சண்டை பிடிப்பதுபோல் பேச ஆரம்பித்தான். அடுத்த கணத்திலேயே இன்ஸ்பெக்டர் அவன் கையைப் பிடித்து கீழே இழுத்து வீசியெறிந்தான்.

சாலையில் குப்புற வந்து விழுந்தான் சிறுவன். கண்மண் தெரியாமல் இன்ஸ்பெக்டர் அவனை அடித்தான். காயடிக்கையில் கிடா கத்துவது மாதிரி கத்தினான் சிறுவன். கத்தக்கத்த பலமாக அடித்தான் இன்ஸ்பெக்டர். பஸ் நிறுத்தத்தில் நின்றிருந்த அனைவரும் கும்பலாய்க் கூடி வேடிக்கைப் பார்த்தோம். கிழவி வண்டியிலிருந்து இறங்கி ஓடி வந்து 'பச்சா ஹை சாப், மாஃப் கர்னா சாப்' என்று சொல்லிக் கொண்டே அவனுடைய காலில் விழுந்தாள். இன்ஸ்பெக்டருக்குச் சற்று தூரமாய்த் தள்ளி, சூரிய நமஸ்காரம் செய்வது போல் கைகளைத் தலைக்குமேல் கூப்பி உடம்பு தரையில் பட விழுந்து விழுந்து எழுந்தாள். அப்போதுதான் இன்ஸ்பெக்டர் அடியை நிறுத்தினான். ஒன்றுமே சொல்லாமல் 'பைக்'கை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

நான் ஏற வேண்டிய பஸ் வந்தது. ஃபுட் போர்டில் தொங்கிக் கொண்டிருந்தவர்களுடன் நானும் சேர்ந்து, கம்பியைப் பிடித்துத் தொற்றிக்கொண்டு மிகுந்த பிரயாசை எடுத்து உள்ளே செல்ல முயன்றேன். உள்ளே மூன்று பேர் டேப் அடித்துப் பாடி கொண்டிருந்தது நம்பமுடியாததாக இருந்தது. அதில் ஒருவருடைய குரலும் பாடும் முறையும் என்னை மிகவும் கவர்ந்திழுத்தது. அருகே போய் என்னை மறந்து கேட்டுக் கொண்டு இருந்தேன். பாட்டு முடிந்ததும், எல்லோரிடமும் காசுக்காக டேப்பை நீட்டினார்கள். யாரும் போடுவதாக இல்லை. அது ஒன்றும் ஆச்சரியம்

தரத்தக்கதும் அல்ல. பஸ்ஸில் அநேகமாக நிறைந்திருந்தது குமாஸ்தாக்கள்தான். இவர்களிடம் எதுதான் என்ன செய்துவிட முடியும்? பாஸ்ட்டர்ட்ஸ். மாணவர்களாய்த் தெரிந்த சிலர் மட்டும் ஏதோ போட்டார்கள். இவ்வளவு நேரம் பாடியதற்கு கிடைத்த பைசா அவர்கள் தேனீர் அருந்தக்கூட போதுமானதாயிருக்குமா என்பது சந்தேகம். என்னிடம் வந்தபோது ஒரு ஐந்து ரூபாய்த் தாளை எடுத்து அவன் கையில் கொடுத்தேன். அதை அவன் உயர்த்திக் காண்பித்து 'ஐந்து ரூபாய் கொடுத்த ஐயாவுக்கு நன்றி' என்று சொன்னான். அதற்கப்புறம் அவன் அடுத்த வரிசையில் டேப்பை நீட்டிய பொழுது நாலணா, எட்டணா காசுகள் விழுந்தன.

ரிங் ரோடில் சாந்திவனத்தைத் தாண்டி திடீரென்று போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பேருந்துகள் ஊர்ந்து கொண்டு இருந்தன. இறங்கி என்னவென்று பார்த்தேன். ஏதோ ஒரு லாரியில் அடிபட்டுக் குப்பையாக சுருண்டு கிடந்தாள் ஒரு கிழவி. தலை தனியாக எங்கோ போய்க் கிடந்தது. ஒரு மூலையில் கைத்தடி. பாவம் லாரிக்காரன். யாரோ ஒரு கூன் விழுந்த கிழவி குறுக்கே விழப்போய் இப்போது அவன் கம்பியெண்ணப் போகிறான்.

நான் பார்த்த விபத்துக்களெல்லாம் ஞாபகம் வந்தது. ஒரு ஜூலை மாத மதிய நேரம். மூளையை உருக அடிக்கும் வெயில். I.P. காலேஜ் நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு கிழவியின் மேல் பஸ்ஸை விட்டடித்து ரொம்ப தூரம் சென்று நிறுத்தினான் அந்த டிரைவர். படுகிழமான அவன் தூங்கிக்கொண்டே பஸ் ஓட்டி வந்ததை கவனித்து நான் கையை உயர்த்திக் கத்துவதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது. பறங்கிப் பழம்போல் பெருத்திருந்த அந்தக் கிழவி மிக மெதுவாக வந்த அந்த பஸ்ஸின் அடியில் பீப்பாய் உருளுவது போல் உருள, இது எதையும் கவனிக்காமல் அந்தக் கிழ டிரைவர் தூங்கிக்கொண்டே போய்க்கொண்டிருப்பதைப் பார்த்து எல்லோருமாய் கூப்பாடு போட்டு பஸ்ஸை நிறுத்தினோம். பிரயாணிகள் அதிகம் இல்லாத அந்த பஸ்ஸிலேயே கிழவியைப் போட்டு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தோம்.

இன்னொரு விபத்து ஒரு அதிகாலையில் நடந்தது. அவ்வளவு காலையில் நான் திர்லோக்புரி பக்கம் பஸ்ஸில் போக நேர்ந்ததன்

காரணம் என்னவென எனக்கு ஞாபகமில்லை. திர்லோக்புரி யினுள் நுழையும் முன்பாக இருந்த நிறுத்தத்தில் இறங்குவதற்காக டிரைவருக்குப் பக்கத்தில் படிக்கட்டு அருகில் நின்று கொண்டிருந்தேன். டிரைவர் வேகத்தைக் குறைத்து, என்னைப் பார்த்து இறங்க வேண்டுமா என்று கேட்டான். அதற்குள் வலப்புற சந்தொன்றிலிருந்து கண்மண் தெரியாத வேகத்தில் வந்து மாட்டினான் ஸ்கூட்டரில் வந்த ஒருவன். ஸ்கூட்டரிலிருந்து மல்லாந்து அவன் பஸ்ஸின் அடியில் போவது கண்ணாடி வழியாகத் தெரிந்தது. டிரைவர் என்னைப் பதற்றத்துடன் பார்த்து, வண்டியை நிறுத்தினான். எல்லோரும் இறங்கிப் பார்த்தோம். அவனுக்கு மூச்சு வந்துகொண்டிருந்து அவனுடைய மார்பின் ஏற்ற இறக்கத்திலிருந்து தெரிந்தது. எல்லோரும் அடுத்து என்ன நிகழப் போகிறது என்று உற்றுக் கவனித்தோம். மூக்கில் இருந்து லேசாக ரத்தம் வழிய ஆரம்பித்தது. இதற்கிடையில் டிரைவரும் கண்டக்டரும் எங்கே என்று சிலர் தேடினார்கள். “அவர்கள் ஓடியிருப்பார்கள், அடிக்கு பயந்து” என்றான் ஒருவன். விழுந்து கிடந்தவனுக்குப் பக்கத்தில் அவனுடைய கைக்கடிகாரம் தனியாகக் கிடந்தது. ரத்தம் இப்போது காது வழியாகவும் வருவதைக் கவனித்தேன். நிறைய வழிந்து ஓடியது. பாஸ்டர்ட். ஹெல்மெட்டும் போட்டுக் கொள்ளாமல் தலைதெறிக்கிற அவசரத்துடன் எங்கே போய்க் கொண்டிருந்தான் இவன்? இவன், பக்கத்திலுள்ள பாண்டவ் நகரைச் சேர்ந்த ‘டேகேதார்’ என்று யாரோ சொன்னார்கள். பணத்தைப் பற்றியே இருபத்துநாலு மணி நேரமும் நினைக்க வைக்கிற வேலை. அவனுக்குப் பக்கத்தில் கிடந்த கைக்கடிகாரம் இப்போது அங்கே இருக்கவில்லை என்பதை கவனித்தேன். கொஞ்ச நேரத்தில் அவன் உடம்பு ஒரு துடிப்பு துடித்து அடங்கியது. உயிரின் துடிப்பைக் காண மிகவும் விநோதமாகத்தான் இருக்கிறது.

என்னவோ தெரியவில்லை. இந்த பஸ் சக்கரத்தைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குத் தலையைக் கொடுத்து விடலாம் போல் இருக்கிறது. என்னை மீறிய ஒன்றாயிருக்கிறது அது. அப்போது அறிவும் ஸ்தம்பித்துவிடுகிறது. சக்கரச் சுழற்சி என்னை ஈர்த்துத் தன் வசம் இழுப்பது மட்டுமே தெரிகிறது. இருந்தாலும் ஒவ்வொரு முறையும் இதிலிருந்து தப்பித்துக்கொண்டிருக்கிறேன். அதுவும்

எப்படி என்று தெரியவில்லை.

மிஸ்ரா அவனுடைய அறையில் இல்லாதது ஏமாற்றமாக இருந்தது. காஃபி ஹவுசில் இருக்கலாம் என்று அங்கு வந்து தேடியபொழுது கிடைத்தான்.

பாரதம் வென்று விட்டதைச் சொன்னான். பின்னர் கொஞ்ச நேரம் அதுபற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். 'அறைக்குப் போகிறேன், வருகிறாயா?' என்று கேட்டான். போனேன்.

'கொஞ்சம் விஸ்கி அருந்துகிறாயா?' என்றான். இந்த நேரத்தில் வேண்டாம் என்று மறுத்துவிட்டேன். மிஸ்ரா ஒரு பாட்டிலைக் கொண்டு வந்து காட்டினான். Chivaz Regal. சுஷ்மா கொடுத்தாளாம்.

மிகவும் ஆச்சரியமானதொரு கேர்ள் ஃப்ரண்ட்.

சாப்பிட்டோம்.

மிஸ்ராவுடன் மது அருந்துவதில் ஒரு சிரமம் இருந்தது. அவன் பேசவே மாட்டான். மது உள்ளே போனதுமே பேசுவதை நிறுத்தி விடுவான்.

எவ்வளவு நேரம் பேசாமல் உட்கார்ந்திருப்பது? நான் விடைபெற்றுக் கொண்டு கிளம்பினேன். வந்த ஏதோ ஒரு பஸ்ஸில் ஏறி அமர்ந்தேன். கொஞ்ச நேரத்திலேயே பரிசோதகர்கள் வந்தார்கள். டிக்கட் கேட்டபொழுது இல்லை என்றேன். வாங்கச் சொன்னார்கள். முடியாது என்றபோது விசில் அடித்து பஸ்ஸை நிறுத்திக் கீழே இறக்கிவிட்டார்கள்.

நல்லவேளையாக I.P. காலேஜ் நிறுத்தத்திற்கு அருகில்தான் இருந்தேன். பக்கத்திலிருந்த சந்தன் சிங் கடைக்குப் போகலாமே என்று தோன்றியது. போனேன். சந்தன் சிங் கடையில் ஒரு வருடத்திற்கு முன்பு பார்த்திருந்த அதே இளைஞர்களையும், அதே சிகரெட் குடிக்கும் பெண்களையும் பார்த்தேன். எதிரிலிருந்தவன் மிகுந்த சிரத்தையோடு சிகரெட்டிலிருந்து புகையிலையை உதிர்த்துக் கொண்டிருந்தான். உதிர்த்துவிட்டு, தான் வைத்திருந்த தூளை அதில் அடைத்தான். சிகரெட் பாக்கெட்டில் இருக்கும்

ஜவ்வுத் தாள், ஐந்து பைசா நாணயம் இரண்டையும் கூடப் பயன்படுத்தினான். எப்படிப் பயன்படுத்தினான் என்ற விளக்கங்களுக்கு நான் போகப் போவதில்லை. ஆனால், அதை அவன் குடித்து முடித்தபோது அந்த அலுமினிய ஐந்து பைசா நாணயம் உருகி உருக்குலைந்து போனதைக் கண்டு நான் ஆச்சரியமடைந்ததை சொல்லத்தான் வேண்டும். எலும்புருக்கி நோய் வந்து செத்துப்போன தன் தந்தையைப் பற்றி ரவி சொல்லியிருந்தது ஞாபகம் வந்தது. அவர் ஒரு அலுமினியத் தொழிற்சாலையில்தான் வேலை பார்த்து நோய் கண்டு செத்தாராம்.

என் முன்புறம் ஒரு பெண் தொடர்ச்சியாக சிகரெட்டை ஊதித் தள்ளிக்கொண்டு இருந்தது எனக்கு எரிச்சலை உண்டாக்கியது. புகையை மிகவும் ஆழ்ந்து இழுத்தாள் அவள். கை, கால்கள், தலை என்று எல்லா உறுப்புகளுக்கும் சென்று திரும்புவது போல் புகை வெளிவர நீண்ட நேரம் எடுத்தது.

வெளியில் வந்து அங்கிருந்த ஒரு கடையிலிருந்து வெள்ளைத்தாள் வாங்கி தனியாக ஒரு மூலையில் அமர்ந்து போலீஸ் கமிஷனருக்கு ஒரு புகார் எழுத ஆரம்பித்தேன். சந்தன் சிங் கடை பற்றிக் குறிப்பிட்டு, பல இளைஞர்கள் இதை கஞ்ஜா மடமாக உபயோகித்து வருவதையும் எழுதி, பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு தபாலில் சேர்த்தேன். புகாரில் என் பெயர், விலாசம் எதுவும் கொடுக்காததால் நடவடிக்கை எடுக்கப்படாது போய் விடுமோ என்று ஒரு கணம் சந்தேகம் வந்தது. இல்லை, அப்படி ஆக சாத்தியமில்லை. சந்தன் சிங் கடை, அதன் முகவரி எல்லாம் விபரமாகக் குறிக்கப்பட்டுள்ளதால் எப்படியும் நடவடிக்கை எடுப்பார்கள். திடீர் சோதனையின் போது மாட்டிக்கொண்டு இந்த இளைஞர்கள் கம்பி எண்ணப் போவதை நினைத்தால் சிரிப்பாக வந்தது.

நான் எழுதுவதையெல்லாம் கிழித்துப்போட்டு விடுவது பற்றி ஒருநாள் என்னுடன் சண்டை பிடித்தான் ரவி. பதிலுக்கு அவனைக் கிழிகிழியென்று கிழித்தேன் – இலக்கியம் செய்கிறேன் பேர்வழி என்று அவனும் மற்ற சிறு சஞ்சிகைக்காரர்களும்

செய்துகொண்டிருக்கும் பித்தலாட்டங்கள் பற்றி. ஆனால் நான் திட்டிக்கொண்டிருக்கும்போதே வயிற்றைப் பிடித்துக்கொண்டு சுருண்டுவிட்டான் அவன். பேச்சை நிறுத்திவிட்டு அவன் பக்கத்திலேயே அமர்ந்திருந்தேன்.

"எப்போதுமே இப்படி வந்ததில்லை. புதிதாயிருக்கிறது" என்றான், சிறுநீர் கழிப்பதற்குக் கூட குனிந்து வயிற்றைப் பிடித்துக்கொண்டும், ஒரு கையால் என்னைப் பிடித்துக்கொண்டும்தான் போனான். கத்திப் பேசியது அவனுடைய பௌதீக இயக்கத்தையே பாதித்து விட்டது என்றறிந்து இனிமேல் அவனிடம் இப்படிப் பேசவே கூடாது என்று முடிவெடுத்தேன்.

அவ்வளவுதான்.

நான் சொல்ல வந்த கதை முடிந்தது.

இன்று காலை ரவியிடம் இதைப் படிக்கக் கொடுத்தேன். படித்து விட்டு "தலைப்பு?" என்றான்.

"கிரிக்கெட் என்று வைத்துக் கொள்ளேன்."

"கிரிக்கெட்டைப் பற்றி இதில் ஒன்றுமில்லை. ஆனாலும் இருந்துதான் ஆகவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. பிரசுரித்து விடலாம்."

இந்தப் பேச்சுக்கு பிறகு இதில் இன்னும் கொஞ்சம் சேர்க்க வேண்டியிருக்கிறது என்று சொல்லி வாங்கி வைத்து மறுபடியும் எழுதுகிறேன்.

இந்த ஆஸ்பத்திரிச் சூழ்நிலையில் பொழுது போவது பெருத்த சிரமமாயிருக்கிறது. கால் கட்டுகளுடன் எழுந்து நடப்பதும் இயலாத ஒன்று. எனக்குப் பிடித்த புத்தகங்கள் ரவியிடம் இல்லை. கிரிக்கெட்டும் இல்லை. பாப் ம்யூஸிக், ஜாஸ் எதுவும் கேட்க முடியவில்லை. இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நேற்று ரவி மைக்கேல் ஜாக்ஸனைப் போட்ட போது என் உடம்பை அது பாதித்ததை அறிந்தேன். இசைக்கும் மனதிற்கும்தான் உறவிருப்பதாக இத்தனை நாள் நினைத்து வந்திருந்தேன்.

உடம்பும் உண்டு இதில் என்று தெரிந்தது. நிறைய மருந்து மாத்திரை விழுங்குவதாலும், உடம்பு தெம்பு குறைந்திருப்பதாலும் இருக்கலாம் என்றான் ரவி. ஆனால் பிஸ்மில்லாகான் போன்றவைகளைக் கேட்க முடிகிறது. ஒருவேளை நாதஸ்வரம் (தவில்!) கேட்க முடியாமல் போகலாம். பிஸ்மில்லாகானையும் எத்தனை மணிநேரம் கேட்டுக் கொண்டிருப்பது? பொழுது போக்கிற்காக மேற்கண்டவைகளைக் கிறுக்கினேன். இந்தக் குப்பைகளை வழக்கம்போல் கிழித்துப் போட்டுவிடாமல் ரவியிடம் படிக்கக் கொடுத்ததற்குக் காரணம் ஒன்றுண்டு.

அவன்தான் சொன்னான், “எழுதுகிறவனின் பங்கு ஐம்பது சதவீதம் தான். மீதியெல்லாம் வாசிப்பவனுடையது” என்று. அவன் சொன்னது சரிபோல் தோன்றுகிறது. அப்படியிருக்கத்தானே, ஒரே எழுத்து அவனுக்கு ஒருவிதமாகவும் எனக்கு வேறோர் விதமாகவும் தெரிகிறதென்று நினைத்தேன். ஆனால் அவனும் நீங்களும் வெறும் போலிகளோ என்றும் எனக்கு ஐயமாக இருக்கிறது. எதையென்று நான் எழுதுவது என்று ஒருமுறை அவனிடம் கேட்டபோது அவன் சொன்ன பதில்தான் இந்த என் ஐயத்திற்குக் காரணம். அவன் சொன்னான்: எதைப் பற்றி வேண்டுமானாலும் எழுது. நாள் பூராவும் கிரிக்கெட்டிலேயே கழிக்கிறாயே, அதைப் பற்றி எழுது.

கிரிக்கெட் சுவாரசியமான விளையாட்டுதான். அதில் சந்தேகமே இல்லை. (உங்களைப் போன்ற கூமுட்டைகள் இதை மறுக்கக் கூடும். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை). ஆனால் அதுபற்றி எழுதினால் அது எப்படிப்பட்டதொரு அறுவையாக இருக்கும்! இந்த மாதிரிப் பிதற்றல்கள்தான் இலக்கியமா?

உங்கள் சிற்றேடுகளின் பாணியில் நான் ஒரு கதை சொல்லட்டுமா?

### ஜும்பகஜும்பா[1]

நாற்காலியைச் சத்தம் செய்யாமல் சற்றே பின்னுக்கிழுத்து எழுந்து வேட்டியைச் சரிசெய்து கொண்டான் ராமனாதன். மாலை

---

1. எத்தியோப்பிய பழங்குடியினர் ஆட்டுத்தொட்டிகளை குறிப்பிடும் வார்த்தை.

மங்கி இருள் பரவும் நேரம். விளக்கைப் போட எழுந்தானோ என்று சந்தேகித்தேன். அதற்காகத்தான் எழுந்தானெனில் வேண்டாமெனச் சொல்லலாம் என்று நினைத்து வாயை அசைத்தேன். சொற்கள் வரவில்லை. விளக்கைப் போட்டால் இந்த அமைதி குலைந்து விடுமெனவும், பெரும்பிரளயம் ஏற்படப் போவதற்கான சங்கேதமே அதுவெனவும் நினைத்தேன். எந்த இருக்கையிலும் பட்டுவிடாமல் சர்வஜாக்கிரதையாக வந்தான். தண்ணீர்ப் பானை அருகில் போய் சத்தமிடாமல் திறந்து தண்ணீரை எடுத்துக் குடித்தான். குடிக்கும்போது அவன் தொண்டையில் அது ஏற்படுத்திய சப்தம் பிரபஞ்சப் பேரிடியாய் ஒலித்தது. என் செவிகளுக்கு மட்டும்தானா? அல்லது மற்றவர்களுக்குமா? இவர்கள் யாரும் சற்றும் இதைப் பொருட் படுத்தாமல் அமர்ந்திருப்பதைக் காண்கையில் அப்படித்தான் தோன்றுகிறது. திரும்பி வந்து உட்கார்ந்து இருக்கையை முன்னே தள்ளிப் போட்டுக் கொண்டு சாய்ந்தான் ராமனாதன்.

கிரிக்கெட்டைப் பற்றி இப்படி எழுதினால் ஒரு மேட்சுக்கு பத்தாயிரம் பக்கங்கள் எழுதலாமா? நிச்சயமாக நீங்களெல்லாம் கேணப்பயல்கள் தான்.

(ஆனால் உங்கள் ஆட்களில் ஒருத்தர் என்னை வெகுவாகக் கவர்கிறார். நாகராஜன். நான் புரிந்த நற்செயல்கள் என்ற அந்தக் கதைத் தலைப்பும், நான் அதை மிகுந்த உற்சாகத்துடன் படித்ததும் ஞாபகம் இருக்கிறது. கதை அவ்வளவாக ஞாபகம் இல்லை. கதை என்ன கதை? அந்த 'நற்செயல்கள்' என்பது, ஒருவன் பெண்களிடம் போனதுதான்).

நீங்கள் இந்த இலக்கியம், கிலக்கியம் லவ்டாவையெல்லாம் விட்டு விட்டு கிரிக்கெட்டில் கவனம் செலுத்துங்கள். அதில் ஈடுபாடு கொள்ளுங்கள். அது தரும் மகத்தான இன்பத்தை உய்யுங்கள், அதுதான் நம்மையெல்லாம் வாழ்விக்க வந்த விளையாட்டு. மனிதனின் அறியாமையை, சோர்வை, துக்கத்தை, அழுகையை, ஏமாற்றத்தை, வலியை எல்லாம் போக்குவதற்கெனவே விளையாட்டென்ற பெயரில் வந்த மாமருந்து அது.

பழைய புத்தகக் கடைகள் பக்கம் வந்து சேர்ந்தான் அவன். Sons

and Loversஐ எடுத்து விலை கேட்டான். எட்டு ரூபாய் என்று பதில் வந்தது. ஏழுக்குத் தருகிறாயா என்றான் இவன். 'ஒரு ரூபாய்க்குக் கிடைக்கும் இடத்தில் போய் வாங்கிக்கொள்... வை கீழே புத்தகத்தை' என்று இவன் கையிலிருந்த புத்தகத்தைப் பிடுங்கி வைத்துவிட்டு 'பெஹன் சூத்' என்று முணுமுணுத்தான். இவன் அவனைக் காறி துப்பினான். அவன் இவன் மேல் பாய்ந்து விழுந்து அடித்தான். பக்கத்தில் இருந்தவர்களும் சேர்ந்து கொண்டார்கள். யார் யாரோ யார் யாரையோ அடித்தார்கள். இவனுக்குக் கையில் கிடைத்த ஒருவனின் விரைகளை வெறியுடன் பிடித்து இழுத்தான். அலறலுடன் விழுந்தான் அவன்.

ராகம் (ஜனவரி, 1987)
மீட்சி (ஜூலை, 1987)

மின்நூலாக்கம்
முரளிதரன்

## கர்நாடக முரசும் நவீன தமிழ் இலக்கியத்தின் மீதான ஓர் அமைப்பியல் ஆய்வும்

கதாசிரியன் பற்றிய குறிப்பு: முனியாண்டி ஒரு தமிழ் எழுத்தாளன் ஒன்பது கோடி தமிழ்க் கும்பலில் நூற்று எண்பது பேர் மட்டுமே அகப்பட்டுக்கொண்ட நவீன தமிழ் இலக்கியக் கூடாரத்தில் இவனொரு இலக்கியத் திருடனென்றும் ஜனரஞ்சகப் பத்திரிகைகளில் காமினி கட்டாரியா என்ற பெயரில் ஜோக்குகள் எழுதுகிறவனென்றும் இவன் மீது குற்றச்சாட்டுகள் உண்டு இவனது ஒரு கதையில் ஒரு பெண் மெதுவடை சுடுகிறாள் வடை சரியாக வராது போகவே எரிச்சலுற்ற அந்தப் பெண் தனது புடவையைத் தூக்கி மர்ம ஸ்தானத்தைக் காட்ட அதற்குப் பிறகு வடைக்குத் தனது உருவம் மற்றும் அமைப்பு பற்றிய பிரக்ஞை கிடைத்ததாகவும் எழுதப்பட்டிருப்பது ஏற்கனவே ஒரு எழுத்தாளரின் கதையிலிருந்து திருடப்பட்டது என்ற விஷயம் இலக்கிய வட்டாரங்களில் முனியாண்டியை ஒரு இலக்கியத் திருடனாகக் காட்டுவதற்குச் சான்றாக முன்வைக்கப்பட்டது ஆனால் குறிப்பிட்ட அந்த எழுத்தாளரின் கதையில் வருவது அதிரசம்தானே தவிர மெதுவடையல்ல என்றும் அதிரசத்தை விட மெதுவடையே

பெண்ணுறுப்புக்குப் பொருத்தமான உதாரணமாகும் என்றும் சொல்லி இது இலக்கியத் திருட்டாகாது என்று வாதிட்டா ன் முனியாண்டி இவனது கதைகள் புரியவில்லை எ ன்ற குற்றச்சாட்டுக்கு பதிலாக தான் மூன்று பேருக்காக மட்டுமே எழுதுவதாக இயம்பினான் லூஸ் மோகன் கோணங்கி டொனால்ட் பார்த்தெல்மே உனது எழுத்துக்களில் வாழ்ந்து பெற்ற அனுபவமே இல்லை வெறும் மூளையால் எழுதப்ப ட்டவை அவை மூளையால் மட்டுமென்ன எனது லிங்கத்தாலும் எழுதுவேனென்று இவன் சிறு பத்திரிகைகளுக்கு எழுதுவதை நிறுத்திவிட்டு கர்னாடக முரசு எனும் போர்னோ பத்திரிகையில் எழுதிப் பிரபலமானான் இவனது கவிதைகளில் பிணவாடை அடிப்பதாகவும் கவிதைகளோடு டெட்டால் மற்றும் ஃ பினய்ல் பாட்டில்களும் தந்தால் நல்லது என்றும் இவனது கவிதைத் தொகுப்புகளின் மீது விமர்சனம் வைத்திருந்தான் மாறவர்மன் மாறவர்மா சில காலத்திற்கு முன்பு உனது கவிதைகள் வறட்சியைப் பேசின அப்போது நீ உனது கவிதைத் தொகுதியோடு ஒவ்வொரு பாட்டில் ஸ்பென்ஸர் சோடா கொடுத்திருக்கலா ம் இப்போது நீ உனது முதல் பெண்ணைப் பற்றி எழுதிக் கொ ண்டிருக்கிறாய் இனிமேல் நீ உன் ஒவ்வொரு தொகுதியோடும் ஒரு ரோஜா மலரையும் சேர்த்துக் கொடு இவன் எழுத்தெல்லாம் வெறும் செக்ஷுவல் பர்வர்ஷன்பா அநேகமாக இவன் இம்ப்போ டென்டாகத்தான் இருப்பான் என் ஆண்மையைப் பற்றி சரியாக முடிவெடுக்க வேண்டுமானால் அதற்கு முறையான வழி என் கவிதைகளைப் படிப்பதல்ல உன் மனைவியை ஒரு இரவில் என்னிடம் அனுப்பி வைப்பதுதான் அவள் உனக்குச் சொல்லுவாள் தனது மகளை அடித்துக் கொண்டிருந்தான் முனியாண்டி மகளை அடிப்பவன் எப்படி ஒரு இலக்கியவாதியா க இருக்க முடியும் ஒரு குமாஸ்தா எப்படி ஒரு இலக்கியவா தியாக இருக்க முடியும் ஒரு சுயமைதுனக்காரன் எப்படி ஒரு இலக்கியவாதியாக இருக்க முடியும் ஒரு ஜேப்படித் திருட ன் எப்படி இலக்கியவாதியாக இருக்க முடியும் ஒரு நபும்ஸகன் எப்படி இலக்கியவாதியாக இருக்க முடியும் ஒரு வெ ங்காய வியாபாரி எப்படி இலக்கியவாதியாக இருக்க முடியு ம் ஒரு லெஸ்பியன் எப்படி இலக்கியவாதியாக இருக்க மு டியும் ஒரு கொலைகாரன் எப்படி இலக்கியவாதியாக இருக்க

முடியும் ஒரு மர்ம நாவலாசிரியன் எப்படி ஒரு இலக்கியவா தியாக இருக்கமுடியும் ஒரு பெண்தரகன் எப்படி ஒரு இலக்கியவாதியாக இருக்க முடியும் ஒரு நயவஞ்சகன் எப்ப டி இலக்கியவாதியாக இருக்கமுடியும் ஒரு லேவாதேவிக்கா ரன் எப்படி இலக்கியவாதியாக இருக்கமுடியும் முனியாண்டியின் எழுத்து புரியவில்லை என்ற குற்றச்சாட்டு தமிழிலக்கி ய வட்டாரத்தில் பரவலாகவே இருந்து வருகிறது என் எழுத்து புரியவேண்டுமானால் தமிழ் வாசகா கேட்டுக் கொள் நீ தூரத்துணி துவைத்திருக்கிறாயா நிதம்பத்தைச் சுவைத்த அனுபவம் உனக்கு உண்டா குழந்தையின் மூத்திரம் மற்று ம் பீத்துணியை அலசி இருக்கிறாயா நிதம்பத்தில் பச்சை முட்டையை ஊற்றி (வெள்ளைக் கரு மட்டும்) நக்கியிருக்கிறாயா நிதம்பத்தில் அமுல் மில்க் சாக்லெட்டை வைத்து சு வைத்திருக்கிறாயா பல்வேறு நேரங்களில் பல்வேறு சுவைகளை யும் மணங்களையும் தரக்கூடிய நிதம்பத்தில் அழுகிய முட் டை மொக்கவிழ்க்கும் மல்லிகை பாதாள சாக்கடை நெ ருப்பில் கரியும் பூண்டு புளித்த கள் உருகும் மாம்சம் என்று பல்வேறு மணங்களை உணர்ந்திருக்கிறாயா வேசியிடம் போ ய் ஜோலியில் ஈடுபட்டிருக்குங்கால் தட்டி மறைப்புக்கு வெளியே நிற்கும் ஆட்கள் அட சீக்கிரம் வாய்யா என்று உன்னைக் க த்தி விரட்டியதையோ அல்லது என்னா நான் ஒனக்கு ல வ்வரா இந்தா சீக்கிரம் எழுந்து போய்யா அடுத்த கிராக்கிங்க ரொம்ப நேரமா வெளில நிக்யிது என்று அவள் எரிந்து விழுந்ததையோ அனுபவித்திருக்கிறாயா ஐந்தாறு பேர் சூழ்ந்துகொண்டு உன்னை ஆயுதங்களால் தாக்க அவர்களிடமிருந் து அதிர்ஷ்டவசமாகத் தப்பி ஓடி வந்திருக்கிறாயா தாய் மகளுக்குச் சொன்னது what a great fuck what a great fuck what a great fuck what a great fuck WHAT A GREAT FUCK நான்கெழு த்து வார்த்தையை முதன் முதலில் தமிழில் உபயோகப்ப டுத்திய எழுத்தாளன் முனியாண்டிதான் பரிசு ஒரு லட்ச த்து ஒரு ரூபாய் இந்தப் பரிசளித்த பாக்கியவானுக்கு சாவே கிடையாது என் நாவில் சரஸ்வதி தேவி குடி கொண்டிருக்கிறா ள் அவள் சொல்கிறாள் இவர் மரணத்தை வென்றவர் ஏ எழுத்தாழா இங்க வாய்யா எங்க உன் மூக்கெ காமி நான் பார்த்து விட்டேன் நீ போய்ப் பார் மும்முடி என் கவி

தைத் தொகுதிக்கு ஒரு முன்னுரை தருவீர்களா ஆண்குறிக்கு மோதிரம் கேட்கிறாயா காப்பர்-டி காப்பர்-டி காப்பர்-டி காப்பர்-டி காப்பர்-டி காப்பர்-டி காப்பர்-டி இனி வருவது கதை நடந்த உண்மைச் சம்பவம் பெயர்கள் மாற்றப்பட்டு தரப்படுகிறது புடவை ஜாக்கெட் பிரா உள்பாவாடை பேண்டீஸ் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாய்க் கழற்றி எறிந்துவிட்டு மல்லாந்து படுத்தாள் சாந்தா ஓடிவந்தது முனியாண்டி கால்களை அகல விரித்தாள் நடிகையின் கணவனுக்கு நாக்கு நீளம் போதவில்லையென்று நாய் வளர்க்க ஆரம்பித்தாள் பிளவில் நாக்கை விட்டுச் சப்பியது முனியாண்டி வெறி தணியவில்லை மல்லாந்து படுத்திருந்தவள் எழுந்து முழங்கால்களையும் கைகளையும் ஊன்றி மண்டியிட்டு அமர்ந்து புட்டங்களைத் தூக்கிக் கொடுத்தாள் கமான் ஃபக் முனியாண்டி முன்னங்கால்களைத் தூக்கிப்போட்டு அவளை இழுத்தணைத்து தனது விறைத்து நீண்ட குறியை பிளவில் செருகியது முனியாண்டி உள்ளே சென்ற அது நீண்டு கொண்டே போக எங்கே தனது வாய்வழியே வந்துவிடுமோ என்று நினைத்தாள் சாந்தா தாக்குதல் மும்முரம் கொள்ளக் கொள்ள தன் வசத்தை இழந்தாள் சாந்தா பற்களைக் கடித்தாள் தலையணையைப் பிய்த்துப் போட்டாள் கண்களிலிருந்து நீர் கொட்டியது உதட்டைக் கடித்து வாய் வழியே குருதி கசிந்தது வெறிச்சிரிப்பு சிரித்தாள் குறி கிழிந்து குருதி கொட்டியது படுக்கை முழுதும் புரண்டார்கள் புரண்டு புரண்டு தரையில் விழுந்தார்கள் ஆனாலும் முனியாண்டி தனது பிடியை விடவில்லை பிடி தளராமல் மீண்டும் எழுந்து படுக்கையில் விழுந்தார்கள் படுக்கை முழுவதும் ரத்த வெள்ளமாயிற்று எத்தனை முறை உச்சத்தை அடைந்தாளென்றே தெரியவில்லை ஹாஹ்ஹாஹ்ஹாஹ்ஹாஹ்ஹாஹ்ஹா ஹா ஹாஹ் ஹா ஹா ஹா ஹாஹ் ஹாஹ் ஹா ஹா ஹா ஹா ஹா ஹா ஹா ஹா ஹா ஹ் ஹா ஹா ஹா ஹா போதும் இனியும் தொடர்ந்தால் இறந்து விடுவாள் சாந்தா இறந்துவிட்டால் கதை முடிந்துவிடும் முடியக்கூடாது துவங்குவதற்குள்ளாகாவே முடிந்துவிட்டால் என்ன ஆவது வெகுவாகச் சிரமப்பட்டு இருவரையும் பிரித்து விட்டான் முனியாண்டி பேய் முனியாண்டி நீயும் ஒரு எழுத்தாளன் சிறு வயதில் சாலை நடுவில் இணைந்த நாய்களை

க் கல்லெடுத்து எறிந்து அவற்றைப் பிரித்துவிட்டு வேடிக்கை பார்ப்பாயே அந்த நிலையிலிருந்து நீ இன்னும் வளரவி ல்லை இப்போதும் என்னைப் பிரித்து விட்டாய் சாந்தா உச்சத்தை அடைந்தால் போதுமா நான் அடையவேண்டாமா இ வனை மாறுகால் மாறுகை வாங்க வேண்டும் எழுத்தாளன் என்பதால் ஏதோ எங்களையெல்லாம் உன் அடிமைகள் என்றா நினைத்துக் கொண்டிருக்கிறாய் சொற்ப சிறுபத்திரி கையாளர்களைத் துடிதுடிக்க வைத்து ரசிக்கிறாய் நீ ஒரு சேடிஸ்ட் நீ வயிறு வளர்ப்பதற்காக எங்களைப் பயன்படுத்துகிறா ய் நீ நிறுத்து என்றதும் நாங்கள் நிறுத்திவிட வேண்டும் அப்படித்தானே I will castrate you son of abitch சாந்தா நீ தியை நிலைநாட்ட வேண்டிய நீயுமா இந்த விலங்கோடு சேர்ந்து விட்டாய் எனக்கும் பொறுப்புணர்ச்சி இல்லயா செக் ஸ் எழுதுகிறேன் என்பதற்காக நான் ஒரு கொலைகாரனாகி விட முடியுமா கொலைகாரனாவது ஒரு பக்கம் இருக்க ட்டும் non-linear writing-இல் ஒரு தொகுதி கொண்டு வந்துவிட வேண்டுமென்று சொல்லி என்னிடமும் கதை கேட்டிரு க்கும் நாகார்ச்சுனனிடம் கையெழுத்துப் படியில் இருபது பக்கங்களுக்குக் குறையாமல் கதையொன்று தந்து விடுகிறே னென்ற என் வாக்குறுதி என்னாவது செக்ஸ் எழுதுகிறேன் என்பதற்காக என்னை எப்படி வேண்டுமானாலும் கு திரை ஓட்டுவதா அப்படியென்ன நான் கூளப்ப நாய்க்கன் கதையா எழுதிவிட்டேன் இதுவரையிலான தமிழிலக்கியத்தில் இல்லாத செக்ஸும் க்ரைமுமா சீதையை ராவண ன் கடத்தவில்லையா ராமனை சூர்ப்பனகை மோகிக்கவில்லையா சீதாவின் அல்குல் ஆலிலை போலிருந்ததாக வர்ணிக்கவில் லையா கம்பன் ஆண்டாள் எழுதாத செக்ஸா அருக்கு மங்கையின் அரைதனில் ஆடையை அவிழ்த்து ஆங்குள அரசிலை தடவி நானும்தான் என்ன செய்வேன் எத்தனையோ வழிகளி ல் முயன்றேன் என் மனைவி கொண்டு வந்த இருபது பவுன் நகைகளை விற்று அச்சகம் வைத்துப் பார்த்தேன் அதே மாதத்தில் அச்சகத்தை இழுத்து மூட வேண்டியதாயிற்று வியாபாரிக்கு வேண்டிய தந்திரம் என்னிடமில்லை பட்டினி கிடந்தேன் எ ன் குழந்தைகளைப் பட்டினி போட்டேன் கடன் வாங்கினேன் சக எழுத்தாளர்களை ஏய்த்துப் பிழைத்தேன் எத்தனை நாள்

தான் ஓடுமிந்தப் பிழைப்பு இதோ பார் இந்த வானொலிப் பெட்டியை இதை எனது நாற்பத்தொன்றாவது வயதில் எனது எழுத்துக்குக் கிடைத்த சன்மானத்திலிருந்து வாங்கினேன் இப்போதுதான் என் மனைவியின் முகத்தில் முதன்முதலாகப் புன்சிரிப்பைப் பார்க்கிறேன் எனது உச்சநிலையை அடைய முடியாமல் கெடுத்துவிட்ட இந்த எழுத்தாளனை என்ன செய்வது சாந்தா உனது சதை என்ற காமவெள்ளத்தில் நீந்த ஓடோடி வந்த என்னை ஏமாற்றிவிடாதே சாந்தா காட்டு காட்டு சிங்கார வேலனே தேவா அதிசிங்கார வேலனே தேவா வலி பொறுக்க முடியாமல் அரற்றினாள் சாந்தா மருத்துவனை அழைத்து வா தத்வமஸி மருத்துவனே வேண்டாம் என் கண்ணே கண்ணாவது புண்ணாவது யார் நீ அஹம் ப்ரும்மாஸ்மி நாதா இவன் ஏன் இப்படி உளறுகிறான் இவன் யார் அவன் இவன் எவன் அவள் இவள் எவள் அது இது எது யாது நாதனைத் தேடாதே உள்ளேயிருக்கிறான் அவன் அருகே சென்று அவளைத் தொட்டது அது எழுந்து உட்கார்ந்து படுக்கையிலேயே மூத்திரம் பெய்தாள் சாந்தா சானிடரி நாப்கின் மற்றும் disposable diapers போன்றவையெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு விட்ட பிறகு இனிமேல் தூரத்துணி குழந்தையின் மூத்திரத்துணி அலசுவது என்பதற்கெல்லாம் அர்த்தம் ஏது இவன் கவிதை பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குரியது காலாவதியாகி விட்ட விஷயங்களைப் பேசுகிறான் இந்த முட்டாள் என்றான் யாக்ஞவல்கியன் அதுவரை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்திருந்த முனியாண்டியின் கவிதைகளைக் கிழித்துப் போட்டான் அகோ கேளாய் யாக்ஞவல்கியா Carefree நாப்கின் ஒன்றின் விலை ஒரு ரூபாய் முப்பது பைசா குழந்தை பெற்ற முதல் மாதத்தில் தினமும் ஆறு தேவை 6 x 1.30 = 7.80 x 30 ரூபாய் இருநூற்று முப்பத்து நான்கு குழந்தைக்குக் குறைந்த பட்சம் முப்பது முறையேனும் நாப்கின் மாற்ற வேண்டும் பெருக்கிப் பார்க்கவே பயமாக இருக்கிறது ஆனாலும் முனியாண்டி தன்னை ஒரு இலக்கியத் திருடனாக பல சந்தர்ப்பங்களில் ஒப்புக் கொண்டும் இருக்கிறான் MIT GOT donald barthelme norman mailer william burroughs thomas pyn chon flann o'brien ronald sukenick julio cortazar fragments are the only form i believe இது உன்னுடைய கருத்தா அல்லது உன் கதாபாத்திரத்தின்

கருத்தா என் கருத்தல்ல என் கதாபாத்திரத்தின் கருத்தே பொய் சொல்லுகிறாய் பார்த்தெல்மே barthelme's verbal enigma ஸ்ரீ நாராயண மந்திரம் தாத்தா ஆசீர்வாதம் உனக்கு ஏன் சாந்தா இப்படி குபுக் குபுக்கென்று கோபம் வருகிறது நிதம்பத்தை விரித்து முகத்தருகே கொண்டு வந்து காட்டினாள் நிதம்பத்திலிருந்து மச்சமொன்று புறப்பட்டு வந்து தொப்புளுக்குக் கீழே மச்சமுள்ள மகளிர்க்கு மூக்குக்கு மேலே கோபம் வரும் தெரியாதா உனக்குத் தமிழ் எழுத்தாளா என வினவியாது ஐயோ எனது மச்சம் எனது மச்சமென்று மச்சத்தைப் பிடிக்கத் தாவியெழுந்தாள் சாந்தா மச்சநாதா நீ கிளம்பினால் ஊரே அழிந்துவிடும் உலகமே அவிந்துவிடும் உள்ளே போ எனது வீட்டு வரி மின்சார வரி தண்ணீர் வரி தொலைபேசி வரி டெலிவிஷன் வரி ரேடியோ வரி டேய் மடையா ரேடியோவுக்கெல்லாம் வரியை ரத்து செய்து ஒரு மாமாங்கமாகி விட்டதடா எல்லாவற்றையும் ஒழுங்காகக் கட்டி வருகிறேன் எனது வெங்காய மண்டியிலுள்ள அத்தனை கூலியாட்களுக்கும் அவர்களுக்குண்டான கூலியில் ஒரு தம்பிடி கூடப் பிடித்தம் செய்யாமல் கொடுத்து விடுகிறேன் ஆனால் ஒரு டைப்பிஸ்ட்டின் பிரச்சினைதான் என்னை வாட்டி வருகிறது நான் கொடுக்கும் முன்னூறு ரூபாய் மாத ஊதியத்தில் அதுவே அதிகம் என்கிறான் பக்கத்து மண்டிக்காரன் அவளுக்கு பஸ் செலவே நூற்றுப் பதினைந்து ரூபாய் ஆகிவிடுவதால் மீதி நூற்று எண்பத்தைந்து தான் மாத ஊதியமாக அவளுக்கு மிஞ்சுகிறது இதற்கு பார்த்தெல்மே வில்லியம் பர்ரோஸ் தெரிதா லெக்கான் ஃபூக்கோ எவரிடமும் விடை கிடையாது விடை உன்னிடம்தான் இருக்கிறது மச்சநாதா நீ உன் வாழ்விடத்தை விட்டு அகன்றது நியாயமா மஹாப்ரபோ என் மச்சநாதா உனது வாழ்விடமும் பிறப்பிடமும் அதுதானே ஏன் அகன்றாய் அதைவிட்டு பிறந்த இடத்தை நாடாத மனமும் ஒரு மனமோ அல்லது ஒரு வேளை சில நாட்களுக்கு சுற்றுலா கிளம்பியிருக்கிறாயா அதையேனும் இயம்பிவிட்டுச் செல் மண்டியிட்டு அழுதான் மாறவர்மனின் மூத்த சகோதரன் ராமவர்மன் இப்படி கர்னாடக முரசில் தொடர் கதை எழுதுகிறான் முனியாண்டி secular என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறாய் நீ ஒரு பிஎல்ஓ ஏஜெண்டாகத்தான்

இருக்க வேண்டும் ஆகவே நீ ஒரு தத்துவவாதியோ விமர்ச கனோ அல்ல நீ ஒரு அராஜகவாதி பயங்கரவாதி நீ கல ந்து கொள்ளும் இலக்கிய விழாக்களில் குண்டு வீசுவோம் இலக்கியம் தத்துவம் என்ற போர்வையில் ஒளிந்துகொண்டு உலா வரும் பயங்கரவாதிகளுக்கு இனிமேல் இடம் கிடையாது வந்தான் சாமி மச்ச சாமி பழனி மச்சான் வேல் வேல் வெற்றிவேல் வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா கந்தனு க்கு அரோகரா அதோ வராண்டி பழனி ஆறுமுகன்தான்டி அவன் போனாப் போறான்டீ முருகன் தானாவராண்டி வேல் முருகா வேல் முருகா வேல் வேல் முருகா வேல் முருகா வேல் உனக்கு இரண்டே இரண்டு சாய்ஸ்தான் இருக்கிறது என்று என்னை பழமுதிர்ச்சோலையில் வந்து சந்தி அல்லது முருகனடிமையைப் போய்ப் பார் புகழ்பெற்ற அறுவை சிகி ச்சை நிபுணர் அவர் இதை விட்டுவிட்டு நீ கதை எழுதி இலக்கிய உலகை நாற அடிப்பது சரியல்ல ஏன்யா இவனோ ட குசுவுக்கு ஸ்ட்ரக்சுரலிச விளக்கம் வந்திடுச்சாயா பக்த கோடிகளின் புகாரை என்னால் சமாளிக்க முடியவில்லை என்னைக் கேட்டால் நீ அடிமையைப் பார்ப்பதைவிட நேராக பழமுதிர்ச்சோலைக்கே வந்துவிடலாம் ஓஹோ நீ மார்க்ஸ்வா தி என்பதை மறந்துவிட்டேன் பரவாயில்லை மார்க்ஸைப் பற் றிக் கவலைப்படாதே அவரை நான் கவனித்துக்கொள்கிறேன் ஆஃப்டர் ஆல் அவரும் ஒரு பிராமணன்தானே உனக்கு நான் சொல்வதில் ஏதேனும் சந்தேகமிருந்தால் எனது அப்ப னைக் கேள் மார்க்ஸாய நமஹ ஓம் தத் ஸத் மும்முடி ஒரு மெட்டஃபிஸிகல் கவிஞன் மும்முடி நான் இலக்கியத்துக்கு ப் புதுசு நீங்கள் எனக்கு மிகச் சிறந்த எழுத்தாளர்களை அறிமுகப்படுத்துங்கள் வேண்டாம் நீ எனது கவிதைகளை மட்டுமே படித்தால் போதுமானது அன்பர்களே நண்பர்களே அபீசுக்குப் போய்விட்டு வீட்டுக்கு வந்து இரவில் மனைவி யை ஆசையுடன் தொடும்போது உங்கள் குறி ஒத்துழைப்பதி ல்லையா என்ன முயன்றாலும் அது விறைப்பதில்லையா புணர்ச்சியில் ஈடுபடும்போது மனதின் வெறிக்கு ஈடு கொடு க்க முடியாமல் உங்கள் குறி வளைந்து விடுகிறதா மனைவியைத் திருப்திப்படுத்த முடியாமல் இதை யாரிடமும் சொல்லவும் முடியாமல் வெட்கப்பட்டு அவதிப்படுகிறீர்களா இதோ இரு

க்கிறது மருந்து சிட்டுக்குருவி லேகியம் இதன் செய்முறை எனக்கு மட்டுமே தெரியும் சொல்லமாட்டேன் யாரும் கேட்டால் கட்டை அவிழ் தேங்காயை உடை மூடின தேங்காய் அழுகிப்போகும் கல்வராயன்மலை திருவண்ணாமலையிலிருந்து டவுன் பஸ்ஸில் போகக் கூடிய தூரத்தில்தான் இருக்கிறது டவுன் பஸ்களும் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன ஆனால் திருவண்ணாமலை வரை சென்ற மும்முடிக்குக் கல்வராயன் மலைக்கு வழி தெரியாமல் போனதற்கு எதைக் காரணமென்று சொல்லமுடியும் ஜாதகக் கோளாறுதான் கல்வராயன் மலைவாழ் பழங்குடி மக்களுக்குக் காலையில் பல் துலக்குவது குழந்தைகள் வெளிக்குப் போனால் சுத்தம் செய்துவிடுவது போன்றவற்றின் அவசியம் பற்றி எடுத்துச் சொல்லவும் மூக்குச்சளியென்பது உட்கொள்ளும் பண்டமல்ல சிந்தியெறிய வேண்டிய பொருள் என்பது போன்ற சுகாதாரம் குறித்த அறிவுவிளக்கப் பிரசங்கங்களும் ஆற்றும் பொருட்டு கல்வராயன் மலைக்குச் செல்லும் சமூகச்சேவை அமைப்புகள் ஏராளமாக உள்ளன ஆனால் ஹோர்ஹே சான்ஹீனஸின் டிடிகாகா பிரதேசவாசிகளைப் போன்று கல்வராயன் மலைவாழ்ப் பழங்குடி மக்கள் இந்த சமூக சேவகர்களின் ஆணுறுப்புக்களை அறுத்துப் போடுவதில்லை ஆனால் பிரதியாக மேகரோகத்தைத் தந்து அவற்றின் உயிரியக்கத்தை நிர்மூலம் செய்து விடுகிறார்கள் கல்வராயன் மலைவாழ்ப் பழங்குடிப் பெண்கள் பிரமாதமான அழகிகள் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒரு முக்கியமான விஷயம் நமது சமூக அவலம் இந்தப் பழங்குடிப் பெண்களின் உறுப்பில் சீழ் பிடித்து வடிகிறது கல்வராயன் மலைக்குக் கூடப் போக வேண்டாம் மும்முடி திருவண்ணாமலையிலேயே இருக்கும் சிவப்பு விளக்குப் பகுதிகளுக்குக் கூட போய்ப் பார்த்திருக்கலாம் இந்தியாவின் பல பிராந்தியங்களிலிருந்தும் கடத்தப்பட்டு வரும் பெண்கள் சந்தையில் விலை பேசப்பட்டு பின்னர் வெவ்வேறு மையங்களுக்கு அனுப்பப்படும் சந்திப்புக்களில் முக்கியமானதொன்றாக இந்த ஊர் இருந்து வருகிறது நகை நட்டுக்காகவும் புடவைக்காகவும் செகண்ட் ஹேண்டில் சல்லிசாக டெலிவிஷன் வாங்குவதற்காகவும் நடுத்தர வர்க்கப் பெண்கள் அவ்வப்போது இந்தச் சந்தைக்கு வ

ந்து திரும்புவதும் தமிழ்நாட்டில் நாகரிகத்தின் வருகைக்குப் பின் நிகழ்ந்த சமூக வரலாற்று மாற்றங்களுள் குறிப்பிடத்த க்க ஒன்று இதற்கிடையில் பலவந்தமாக இந்தச் சந்தைக்குக் கொண்டு வரப்படும் சில நடுத்தர வர்க்கப் பெண்களும் உண்டு சார் சார் என்று கூப்பிட்டுக்கொண்டே மூச்சிறைக்க ஓடிவந் து ஒரு போலீஸ்காரரிடம் தஞ்சமடைந்த ஒரு அரசா ங்க அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலை பார்ப்பவர் என்று மதிக்கத்தக்க நடுத்தர வயது மனிதர் சொன்னார் சார் சா ர் அந்தப் பொண்ணு என்னெ கூப்பிடுறா சார் நான் வெ லகி வெலகி வந்தும் துரத்திக்கிட்டே வர்றா சார் ரெண்டு ரூவாய்க்காய்ச்சும் வாய்யாங்கிறா சார் கேட்டுவிட்டு பக்கத் தில் திரும்பி அப்போதுதான் திருவண்ணாமலையில் வந்து இறங்கியிருந்த ஃபூக்கோவைப் பார்த்து அவர்தான் ஃபூக் கோ என்று அடையாளம் தெரிந்து கொள்ளாமலேயே அவருடை ய மொட்டைத்தலையைப் பார்த்து தீவிரத் துறவியென்றெண்ணிச் சிரித்தார் நிச்சயமாக அந்நிய தேசத்தவர்தானென்றறிந்து கொண் ட போலீஸ்காரர் ஃபூக்கோவிடம் ஆசிரமத்துக்கு வந்திருக்கிறீர் களா உங்கள் வரவு நல்வரவாகட்டும் இருந்தாலும் உங்களை எச்சரிக்கிறேன் இந்த ஊர் ஒரு மாதிரியான ஊர் கவனமா க இருங்களென்று சொல்லி விட்டு குமாஸ்தா போன்று மதிக்கத்த க்க தோற்றுமுடைய அந்த நடுத்தர வயதுக்காரர் சொன்ன தை ஃபூக்கோவிடம் மொழிபெயர்த்துச் சொல்லி ஆசிரமத்துக்குச் செல்வதற்கான வழியையும் காண்பித்தார் தனது மொட்டைத் தலையைத் தடவிக்கொண்டே history of sexualityயின் அடுத்த தொகுதி பற்றிய யோசனையில் ஆசிரமத்தை நோக்கி நடக்கலா னார் ஃபூக்கோ அவரது தோற்றத்தைக் கண்ட ஆசிரமத்துவாசிகள் அவரை ஒரு பௌத்தர் என்றெண்ணி இடுப்பை வளைத்து வணக்கம் செலுத்தினர் கவித்துவமோ மரபின் அத்திவார மோ அறிவார்ந்தச் செழுமையோ அற்ற அகதைக்காரர்களே ஒதுங்கி நில்லுங்கள் மாவீரன் வண்டி வருது ஒதுங்கு ஒது ங்கு ஒதுங்கு ஒதுங்கு ஒதுங்கு ஒதுங்கு ஒதுங்கு ஒதுங்கு ஒ துங்கு ஒதுங்கு ஒதுங்குடா டேய் இது வரைக்குமான வசூலை முறியடித்து வருகிறாள் கன்பைட் காஞ்சனா திருடர்க ளே ஜாக்கிரதை வருகிறாள் சிஐடி சிங்காரி இவளே தமிழின் மகா சிஜடி என்று சிலாகிக்கின்றன பெரும் பெரும் ஆங்கிலப்

பத்திரிகைகள் சிஐடி மட்டுமல்ல இவள் ஒரு மாமேதை என்று வர்ணிக்கின்றார் பிரபல ஃப்ரெஞ்ச் கவிஞர் போயோ அல்ஃப்ரெத் நெஞ்சில் உனக்குத் துணிவிருந்தால் என்னை பிரபாத் தியேட்டரில் வந்து சந்தி நானே நாளை மனிதன் இல்லாவிட்டால் ஓரம்போ ஒதுங்கி நில் கல்வராயன் மலையில் பழங்குடியினரிடம் ஆய்வுக்கா கச் சென்ற லெவி ஸ்த்ராஸை இடையில் திருவண்ணாம லை பஸ் ஸ்டாண்டில் மடக்கிப் பிடித்த மும்முடியின் சவரக்கத்தி ஊடுருவலில் நீலகண்டத்தின் மகாத்மியம் பற்றித் தெரியாம ல் குழம்பி விழிபிதுங்கி திருவண்ணாமலை ஆசிரமத்தில் மூன்று வேளை சாப்பிட்டு இரவு சரியாக பன்னிரண்டு மணிக்கு ஒரு குசு விட்டார் மார்க்ஸிலிருந்து கிருஷ்ணமூர்த்தி வரையிலான தேடல் தெரிதாவிலிருந்து தேங்காய் மற்றும் தக்காளி சீனிவாசன் வரை சார்த்தரிலிருந்து சிலுக்கு ஸ்மிதா வரை திருவான்மியூரிலிரு ந்து திருவண்ணாமலை வரை அண்ணாநகரிலிருந்து கேகே நகர் வரை காசு குட்த்தமா வாங்கித் துன்னமா கய்யத் தொட் ச்சமான்னு போய்க்கினே இரு நைனா உள்ளாற இன்னா கீதுன்னு பாக்றெ பைத்யமா புட்சி கீது ஒன்க்கு மச்சாதோதி ஆஸி ஸ் கார்பெந்த்தியர் செலின் ஜெனே கம்யு போர்ஹேஸ் ஃப்ரான்ஸ் ஃபானன் சே குவேரா அல்லாரையும் பட்சிக்கீறேன் நை னா பசுமாட்டைப் பார் என்ன ஒரு தெய்வாம்சம் பொருந்திய அழகு ஆனால் எனக்கு ஃப்ராய்டின் ஞாபகம்தான் வருகி றது மண்ணுக்குள்ள எண்ணை இருக்கு மலைமேல விளக்கிருக்கு அது என்ன அது என்ன திருவண்ணாமலை கட்டுப்பாட ற்று உடலுறவு கொள்வோரை அது பாதிக்கும் தற்போது இதைக் குணப்படுத்த ஒரு சிகிச்சையும் இல்லை திருவண்ணாமலை என்ற எல்லைக்கோட்டுக்குள் வாழ்ந்தால் இந்த நோய் வ ரும் என்று அஞ்சத் தேவையில்லை நான் ஆளான தாமரை ரொம்ப நாளாகத் தூங்கலே மச்சான் மச்சான் மச்சான் அவ ன் வச்சான் வச்சான் வச்சான் புத்திஜீவிகள் நிரம்பிய ஒரு கவிதைப் பட்டறையில் பழனிமலை வாக்கியமாகக் கிடைக்க ப்பெற்றது தமிழின் மகா கவிஞர்கள் தர்மு சிவராமு பசுவய்யா நகுலன் ஞானக்கூத்தன் தேவதேவன் அப்படியானால் கலாப்ரி யா கவிஞர் இல்லையா என ஒரு குண்டு வெடிக்க ஆமா ஆமா அவரும் கவிஞர்தான் என்றது பழனிமலை மற்றொருவர் எழுந்து அப்படியானால் பிரம்மராஜன் கவிஞர் இல்லையா

என்று இருந்த இடத்திலேயே சிறுநீர் கழித்துக் கொள்ள ஆமா ஆமா அவரும் கவிஞர்தான் என்று பதிலிறுத்தது பழனிம லை உடனே முனியாண்டி எழுந்து அப்படியானால் டி ராஜேந் தர் கவிஞர் இல்லையா என்று ஒரு சந்தேகம் கிளப்ப ஓரே ரகளையாகி துண்டைக் காணோம் துணியைக் காணோமெ ன்று தப்பியோடி வந்தான் டிக்கட் டிக்கட் ஐந்து ரூபாய் டிக்கட் பத்து ரூபாய் டிக்கட் பத்து ரூபாய் ஐந்து ரூபாய் டிக்கட் பத்து ரூபாய் அடேய் பாவி இது ராமராஜ்யமடா பாருக்குள்ளே நல்ல நாடு இதைப் பாவப்படுத்துகிறாயே அப்பனே மேலும் உன்னுடைய சினிமா டிக்கட்டில் கவித்துவமான வரிகள் கூட இல்லையே அட போய்யா காந்தி குசுவுட்டா எங்களுக்கு ப் பொழுது விடியுது தகிப்போடு தன் அறையையடைந்த முனியாண்டி காலப்ரபஞ்ச அருட்பிரகாசம் என்ற மாறுவேட த்தில் ஒரு கவிதை எழுதினான் காந்தி குசுவுட்டா எங்களுக்குப் பொழுது புலர்ந்தது டீ வாசகீ உன்னுடைய கவித்வம் ஆணுறையி ல் வடிகட்டப் படவில்லையா எங்கு தேடியும் கிடைக்காத நமது தேடலின் கவித்வ வரிகள் லாட்டரிச் சீட்டில்தானே இருக்கிறது லாடத்திற்கு அனுப்பினேன் இது பிரசுரமாவதை யாராலும் தடுக்க முடியவில்லை பனிக்கிளை ராமராஜன் என க்கு எழுதிய கடிதத்தில் ஓய் முனியாண்டி உமக்கு எதுக்கு லே ஸர்ரியலிஸம் நீரோ ஒரு கிராமத்தான் அதிலும் பெண்த ரகன் உமக்குத் தெரிந்த வயக்காடு வரதட்சிணை என்று எழுதுவீ ரா முனியாண்டியின் மூக்கு சிவக்க நேற்றிரவு கட்டபொம் மனைப் பார்த்த மதர்ப்பில் ஸர்ரியலிஸம் என்ன உன் பாட்டன் வீட்டுச் சொத்தா நீ பங்கு போட பாரீசில் முதன்முதலில் ஒ ரு கழிப்பறையில் நடந்த ஸர்ரியலிஸக் கண்காட்சியில் நிர்வாணமாய் உடல் முழுதும் சேறு வழிய பார்வையாள ர்களை வரவேற்ற என் தோழியின் தூரத்துணியால் உன்னை அடிக்காமல் விடமாட்டேன் என்று கண்ணாடியில் முகம் பார்த்துக் கத்தி திடுக்கிட்டு தான் சவரம் செய்து இரண்டு நாளானதன் அவசரத்தோடு மனைவியிடம் அலறினான் எ ன் பிளேடை நீயெடுத்து உபயோகிக்கக் கூடாது என்று உன்னிடம் எத்தனை முறை சொல்லியிருக்கிறேன் எடுத்தாலும் அத ற்குரிய இடத்தில் நீ வைப்பதில்லை வாசகா தயவுசெய்து நீ இதில் பெண் விடுதலையைச் சம்பந்தப்படுத்தாதே ஸர்ரியலிஸ

ம் modern atomic theory கூடன்குளம் ஹூலியோ கொர்த்தஸார் ஃபிடல் அன்ட் ரெலிஜென் கொதார் நவீன இலக்கிய ப் பத்திரிகையின் அவசியம் இன்ஸ்டன்ட் புரட்சி இதுபற் றியெல்லாம் மூன்று இரவுகள் முனியாண்டியின் வீட்டில் தங்கி தர்க்கித்த புதுமைப்பித்தனின் ஆவி ஊருக்குக் கிளம்பும்போது மூன்று புத்தகங்களை சுட்டுச் சென்றது மூன்று இரவுகளாய் தன்னைக் கவனிக்காமல் பிரபஞ்ச விசாரத்தில் ஈடுபட்ட முனியாண்டியுடன் கோபமுற்று அவனுடன் படுக்கையைப் பகிர்ந்து கொள்ள ஒரு மாதமாய்த் தவிர்த்து வந்த சாந்தா go and sleep with susan sontag என்று வெஞ்சினங் கொண்டலறினாள் சில தினங்கள் கழித்து சாந்தாவுக்கு புதுமைப்பித்தனின் ஆவி யிடமிருந்து ஒரு கடிதம் வந்தது என் சுடர்க் கண்மணி சாந்தா நீ வருகிற நாளை எதிர்பார்த்தபடி நாட்கள் ஓடுகின்றன அருகிலேயே இருக்கும் சந்தர்ப்பங்கள் உன்னதமானவை ஆரம்ப நாட்களும் இப்படி தூரங்களாய் மறைந்துள்ளன பின் னால் எப்படி இருக்குமோ அஞ்சுகிறேன் சென்னை செல்லும் ஒவ்வொரு ரயிலும் வீட்டின் அருகில் அழைத்தபடி ஓடுகின்றன தண்டவா ளங்களாகி விடும் தேய்ந்த நாட்கள் மறைந்தன தினம் தினம் உன்னோடு பேசும் வாய்ப்பை இழந்துவிடுகிறேனே நினைவுகள் எல்லாம் யதார்த்த உலகை விட்டு விலகியவை தர்ஸனம் தான் புல்லின் ஸ்பர்ஸத்தைத் தரும் இல்லையா காலையில் நடந்து வந்த கண்மாய்ப் பாதையில் புல்லில் தே ங்கிய பனித்துளி என்னைத் தொடுகிறது கண்மணீ உன் நெற்றியில் முத்தமிடுகிறேன் உன் கண்களில் தொடும் அன்புக்காய் தவித்துவிடுவேன் காலங்காலையில் மலரும் பசுமையே சாந்தா உன் பாத தூளியில் முத்தமிடுவேன் என் பாடல் தவி க்கிறது ஜன்னல் கம்பிகளில் தேங்கி நிற்கும் என் ஆசைகள் உன்னை எட்டி விடுமோ எழுத எழுத உள்ளே ஓடும் கதி நீதானா முப்பதாண்டுகள் என் குருவிகள் கூட்டில் அடைந்தன இன்று சதாவும் விண்ணில் விர்ர்ர் விர்ர்ர்ரென்று ஓடும் என் காதல் தீவிரமானது உன் கைகளைக் கொடு பெருமூச்சை இறக்கி வைப்பேன் வெறுமைப் பாலையில் எரிய வேண்டா ம் புல்வெளியில் தொங்கும் பனித்துளியை ஸ்பர்ஸிப்போம் கதவு திறந்துவிடுவாய் காலை பிறந்துவிட்டது உன் செல்ல ப் பேச்சு என் மேல் விழட்டும் நான் உயிர் பெறுவேன் ச்சட்டுச்

சட் சட் சட்டுச் சச் சிட்டு ஒன்று வானத்தில் சலம்பும் உன்னை வணங்குகிறேன் என் யேசு யேசு தவிலான் குருவியின் புலம்பல் என்று சிரித்து விடு வாசலில் புஸ்கி நாய்க்குட்டி ம ட்டும் என்னைக் கண்டதால் செல்லமாய் அழுகிறது என்னை அனாதையாக உணர வைக்கும் அதன் தனித்ததுயரம் சாந்தா எலும்புக்குள் துளைக்கும் பனி ஊசிகள் கருப்பாக இரு க்கிறது எங்கும் வெளியேறிவிட வேண்டும் கழுத்தை நெறிக்கும் இரவுடன் இருக்க முடியவில்லை நேரில் பேசுவதற்கே முடி ந்த மனம் உன்னை அண்ணாந்து கேட்கிறது மௌனமாய் கொலை நடந்து கொண்டிருக்கும் இந்தச் சூழலிலிருந்து மீறல்தான் உயிர்மீட்சி மன்னித்தபடியே உன் மடியில் ஏற்றுக் கொ ள் இரவிடம் அடைக்கலம் இல்லை ஏனோ விளக்கணைத்துப் படுக்கிறேன் இப்போது மணி மூன்றுக்கு மேல் சாந்தா அன்றைய இரவு சுயமைதுனம் செய்வதற்காக இந்தக் கடிதத்தை ப் பயன்படுத்திக்கொண்டாள் இரவில் திடீரென்று நிதம்பத்தில் ஆயிரம் தேள்கள் சேர்ந்து கொட்டுவதைப் போன்று கன வு கண்டு வீறிட்டெழுந்த அவள் தனது நிதம்பத்தைப் பார்த்து அதிர்ந்தே போனாள் நிதம்பத்திலிருந்து கிளம்பி நேராக நீ ண்டு மூன்றடி உயரத்திற்குத் தொங்கிக் கொண்டிருந்தது ஒரு தேனடை அடையைச் சுற்றி பல்லாயிரக்கணக்கில் தேனீ க்கள் இது ஏதோ நற்சகுனத்திற்கான அறிகுறிதானென்றும் இனிமேல் கண்ட கண்ட நாய்களையும் புணர்ச்சிக்கு அழைக்கு ம் தேவையிராதென்றும் சொல்லிய முனியாண்டி ஆனாலும் நிதம்பத்தில் இத்தனைப் பெரியதொரு தேனடை கட்டப்ப ட்டது எங்ஙனமென்று தனக்குப் புரியவில்லையெனவும் இந்த மர்மத்திற்கான விடை மேற்கூறிய கடிதத்தில்தான் இருக்க வேண்டுமென்றும் இயம்பினான் இதன் காரணமாகவே அந்தக் கடிதம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது வருங்கால த்தில் வரலாற்றாய்வாளன் எவனுக்கேனும் உதவக் கூடுமென்ற உத்தேசத்தால் தேனீக்கள் தின்ற அந்தக் கடிதத்தை இன்னும் நான் பாதுகாத்து வருகிறேன் எனக்கும் எனது சக தமிழ் க் கலைஞர்களுக்குமான அவசரத் தேவைகள் கவிஞர் வேதா ளத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் மாறவர்மனுக்கு ஒரு விடியோ கடை பனிக்கிளைக்கு சாகித்ய அகாதமி அல்லது ஞானபீட ப் பரிசு ராமவர்மனுக்கு நோபல் பரிசு மும் முடிக்கு தன்னை

தர்ஸிக்கக் கூடும் வெளிநாட்டுக்காரர்கள் தங்குவதற்கான அறைகளுடன் கூடிய ஒரு நவீன ஆசிரமம் அல்லது ஜூனியர் ஜேகே என்ற விருது புதுமைப்பித்தனின் ஆவிக்கு ஒரு பிரா மணப் பெண் முனியாண்டிக்கு மனைவியைத் திருப்திப்படுத் த ஏதுவான குண்டலினி சக்தி பனிக்கிளையின் உபசரிப்பில் கோழிக்கறியுடன் சுடச்சுட இட்லியையும் குவார்ட் டர் விஸ்கியையும் கண்ட முனியாண்டி கோபந்தணிந்து பீத்தோ வனின் fifth symphonyயைக் கேட்டான் டேய் வாசகா இதெல்லாம் இலக்கியத்தில் சகஜந்தாண்டா இது உனக்கும் தெரிந்ததுதா ன் இருந்தாலும் எனக்கு ஒன்றும் புரியவில்லை எனக்கு ஒரு சிறுகதை எழுத வேண்டும் எனக்கு வரும் இலக்கிய சர்ச்சைக் கடிதங்களே அதற்கான நிகழ்வுகளாகிவிடுவது உனக்கும் தெரிந்ததுதான் என்றாலும் நான் என் மனைவியைத் திரு ப்திப்படுத்தவேண்டும் அவள் உச்சக்கட்டத்தில் தோல் வியுறும் இரவுகளில் நான் இலக்கியம் செய்கிறேன் எனக்கு ஒரு பாக்கெட் சிகரெட் முகம் பார்க்கும் நிலாக்கண்ணாடி அட்டாச்டு பாத்ரூம் இது போதும் கொஞ்சம் விச்ராந்தியாய் இருக்கவும் பழகிக்கொண்டேன் இருந்தாலும் என் மனைவியை ஈடுசெய்ய நான் இலக்கிய முயற்சிகள் தவிர வேறெதிலும் ஈடுபடுவதில்லை நான் வக்ரமாக எழுதுவதாய் உனக் குத் தோன்றலாம் சார்த்தர் தன் சாயல் கண்களால் தன்னை டாவு அடித்தது பற்றி ஸிமோன் தெ பூவா என்னிடம் சொன்னபோது எனக்கு சுய இன்பம்தான் செய்யத் தோன்றுகிறது ஹிட்லர் குதிரைகளைப் புணர்ந்ததையும் நான் உனக்கு ஞாபகப்படுத்துகிறேன் திப்பு சுல்தான் கோழிகளைப் புணர்ந்து விட்டு உச்ச சிலிர்ப்பில் அ தன் கழுத்தைத் திருகி எறிந்து விடுவதையும் நீ குறித்துக் கொள் எனக்கு செஸ் பிடிக்காது ஆனால் சேவைப் பிடிக்கும் அவனது துண்டிக்கப்பட்ட கைகளைப் பற்றி உனக்குச் சொல்கிறேன் கேள் அது எத்தனையோ பேரை கொலை செய்திருக்கிறது எத்தனையோ முறை மைதுனம் செய்திருக்கிறது நான் இப்படிச் சொல்வது மேலும் என் மீது உனக்கு அருவருப்பை ஊட்டும் ஆணுறைகளை உறுப்பி ல் மாட்டிக்கொண்டு மைதுனம் செய்யும் அவலத்தை நீ அறிந்திரு க்கிறாயா அதை உன்னால் உணரவேணும் முடியுமா சொல் வாசகா சொல் என்னுள் மிஞ்சியது நிர்மூலவாதம் ம

ட்டுமே நான் உன் மனைவியைக் கற் பழித்துவிட்டது போலவும் கொலை செய்துவிட்டது போலவும் துடிக்கிறாயே கோழிகளை ப்பார்க்கும்போதெல்லாம் எனக்கு திப்பு சுல்தானின் ஞாபகம் வருகிறதே ஏன் இது சொல் இப்படியாகப்பட்ட சர்ச்சையில் ஈடுபட்டு தன் வீடு திரும்பிய முனியாண்டியைக் கண்டு ஏன் இவ்வளவு லேட்டு என்று கடுகு பொறிந்தாள் சாந்தா நான் வரும்போது அர்ச்சனா ஸ்வீட் வாங்கி வந்தேன் இனிமேல் லேட்டா வந்தா அர்ச்சனா ஸ்வீட்டோடதான் வரணும் உடனே முனியாண்டிக்கு மூளையில் பொறிதட்ட குலாப்ஜாமுனை நிதம்பத்தில் ஊற்றிச் சுவைத்ததாய் கர்னாடக முரசுக்குக் கதை எழுதி பெரும் பரபரப்பை ஏற்படுத்தினான் at times he was so cruel as to require that i button the waistband of his trousers and my hand would tremble he pretended not to see anything and was amused (i shall speak later of the character of my hands and of the meaning of this trembling it is not without reason that in india sacred persons and objects are said to be untouchable) unable to see it is invented the biggest and loveliest prick in the world இந்தியாவில் புனிதத்தின் ப்ரஸன்னத்தைத் தேடி திருவண்ணாமலை வந்த செயின்ட் ஜெனே ஹோமோசெக்ஷுவல் என்று கைது செய்யப்பட்டான் கவிதைப் பட்டறையில் நடந்த அடிதடி ரகளையில் பின்னங்கால் பிடறியில் பட ஓடிவந்த முனியாண்டி ஒரு நாற்சந்தியில் ஒரு சினிமா நடிகையின் அரசியல் ஆவேசத்தில் கசிந்த அக்குள் வாசனையில் ஈர்க்கப்பட்டு அங்கேயே சிலையென சமைந்துவிட ஜெனேயைத் தவறவிட்டான் அவனை ஜாமீனில் எடுத்த என் மனைவி அவனைச் சந்திக்க விமான நிலையத்திற்கு ஓடோடி வந்து மடக்கிப் பிடித்தேன் தாலியின் le grand mastrubateur பற்றிப் பேசிவிட்டு வீடு திரும்பிய இரவில் உச்சகட்டம் அடையாத கோபத்தில் படுக்கையிலேயே மூத்திரம் பெய்தாள் சாந்தா அது என் முகத்தில் தெறித்ததா இல்லையா என எனக்கு சொல்லத் தெரியவில்லை

## பின் இணைப்பு: ஒன்று

இச்சிறுகதையைப் படித்த சிலர் நான் சில தனிப்பட்ட எழுத்தாளர்களை அவர்தம் குடும்ப விஷயங்களை எழுதித்

தாக்கியிருப்பதாக அர்த்தம் கொண்டு சீறிப் பாய்ந்தார்க
ள் குறிகளாலும் குறியீடுகளாலும் நிரம்பியிருக்கும் இக்கதையைப்
புரிந்து கொள்ள முயற்சிக்காமல் ஆபாசமென்றும் த
னிநபர் தாக்குதலென்றும் வெகுண்டெழும் இந்தத் தார்மீக
ஆவேசிகளுக்கு சில விஷயங்களை நினைவுபடுத்தியாக வேண்டும்
இதுவரை தமிழின் ஒரு கலைப் படைப்பை விமர்ச்சிப்பதெ
ன்பதே அப்படைப்பாளியின் ஆண்மையை மதிப்பிடுவதாகவும்
அவனுக்கு முத்தம் கொடுக்கத் தெரியுமா அவனது குறி
சிரைக்கப்பட்டதா சிரைக்கப்படாததா லவ்டே கா பால் அ
வன் ஹோமோசெக்ஷுவலா ஹெட்ரோவா ஹோமோவாக இருந்தா
ல் sodomiteஆ catamiteஆ அவனது பார்ட்னர் யார் படைப்பாளி
பெண்ணாக இருந்தால் அவள் பாப்பாத்தியா பறைச்சியா
அவளது புட்டத்தின் சைஸ் என்ன குறியின் மென்திரை இன்
னும் பாதுகாக்கப்பட்டு வருகிறதா கிழிந்துவிட்டதா என்ப
து போன்ற கேள்விகளுக்கான பதில் தேடும் ஆராய்ச்சிகளாகவே
இருந்து வந்திருக்கின்றன இந்த அவலத்திற்கு நாமெல்லோ
ருமே சாட்சிகளாகவும் பார்வையாளர்களாகவும் பங்காளிகளாகவும்
இருந்திருக்கிறோம் இன்று முனியாண்டியின் கதை படித்து
சீறுபவர்களிடமிருந்து இதுவரைத்திய சாக்கடைச் சண்
டைகள் குறித்து ஒரு முணுமுணுப்புச் சப்தம் கூட வந்ததில்லை
முனியாண்டி இவர்களின் மொழியைத்தான் பயன்படுத்துகிறான்
இவர்களைப் போலவே தனது குறிக்கும் தனது எழுத்து
க்கும் தொடர்பு இருப்பதாக நம்புகிறான் கர்னாடக முரசுவு
க்குக் கதை எழுதுகிறான் கர்னாடக முரசு சில நபர்கள்
மட்டுமே ரகசியமாக வாசிக்கும் ஒரு போர்னோ பத்திரிகை
சிறுபத்திரிகைகளும் கூட குறிப்பிட்ட சிலரால் மட்டுமே வா
சிக்கப்படுபவை இரண்டையும் நான் ஒப்பிடவில்லை மனித
மனத்தை கர்னாடக முரசுக்காரர்கள் புரிந்து கொண்ட அளவில்
ஆயிரத்திலொரு அளவு கூட சிறுபத்திரிகையாளர்கள் புரி
ந்து கொண்டிருக்கமாட்டார்கள் பொய்யான ஒளிவட்டங்களைப்
போட்டுக் கொண்டு தங்களின் மௌடீகத்தை மறைக்கப் பார்க்கு
ம் சிறு பத்திரிகையாளர்களுடன் கர்னாடக முரசுக்காரர்களைப்
போன்ற நிஜ மனிதர்களை ஒப்பிடவே முடியாது ஒரு சமூகவியல்
ஆய்வாளனுக்கோ ஒரு இலக்கிய மாணவனுக்கோ கர்னா
டக முரசுவில்தான் விஷயம் இருக்கிறதே தவிர சிறுபத்திரிகைகளில்

அல்ல தன் ஜீவனோபாயத்திற்கான கடையை விற்று அந்த ப் பணத்தில் குப்பை குப்பையான கவிதைகளை உலக இலக்கியம் என்ற நம்பிக்கையில் பிரசுரிக்கும் ஒரு இருபத்தைந்து வயது இளைஞனையே சிறுபத்திரிகைகள் உருவாக்கியிருக்கின்ற ன வாசகா நீ இந்தக் கதையிலுள்ள குறியீடுகளைக் கவனி இன்று தமிழின் சிகரப் படைப்புகள் என்று சொல்லப்ப டுபவை யாவும் ஒருசிலரைத் தவிர இந்தியத் தத்துவத்தின் சவமான பகுதிகளைத்தான் தத்தம் மையமாகக் கொண்டிருக்கின்றன தமிழின் இதுவரைத்திய இலக்கிய நிகழ்வுகளும் தத்துவ விசாரங்களும் இந்திய தத்துவம் மற்றும் இந்து சநாதனத்தி ன் மழுங்கிய குரல்களாகவே இருந்து வந்திருக்கின்றன இ ந்தப் படைப்பாளிகள் இந்தியத் தத்துவ மரபுகளைத் தவிர வேறு எந்த அறிவுத்தளங்களையும் தொட்டுக்கூடப் பார்க்கவி ல்லை இந்நிலையில் இவர்கள் ஒருவரையொருவர் தங்களின் கலைப் படைப்பைத் தவிர்த்துவிட்டு படைப்பாளியின் உட ல் உபாதைக் கூறுகளை விமர்சிப்பதும் நபும்ஸகம் என்ற உடல்/மன நோய்க்கூறை ஒரு படைப்பின் மீதான விமர்சனமா கவும் அதன் கருத்துருவமாகவும் வைப்பதுமான இக்குறி (sign)யை கட்டவிழ்த்துப் பார்த்தால் இவர்கள் mentally impotent என வே இவர்களுடையது impotency of text என்ற விமர்சனவாதமும் பிரதியைக் கட்டவிழ்க்கும் போது மனித சமூக மதிப்பீடுகளா ய் இவர்கள் முன்வைக்கும் இந்தியத் தத்துவ விசாரமே impotent ஆனதா என்ற கேள்வியையும் இவர்களே ஏற்படுத்தி விடுகிறா ர்கள் வெறும் தனிமனித உறவுகள் சார்ந்த ஈகோவை மட்டுமே கைப்பிடியாகக் கொண்டு இயங்கும் இவர்களின் தத்து வக் கலை இலக்கிய அணுயுத்த விசாரம் எவ்வளவு போலியானது என்பதும் authority of pornographyயைவிட authority of puritan art எந்த அளவு மறைமுக வன்முறையைத் தன்னுள் கொண் டுள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும் தமிழ்ச் சூழலில் இந்த இரண்டு நிலைகளுக்கிடையில் அதாவது கும்பல் கலாச்சார ம் மற்றும் புத்திஜீவிகள் என்று சொல்லப்படுபவர்களின் கலாச்சார நடவடிக்கைகள் தன்னுள் ஒரு மறைமுகமான வன்முறை யோடு சலனமுறுகிறது என்பதுதான் முனியாண்டியெனும் பிம்பம் என் பார்வையில் இரண்டு அமைப்புகளுமே தகர்க்கப்பட வேண்டியவை இந்த வன்முறை பற்றி ஃப்ரான்ஸ் ஃபானன்

எழுதிய wreteched of the earthக்கு சார்த்தர் எழுதிய முன்னுரையில் தெளிவுபடுத்தியிருக்கிறார் இதைத்தான் திரும்பத் திரும்ப திரும்ப திரும்ப சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது ரமணரையும் ஃப்ரான்ஸ் ஃபானனையம் மும்முடிவரம் பாலயோகியையும் சே குவேராவையும் சேர்த்து உச்சரிக்கும் மௌடீகம் தமிழில் மட்டுமே சாத்தியம் ஃப்ரான்ஸ் ஃபானனுக்கும் சே குவேராவுக்கும் விபூதி பூசி வேப்பிலை அடித்துவிடும் கோமாளித்தனங்களைப் பற்றி கவலைப்பட முனியாண்டிக்கு நேரமில்லை அவன் கர்னாடக முரசுவில் தொடர்கதை எழுதுவதில் மும்முரமாக இருக்கிறான் ஜனரஞ்சகப் பத்திரிக்கைகள் ஸ்தாபனத்தின் குரலாக ஒலித்துக் கொண்டிருப்பது நாம் அறிந்த விஷயம் ஆனால் கலாச்சார அக்கறை கொண்டு இயங்கி வருவதாகக் கூறிக்கொள்ளும் சிறுபத்திரிகைகளும்கூட இதையேதான் செய்து வருகின்றன என்பதுதான் சற்று ஆச்சரியம் தரக் கூடியது உலக இலக்கியம் உலக அளவில் தத்துவத் தளங்களில் நிகழ்ந்து வரும் புரட்சிகர மாற்றங்கள் குறித்து எந்தவிதப் பிரக்ஞையும் தேட்டமுமின்றி இன்னமும் இந்தச் சிறுப் பத்திரிகை புத்திஜீவிகள் செத்து சவமாகிப் போன இந்தியத் தத்துவ சனாதன மரபுகளுக்குள்ளேயே ஒளிந்து கொண்டு வெளிறிப் போய் கிடக்கிறார்கள் கலகக்காரர்களே உருவாகாமல் உருவானாலும் முளையிலேயே காயடிக்கப்பட்டு வரும் அவலம் சிறுபத்திரிகைத் தளத்தில் வெகு மூர்க்கமாக நடந்து வருகிறது இந்த அர்த்தத்தில் சிறுபத்திரிகைகளின் கலாச்சார இயக்கமும் ஸ்தாபனத்தின் குரல்தான்

## பின் இணைப்பு : இரண்டு

இந்தியாவில் புலி இனத்தைப் போல் நம் எண்ணிக்கையும் அருகி வருகிறது கிமு மணிக்கொடியிலிருந்து கிபி கல்குதிரை வரை இந்த இலக்கியத்தீவின் ஜனத்தொகை நூற்று எண்பதுக்கு மேல் தாண்டாமல் நாம் ஒருவரின் மீது ஒருவர் நெரிசலுற்று வழிகிறோம் ஒருவேளை நம் பூர்வீகமே காயடிக்கப்பட்டிருக்கலாமோ என்னவோ மேலும் அதிர்ஷ்டவசமாக நம் இனத்தில் எல்லோருமே வேட்டையாடத் தெரிந்த எழுத்தாளர்களா

ய்ப் பிறந்து விட்டோம் அதிலும் என் போதாத காலம் என் எழுத்துக்களைப் படித்த மற்ற நூற்று எண்பத்தொன்பது பேரும் நான் தங்கள் குடும்ப விஷயத்தைப் பற்றி எழுதிவிட்டது போல் கொலை மிரட்டல் விடுக்கிறார்கள் சமீபத்தில் ஹயத்துல்லா பூமேனியிடமிருந்து எனக்கு ஒரு ரகசிய ஓலை வந்தது டேய் முனியாண்டி சல்மான் ருஷ்டிக்குப் பிறகு லிஸ்டில் இருப்பது நீதான் சென்னை மாநகரின் காங்கிரீட் ஆண்குறியென எழுகிறது ஜெமினி மேம்பாலம் என்ற கவித்துவமான வரியை இந்த மாதக் கர்னாடக முரசுவில் எப்படியும் தன் கதையில் இணைத்து விட வேண்டுமென்று மூளை பிரகாசிக்க பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த முனியாண்டியை மடக்கிப் பிடித்தான் கோமேனி உச்சிவெய்யிலில் அண்ணாசாலை ட்ராஃபிக் ஒரு கணம் ஸ்தம்பிக்கவென தலைதெறிக்க ஓடிய ருஷ்டீ தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் மின்னலென நுழைந்தான் வாசகா நான் சொல்லிக் கொண்டு வரும் கதையின் சுவாரஸ்யத்தில் அதன் பரிமாணங்களைத் தொட மறந்துவிடாதே பூமேனியும் முனியாண்டியும் ஒருவர் மீதொருவர் புகார் செய்ய நவீன இலக்கியம் தெரியாத ஏட்டு ஏகாம்பரம் தன் நடு விரலால் ஆழமாக சூத்தை நோண்டிக் கொண்டார் இது ஏதோ எழுத்தாளர்கள் சமாச்சாரம் போலும் என தன் துப்பறியும் மூளையால் கண்டு கொண்ட சப் இன்ஸ்பெக்டர் குமுதம் ஆசிரியரை வேண்டுமானால் போனில் கான்டாக்ட் பண்ணலாம் அவருக்கு இந்த இலக்கிய சமாச்சாரமெல்லாம் அத்துப்படி மேலும் அவர் உங்களையெல்லாம் அரசு பதில்களில் அடிக்கடி நையாண்டி செய்து தன் வாசகர்களை குஷிப்படுத்தி வருவதாக அறிகிறேன் என பிரஸ்தாபித்தார் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த ரிக்ஷா வண்டிக்காரன் சுவாரஸ்யம் தலைக்குள் குமிழிட சற்று முன் சாப்பிட்ட சூடான லத்தியடி தணியவென இருவரிடமும் இவுரு எய்த்றதெ நீ படிக்காத நீ எய்த்றதெ இவுரு படிக்க மாட்டாரு இன்னா புர்தா என ஆள் மாற்றி ஆள் சொன்னான் இந்நிகழ்வை லாடத்தில் மல்யுத்தம் என்று முனியாண்டி எழுதியதை யாரும் கண்டு கொள்ளவில்லை அமெரிக்க யுனிவர்ஸிட்டிகளில் லாடத்தைக் கண்ணுற்ற ஸ்ட்ரக்சுரலிஸம் பயிலும் அழகிய பெண்கள் அல்லோலகல்லோல

ப்பட்டதாகக் கேள்வி அந்தரங்கமாய் கொமேனியிடம் ம ன்னிப்புக் கேட்டுக் கொண்டு தனது முனைவுற்ற மூளையி ன் அறிவுப் பிரகாசத்தை சுன்னத் செய்து கொண்டு மதம் மாறியதாக முனியாண்டியைப் பற்றிய பிஸாது

## பின் இணைப்பு : மூன்று

மனிதனின் அறிதலும் உணர்தலும் செக்ஸின் வெளிப் பாடாகத்தானே இருக்கிறது தொள தொளா ஷர்ட் உச்சி க் கோணத்திலிருந்து எடுக்கப்பட்ட பூங்காவின் புகைப்படம் போல் தலை டிசைன் உழைக்கும் வர்க்கத்திற்கான ஆடை யான ஜீன்ஸ் மேட்டுக்குடியிடம் சிக்கிக் கொண்டது உழைத்த உடல் முறுக்கு மாவு பூர்ஷ்வா இளைஞனுக்கு ஜீன்ஸ் ஒரு த டித்த தோல் ஹோமோசெக்ஷுவாலிட்டியின் தீவிரத்தால் பெண்களுக்கு ஏற்பட்ட அதோகதி ஹார்மோன் ஊசி போ ட்டு முலைகளை சப்பையாக்கிக் கொள்ள வேண்டிய சமூக அவசியம் உரல் உலக்கை பூட்டு சாவி மையம் பிளந்து வழிவிடும் லிஃப்ட் கதவு கேரம் போர்டின் சதுரத்திற்குள் அலைவு றும் காய்களின் முன்பின் இயக்கம் அணுவுக்குள் அலைவுறு ம் இரட்டைத் தாபம் ஜென்னியை முன்வைத்து மார் க்ஸிடம் விளைந்த சமூக சிந்தனை ஹிட்லரின் ஆண்குறி கிரைண்டர் ராக்கெட் குழவி ஏவுகணை கோவில்மணி ம த்து துப்பாக்கியும் சொட்டும் தோட்டாவும் பென்சில் குழந்தையின் கையில் பலூன் மலக்கோப்பையில் விழும் வெட்டை இவ ற்றின் வடிவ ஒழுங்கின் தர்க்கம் மனித மூளையின் செல்களில் எவ்விதம் பதிவுறுத்தப்பட்டது நான் வானொலிப் பெட்டியின் வால்யூம் கண்ட்ரோலரைத் திருகும்போது சாந்தாவின் க ன்னம் சிவப்பது ஏன் வாசகா தொடைக்கதவுகள் சாவித்துவா ரம் விரைகளெனத் தொங்கும் சாவிக் கொத்து மாடத்தில் இரண்டு அகல்விளக்கு ஒரு வீட்டைச் சுற்றிப் பார்ப்பது போல் உன் மங்கையிடம் உறவு கொள் ஒரு கூபப் பழமொழி புதுக்கவி தை எழுதாதே முனியாண்டி அதன் மொழி அமைப்பின் வேகம் கூட பாலுறவு சம்பந்தப்பட்டது என்பாய் செக்ஸ் எ

ன்பது ஸ்கலிதமல்ல என்ற i'm 4you உன் முதுகின் எழுத்துகளு ம் எண்களும் நானே i am for you +0+0+0+0+1= $1H_2O$ மலக்கோப் பையில் அவிழ்த்துப் போடும் ஆணுறையுடன் உன் நெற்றிக் கண்ணையும் உறித்துப்போடு செக்ஸ் என்பது அம்மா (அழகா ன மீசையிட்ட ஒரு பெண்) ஆடு இலை ஈட்டி உரல் ஊ தல் எறும்பு ஏணி ஐவர் (பாண்டவர்) ஒன்று (வாய்ப்பாடு அட் டையில் நான்கு விரல்களை மடக்கி சுட்டு விரலை உயர்த்தும் ஒரு கை பள்ளிச் சிறுவனின் பாஷையில் சிறுநீர் கழிப்பத ற்கான அவன் உறுப்பின் சங்கேத உணர்த்தல்) ஓணான் (ஓணானப் புடிச்சி மடியில போட்ட கதையாப் போச்சி அந்தப் பாவிக்கிட்டே நான் பட்டபாடு ராப்பூரா ஒரே வலி) ஔ வை (மாராப்பு விலகித் தொங்கும் சவ்வுப் பைகளோடு ஒரு கிழவி) Fuஃ! செக்ஸ் என்பது ஸ்பர்ஸம் உன்னை என் சுட்டுவி ரல் முனையால் தொடுவது வாசகா முனியாண்டிக்குக் கர்னா டக முரசுவில் சிறப்பாசிரியராக நியமனமானபின் அவன் எழுதி ய தலையங்கம்

மார்ச் 1989

# The joker was here

விபச்சாரியின் யோனி வழி வழி ஒழுகும் விந்து குருட்டுப் பிச்சைக்காரனின் தட்டு ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் டம்ளர் கரும் பலகை கிராமத்துச் சிறுமியின் மூக்குச் சளி குஷ்டரோகியின் நிணத்தில் மொய்க்கும் ஈ ஜிலேபி ஊறுகாய் முட்டை கால்பந்து கைப்பந்து சுருட்டு கணேஷ் பீடி வில்ஸ் ஃபில்டர் சாலையோரத்து sanitary napkin குடை சடை வடை படை முப்படை எப்படை அடை எடை இடை உடை படை நடை நடையா இது நடையா ஒரு நாடகமன்றோ நடக்குது முடை ராக்கெட் பூசணிக்காய் அத்திக்காய் காய் காய் ஆலங்காய் வெண்ணிலவே நட்சத்திரம் ஷூ பாலிஷ் ஷேக்ஸ்பியரின் கவிதை வரி நரி பரி கரி துரி முரி புரி ஒட்டகம் கழுதையின் குறி குதிரை வால் வானவில் நிர்மா குர்மா சுர்மா புர்மா மௌனியின் பூணூல் மௌனியின் cock புளி புலி முண்டக் கூவி பரதம் பதம் ரதம் பாதம் தம் தம் தம் தம் தம் தம் தம் தம் ரம் ரம் ரம் ரம் ரம் ரம் ரம் ரம் ரம் பம் பம் பம் பம் பம் பம்பம்பம்பம் பும் பும் பும் பும் பூம் பூம் பூம் பூம்பூம்பூம்பூம்பூம்பூம்பூ ம்பூ ம்ப்ஊம் புஊம் புஊம் புஊம் புஊம் உளம்பு ஊம்பு ஊம்பு ஊம்பு வறுத்த ஈரல் மம்மியின் panties முனியாண்டி விலாஸ் பிரியாணி முனியாண்டியின் கதை புத்தனின் குசு விசுவின் சிசு தமிள்

ஒழுத்தாளனின் வண்ணான் கணக்கு புண்ணாக்கு வெங்காயம் சிந்துபாதின் கன்னித்தீவு வல்லாரை லேகியம் கருணைக் கிழங்கு பேரீச்சம் பழம் நிரோஷாவின் உதடு டிஸ்கோ சாந்தியின் தொடை கொர்பச்சேவு துரு பிடித்த பிளேடு பன்றி வாயிலிருந்து ஒழுகும் பீ தமிள்ப்பீ குயில்ப்பீ குல்ஃபீ அணு தூண் இரும்பு எரும்பு பருப்பு உறுப்பு கருப்பு பல்லியின் நாக்கு யானை லத்தி அல்கூல் வடமூளியில் Bhagன்னா லிங்கம் wanன்னா அல்கூல் 'பகவான் is equal to லிங்க அல்கூல் மலப்புழு சீனி வெண்டைக்காய் சுண்டைக்காய் துண்டைக்காய் குண்டைக்காய் முண்டைக்காய் களி கலி வலி உளி அலி எலி gas chamber பனிப்பாறை தொண்ணூறு லட்சம் மனிதப் பிணங்கள் தாலி மீறிய சீலை கர்மா வர்மா தர்மா சண்டை சாண்டை பண்டை தண்டை கொலுசு புதுசு ஸ்க்ரூ டாலியின் மீசை மாரதோனாவின் கால் வான்கோவின் ஒற்றைக்காது சே குவேராவின் துண்டிக்கப்பட்ட கை மாவோவின் கொசுவலை polpot-ன் முண்டாசு லார்வா வைரஸ் கோவணம் சாரு நிவேதிதாவின் ஆபாசக் கடிதம் ஆம்பளை பொம்பளை ஐந்நூறு மீட்டர் சு.பாதை குளிர்சாதன வசதி வழியாக ஏனோ திடீரென்று நின்றது வெளியில் போய்க் கொண்டிருந்த *44* டிகிரி மக்கள் சு.பாதையில் நுழைந்துவிட வெயில் முட்டி முன்னேறு மிதிபட்டும் ஆயிரம் பேர் செல்லமுடியும் *5000* பேர் நடந்தபோது இருபது லட்சம் மின் தடை இயந்திரம் மயக்கமடைந்த போது கார்களும் மூச்சுத் திணறி மாண்டதாகக் கூறினார் rushing to get slaughter a sheep இதுவரை எண்ணூறு அதிகாரிகள் மீட்கப்பட்டதாக பிணங்கள் தெரிவித்தனர் *1508.1* அடி குளுகுளு நீளம் *54* அடி பாதை கொண்ட அகலமும் முழுவதும் செய்யப்பட்டது குகைப்பாதை ஏர்கண்டிஷன் கருவிகள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் எண்ணத்தில் வெடித்துச் சிதறின அரசர் இந்த பயங்கர விபத்து நடந்துள்ளது ஆண்டவனின் விருப்பப்படி பேசினார் விதிப்படி மரணம் அடைந்துள்ளனர் இங்கு இல்லா விட்டாலும் வேறு எப்போதாவது இப்போது இல்லாவிட்டாலும் வேறு எங்காவது அவர்கள் மரணமடைந்துதான் ஆக வேண்டும் சமீபத்தில் பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதிகளிலிருந்து மீட்டுக் கொண்டுவரப்பட்ட எண்ணூற்று இருப்பத்து நான்கு பெண்களில்

ஐந்நூறுக்கும் மேற்பட்ட பெண்களுக்கு எய்ட்ஸ் இருப்பதாக மருத்துவப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது இவர்களில் கிட்டத்தட்ட நூறு பேர் ஆரம்ப நிலை கர்ப்பிணிகள் இவர்களின் பிறக்கப்போகும் குழந்தைகளும் எய்ட்ஸ் நோயுடனே பிறக்கும் என்பதால் சிசு கலைப்பே உசிதமானதென்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன சமீபத்தில் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டுவரப்பட்ட ஒரு குழந்தைக்கு எய்ட்ஸ் இருப்பது தெரியவந்துள்ளது இதனால் மற்ற குழந்தைகளின் நிலைமை என்னவென்பது கேள்விக்குறியாகி இருக்கிறது இதற்கிடையில் சுகாதார அமைச்சர் இந்த விஷயத்திற்குப் பத்திரிகைகள் அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து இதைப் பெரிதுபடுத்திக் கொண்டிருப்பது பற்றித் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார் இது இப்படியிருக்க முனியாண்டி new journalism எழுத்துப்பாணியை அப்படியே தமிழில் நகல் பண்ணிக்கொண்டிருப்பதாகவும் குறிப்பாக Tom Wolfe என்ற அமெரிக்காவின் ஒன்பதாம் தர new journalism எழுத்தாளரைக் காப்பியடித்து எழுதுவதாகவும் ஜலம் என்ற சிறுபத்திரிகையில் விமர்சனக் கட்டுரை எழுதியிருந்தார் கூர்மா மூர்த்தி இந்தப்படியாக இந்தச் சிவப்பு விளக்கு விவகாரம் அரசியல் மற்றும் இலக்கிய முக்கியஸ்தர்களின் கண்டனத்திற்கு உள்ளானதால் எய்ட்ஸ் பரிசோதனை செய்யவே மருத்துவர்கள் பெரிதும் தயக்கம் காட்ட வேண்டியதாயிற்று எண்ணூற்று இருபத்து நான்கில் ஐநூறுக்கும் மேல் எய்ட்ஸ் இருப்பதால் இவர்களை என்ன செய்வதென்று அரசுக்கும் குழப்பம் ஏற்பட்டது பம்பாயின் சி.வி.பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து இவர்கள் சுதந்திரமாகவும் அரசு உதவியுடன் ஒரு நல் வாழ்க்கையை அமைத்துக்கொண்டும் வாழலாம் என்று அரசுத்தரப்பில் இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி காற்றில் அல்லது மழையில் பறக்கவிடப்பட்டு சிறைக்கைதிகளை விட கடுமையான காவலில் எய்ட்ஸ் நோயாளிகளாக அடைக்கப்பட்டிருப்பது குறித்து இந்தப் பெண்கள் கடுங்கோபத்தில் இருக்கிறார்கள் பம்பாய் சி.வி. பகுதிகளிலேயே அலிகளிடம் அடியும் உதையும் வாங்கிக்கொண்டு தினமும் இருபது முறை (approx) பல்வேறுபட்ட சாமான்கள் ஜோலி செய்து நாறடிக்கக் கூதி விரித்துக்

காட்டிக்கொண்டு வாழ்வது இதைவிட எவ்வளவோ மேல் என்று கருதுகிறார்கள் இந்தப் பெண்கள் ம்ஹூம் என்னய்யா எழவு இது Tom Wolfe ஒன்பதாம் தரம்னா இது அறுபத்தொன்னாம் தரமான்னா இருக்கு என்று தன் பூணூலால் முதுகைச் சொறிந்து கொண்டே கோபத்துடன் வினவினார் குர்மா மூர்த்தி அப்போது கு.மூர்த்தியிடம் ஸல்லாபித்துக் கொண்டிருந்த திருவண்ணாமலை சின்னச்சாமி கு.மூர்த்தியின் அகமுடையாள் போட்டுக் கொடுத்த முதல் தரமான நரசுஸ் காபியை அருந்திக்கொண்டே நீர் ஒரு அசடு இது Tom Wolfe இல்லங்காணும் Burroughs Burroughsன் அப்பட்டமான காப்பி என்று அடித்துச் சொன்னார் பர்ரோஸ் முதல் தாரமா ரெண்டாந்தாரமா மூணாந்தாரமா நாலாந்தாரமா அஞ்சாந்தாரமா ஆறாந்தாரமா ஏழாந்தாராமா எட்டாந்தாரமா (to the infinity) பர்ரோஸ் முதல் தாரமான ஒரு ஒழுத்தாளன் என்பது முனியாண்டியின் கட்சி இதற்கு அவன் தரும் ஒரே ஒரு உதாரணம் போதும் பர்ரோஸ் தன் மனைவியைக் கொன்றவன் கொன்ற தேதி 6.9.1951 இது கொலையா விபத்தா வேண்டுமென்றே கொன்றானா வேண்டாமென்று கொன்றானா என்பதெல்லாம் நமக்குத் தேவையில்லாத அயிட்டங்கள் மனைவியைத் தன் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றான் இது போதாதா அவன் முதல் தாரமான ஒழுத்தாளன் என்பதற்கு போதாதெனில் மற்றொரு உதாரணம் போதை மருந்துகள் துப்பாக்கிகள் போன்ற அயிட்டங்களை வைத்திருந்ததால் Louisiana-வில் கைதுசெய்யப்பட்ட பர்ரோஸ் தனது குடும்பத்துடன் மெஹீகோ ஸிட்டிக்குப் போய் அங்கே தன் மனைவியைக் கொன்று கொலை வழக்குப் பிரச்சினையில் மாட்டிக்கொண்டு பிறகு வழக்கு முடிந்ததும் மத்திய அமெரிக்காவுக்கு வந்து சுற்றியலைந்து கொண்டிருந்தபோது Tangierல் ஒரு அறையில் குடியிருந்த சமயத்தில் நடந்த ஒரு சம்பவத்தை தனது நண்பன் கின்ஸ்பெர்குக்கு விவரிக்கிறான் தனது அறையில் அம்மணமாக இருப்பதுதான் பர்ரோஸின் வழக்கம் பர்ரோஸ் அறைக்குப் பக்கத்திலேயே வசித்து வந்த அந்த வீட்டுக்குச் சொந்தக்காரியான நடுத்தர வயது மாது தானுண்டு தன் சோலியுண்டு என்று இராமல் fencing the lizard putting into the jaamp umbrellaing umbrellaing என்ற கதையாக பர்ரோஸ் தன் அறையில் அம்மணமாய்

உலவுவதை சாளரம் வழியே எட்டி எட்டிப் பார்த்துவிட்டு ஒருநாள் பர்ரோஸ் கோட்டும் சூட்டும் டையுமாக வெளியே கிளம்பிக் கொண்டிருக்குங்கால் மிஸ்டர் பர்ரோஸ் மிஸ்டர் பர்ரோஸ் என அவனை இருமுறை விளித்து இவ்வளவு கண்ணியமான கனவானாகத் தோற்றமளிக்கும் தாங்கள் தங்களின் அறையில் மட்டும் ஏன் கண்ணியக்குறைவான விதத்தில் நடந்து கொள்கிறீர்கள் காண சகிக்கவில்லையே தங்களின் மர்மஸ்தானத்தை இவ்வளவு பகிரங்கமாகக் காட்டலாமா என்று வினயமாக வினவினாள் அன்றிலிருந்து பர்ரோஸ் தனது அறையின் சாளரங்களையும் தனது மர்ம உறுப்பையும் மூடி வைக்க ஆரம்பித்தான் சாளரங்கள் மூடியிருப்பது கண்டு வெஞ் சினமுற்ற மாது ஒருநாள் பர்ரோஸை கையும் களவுமாகப் பிடித்துவிட வேண்டும் என்ற திட்டத்தில் கதவைத் தட்டினாள் உடனே திறக்கப்பட்ட கதவுக்கு அருகில் நின்று கொண்டிருந்த பர்ரோஸைக் கண்டு அதிர்ச்சியுற்றாள் அம்மாது காரணம் தனது மர்ம உறுப்பை மறைக்கும் பொருட்டு பர்ரோஸ் அணிந்திருந்தது என்ன தெரியுமா CONDOM உங்கள் முன்னேற்றத்திற்கு ஒரு காண்டம் உங்கள் முன்னேற்றத்திற்கு ஒரு பத்திரிகை உங்கள் முன்னேற்றத்திற்கு ஒரு கட்சி உங்கள் முன்னேற்றத்திற்கு ஒரு டெலிவிஷன் உங்கள் முன்னேற்றத்திற்கு ஒரு ப்ரா உங்கள் பின்னேற்றத்திற்கு ஒரு குண்டி உங்கள் முன்னேற்றத்திற்கு ஒரு விடுகதை விரிந்தால் விரியும் விரிக்காவிட்டால் விரியாது புரிந்தால் புரியும் புரியாவிட்டால் புரியாது மரித்தால் மரிக்கும் மரிக்காவிட்டால் மரிக்காது சிரித்தால் சிரிக்கும் சிரிக்காவிட்டால் சிரிக்காது அது என்ன உங்கள் முன்னேற்றத்திற்கு ஒரு கணக்கு ஒரு ரூபாய்க்கு இருபது கத்திரிக்காய் ஒரு ரூபாய்க்கு ஒரு வாழைப்பழம் ஐந்து ரூபாய்க்கு ஒரு பூசணிக்காய் ரூபாயும் நூறு நூறு என வர வேண்டும் எப்படி எக்ஸிஸ்டென்ஷியலிசத்திற்குப் பெரும் ஆபத்தாக இருப்பது ஸ்ட்ரக்சுரலிசம் மற்றும் condom என்பது முனியாண்டியின் கருத்து ஆனால் இது இரண்டும் ஒன்றா வேறு வேறா என்பது குறித்து குழம்பிய அவன் தன் சிநேகிதியிடம் இதுபற்றி விசாரித்தபோது எந்த பிரச்சினையாக இருந்தாலும் அது பற்றி தலையணை சைஸில் புத்தகம் வைத்திருக்கும் அவள்

இந்தப் பிரச்சினைக்கும் எடுத்துக் கொடுத்தாள் ஒரு புத்தகத்தை புத்தகம் இல்லை அது ஒரு பத்திரிகை (பல்கலைக்கழகப் பேராசிரியர்களால் நடத்தப்படும் ஒரு பலான பத்திரிகை அது தெரியாதா எனக்கு என்கிறார் குர்மா மூர்த்தி) Cut-up: Negative Poetics in William Burroughs and Roland Barthes - Comprative Literature Studies 15 (December 1978) 414-30 Discusses the relationship between Burrough's fiction and structuralism comparing Burrough's cutup technique to Barthes' decoupage sees the two authors as similar in their attacks upon traditional linguistic and literary controls hermaphrodite = both male and the female reproductive organs present in the same animals உதாரணம் அட்டை மண்புழு ஆகக் கற்புள்ள ஜீவிகள் என்று கறாராகப் பார்த்தால் மண்புழுவைப் போன்ற hermaphrodite ஜீவிகளைத்தான் சொல்ல முடியும் நாட்டுக்கு நாடு வீட்டுக்கு வீடு கண்டத்திற்கு கண்டம் உப்புக் கண்டம் condom தூரம் சுருங்கி செயற்கைக் கோள்களால் பல மணிநேரம் பல்லாயிரக்கணக்கான மனிதர்களால் கம்ப்யூட்டர் மருத்துவத்துறை கண்டுபிடிப்புகள் வேளாண்மைத் துறை புதிய பயிரிடும் முறைகள் குறுகிய காலப் பயிர் விளைச்சல் அணுமின் சக்தி அதிக மகசூல் அறிவியல் ஆக்கப்பணிக்கே என்ற நேரு பெருமகனாரின் கூற்று புறம் கிடக்கட்டும் முனியாண்டிக்கும் பர்ரோஸுக்கும் உள்ள ஒத்த தன்மைகளை அல்லது தன்மையை இங்கு பதிவு செய்தாக வேண்டும் பர்ரோஸைப் போலவே முனியாண்டியும் ஹோமோசெக்ஷுவல் நான் ஏன் ஹோமாசெக்ஷுவலாக இருக்கிறேன் வாசுகீ ஈஈ ஈஈஈ நீ என்னிடம் இதற்கு பதில் எதிர்பார்க்க மாட்டாய் என்று நினைக்கிறேன் ஆதியில் மனிதர்கள் இப்போது இருப்பதைவிட இரண்டு மடங்கு அளவில் இருந்தார்கள் நான்கு கைகள் நான்கு கால்கள் இரண்டு தலைகள் இரண்டு பிறப்புறுப்புகள் கொண்ட இவர்கள் கொழுப்பெடுத்த குந்தாணிகளாக Zeus-இடம் போய் தங்கள் ஜிகிர்தண்டா வேலைகளைக் காட்டவே அவன் ரொம்பவும் சினம் கொண்டு இந்த ஆதி மனிதர்களை ரெண்டாகக் கூறுபோட்டு தோலை இழுத்து வைத்துக் கட்டி முடிச்சையும் போட்டான் நம் தொப்புளின் கதையே அதுதான் நம்முடைய கதையும் அதுதான் துண்டாக்கப்பட்ட பாதிகள் தங்களின் மறுபாதிகளைத் தேடி

அலைகின்றன மனிதனின் வரலாறு கணிதம் கற்பனை புவியியல் உயிரியல் வேதியியல் அரசியல் எல்லாவற்றுக்கும் அடிப்படை இதுதான் முழுமையான ஆணும் முழுமையான பெண்ணும் தமது பாலைச் சேர்ந்தவர்களையே ஜோடி சேர்த்துக்கொள்ள இருபால் தன்மைகளையும் (androgenous) கொண்டிருந்தவர்கள் மறுபாலைச் சேர்ந்தவர்களையே ஜோடி சேர்த்துக்கொள்ள விரும்பினர் அதனால் வாசுகீ ஈஈஈஈஈஈ நான் ஹோமாசெக்ஷுவலாக இருப்பது பற்றி நீ Zeus-ஐத் தான் கேட்க வேண்டும் மேலும் இது கற்பு என்ற பிரச்சினையுடனும் தொடர்புடையது கற்பு என்ற வார்த்தையைக் கேட்டாலே எனக்குப் பெரியதொரு குசு வருவது வழக்கமென்றாலும் கற்பு என்றால் என்ன Phylym Aneelidaவின் முக்கியமான தன்மை Hermaphrodite அன்புள்ள ஆசிரியருக்கு இத்துடன் நான் தற்சமயம் எழுதிக்கொண்டிருக்கும் பிசுபிசு என்ற நாவலிலிருந்து ஒரு அத்தியாயத்தை உங்கள் பத்திரிகையில் பிரசுரத்திற்கென்று அனுப்பியிருக்கிறேன் கதையின் சீரான ஓட்டத்திற்கு இடையே கதைக்குச் சற்றும் சம்பந்தமில்லாத சில அயிட்டங்கள் சேர்ந்துவிட்டதற்கு மன்னிக்கவும் என் மகள் சென்ற ஆண்டு படித்து முடித்த நோட்டுப் புத்தகங்களை பழைய பேப்பர்காரனிடம் என் மனைவி எடைக்குப் போட்டுக் கொண்டிருந்த வேளையில் நோட்டுக்களில் முக்கால்வாசிப் பக்கங்கள் எதுவுமே எழுதப்படாமல் காலியாக இருக்கவே கொஞ்சமாகவே எழுதினாலும் அதற்குண்டான காகிதத்தைக் கூட காசு கொடுத்து வாங்க வக்கில்லாத எழுத்தாளர்களாயிருக்கும் நாம் இந்தக் காலி நோட்டுப் புத்தகங்களை ஏன் உபயோகித்துக் கொள்ளக் கூடாதென்று சமயோசிதமாக யோசித்த நான் என்னால் முடிந்த மட்டுக்கும் என் மனைவி கைகளிலிருந்த நோட்டுப் புத்தகங்களைப் பிடுங்கிக் கொண்டேன் ஆனால் அந்தப் பழைய பேப்பர்காரன் எதிரிலேயே ஏற்கனவே இருக்கும் குப்பைகள் (குப்பைகள் = என்னுடைய புத்தகங்கள் + கையெழுத்துப் பிரதிகள் + சிறுபத்திரிகைகள் + பேப்பர் கட்டிங்ஸ்) போதாதென்று இது வேறயா என்று சண்டைக்கு வந்த என் மனைவி அதிலும் பாதி நோட்டுப் புத்தகங்களைப் பிடுங்கிக் கொண்டாள் இந்தப் பழைய பேப்பர்காரனுக்காக நான் எழுதுகிற நாள் என்றைக்கு வருகிறதோ அதுநாள் வரைக்கும் இவளிடம்

என் புத்தகங்களின் சிறப்பைப் பற்றி பேசுவதில்லை என்று கருதி நான் கம்னு இருந்து விட்டேன் ஆனால் அவள் சொல்வதிலும் ஞாயம் இருக்கத்தான் செய்கிறது என் இரண்டாவது பெண் பிறந்து இவள் பச்சை உடம்பாய் படுத்துக்கிடந்த போது என் புத்தகக் குவியல் மற்றும் பேப்பர் கட்டிங்ஸ் மூட்டைகளிலிருந்து பெரும்பூரான் ஒன்று நெளிந்து ஓடி எங்களையெல்லாம் பயத்தில் நடுநடுங்க வைத்து விட்டதை மறக்க முடியுமா நிற்க கதையை என் மகளின் rough நோட்டுப் புத்தகத்தில் எழுதியதால் கதையின் இடையே மகளின் பாடங்களும் நுழைந்து விட்டன அதை நான் பிரதி எடுக்கும்போது கவனிக்காமல் விட்டது என் தவறல்ல பர்ரோஸின் தவறு

இதுவரை இந்தக் கதையை பொறுமையாகவோ பொறுமை யின்றியோ படித்த வாசுகிகளுக்கும் வாசகர்களுக்கும் இரண்டு கேள்விகள் இந்தக் கேள்விகளுக்கு சரியான விடை எழுதுபவர்களுக்கு முனியாண்டி தனித்தனியாக ஆபாசக் கடிதம் எழுதுவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார் இனி கேள்விகள்:

*1. ஜோக்கர் யார்? முனியாண்டியா? வில்லியம் பர்ரோஸா? இக்கதையை பிரசுரித்த ஆசிரியரா? ஜாக் நிக்கல்ஸனா? குர்மா மூர்த்தியா?*

2. Joker: Is he a villain or victim?

*(பதில் தமிழிலேயே எழுதலாம்)*

மீட்சி
1990

# நேநோ

முனியாண்டியின் உருவாக்கத்திற்கும் கிறிஸ்தோபாலின் உருவாக்கத்திற்கும் ஒற்றுமை இருப்பதைக் கண்டு இதை இலக்கியத் திருட்டு என்று கூறப்போகும் முட்டாள் வாசுகியே கிறிஸ்தோபாலும் சரி முனியாண்டியும் சரி நீயும் சரி கார்லோஸ் புண்டேயும் சரி எல்லோருடைய உருவாக்கமும் இப்படியாகத்தான் இருந்து வந்திருக்கிறது என்பதும் லட்சக்கணக்கான க்ரோமோஸோம்களில் ஒரு க்ரோமோஸோமாகத்தான் நாம் அனைவருமே உருவாக்கப்பட்டிருக்கிறோம் என்பதும் உனக்குத் தெரியுமா

உருவாக்கப்பட்டது முனியாண்டியா நேநோவா முனியாண்டியை உருவாக்குவதுதான் ஒழுத்தாளின் திட்டம் அந்தத் திட்டத்து டன்தான் ஒரு வெள்ளைக் காகித்தில் ஆயிரத்துத் தொள்ளா யிரத்துத் தொண்ணூற்று ஒன்றாம் வருடம் மார்ச் மாதம் இருபத்தைந்தாம் தேதி இரவு ஒன்பது மணி முப்பத்தாறாம் நிமிடத்தில் இந்த முனியாண்டியின் உருவாக்கம் நிகழ்த்தப்படுகிறது. ஆனால் நிஜமான உருவாக்கம் இது அல்ல என்கிறாள் நேநோ. நேநோவின் நிழல்தான் முனியாண்டி ஒழுத்தாளனால் நிழலை மட்டுமே உருவாக்க முடியும் நேநோக்களை அல்ல பல்லா

யிரக்கணக்கான நேநோக்கள் சுய மைதுனங்களில் அழிந்து மலக் கோப்பைகளில் விழுகிறது தலையணைகளிலும் விழுந்து அழிகிறது முனியாண்டியின் தலையணையைக் கண்ட கிபி ஒன்பதாம் நூற்றாண்டு செத்த மூளை உன் தலையணை உறைகளைத் துவைத்து வெளுக்காமலேயே கஞ்சி போட்டுவிட்டாயே என்று கேட்டது ஞாபகம் வருகிறது ஆணுறைகளில் அழியும் நேநோக்களை ஈறிலி என்றுதான் சொல்ல முடியும் நேநோவை உருவாக்கிய ஆணும் பெண்ணும் கலவியில் ஈடுபட்ட இடம் ஒரு அரசாங்கப் பள்ளியின் ஓய்வறையோ மத்தியதர வர்க்கக் குடிமனைப் பகுதி ஒன்றின் படுக்கையறையோ நெடுஞ் சாலையோரத்தே நிறுத்தப்பட்ட வாகனமோ ஆள் நடமாட்டமற்ற தெருவொன்றின் பின்னிரவு நேரத்துக் கழிப்பறையோ ஊர் ஒதுக்குப்புறத்தின் மாந்தோப்போ கூட்டம் நிரம்பி வழியும் மாலை நேரத்துப் பேருந்தோ

(காலி இடத்தைப் பூர்த்திசெய்து கொள் வாசுகி) அல்ல ஒரு சிவப்பு விளக்குப் பகுதியில் குடிசையொன்றில் அந்நாளில் முதல் நபராய் நுழைந்த ஆணின் சுக்கில நாடியில் தோன்றிய வெள்ளியிலிருந்து வெளிப்பட்டாள் நேநோ மூன்று நாள் ரத்த ஒழுக்கு நின்று இது ஒன்பதாவது நாள் முதல் நபர் நேநோவின் பிறப்பே மிகவும் சந்தர்ப்பவசமானது எல்லா மனித உயிரிகளின் பிறப்பே மிகவும் சந்தர்ப்பவர்மானதுதான் என்றாலும் நேநோவின் பிறப்பு சந்தர்ப்பவசத்திலும் சந்தர்ப்பவசமானது நேநோவின் தாய் தனது யோனியுள் அணிந்திருந்த வளையத்தினால் குருதிப் போக்கு அதிகமாகி ஒருநாள் பகல்போது உறங்கி எழுந்தபோது தனது ஆடை மற்றும் படுக்கை அத்தனையும் தொப்பலாய் நனைந்திருக்க (குருதி வெள்ளத்தில் மிதக்க என்று எழுதியிருந்தான் ஒழுத்தாளன் cliche என்பதால் அதை நீக்கிவிட்டேன் - அச்சுக் கோர்ப்பாளன்) பயந்துபோன நேநோவின் தாய் எழ முயற்சிக்க

அதுவும் முடியாமல் போய் அப்படியே மூர்ச்சையானாள் முப்பத்தாறு வயதில் அவள் உடல் இந்த யந்திர தந்திர இந்திர மந்திர உழைப்பைத் தாங்கும் சக்தியை முற்றாய் இழந்துபோக மருத்துவர் அவள் யோனியுள் செருகப்பட்டிருந்த உள்வளையத்தை நீக்கிவிட்டு இந்த உடல் இனி தொழிலுக்குத் தாங்காது என்று கூற அன்றிலிருந்து தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு காய்ந்த பன்னும் டீயும் சாப்பிட்டுக்கொண்டிருந்த நேநோவின் தாய் இந்த ஒரு மாத காலத்தில் வந்த வாடிக்கையாளர்களையெல்லாம் திருப்பி அனுப்பிக்கொண்டிருந்தாள் என்ற விபரம் அறியாது குடிசையுள் நுழைந்த இளம் வாடிக்கையாளன் வழக்கம்போல் நேதாயிடம் (நேநோவினால்தான் அவளது இருப்புக்கு இந்தப் பக்கங்களில் அர்த்தம் கிடைத்திருக்கிறபடியால் நேநோவின் முதல் எழுத்தையே தனது முதல் எழுத்தாகக் கொள்கிறாள்) நெருங்க அதை மறுத்து அவனிடம் அவள் விடயத்தை எடுத்து இயம்ப அதற்கு அவன் நேதாயே வச்சா அஞ்சு எடுத்தா பத்து என்ற ரகத்து வாடிக்கையாளனாக என்னை நீ நினைத்துவிட்டாய் பேதையே நான் வேறு ரகம் என்பது இன்னுமா உனக்குப் புரியவில்லை வச்சா அஞ்சு எடுத்தா குஞ்சு என்ற கவரிமான் வகையைச் சேர்ந்தவன் நான் நீ எப்போது சொல்கிறாயோ அந்தக் கணமே குஞ்சை எடுத்துவிடுவேன் பயங்கொள்ளாதே நான் கருவியலைப் படித்திருக்கிறேன் கருப்புயலை நாம் தடுத்து விடுவோம் உனது அண்டகோசத்துள் க்ரோமோஸோம்களின் பேய்ப் பயணம் நிகழவே நிகழாது என தன் குஞ்சின் மீது ஆணையிட்டு நேதாயே நின் யோனி தா நான் அந்தோனி நீயோ நீ அந்த யோனி அந்தோனீ யோநீ என்று கவிதை பாடிக் கதறியழ அது கண்டு மனம் மாறிய நேதாய் தடை மாத்திரைகளையும் உட்கொள்ள மறந்து அவன் மீது சாய்ந்து முத்தமிட்டாள் அந்தோனி கிளர்ச்சியடைந்தான் குறி நிமிர்ந்தது குறியின் குருதிக் குழாய்கள் விரிவடைந்தன குருதியோட்டம் ஒன்பது மடங்கு உயர்ந்தது நாரிய குழிவுத் தசை சுருங்கி ஆண்குறிச் சிரையை அழுத்தியது குறியின் சுருக்குத் தசை விரிவடைந்தது ஒன்பது நிமிடங்கள் நேதாயின் வற்றிய முலைகளைச் சப்பினான் அந்தோனி தான் பிறந்து ஒன்பதாவது மாதத்தில் தன் தகப்பனின் முதுகிலேறி ஆனை ஆனை

அழகர் ஆனை விளையாடிய பொது அடைந்த கிளர்ச்சியை முப்பத்தைந்து வருடங்கள் கழித்து மீண்டும் அடைந்த நேதாய் அவனை இறுகக் கட்டியணைத்து அவனது கழுத்தைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சினாள் அவளது கந்து குருதியால் நிரம்பியது யோனிவாயின் பார்த்தோல் சுரப்பியின் செயல்பாடு வேகமுற்றது அந்தோனி யோனியில் லிங்கத்தை வைத்துத் தேய்த்தான் ஆதி யோனியாய் இருந்தது ஆதியில் யோனி இருந்தது அந்தம் யோனியாய் இருந்தது யோனியின் ஏற்பிகள் தூண்டப்பட்டன சூரிய கலையும் சந்திர கலையும் ஒத்து இயங்கிய அந்த நேரத்திலே விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி அந்தோனி யோனியுள் நுழைந்தான் அதே நேரத்தில் விந்துப் பைகளும் விரை நாளமும் சுருங்கியதால் கவுப்பர் சுரப்பி ஆண்மைச் சுரப்பி மற்றும் விந்துப் பைகள் இவற்றின் சுரப்பு நீருடன் கலந்த விந்தணுக்களுடன் விந்துவானது அவனது லிங்கத் துவாரத்தின் வழி வெளிப்பட்டது தனது உயிர்த்தலையும் வேற்றுலக உண்மைகளையும் இருள் நகரத்துப் பெண்ணுருவையும் தேடி அலைந்துகொண்டிருந்த ஒரு கோடியே தொண்ணூற்று ஒன்பது லட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது daedalusகளும் தனது மூலத்திலிருந்து விடுபட்டு இருட்சுரங்கத்தின் வழியே பிரளய வெள்ளத்தில் நீந்தி (இந்த daedalusகள் *9* என்ற வடிவத்தைக் கொண்டிருந்ததால் இவற்றிற்கு நீச்சல் சுலபமானது என்று அறிக) மூச்சுத் திணறி லட்சக்கணக்கில் கருக்குழியின் சளிச் சுவர்களில் முட்டி மோதி தனது சக உயிரிகளுடன் மடிந்தன இது ஒரு போர் ஒரு கோடியே தொண்ணூற்று ஒன்பது லட்சத்துத் தொண்ணூற்று ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது நேநோக்களில் ஒரே ஒரு நேநோ மட்டுமே தனது பெண்ணுருவுடன் இணைய முடியும் என்பதால் இது ஒரு கோடியே தொண்ணூற்று ஒன்பது லட்சத்துத் தொண்ணூற்று ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது நேநோக்களின் உயிர்ப் போராட்டம் ஒரு கோடியே தொண்ணூற்று ஒன்பது லட்சத்துத் தொண்ணூற்று ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றியெட்டு உயிர்கள் தமது உயிர்த்தலுக்கான சாத்தியமிழந்து செத்து மடிந்து போகும் போர் வாழ்ந்து பெற்ற அனுபவம் பற்றியும் வாழ்க்கை

பற்றியும் இலக்கியம் பற்றியும் மதம் பற்றியும் பாசம் பற்றியும் அன்பு பற்றியும் அருள் பற்றியும் தத்துவம் பற்றியும் காரண காரியம் பற்றியும் ஊழியம் பற்றியும் பேசும் ஒழுத்தாளியே நீ இந்த கருப்புயலைப் பற்றியோ சுக்கில சுரோனிதக் கலப்பு பற்றியோ எப்போதேனும் யோசித்திருக்கிறாயா லிங்கத்திலிருந்து பாயும் அத்தனை லட்சம் க்ரோமோஸோம் களும் அத்தனை கருமுட்டைகளோடும் கலந்தால் எத்தனை லட்சம் முனியாண்டிகள் உருப்பெறுவார்கள் என்று உனக்குத் தெரியுமா உலக மக்கள் தொகையான நானூற்று ஐம்பது கோடி முனியாண்டிகளை உருவாக்கும் விந்து அந்தக் கலவியின் போது பாய்ச்சப்பட்டது அதே நேரத்தில் நேதாயின் கருப்பை அசைந்து யோனியுடன் நேரடி தொடர்புகொள்ள யோனியுள் நுழைந்த நேநோக்கள் சூன்ய வெளியின் பிரளய வெடிப்பில் அழிந்து போக எஞ்சிய ஒற்றை நேநோ மட்டும் முதிர்ந்த கருக் கூட்டினுள் (graafian follicle) இருந்த கருக்கூடு வெடித்து தன்னைச் சூழ்ந்துள்ள உயிரணுக்களுடன் வயிற்றறைக்குள் வெளிப்பட்டு கருப்பைக் குழாய்க்குள் நுழைந்து தன்னுடன் இணையப் போகும் நேநோவுக்காகக் காத்திருந்த கருவணுவுடன் இணைந்தது நேநோ உருவாக்கப்பட்டாள் உருவாக்கப்பட்டான் உருவாக்கப்பட்டது

நேநோவுக்குத் தெரியும் அது ஒழுத்தாளனின் கணக்கற்ற பொய்களுள் ஒன்று என்பதும் தெரியும் தனது வாக்கிய ஒழுங்குக்காக (தோனி - யோனி) வைக்கப்பட்ட பொய்ப் பெயர் நிஜப் பெயர் தெரியவில்லை போகட்டும் Fuckretius இன் மரணத்திற்கே காரணம் தெரியாத போது அந்த யோனி தோனி சமாச்சாரம் ஒன்றும் பெரிதில்லைதான் தாயைப் புணர்ந்தது தந்தை என்று எழுதப்பட்டதால் நேநோவும் அந்த இளைஞனை தந்தை என்றே நம்பினாள் ஆனால் தந்தை என்றது தனது தாயின் தந்தையே என்பதையும் நேநோ புரிந்துகொண்டு விட்டாள் அப்படியானால் நான் நேநோவா அடோனிஸா

ஒழுத்தாளன்: கால நீட்சியில் பெயர்கள் முக்கியமல்ல நீதான் நேநோ நீதான் அடோனிஸ் உனது வீனஸ்தான் முனியாண்டி

நேநோ: கால நீட்சியா எனது காலம் என்பது என்ன

செடி என்ற இலக்கியச் சிறு பத்திரிகையின் மாதாந்திரக் கூட்டம் ஒன்றில் பேச நேநோ அழைக்கப்பட்டிருந்தான் நானும் எனது கவிதையும் என்பது தலைப்பு பேச்சின் இறுதியில் வாசுகி ஒருத்தி நீங்கள் கவிதை எழுதத் துவங்கியது எப்போது என்று வினவ என் தாயின் கருவறையில் நான் எனது முதல் கவிதையை எழுதினேன் 'என்றான் நேநோ அந்த முதல் கவிதை இதுவரை பிரசுரமாகி யிருக்காவிட்டால் அதை இப்போது கேட்க விரும்புகிறேன் என்றாள் வாசுகி அக்கவிதையின் சில பகுதிகளே தனக்கு நினைவில் இருப்பதாகவும் அதிலும் சில பகுதிகள் தனக்கே இப்போது புரிபடா மர்மமாயிருப்பதாகவும் தெரிவித்த நேநோ அக்கவிதையை ஒரு வினோதமான குரலில் சொல்லத் துவங்கினான் நான் ஒரு அலியாய்ப் பிறந்தேன் எனது தோழிகளும் சகோதரிகளுமாக தொள்ளாயிரத்துத் தொண்ணூற்று ஒன்பது அலிகள் என்னுடன் இருந்தார்கள் அரண்மனையின் எல்லா வேலைகளையும் செய்யும் அடிமைகளாயிருந்தோம் நாங்கள் எங்கள் தந்தையும் நாட்டின் தலைவனுமாயிருந்த அரசன் தனது படையெடுப்பின் போது வேற்று நாட்டுப் பெண்களை அடிமைகளாய்க் கொண்டுவந்து அவர்களை ஒரு தினத்துக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர் வீதம் புணர்ந்து அவர்கள் குழந்தைகளை ஈன்றெடுத்த பின் அவர்களைக் கொன்று போட்டு வந்தான் இந்த அடிமைப் பெண்களுக்கு அலிகளே குழந்தைகளாய்ப் பிறந்தன இந்த அலிக் குழந்தைகளே அரண்மனையின் அடிமைகளாய்ப் பெருகி வரலா யினர் இப்படியே இருக்குங்கால் ஒருநாள் எனது தோழிகள் அரசனின் சயன மண்டபத்தைச் சுற்றி வளைத்துக்கொள்ள நான் உள்ளே நுழைந்து அரசனின் விரைகளை எனது இடது கையால் இறுகப் பற்றி வலது கையில் பிடித்திருந்த கொடுவாளால் அரசனின் பிறப்புறுப்பைத் துண்டித்தேன் இதைக் கேட்ட வாசுகி பின்வரும் ஒன்பது கேள்விகளைக் கேட்டாள்

இது ஒரு கதைதானே இதை எப்படிக் கவிதை என்று கூற முடியும்

வேற்று நாட்டு அடிமைப் பெண்கள் தங்கள் குழந்தைகளைத் தாங்களே தின்றுவிடவோ அன்றிக் கொன்றுவிடவோ இருக்க அரசனே அடிமைப் பெண்களைக் கொல்வது எப்படி

கதையில் வரும் அரசன் அரசனே அல்ல அவன் ஒரு அரசி என்பதுதானே உண்மை

அரசி வேற்று நாட்டு அடிமை ஆண்களைக் கொண்டு வந்து அவர்களைப் புணர்ந்த பின் அவர்களையெல்லாம் தின்று விடுவதுதானே இயல்பானது

அப்படியானால் நேநோ தனது தாயும் நாட்டின் தலைவியுமான அரசியின் விரைகளைத் தனது இடது கையால் இறுகப் பற்றி கொடுவாளால் அவளது பிறப்புறுப்பைத் துண்டித்தது எங்ஙனம் துண்டிக்கப்பட்ட பிறப்புறுப்புக்கு நேர்ந்த கதி என்ன

இந்த ஒன்பது கேள்விகளுக்கும் தன்னால் பதில் சொல்ல முடியாதென்றும் ஒரே ஒரு கேள்விக்கு மட்டுமே பதில் சொல்வது சாத்தியமென்றும் கூறிய நேநோ அரசனைக் கொன்ற அன்றே கவிதையையும் கொன்றேன் கவிதை செத்துப் போயிற்றென்றான் ஒருநாள் நேநோவுடன் ஓரினப் புணர்ச்சியில் ஈடுபட்டு அந்தப் போதையில் கிறங்கியிருந்த பொழுது கதையின் மற்ற பகுதிகளை தான் கனவில் கண்டதாகக் கூறிய வாசுகி அதை மற்ற பார்வையாளர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்பி கதையை இயம்பினாள்

அச்சமயத்தில் அவளை இடைமறித்த பார்வையாளர் ஒருவர் ஒன்பது கேள்வியென்று கூறி கடைசியில் ஆறு கேள்விகளைத்தானே கேட்டாய் அது என்ன மர்மம் என்று காலந்தாழ்த்தி வினவ The Hermit of the 69th Street என்ற நாவலைப் படித்துப் பார் என்று எரிச்சலுடன் கூறிய வாசுகி கதையின் பல பகுதிகள் தனக்கு மறந்துவிட்டதாக நேநோ கூறுவது பொய் இல்லாவிட்டால் அவனுடன் ஓரினப் புணர்ச்சியில் நான் ஈடுபட்டிருக்குங்கால் அவன் தனது கனவுகளை எனக்குத் தந்தது எப்படி என்று கேட்டு உண்மையான காரணம் நேநோவை கடும் பிரச்சினைகளுக்கும் விமர்சனங்களுக்கும் உட்படுத்தி தான் யார் தனது பெயரும் அடையாளமும் என்ன என்ற தேடுதலுக்கும் இட்டுச் செல்லக் கூடியது என்பதே என்ற தனது யூகத்தைக் கூறி கதையைத் துவக்கினாள் அரசனும் தன் தகப்பனுமானவனின் விரைகளைத் தனது இடது கையால் இறுகப் பற்றி வலது

கையில் பிடித்திருந்த கொடுவாளால் அவனது பிறப்புறுப்பை வெட்டிய நேநோ அதைக் கடலில் வீசியெறியாமல் தானே தின்று விட்டாள்

அன்றிலிருந்துதான் நேநோவுக்கு ஆணுறுப்பு வளர ஆரம்பித்தது அன்றிலிருந்துதான் நேநோ முனியாண்டியாக மாற்றம் கொண்டான் பிறகு முனியாண்டி தனது தோழர்களும் சகோதரிகளுமான அடிமை அலிகளை காராக்கிரகத்தில் அடைத்து வைத்தான் தனது தாயை மணம் செய்து கொண்டான் ஒன்பது வருடங்களில் வருடத்திற்கு ஒரு குழந்தையாக ஒன்பது குழந்தைகள் பிறக்க ஒவ்வொரு குழந்தையையும் பிறந்தவுடன் தின்று தீர்த்தான் முனியாண்டி (உன் மகனாலேயே நீ அழிந்து போவாய் என்று சாகும் தறுவாயில் சபித்திருந்தான் அரசன்) ஆனால் எப்படியாவது முனியாண்டியைக் கொல்ல வேண்டுமென்று ஒவ்வொரு பேறு காலத்திலும் வைராக்கியம் பூண்டிருந்த முனியாண்டியின் மனைவி ஒன்பதாவது குழந்தை பிறந்தவுடன் முனியாண்டி வருவதற்கு முன் குழந்தைக்கு நேநோ என்று பெயரிட்டு அவனை ஒரு சர்ப்பமாக மாற்றி ஒன்பது சாகரம் ஒன்பது கிரி தாண்டி தனியே அமைந்திருந்த ஒரு தீவுதனில் அவனை வசிக்கவிட்டுக் கூறலானாள்

ஹேய் மகனே கேள் இன்றிலிருந்து சரியாக ஈரொன்பது ஆண்டுகள் கழிந்த பின்னர் நீ உன் சுய உரு பெறுவாய் சுய உரு பெற்றவுடன் இங்கிருந்து கிளம்பி கிரிகளையும் சாகரங்களையும் கடந்து உன் தகப்பனின் உயிர் குடிப்பாய் என வாழ்த்தி ஆணையிட்டு விட்டு மருத்துவமனை ஏகினாள் முனியாண்டி வந்தால் எங்ஙனம் சமாளிப்பேன் என எண்ணிய அப்பேதையானவள் தன்னுடைய கர்ப்பத்தோடான நீண்ட பயணத்தின்போது பயன்படுத்திய sanitary napkin என வேற்றுமொழி நாமகரணம் கொண்ட தன் அல்குல் அணிகலனைக் கழற்றி சிறு மூட்டையாகக் கட்டி முனியாண்டியின் குழவி எங்கே என்ற வினாவிற்கு பதிலாக இந்தா பிடி நீயும் உனது குழவியும் என அசாதாரண மனோபலத்துடன் பகர்ந்தவாறே மூட்டையை வீசியெறிந்தாள் முனியாண்டியும் அதன் ரத்த வாடையால் ஈர்க்கப்பட்டு சந்தேகமேதும் எழாதவனாய் அம்மூட்டையைப் புசித்தான்

ஆண்டுகள் ஈரொன்பது உருண்டோடின சுய உரு பெற்று தடைகளாய் நின்று படுத்திருந்த கிரிகளையும் சாகரங்களையும் கடந்து முனியாண்டியைப் பழிவாங்குவதற்காக அரண்மனையை அடைந்த நேநோவை முந்திக்கொண்டு கதையில் புழங்கி வரும் மொழியே முனியாண்டியை கொலை செய்துவிட அப்பிரேதம் மட்டுமே நேநோவுக்குக் காணக் கிடைத்தது மற்றொரு கதை ,என்று முடித்தாள் வாசுகி

சிதைவு
நவம்பர், 1991.

# நட்சத்திரங்களிடமிருந்து செய்தி கொண்டு வந்தவர்களும் பிணந்தின்னிகளும்

**"The Book of Fuzoos - Male Edition"**
*by Jacques Didier*
Published in French - 1972- Edition de Minuit
Translated in English by Catherine Dumont - 1984
Routeledge - Price not mentioned.

மனித வரலாற்றிலேயே முதன் முதலாக நட்சத்திரங்களையும் கிரகங்களையும் மிக நெருக்கமாகத் தனது தொலைநோக்கிகளால் பார்த்தவர் கலிலியோ கலிலி (1564-1642). அப்போது அவருடைய உணர்வுகள் எப்படி இருந்திருக்கும். அந்த அனுபவங்களை அவர் நட்சத்திரங்களிடமிருந்து செய்தி கொண்டுவந்தவன் (Sidereus nuncius) என்ற நூலில் பதித்திருக்கிறார். பால்வீதி என்பது நட்சத்திரக்கூட்டங்களால் ஆனது என்றும் கிரகங்கள் தாமே

ஒளி வீசுவதில்லை – சூரியனிடமிருந்து அவை ஒளியைப் பிரதிபலிக்கின்றன என்றும் அவர் அந்த நூலில் கூறுகிறார்.

தனது 69 ஆவது வயதில் விசாரணைக் கமிஷனின் முன்பாக அவர் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டார்: "கலிலியோ கலிலியாகிய நான் பிரபஞ்சத்தின் மையம் சூரியன் என்றும் அது நகராமல் 'ஒரே இடத்தில் இருக்கிறது என்றும் உளறிவிட்டேன்... இத்தகைய தவறான கருத்துக்களை இப்போது நான் மாற்றிக்கொள்கிறேன்" என்று சொல்லி முடித்துக் கடைசியில் "E pur si muove" (இருந்தாலும் பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது) என்று யாருக்கும் காதில் விழாமல் ஈனமாக முனகினார்.

விசாரணைக்குப் பிறகு கலிலியோவின் புத்தகங்கள் தடை செய்யப்பட்டு அவர் சிறையில் அடைக்கப்பட்டார் (1633).

பிஸாவின் கதீட்ரலில் உள்ள தொங்கும் விளக்குகளின் சீரான இயக்கத்தைப் பார்த்து, தொங்குகின்ற ஒரு பொருளின் எடையோ அல்லது அதன் உயரமோ அதன் இயக்கத்தில் மாற்றம் ஏற்படுத்துவதில்லை என்றும், உயரம்தான் அந்தப் பொருளின் இயக்கத்தின் கால அளவை நிர்ணயிக்கிறது என்றும் சொன்னார். இதுதான் பெண்டுலத்தின் கண்டுபிடிப்பிற்கும் அடிப்படையாக இருந்தது.

பிஸா டவரிலிருந்து ஒரு பவுண்ட் உலோக உருண்டையையும் பத்து பவுண்ட் உலோக உருண்டையையும் கீழே விழச் செய்து இரண்டுமே ஒரே நேரத்தில் தரையை அடைந்ததை வைத்து மேலிருந்து கீழே விழுந்து கொண்டிருக்கும் ஒரு பொருளின் வேகம் அதன் எடையைப் பொறுத்து அமைகிறது என்ற அரிஸ்டாட்டிலின் கோட்பாட்டை மறுத்துத் தன்னுடைய கண்டுபிடிப்பின் அடிப்படையில் வேகம், காலம், தூரம் பற்றிய பல புதிய கோட்பாடுகளை உருவாக்கினார்.

பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கு உரிய உடையை அணிய மறுத்தார் என்பது போன்ற பல சில்லறைக் காரணங்கள் கூறப்பட்டு பிஸா பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

உலகத்தைப் பற்றிய இரண்டு அடிப்படை விதிகள் குறித்தான விவாதம் என்ற புத்தகத்தை 1632இல் வெளியிட்டு, அதன் காரணமாக மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

வீட்டுக்காவலில் இருந்து கொண்டே இரண்டு புதிய விஞ் ஞானங்கள் தொடர்பான விவாதங்கள் என்ற நூலை எழுதி அதை ரகசியமாக ஹாலந்துக்கு அனுப்பினார். 1638இல் அந்நூல் பிரசுரமாயிற்று.

ஆனால் அந்த நூலை அவரால் பார்க்க முடியாமல் அதே ஆண்டில் தன்னுடைய 74ஆவது வயதில் அவர் கண் பார்வையை இழந்தார்.

அவர் இறந்தபோது அவரது மரண ஊர்வலத்தைத் தடை செய்தது கத்தோலிக்கத் திருச்சபை.

இதேபோல் ஆக்ஸிஜனைக் கண்டுபிடித்த ஜோஸஃப் ப்ரீஸ்ட்லி, லியனார்டோ டா வின்ஸி, நிகோலஸ் கோபர்னிகஸ் நியூட்டன், லூயி பாஸ்ச்சர், மேரி க்யூரி என்று இப்படி விஞ்ஞானிகளின் வரிசை நீண்டுகொண்டே போகிறது. இதில் முக்கியமாக லியனார்டோ பறவைகள் பறப்பதற்கும் மீன்கள் நீஞ்சுவதற்குமான ஒற்றுமைகளைக் கவனித்து, அதன் மூலம் காற்று நீர் இவற்றின் ஓட்டத்தின் ஒற்றுமைகளைக் கண்டு, அதன் மூலம் இவருக்குப் பின்னால் இருநூறு ஆண்டுகள் கழித்து இயக்கம் பற்றிய நியூட்டனின் மூன்றாம் விதி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னேயே வினை மற்றும் எதிர்வினைக்கான விதிகளைச் சொன்னவர். இவரது கண்டுபிடிப்புகளை வரிசைப்படுத்தினால் அதுவே ஒரு புத்தக அளவுக்கு நீளும்.

ஆனாலும் நமக்குப் படிப்பது என்பதே ஒரு வாழ்க்கை வசதி சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கிறது. ஒருவருக்கு தலித் விடுதலைக்கான களச் செயல்பாடுகளும், ஒருவருக்கு மனித குல விடுதலைக்காக சேம்பர் ஆஃப் காமர்ஸ் ஹாலில் வாரம் இரண்டு கூட்டங்கள் போடுவதும் (அமைப்பாளர்களையும் சேர்த்து மொத்த பார்வையாளர் எண்ணிக்கை : 9), ஒருவருக்குத்

தன் மனைவியின் ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக வீடு கட்டுவதும், ஒருவருக்கு சிறுபத்திரிகையில் கடிதங்கள் எழுதுவதும், ஒருவருக்குத் தன் மனைவியின் நகையை விற்று கவிதைத் தொகுதி போடுவதும், ஒருவருக்கு பல்கலைக் கழகங்களில் தன் புகழ் பரவுவதற்காகப் பாடுபடுவதும், எனக்கு தமிழ்நாட்டில் பரவலாக பாலியல் புரட்சி ஏற்படுவதற்காக 27 பேரை சந்தாதாரராகக் கொண்ட ஒரு சிறு பத்திரிகையில் வில்ஹெல்ம் ராய்க்கின் கட்டுரையை மொழிபெயர்ப்புச் செய்வதும் முக்கியமானதாகத் தோன்றுகிறது. இக்காரணங்களினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ நமக்கு ஒரு குஸ்தாவ் ஃப்ளெபரின் புத்தகம் பற்றித் தெரிந்திருக்கிறது. ஃப்ளெபர் பற்றி சார்த்தர் தன்னுடைய ஆயுட்கால திட்டமாகக் கொண்டு 5000 பக்கங்கள் எழுதி, அது வெளிவந்த பிறகு "இன்னும் நான் ஃப்ளெ பர் பற்றிய ஆய்வை இந்த 5000 பக்கங்களில் ஆரம்பிக்கவே இல்லை" என்று சொல்லி விட்டார். இது பற்றி எழுதும் மரியோ பர்கஸ் யோசா "ஒரு labyrinthக்குள் மாட்டிக் கொண்டு விட்டார் சார்த்தர்; இந்த ஆய்வின் முறையைப் பார்த்தால் 50000 பக்கங்கள் எழுதினால்கூட ஆய்வு முடிவடையாது என்று தோன்றுகிறது" என்கிறார்.

இந்த நிலையில் *The Book of Fuzoos* என்ற புத்தகம் பற்றி அதிகம் பேசப்படாததில் ஆச்சரியம் எதுவும் இல்லைதான். இதை எழுதியிருக்கும் ஜாக் திதியே, சார்த்தர் படித்த சொர்போன் பல்கலைக்கழகத்தில் படித்தவர். படித்து முடித்ததும் ப்ரஸீலியக் காடுகளுக்குச் சென்று விட்டார்.

மூன்று ஆண்டுகள் ப்ரஸிலின் வடக்குப் பகுதியிலுள்ள காடுகளில் அலைந்து விட்டு பாரீஸ் திரும்பியவர் தன் ஆய்வுக் குறிப்புகளை வைத்து *The Book of Fuzoos (Male Edition)* நூலை எழுதி முடித்து 1972ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இந்தப் புத்தகம் மேலே குறிப்பிடப்பட்ட விஞ்ஞானிகளின் சாதனைகளுக்குச் சற்றும் குறையாத, சரியாக கவனிக்கப்பட்டால் நமது சமூக வாழ்வின் போக்கையே மாற்றிமைக்கக் கூடிய பல ஆய்வுக் குறிப்புகளையும் கண்டுபிடிப்புகளையும் கொண்டிருக்கிறது.

நெக்ரோஃபீலியா[1] என்பது இறந்தவரின் மீதான விருப்பம் nekros என்ற கிரேக்க வார்த்தையின் பொருள் பிரேதம் nex, necis என்ற

---

1. நெக்ரோஃபீலியா என்ற வார்த்தையை முதன்முதலில் பயன்படுத்தியவர் தோழர் லெனின் என்று தெரிகிறது. அதன் பிறகு பயன்படுத்தியவர் ஸ்பானியத் தத்துவவாதி மிகெல் தெ உனாமுனோ, 1936இல் ஸ்பானிய உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்தபோது, உனாமுனோ தலைவராக இருந்த சலாமாங்கா பல்கலைக்கழகத்தில் மிலான் அஸ்த்ரே என்ற ஜெனரல் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும்போது அவருக்குப் பிடித்த கோஷமான 'Viva la muerte!' (மரணம் வாழ்க!) என்ற கோஷத்தை அடிக்கடி எழுப்ப, கூட்டத்தில் இருந்தவர்களும் 'விவா லா முவர்த்தே!' என்று கத்துகிறார்கள். ஜெனரல் பேசி முடித்ததும் உனாமுனோ எழுந்து "மரணம் வாழ்க என்ற கோஷத்தில் நெக்ரோஃபீலியாவின் ஒரு வெளிப்பாட்டைத்தான் நாம் இப்போது கேட்டோம்... ஜெனரல் மிலான் அஸ்த்ரோ ஒரு முடவர். இதை நாம் மிகவும் வலியுறுத்திச் சொல்ல முடியும். போரின் காரணமாக முடமானவர் அவர். துரதிர்ஷ்டமாக இப்போது ஸ்பெயினில் ஏகப்பட்ட முடவர்கள் இருக்கிறார்கள். கடவுள் நம்மைக் காப்பாற்றாவிட்டால் இன்னும் நிறைய முடவர்கள் உருவாக்கப்படுவார்கள். வெகு மக்கள் உளவியலைப் பற்றி ஜெனரல் மிலான் அஸ்த்ரோ பேசுவது மிகவும் வேடிக்கையானது... வருந்தத்தக்கது..." என்கிறார். உனாமுனோவின் இந்தப் பேச்சைக் கேட்கக் கேட்க ஜெனரல் அஸ்த்ரோவுக்குப் பற்றிக்கொண்டு வருகிறது. அவரால் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளவே முடியவில்லை. எழுந்து நின்று 'அபாஹோ லா இந்த்தெலிஜென்ஸியா!' (புத்திசாலிகள் ஒழிக!) என்று கத்துகிறார். உடனே அவரது கோஷத்தைத் தொடர்ந்து பலரும் 'விவா லா முவர்த்தே!' 'விவா லா முவர்த்தே!' என்று கத்துகிறார்கள். இந்த கோஷங்களையும் மீறிக்கொண்டு உனாமுனோ தனது பேச்சைத் தொடர்கிறார்: "ஆம். இந்த இடம் புத்திசாலிகளின் கோவில். நான்தான் இதன் பிரதான குரு. இந்த இடத்தின் புனிதத்தை நீங்கள் களங்கப்படுத்திவிட்டீர்கள். ஏனென்றால் உங்களிடம் அதற்கான மிருகபலம் இருக்கிறது. ஆனால் நீங்கள் எந்த மனமாற்றத்தையும் உருவாக்கி விட முடியாது... அதற்குத் தேவை அறிவும் நியாய உணர்வும். அது உங்களிடம் இல்லை."
இந்தச் சொற்பொழிவுக்குப் பிறகு சில மாதங்களில் உனாமுனோ வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார், அவர் சாகும் வரை. (*The Anatomy*... பக்கம் : 441)

கருத்தரங்குகளில் நான் கட்டுரை வாசிக்கும்போதும் அல்லது இலக்கிய விவாதங்களில் பங்கேற்கும் போதும் தொடர்ந்து ஒரு கேள்வி என்னை நோக்கி வீசப்படுகிறது. "நீங்கள் புரட்சிக்கு என்ன செய்தீர்கள்?"

சமீபத்தில் ஒரு தலித் கலைவிழாவில் பேசிய ஒரு கவிஞர் தன் பேச்சில் ஒன்பது முறை குறிப்பிட்டார், "நீங்கள் சாகத் தயாராகுங்கள்" என்று. தன் பேச்சை முடிக்கும்போதும் அவர் இதைச் சொல்லியே முடித்தார். அவர் அப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போது என் பின்னால் அமர்ந்திருந்த ஒருவர் "நாங்கள்தான் ஏற்கனவே செத்துக்கொண்டிருக்கிறோமே; இன்னமும் சாகச் சொன்னால் எப்படி?" என்று கேட்டார். என்னிடம் கேள்வி கேட்டவரிடம் நான் சொன்ன பதில்: நான் சாகத் தயாராக இல்லை; புரட்சி என்பது என்னை மரணத்தை நோக்கி அழைக்கிறது. தற்கொலை செய்து கொள்வதற்கான மனத் துணிவும் உறுதியும் என்னிடம் இல்லை.

எரிக் ஃப்ராமின் ஆய்வு சுவாரசியமாக இருந்தாலும் அவரது ஆய்வின் அடிப்படை அணுகுமுறை பலவித குளறுபடிகளுக்குத்தான் இட்டுச் செல்லும் என்று தோன்றுகிறது. அவரது ஆய்வின்படி பார்த்தால் உனாமுனோவுக்குத்தான் நெக்ரோஃபீலியா மனப்பான்மை இருப்பதாக ஆகிறது. ஏனென்றால் ஜெனரல் அஸ்த்ரோதான் அங்கே நெஃப்திஸ்* உனாமுனோ நேரடியாக நெஃப்திஸுடன் மோதுகிறார். தான் தோல்வியுறுவோம் என்றும் தனக்கு நேரப்போவது மரணம்தான் என்றும் தெரிந்தும் மோதுகிறார். (*The Books of Fuzoos*, பக்கம் 654)

(*Nephethys லிபியாவின் தொல்கதைகளில் புகழ்பெற்ற ஒரு மரண தேவதை.)

லத்தின் வார்த்தைகளின் பொருள் கொலை அல்லது கொடூரமான மரணம் என்று துவங்கி, நெக்ரோஃபீலியாவைப் பற்றி அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராய்கிறார் எரிக் ஃப்ராம். The Anatomy of Human Destructiveness என்ற இந்த நூலின் நீட்சியாகவும் ஒரு வகையில் இதன் மறுப்பாகவும் அமைந்திருக்கிறது The Book of Fuzoos.

இந்தப் புத்தகம் வெறும் மானுடவியல் ஆய்வாக மட்டும் அல்லாமல் ப்ரஸீலின் வரலாற்றைப் பற்றியும் விரிவாகப் பதிவு செய்கிறது.[2] ப்ரஸீலின் அடிமைகளைப் பற்றியும், அவர்களின்

---

2. கி.மு. 10000 வாக்கில் வட அமெரிக்காவிலிருந்து வேட்டையாடுவதற்காக சிறுசிறு குழுக்கள் பரஸீலை வந்து சேர்ந்து அங்குள்ள நிலங்களில் ஆதி சமூகக் குடிகளை அமைத்தனர். பிறகு 11150 ஆண்டுகள் வேற்றுலக மனிதர்களின் தொந்தரவு ஏதுமின்றி வாழ்ந்து வந்த இந்த மக்களுக்கு கி.பி. 1500ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒன்பதாம் தேதி கேடு வந்தது. அன்றைய தினம் லிஸ்பன் நகரிலிருந்து 18 கப்பல்களில் 1800 பேர் அடங்கிய குழு ஒன்று அட்மிரல் பேத்ரோ ஆல்வாரெஸ் காப்ரால் தலைமையில் இந்தியாவை நோக்கி வாஸ்கோடகாமா கண்டுபிடித்திருந்த கடல் வழியில் புறப்பட்டது. ஆனால் தவறுதலாக இந்தக் குழு ப்ரஸீலை வந்து அடைய, இங்கிருந்துதான் இன்றைய ப்ரஸீல் உலகின் பிரதான பிச்சைக்கார நாடுகளுள் ஒன்றாக மாறியதன் கதை துவங்குகிறது. ப்ரஸீலின் இயற்கை வளங்களைப் பற்றி எவ்வளவோ அறிந்திருக்கிறோம். அறியாமலிருக்கிறோம். அந்த நாட்டின் நதிகள், காடுகள், தாதுப் பொருட்கள் என்று எத்தனையோ கணக்கிலடங்காத சமாச்சாரங்களைப் பற்றி படிக்கிறோம். உதாரணமாக அமேஸான் நதியின் அகலம் என்பதை நீளம் என்று நினைத்தே நெட்டுருப் போட்டது ஞாபகம் வருகிறது.

இப்போதுதான் அது நீளம் அல்ல அகலம் என்பதும், எங்கள் ஊர் காவிரியின் அகலம் 1.26 கி.மீ. என்பதும் தெரிகிறது. அட்மிரல் காப்ராலைத் தொடர்ந்து ஏகப்பட்ட போர்ச்சுக்கீசியக் கும்பல் ப்ரஸீலுக்குச் சென்றது. Terra da Vera Cruz. (உண்மையான சிலுவையின் நாடு) என்று இந்த நாட்டுக்கு ஒரு பெயரையும் வைத்தது இக்கும்பல். பிறகு இந்தப் பெயர் Terra da Brasil (மரங்களின் பூமியான ப்ரஸீல்) என்று மாற்றப்பட்டது. 1512ஆம் ஆண்டு முதன்முதலாக இந்த நாடு உலக வரைப்படத்தில் இடம்பெற்றது. அதிலிருந்து இந்தப் பூமியின் சொந்தக்காரர்களான சிவப்பு நிற மக்களை அழித்தொழிக்கும் வேலை தொடங்கியது. ஆதிவாசிகள் மிருகங்களைப் போல் வேட்டையாடப்பட்டார்கள். அது மட்டுமல்லாமல் கப்பல்களில் வந்த ஐரோப்பியக் கும்பல் தாங்கள் கொண்டுவந்த ஆயுதங்களோடு அம்மை நோய், ஃப்ளூ போன்ற தொற்று வியாதிகளையும் கூடவே கொண்டுவந்ததால் அதுவரை இதுபோன்ற நோய்களையெல்லாம் கண்டே அறிந்திராத, ப்ரஸீலின் ஆதி குடிகள் கிராமம் கிராமமாக ஒரு பூச்சி பொட்டு இல்லாமல் - மனிதர்கள் இதுவரை வாழ்ந்ததற்கான எந்தச் சுவடுமே இல்லாமல் - அழிந்தார்கள். ரியோ மற்றும் பஹையா மாநிலங்களிலுள்ள கடற்கரையோர கிராமங்கள் அனைத்துமே இப்படிப் பூண்டோடு அழிந்து போயின.

போராட்டங்களைப் பற்றியும், பதினேழாம் நூற்றாண்டில் அடிமை முறைக்கு எதிராகப் போராடிய அந்த்தோனியோ வீயேயிரா என்ற பாதிரியைப் பற்றியும் ஒரு காவியத்தைப் போல் சொல்லுகிறது இந்த நூல். மேலும் 1539ஆம் ஆண்டு முதல் ஆஃப்ரிக்காவிலிருந்து கறுப்பின மக்கள் அடிமைகளாகப் பிடித்து வரப்பட்டு ப்ரஸீலில் விற்கப்பட்டதையும், 1854ஆம் ஆண்டு இந்த அடிமை இறக்குமதி தடை செய்யப்பட்டதையும் சொல்லுகிறது.

இந்த வரலாறு முழுதும் புத்தகத்தின் 522 பக்கங்கள் வரை கண்களில் பூதக்கண்ணாடி கொண்டு படிக்கப்பட வேண்டிய பொடி எழுத்துக்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இவற்றிலிருந்து சில விபரங்களை இங்கு தரலாம் என்று நினைக்கிறேன்.

காரஹூாஸ் என்பது வடக்கு ப்ரஸீலில் புழுதி படிந்த அமேஸான் காடுகள் உள்ள பகுதி. உலகத்தின் மிகப் பெரிய இரும்பு மலை இங்குதான் இருக்கிறது. 1967ல் ஒரு ஜியாலஜிஸ்ட் தன்னுடைய ஹெலிகாப்டர் பழுதடைந்ததால் அங்கே இறங்க வேண்டியதாகி அப்போதுதான் முதன் முதலாக இந்த மலைப்பகுதியைப் பற்றித் தெரியவந்தது. 18000 மில்லியன் (எத்தனை சைஃபர் போட வேண்டும் என்று தெரியவில்லை) டன்கள் இரும்புத் தாதுவும் இதைவிட அதிக சைஃபர்கள் அளவுக்கு பாக்ஸைட், மங்கனீஸ் மற்றும் தாமிரப் படிவுகளும் கொண்ட மலைப்பகுதி இது.

கிட்டத்தட்ட இந்த மலைப்பகுதி கண்டுபிடிக்கப்பட்ட ஓரிரு ஆண்டுகளில் இதன் அருகாமையிலுள்ள சுருயி இன மக்கள் வாழும் பகுதிக்கு வந்து சேர்கிறார் ஜாக் திதியே. சுருயி இன மக்களின் தற்போதைய எண்ணிக்கை கிட்டத்தட்ட 1500இலிருந்து 5000 ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. திதியே இதை எழுதிய ஆண்டு 1969 என்பதால் இப்போது இந்த இனமே அழிந்திருந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. இவர்களுடைய மொழி துப்பி. இவர்கள் மாத்தோ குரோஸோ மலையின் வடக்குப் பகுதியில் ஜிப்பாரானா மற்றும் அரிப்புவானா நதிகளுக்கிடையே வசிக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலரைத்தான் திதியே சந்தித்திருக்கிறார். மற்றவர்கள் கிட்டத்தட்ட 90 குழுக்களாக

காடுகளில் வாழ்கிறார்கள், 1967இல் ப்ரஸீலிய பாராளுமன்ற விசாரணை கமிஷன்காரர்கள் இங்கு வந்து இவர்களைச் சந்தித்து 'வரலாறு' இவர்களுக்கு இழைத்த அநீதி பற்றி விசாரித்து விட்டுப் போனதையும் திதியே தன் நூலில் பதிவு செய்திருக்கிறார். மேலும் ரப்பர் சேகரிக்கும் கான்ட்ராக்டர்கள் இங்கு வந்து இவர்களைத் துப்பாக்கியால் சுட்டு, இவர்களின் குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்தி, கண்ணில் தென்பட்ட சுருயி மக்களையெல்லாம் கற்பனை செய்ய முடியாத அளவுக்குச் சித்ரவதை செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

பிறகு அந்தப் பகுதியிலேயே காட்டின் உட்புறமாகப் பயணம் செய்கிறார் திதியே. அங்கே அவர் சந்தித்த ஆதிவாசிக் குடிகளென யோபோ, க்ராஹோ, ஷவாந்த்தே மற்றும் போரோரோ இன மக்களைப் பற்றியும் (இவர்களின் பொதுப் பெயர் ஸிங்கூ இந்தியர்), இவர்களைப் பற்றி வேறு சில புத்தகங்களில் தான் படித்த விபரங்களையும் அந்த நிலவியல் அமைப்பை வைத்து அந்த இனத்தைத் தான் அடையாளம் கண்டுகொண்ட விதம் பற்றியும் விரிவாகக் கூறுகிறார். அதில் இவர் சந்தித்த ஒரு இனக்குழுவைப் பற்றி இங்கு குறிப்பிட்டாக வேண்டியது அவசியமாகிறது. ஏனென்றால் இவர்களுக்கும் திதியே கடைசியில் சந்தித்த இனக்குழுவான ஃப்பூஸு இனத்தவருக்கும் ஒரு சில ஒற்றுமைகள் உண்டு. உருபு காப்போர் என்ற இந்த இனத்தவரின் எண்ணிக்கை 600. இவர்களுடைய மொழியும் துப்பிதான். இவர்கள் பொதுவாக நர மாமிசம் உண்ணும் வழக்கமில்லாதவர்கள். எனினும் இவர்கள் தங்கள் விரோதிகளைத் தின்று விடுகிறார்கள். விரோதிகளின் தலையைக் கொய்து அதைச் சுற்றி நின்று நடனமாடி பாட்டுப் பாடி சடங்குகள் சில செய்து அந்தத் தலையைத் தின்கிறார்கள். இவர்களுடைய விழாக்கால உடையைப் பற்றி மட்டுமே பல பக்கங்கள் விவரிக்கிறார் திதியே. அவ்வளவையும் படித்து என் மனதில் நான் உள் வாங்கிக்கொண்டது இதுதான்: உடல் முழுக்கவும் கோரைப் பாயைச் சுற்றிக்கொண்டு தலையில் முறம் போல் ஒன்றை அணிந்து முகத்தைப் பூசணிக்காயால் மூடிக் கொள்வது. இவர்களையும் தாண்டி இன்னும் மனிதர்களைச் சந்திக்கக்கூடும் என்ற நம்பிக்கையில் காடுகளின் உட்பகுதிகளுக்குச் செல்கிறார் திதியே. அப்போது அவர் சந்தித்த ஒரு இனம்தான் ஃப்பூஸூ. இந்த ஃப்பூஸூ இன மக்களை முதன்முதலில் சந்தித்த

ஒரே அந்நியன் தான்தான் என்றும், இவர்களைப் பற்றி இதுவரை எந்த மானுடவியல் புத்தகங்களிலும் எந்த விபரமும் காணக்கிடைக்கவில்லை என்றும் குறிப்பிடும் திதியே, இந்த மக்களின் பேச்சில் ஒவ்வொரு வாக்கியமும் ஃப்பூஸு ஃப்பூஸு என்றே முடிவடைவதால் இவர்களை ஃப்பூஸுக்கள் என்று குறிப்பிடுவதாகவும் சொல்கிறார்.

இனி வருவது ஃப்பூஸுக்களின் கதை:

ஃப்பூஸுக்களின் பாலியல் வாழ்வுதான் இவர்களின் சமூக வாழ் வாகவும் இருக்கிறது என்று துவங்குகிறது இந்தப் பகுதி.

பிரேதங்களோடுதான் இவர்கள் வாழ்கிறார்கள். பிரேதங்களோடு தான் கலவி செய்கிறார்கள். உயிரைப் பற்றிய எந்தவித உணர்வும் அற்று இருக்கிறார்கள். உயிரோடு இருப்பவர்களை விட இவர்கள் பிரேதங்களையே அதிகம் நேசிக்கிறார்கள்.

ஒரு ஃப்பூஸு ஒரு பெண்ணைக் கொன்ற பிறகுதான் அவளோடு கலவியில் ஈடுபடுகிறான். கொல்வது கூட கழுத்தை நெறித்துக் கொல்வதுதான் இவர்களின் வழக்கமாக இருக்கிறது. பிரேதங்களை இவர்கள் அப்புறப்படுத்துவதோ எரிப்பதோ புதைப்பதோ இல்லை. கலவியில் ஈடுப்பட்ட பின் அந்தப் பெண்ணின் கழுத்தைக் கடித்து குருதியை உறிஞ்சுவதும், முலைகளையும் புட்டத்தையும் கடித்துத் தின்பதும், கால்களை அகல விரித்து உறுப்பினை உறிஞ்சுவதும்[3] வயிற்றைப் பிளந்து குடலை எடுத்து மாலையாகப் போட்டுக் கொள்வதும், அதை ஒருவர் மீது ஒருவர்

---

3. இதற்கென்று அவர்கள் ஒரு குச்சி வைத்திருப்பதாகவும், அதை உள்ளே விட்டு
கலக்கி பிறகு உறிஞ்சுவதாகவும், மேலும், ரப்பர் குழாய் போன்ற ஒரு தாவரத்தின்
கிளையைக் கொண்டு வாயினால் அப்பிரேதத்தின் சிறுநீரை உறிஞ்சிக் குடிப்பதும்
உண்டு என்கிறார் திதியே, (பக்:729) தான் பார்த்த மற்றொரு இனக்குழுவான
'முண்டுருகூ' மக்களிடமும் இருக்கும் ஒரு பழக்கத்தை ஒத்திருப்பதாகவும் கூறுகிறார்.
முண்டுருகூ இனத்தவர் தன் எதிரிகளை வீழ்த்தி அவர்களின் தலைகளை உருவு
காப்போர் இனத்தினரைப் போலவே 'கொய்து' - ஆனால் நடனம் பாட்டு போன்ற
சடங்குகள் எதுவும் இல்லாமல் - தலையில் ஒரு துளை செய்து குச்சியால் கலக்கி
ஒவ்வொருவராக உறிஞ்சுவது வழக்கம். இதைப் படித்தபோது எனக்கு சிறு பிராயத்தில்
புளிய மரத்தில் திருட்டுத்தனமாக புளியம்பழம் அடித்து அதில் ஒரு துளை போட்டு
அதனுள் தண்ணீர் விட்டுக் கலக்கிக் குடிக்கும் ஞாபகம் வந்தது.

அடித்து விளையாடுவதும் இவர்களின் வழக்கம். இதுதான் ஃப்ூஸு இன ஆண்கள் அறிந்த கலவி முறை என்கிறார் திதியே. இதைப் படித்ததும் எனக்கு இது ஒரு மானுடவியல் நூலா அல்லது நாவலா என்ற சந்தேகமே ஏற்பட்டது. திதியே ஏதோ ஜல்லியடிக்கிறார் என்று தோன்றியது. எப்படியென்றால் இந்தப் பிரேதக் கலவிதான் அவர்கள் அறிந்த ஒரே கலவி முறை என்றால் ஃப்ூஸு இனம் முழுவதும் ஒரே தலைமுறையிலேயே அழிந்து போயிருக்க வேண்டுமே? அந்த இனத்தினரின் இன விருத்தி எப்படி நிகழ்ந்திருக்கிறது?

இதுபற்றி ஃப்ரான்சிலிருக்கும் என் ஈழத் தோழியுடன் பேசிக் கொண்டிருந்த பொழுது "திதியேவின் இந்த நூல் Male Edition என்பதைக் கவனியுங்கள்" என்றார். "அப்படியானால் பெண்களுக் கான கலவி முறை ஏதும் உண்டா?" என்று கேட்டேன். "உண்டு" என்று சொன்ன அவள், தான் ஒரு ஃபிரெஞ்ச் பத்திரிகையில் படிக்க நேர்ந்த *The Book of Fuzoos: Female Edition* என்ற நூலுக்கான விரிவான மதிப்புரை ஒன்றைக் காட்டினாள். Female Editionஐத் தான் இன்னும் படிக்க முடியவில்லையெனினும், அந்த விரிவான மதிப்புரையில் என்னுடைய கேள்விக்கான பதில் இருப்பதை விளக்கினாள் அவள். அதே பத்திரிகையில் Male Editionஐப் பற்றி தான் எழுதியிருந்த கட்டுரை ஒன்றையும் காண்பித்தாள். அது பற்றிப் பிறகு பார்க்கலாம்.

ஃப்ூஸுக்கள் வசிக்கும் பகுதியின் ஒரு மூலையில் ஒரு ஃப்ூஸு கிழவி ஒருத்தி வாழ்வதாகவும் அவளை அந்த ஃப்ூஸு இன ஆண்கள் முழுவதுமே ஏதோ ஒரு பூதத்தைப் போல் நினைத்து அஞ்சுவதாகவும், காம இச்சைக்கு ஆட்பட்ட ஒரு ஃப்ூஸு பெண் ஒரு ஆணைக் கொன்று (அவர்கள் வழக்கப்படி கழுத்தை நெறித்து), கழுத்து நெறிக்கப்படுவதால் குறியில் விரைப்பு ஏற்பட அதன் பிறகு புணர்ச்சி[4] செய்து, பிறகு சில மாதங்களில் வயிற்றில் கனத்தை உணர்ந்ததுமே அவள் உடனடியாக அந்தக் கிழவியின் இருப்பிடத்தில் தஞ்சமடைவதாகவும் Female Edi-

4. ஆணின் கழுத்தை மெல்ல மெல்ல இறுக்கிக் கடைசியில் அவனுடைய உயிர் போவதற்கும் அவள் உச்ச எழுச்சி நிலையை (orgasm) அடைவதற்கும் சரியாக இருக்கும் என்கிறது திதியேவின் குறிப்பு.

tionக்கான அந்த மதிப்புரையிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது என்றாள் தோழி. கிழவியின் இருப்பிடத்திற்கு எந்த ஆணுமே வருவதில்லையாதலால் அந்தக் கர்ப்பிணிப் பெண், பிறகு பேறு முடிந்துதான் குழந்தையுடன் தன் குழுவைச் சேர்கிறாள் - சமயங்களில் வழி தவறி அந்தப் பக்கமாக வந்துவிட்ட ஆண்களின் கதியும் அதேதான் – கிழவியிடம் இருக்கும் பெண்கள் அந்த ஆணைச் சுற்றிக் கொண்டு கழுத்தை நெரித்துப் புணர்ந்து... என்று போகிறது Female Edition.

ஃப்பூஸுக்களைப் பற்றிய மற்றொரு விபரம், இவர்களில் அநேகமாக எல்லோருமே ஓவியர்கள் என்பது. கறுப்பு, வெள்ளை, பூக்களைப் பிழிந்து தயாரிக்கப்பட்ட மஞ்சள், பச்சை, சிவப்பு ஆகிய ஐந்து வண்ணங்களை இவர்கள் அறிந்திருக்கிறார்கள். மரப்பட்டைகளிலும் மனித உடல்களிலும் வரைவதை இவர்கள் விரும்புகிறார்கள் என்று குறிப்பிடும் திதியே சில ஓவியங்களைப் பற்றி விரிவாக விளக்குகிறார். அவற்றில் சில உதாரணங்கள், சுருக்கமாக:

ஓவியம் 1: ஒரு பெண்ணின் துண்டாக்கப்பட்ட உடல் உறுப்புகள் இரைந்து கிடக்க அதன் பக்கத்தில் ஒருவன் மலம் கழித்துக் கொண்டிருக்கிறான். துண்டிக்கப்பட்ட அப்பெண்ணின் தலை மட்டும் அவனுடைய புட்டத்திற்கு சற்றுத் தள்ளிக் கிடக்கிறது. மிகவும் வேட்கையுடன் அந்த மலத்தை நோக்கித் தன் நாவை நீட்டுகிறது துண்டிக்கப்பட்ட அந்தத் தலை.

ஓவியம் 2: ஒரு பூத கணத்தைப் போன்ற தோற்றம் கொண்ட வெளிறிய ஆணுருவம் ஒன்று மலையைப் போல் தரையில் கிடக்கிறது. முகமெங்கும் பிரேதக் களை. உடல் முழுதுமே சாம்பலால் ஆனதோ என நினைக்க வைக்கும் நிறம். உடம்பில் ஒரு இடத்தில் கூட முடி இல்லை. அந்தப் பேருருவத்தின் உடலைச் சுற்றிலும் எறும்பு சைஸ் பெண்ணுருவங்கள்.

ஓவியம் 3: திரும்பவும் ஓவியம்2ஐப் போலவே வெளிறிய, சாம்பல் நிற உடல். பல நூறு ஆண்டுகளான ஒரு ஆண் மம்மி மலங்கழிப்பது போல் அமர்ந்திருக்கிறது. பக்கத்தில் சாம்பல் குன்றுகள்.

(குன்றுகள் அனைத்தும் குன்றுகள் அல்ல - மம்மியின் மலமே குன்றுகளாய் வரையப்பட்டிருக்கிறது என்று கூறும் திதியே மலத்திற்கும் மரணத்திற்குமான தொடர்பு பற்றி எரிக் ஃபிராம் மற்றும் J.G. Bourkeவை விரிவாக மேற்கோள் காட்டுகிறார்.)

ஓவியம் 4: ஒரு மனிதன் – சாம்பல் நிற, வெளிறிய, பிரேதக் களை படிந்தவன் – கூரிய வீச்சரிவாள் போன்ற ஒரு ஆயுதத்தால் 'இகிரிகிரி'[5]களை வெட்டி வெட்டிப் போட்டுக் கொண்டிருக்கிறான். வெட்டிப் போடப்பட்ட இகிரிகிரிகள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. இந்த ஓவியத்தைப் பற்றி திதியே எரிக் ஃப்ராமின் ஆய்வு நூலை முன் மாதிரியாகக் கொண்டு மிக விரிவாக விளக்குகிறார்.

வின்ஸ்டன் சர்ச்சிலின் வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணம் - ஃபீல்ட் மார்ஷல் ஆலன் ப்ரூக் என்பவரும் சர்ச்சிலும் இரண்டாம் உலகப் போரின் போது வட ஆஃப்ரிக்காவில் ஓரிடத்தில் மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது சர்ச்சில் ஏகப்பட்ட ஈக்களைக் கொன்று அவைகளை மேஜையின் மீது வரிசையாக வைத்து அழகு பார்த்திருக்கிறார்.

"ஈக்களைக் கொன்றது கூட ஆச்சரியமாக இல்லை. ஏனென்றால் அந்தக் கொடிய வெயில் நேரத்தில் ஈக்கள் அங்கே அதிக எண்ணிக்கையில் இருந்தன. ஆனால் செத்துப்போன ஈக்களை வரிசையாக வைத்து அழகு பார்த்ததுதான் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது" என்கிறார் ஆலன் ப்ரூக்.

இதுபற்றி சர்ச்சிலின் மருத்துவரான லார்ட் மொரானும் தனது டயரியில் குறிப்பிடுகிறார். சர்ச்சில் இதுபோல் அடிக்கடி செய்வதுண்டு என்கிறார் லார்ட் மொரான்.

என்னைப் பற்றி என் நண்பர்கள் நான் மிகவும் குரூரமாகவும்

---

5. Iquiriquiri அரை அடி உயரமும் மூன்று அடி நீளமும் கொண்ட நாயைப் போன்ற உருவமுடைய ஒரு பிராணி. பரஸிலின் ஸிங்கூ இந்தியர்களைப் போலவே இகிரிகிரி இனமும் அழிந்து வருகிறது என்கிறார் திதியே. ஆனால் விலங்கியல் நிபுணர்கள் தற்போது இகிரிகிரி இனமே முற்றாக அழிந்துவிட்டது என்கிறார்கள்.

இதயமற்றவளாகவும் இருப்பதாகக் குறிப்பிடுவதுண்டு. அப்போது தோழி சொன்னாள், சிறு வயதில் மூட்டைப் பூச்சிகளுடன் வாழ்ந்திருந்நால் தெரியும் என்று.

மூட்டைப்பூச்சிகளை நசுக்கிக் கொல்வது போன்ற ஒரு சந்தோஷமான விஷயம் வேறு எதுவும் இல்லை. 'பட்'டென்ற சத்தத்துடன் அது நசுக்கப்படும் ஓசை செவிக்கினிமை தரக்கூடியது. மூட்டைப்பூச்சி நசுங்கி அதன் ரத்தம் பெயிண்டைப் போல் சுவற்றில் ஒட்டிக்கொள்வதைப் பார்ப்பது கண்களுக்கு இனிமை தரக்கூடியது. அதன் மணம் (உங்களுக்கு ஒப்புதல் இல்லையெனில், நாற்றம்) நாசிக்கு இனிமை தரக்கூடியது. மூட்டைப்பூச்சிகளை நசுக்கிக் கொல்வதென்பது பாலியல் இன்பம் தரக்கூடிய ஒரு அனுபவமாகவும் இருந்திருக்கிறது. இதிலிருந்துதான் பிறகு நாய்களை அடிப்பது – முக்கியமாக, தெருமுனையில் கலவியில் ஈடுப்பட்டிருக்கும் நாய்களைக் கல்லால் அடித்துப் பிரிப்பது – ஓணான், பல்லி, கொசு, வண்ணத்துப் பூச்சி, கரப்பான் பூச்சி என்று ஏகப்பட்ட ஜீவன்களையெல்லாம் அடிப்பது, கொல்வது, உயிரோடு பிடித்து அவற்றின் உடல் பகுதிகளை ஒவ்வொன்றாகக் அழித்துப் போடுவது போன்ற மிருகச் சித்ரவதையுணர்வு என்னிடம் வளர ஆரம்பித்தது.

சிதைவுணர்ச்சியையும் நெக்ரோஃபீலியாவையும் இந்து மதத்தின் ஒரு பிரிவான அத்வைதத்தைப் போல் ஆக்கிவிடுகிறார் எரிக் ஃப்ராம்[6].

உதாரணமாகப் பார்ப்போம். "கட்டிடங்களின் மீது அளவற்ற பிரியம் கொண்டிருந்தார் ஹிட்லர் என்பது அனைவரும் அறிந்தது.

6. "மூலதனம் என்பது இறந்த காலம் சார்ந்தது. உழைப்பு என்பது நிகழ்காலம் சார்ந்தது; வாழ்க்கை சார்ந்தது; இயற்கையை மாற்றும் மனித சக்தியே உழைப்பு" என்கிறார் மார்க்ஸ். இதை மேற்கோள்காட்டும் எரிக் ஃப்ராம் மூலதனம் இறந்தகாலம் சார்ந்தது என்பதால் முதலாளித்துவம் என்பது நெக்ரோஃபீலியாதான் என்கிறார். இப்படியே தொழில் வளர்ச்சி x இயற்கை என்றும் பிரித்து உயிரற்ற வஸ்துக்களாக எந்திரங்களைப் பார்த்து, ஒருவன் தன் மனைவியை விட தன் காரையே அதிகம் நேசிக்கிறான் என்பதால் இதுவும் நெக்ரோபீலியா என்கிறார் எரிக் ஃப்ராம். (கார் உயிரற்றது - மரணம்; மனைவி - உயிருள்ள ஜீவன் - வாழ்க்கை).

ஆனால் அவற்றைக் குண்டு வீசி இடித்துத் தள்ளுவதில்தான் அவர் அதிகம் விருப்பம் கொண்டிருந்தார் என்பது பிறகு தெரிந்த விபரம். ஆக, ஹிட்லரும் ஒரு கசாப்புக் கடைக்காரரும் நெக்ரோஃபீலியா உள்ளவர்கள்தான் என்று சொல்வதும், தீக்குச்சிகளை உடைத்து உடைத்துப் போடுகிற ஒருவரும், கையில் கிடைக்கிற தாளையோ ஒரு பூவையோ துண்டு துண்டாகப் பிய்த்துப் போடுகிற ஒருவரும் நெக்ரோஃபீலியா உள்ளவர்கள் தான் என்பதும் கேள்விக்குரியது" என்கிறார் திதியே (*பக்கம் : 729*).

ஓவியம் *5*: நதி ஒன்று ஓடுகிறது. சிவப்பு நிற நதி. நதியில் மனிதத் தலைகள் மிதந்து வருகின்றன. (பெண்ணின் தலைகளைப் போல் தோற்றம் தருகின்றன அவை). நதியின் இரு பக்கங்களிலும் நாய் முகமும், சர்ப்பங்களாலான தலைமுடியும், வௌவால் றெக்கைகளும் கொண்ட உருவங்கள் நீர் குடித்துக் கொண்டிருக்கின்றன.

நூலின் இறுதிப் பகுதியில் திதியே, எரிக் ஃப்ராமின் ஆய்வை இன்னும் கடுமையாகத் தாக்குகிறார்.

ஆலிஸின் அற்புத உலகத்தில் வரும் அரசியைப் போல் சிதைவாளர்களுக்கு "அவர்களின் தலைகளை வெட்டுங்கள்!" என்று சொல்லும் ஒரே வழிதான் தெரிந்திருக்கிறது என்றும், இவர்களுக்கு வன்முறையை விட்டால் வேறு வழியே தெரியவில்லை என்றும், Gordian முடிச்சைப் பொறுமையாக அவிழ்க்கத் தெரியாமல் அதை வெட்டி எடுக்க மட்டுமே தெரிந்தவர்கள் என்றும், சாலமன் அரசன் தன்னிடம் நீதி கேட்டு வந்த இரண்டு பெண்களிடம் குழந்தையை வெட்டித் தரட்டுமா என்று கேட்டபோது வெட்டித் தாருங்கள் என்று சொன்ன பெண்ணைப் போன்றவர்கள் சிதைவாளர்கள் என்றும் சாடி, இவர்களெல்லாம் நெக்ரோஃபைல்கள் என்று பட்டம் கொடுக்கும் எரிக் ஃப்ராம் மூன்றாம் உலக யதார்த்தம் தெரியாத ஒரு ஐரோப்பியனைப் போலவே சிந்தித்திருக்கிறார் என்கிறார் திதியே. (*பக்கம்.738*) 'புரட்சியாளர்கள் மரணத்தோடு விளையாடுவதால் அவர்களும் நெக்ரோஃபைல்கள்தான் என்று

சொல்வீர்களா மிஸ்டர் எரிக் ஃப்ராம்!' என்று கேட்கும் திதியே, இதை நான் என்னுடைய நண்பர்களான தெலஸ் - கொத்தாரியின் ஒரே மேற்கோளைக் கொண்டு மறுத்துவிட முடியும் என்கிறார். ("மனச்சிதைவுண்டவன் புரட்சியாளன் இல்லை; ஆனால் மனச்சிதைவின் நீட்சி புரட்சிக்கான கிரியாவூக்கி.")

'இனி வருவது சில குறிப்புகள்:

நெக்ரோஃபீலியா என்பது ஏதோ சில ஆதிவாசிச் சமூகங்களில் மட்டுமே காணப்படும் அபூர்வமான விஷயம் அல்ல. சவக் கிடங்குகளில் வேலைப் பார்ப்பவர்களுக்குச் சவங்களோடு நேரடித் தொடர்பு இருக்கிறது. போலந்து நாட்டில் சமீபத்தில் ஒரு சவக்கிடங்குப் பணியாளர் அங்கியிருந்த பெண் சவங்களோடு கலவியில் ஈடுபட்டு, அப்பிரேதங்களை அறுத்து, கடித்து, சுவைத்து, உறிஞ்சி, இன்னபிற காரியங்களில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. அந்த நபரின் பேட்டி ஒன்று ஒரு மருத்துவ இதழில் வெளிவந்திருந்தது. அதில் அவர் இவ்வாறு கூறுகிறார்: நான் சவக்கிடங்கில் இரவு நேரங்களில் பிணங்களுக்குப் பாதுகாப்பாக அங்கியே தங்க நேர்கிற போது முதலில் எனக்கு பய உணர்வே ஏற்பட்டது. நான் இந்த வேலையில் சேரும் வரை ஒரு பெண்ணைக் கூட தொட்டது கிடையாது என்பதால் நாட்கள் ஆக ஆக பெண் சவங்களின் மீது எனக்கு இன்னதென்று புரியாத ஓர் ஆர்வம் ஏற்பட்டது. பிறகு அச்சவங்களின் மீது பாலியல் ரீதியான ஈர்ப்பு உண்டாகி அவற்றைப் பார்த்துக்கொண்டே சுய மைதுனம் செய்து கொள்ள ஆரம்பித்தேன். சில நாட்களில் அச்சவங்களின் உறுப்புகளைச் சுவைப்பதும், சுவைத்துக்கொண்டிருக்கும் போதே ஸ்கலிதமாவதும் நேர்ந்தது. பிறகு புட்டப்புணர்ச்சியில் ஈடுபடத் தொடங்கினேன். கடைசியாகத்தான் யோனிப் புணர்ச்சியில் ஈடுபடும் நிலையை அடைந்தேன். எப்போது பெண் பிரேதங்கள் வந்தாலும் இதில் நான் அதீத ஆர்வத்துடன் செயல்பட்டுக் கொண்டிருந்தேன். இதில் எனக்கு எதுவும் தவறாகத் தெரியவில்லை.

நெக்ரோஃபிலியாவும் அத்வைதமும்:

சந்தர்ப்பம் இருந்தால் நாம் நினைப்பதை விட மிக மிக அதிக

அளவில் நெக்ரோஃபீலியா உணர்வு செயல் ரூபம் அடையும் என்கிறார் எரிக் ஃப்ராம். மேலும் இதையே நீட்டித்து அழுகல் வாசனை யாருக்காவது பிடித்திருக்கிறது என்றால் அது கூட நெக்ரோபீலியாதான் என்றும் (அப்படியானால் கூவம் நதியின் நாற்றத்தைச் சுவாசிக்கிற சென்னை நகரவாசிகள், கோழி வியாபாரிகள், மலம் அள்ளுகிறவர்கள், பாதாள சாக்கடையில் வேலை செய்கிறவர்கள், இன்ன பிறர்!), நெக்ரோஃபீலியாவுக்கும் புட்டத்திற்கும் தொடர்பு இருக்கிறது என்றும் (எனவே புட்டப்புணர்ச்சியாளர்கள் அனைவரும் நெக்ரோஃபைல்கள்!) இப்படி அடுக்கிக்கொண்டே போனால் நெக்ரோஃபீலியாவுக்கும் அத்வைதத்துக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல் போய் விடுவதையும் சுட்டிக்காட்டுகிறார் திதியே.

இனி வருவது பதினெட்டு கேள்விகள்:

*1. நெக்ரோஃபீலியாவுக்கும் anti-life மனப்பான்மைக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா?*

*2. முதலாளித்துவவாதிகளும் நெக்ரோஃபீலியா உள்ளவர்கள் - புரட்சியாளர்களும் நெக்ரோஃபீலியா உள்ளவர்கள் என்று எரிக் பிராமின் ஆய்வில் இரண்டும் சமன்படுத்தப்படுகிறது என்றும், நெக்ரோஃபீலியாவைப் பற்றிய ஃப்ராமின் ஆய்வு கடைசியில் அத்வைதத்தில்தான் முடிகிறது என்றும் கூறும் திதியேவின் கூற்று சரியா?*

*3. Pro-life பேசுகிறார்கள் கருத்தியல் மற்றும் அரசியல் தளத்தில் anti-life நிலைப்பாட்டில் போய்ச் சேர்பவர்களாக இருப்பதும், anti-life நபர்களாக (சிதைவாளர்கள்?) கருத்தியல் தளத்தில் இருப்பவர்கள் அடிப்படையில் pro-lifeகாரர்களாகவே இருப்பதும் எப்படி நிகழ்கிறது?*

*4. தமிழிலுள்ள புறப்பாடல்கள் அத்தனையையும் நெக்ரோஃபீலிக் சின்ரமின் வெளிப்பாடுகள் என்றும், அதில் புகழப்பட்டுள்ள மன்னர்களும், போர் வீரர்களும் நெக்ரோஃபீலியாவுக்கு ஆட் பட்டவர்கள் என்றும் சொல்லலாமா?*

5. பிரமிடுகளையும், சார்த்தரின் Other is Hell என்ற கருத்தாக்கத் தையும், நெக்ரோஃபீலியாவையும் இணைத்துப் பார்க்க முடியுமா?

6. தற்போதைய கால கட்டத்திற்கு அதிக நெருக்கமாக இருக்கக் கூடிய ஆய்வாளர் எரிக் ஃப்ராமா? திதியேவா?

7. எரிக் ஃப்ராமின் புத்தகம் பேசப்பட்ட அளவுக்கு திதியேவின் புத்தகம் பேசப்படாததன் காரணம் என்ன? எரிக் ஃப்ராமை மறுக்கும் திதியேவின் ஆய்வுகள் வலுவற்றவை என்று சில மானுடவியல் ஆய்வாளர்கள் கருதுவது சரியா?

8. எரிக் ஃப்ராமை கடுமையாகச் சாடும் திதியே தன் ஆய்வுகளில் முடிவாக என்னதான் சொல்கிறார்?

9. ஃப்யூரூ இன மக்கள் பற்றி திதியே தரும் தகவல்களை அப்படியே நம்பிவிடலாமா? அல்லது கைச்சரக்கையும் சேர்த்துவிட்டிருக்கிறார் என்று சந்தேகிக்கலாமா?

10. கலிலியோ போன்ற விஞ்ஞானிகளோடு ஃப்ளெபர், சார்த்தர் போன்றவர்களை ஒப்பிட்டு இவர்களை மட்டம் தட்டும் அணுகு முறையே அடிப்படையில் தவறானது என்றும், கலிலியோ போன்ற விஞ்ஞானிகள் ஆகாச வெளியில் (La terre d'espace) பயணித்தார்கள் என்றால், ஃப்ளெபர் – ரொலான் பார்த் போன்றவர்கள் பிரதி என்கிற வெளியில் (La terre du texte) பயணித்தார்கள் என்றும், லெவி ஸ்த்ராஸ் போன்றவர்கள் பூகோள வெளியில் (La terre humaine) பயணித்தவர்கள் என்றும், மார்க்கி தெ சாத் (Marquis de Sade) போன்றவர்கள் உடல் வெளியில் (La terre du corps) பயணித்தவர்கள் என்றும், ஃப்ராய்ட் – வில்ஹெல்ம் ராய்க் போன்றவர்கள் மனவெளியில் (La terre psychique) பயணித்தவர்கள் என்றும், அந்தோனின் ஆர்த்தோ போன்றவர்கள் உடல் மற்றும் மன வெளியின் எல்லைகளைத் தகர்த்தவர்கள் (de-territorialization) என்றும் சொல்லலாம் என்பதால் இவற்றில் முக்கியம், முக்கியமின்மைகள் என்று ஏதும் கிடையாது என்றும் கூறும் ஸொர்போனிலிருக்கும் ஈழத் தமிழச்சியின் அகதி அறிவின் அணுகுமுறையை ஏற்றுக்கொள்ளலாமா?

11. எரிக் ஃப்ராமைப் போல் நெக்ரோஃபீலியா என்பதைத் தொழில் வளர்ச்சியோடு தொடர்புபடுத்துவது தவறு என்றும், இது தொல்சமூகங்களிலும் காணப்படும் ஒரு விஷயம்தான் என்றும், ஆனால் இதற்கு உளவியல்ரீதியான விளக்கம் எதுவும் கொடுக்க முடியாது என்றும், ஏனென்றால் உளவியல் என்றே எதுவும் கிடையாது என்றும், ஆனால் இதை ஆய்வுரீதியாக விளக்க முடியாத திதியே முழுக்க முழுக்க புனைவில் சரணடைந்து விட்டார் என்றும், அந்தப் புனைவு கூட வெறும் கதை சொல்லல் என்ற அளவிலேயே நின்றுவிட்டது என்றும், திதியே மற்றும் எரிக் ஃப்ராம் இருவரையுமே மறுக்கும் ஈழச்சியின் கருத்துகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவையா? (திதியேவின் உட்டோப்பியா Le monde outopie de Didier-Eelachi: Anthropologie-Printemps.1989: பக்கம்: 72–81) இவள் லெவி ஸ்த்ராஸின் துயரகரமான நிலப்பகுதியையும் (Tristes Tropiques) கூட புனைவுதான் என்று கூறி, ஒருவகையில் மனித வரலாறு முழுக்கவுமே புனைவுதான் என்கிறாள்.

12. பேய் பிசாசுகள், கழுகுகள், நரிகள், மந்திரவாதிகள், பேய்க்கதை மன்னர்கள் போன்றவை/போன்றவர்களுக்கும் நெக்ரோ சின்ட்ரமுக்கும் தொடர்பு உண்டா?

13. ஈழச்சி தன் வகுப்பு மாணவர்களிடம் ஒரு கேள்வி கேட்டாள்: "மனித இனத்தின் கண்டுபிடிப்புகளிலேயே அரிதான இரண்டு கண்டுபிடிப்புகள் என்ன?" மாணவர்கள் சொன்ன எந்தப் பதிலிலும் திருப்தியுறாத ஈழச்சி சொன்னாள் : "பூஜ்யமும் கடவுளும். இரண்டுமே இல்லாதது. இல்லாத ஒன்றைக் கண்டு பிடிப்பதுதான் கண்டுபிடிப்புகளின் சிகரம் என்று சொல்ல முடியும்."

"பூஜ்யமும் கடவுளும் மனிதனின் நெக்ரோ சின்ரமுடன் சம்பந்தப் பட்டவை. மரணத்தின் உருவகங்கள் இவை" என்று கூறும் ஈழச்சியின் கூற்று அவளது மற்ற கூற்றுக்களுடன் ஒப்பிடும்போது சுய முரண்பாடாகத் தோன்றுவது சரியா?

14. ஓவியம்-5 நமக்கு எதை நினைவூட்டுகிறது?

15. ஈழச்சி சென்ற வருடம் திதியேவைச் சந்தித்த அனுபவத்தை

என்னுடன் பகிர்ந்துகொண்டாள். ஈழச்சி தனது நூலைப்பற்றி எழுதியிருந்த கட்டுரையைப் படித்திருந்ததால் திதியேவுக்கு ஏற்கனவே அவள் பரிச்சயமாகியிருந்தாள். சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு 'உனக்கு ஒரு ஆச்சரியம் வா காட்டுகிறேன்' என்று சொல்லி, ஃப்பூஸுக்களைப் பற்றி தான் எடுத்திருந்த ஒன்பது மணி நேர விடியோ படத்தைக் காட்டியிருக்கிறார். அதைப் பார்த்து பிரமித்துப் போன ஈழச்சி இந்தப் படம் ஒரு டாக்குமென்டரியைப் போல் இல்லாமல், திதியே ஒரு பெரிய திரைப்படக் குழுவுடன் ஒரு தென் அமெரிக்க நாட்டிலோ ஒரு ஆஃப்பிரிக்க நாட்டிலோ போய் எடுத்த ஒரு முழு நீளப் படத்தைப் பார்ப்பது போல் இருந்தது என்று சொல்ல, அதற்கு திதியே, இனிமேல் மானுடவியல் ஆய்வு என்பது புத்தகங்களில் சாத்தியமில்லாதது என்றும், எழுத்து என்று போனாலே அது ஆய்வாக அல்லாமல் புனைவாக மாறிவிடுகிறது என்றும், இனிமேல் இது விஷூவல் மீடியாவில்தான் சாத்தியம் என்றும், கோதாரின் டெக்னிக்குகளைப் பயன்படுத்தி ஒரு சினிமா மாதிரியான வடிவத்தில்தான் இனிமேல் மானுடவியல் ஆய்வுகளைச் செய்ய முடியும் என்றும் சொல்லியிருக்கிறார். இதுவரை இதை வெளியிடாமல் இருப்பதன் காரணம் கேட்டதற்கு திதியே பதில் ஒன்றும் சொல்லவில்லை. இந்தப் படத்தைப் பற்றி எழுத வேண்டுமானால் அதுவே ஒரு நாவல் அளவுக்கு நீளும் என்றும் சொன்னாள் ஈழச்சி. இப்போது வருவது கேள்வி: திதியேவின் விளக்கம் சரியா?

16. திதியேவின் இந்தப் படத்தைப் பற்றிய தகவல் வேறு எங்கும் இதுவரை வெளிவந்திருக்கிறதா?

17. அன்பு வழியே சமூக விடுதலைக்கான அடிப்படை என்று சொல்பவர்களுக்கும் ஆயுதப் புரட்சியே சமூக மாற்றத்திற்கான ஒரே வழி என்று பேசும் மார்க்சியவாதிகளுக்கும், சங்க இலக்கியம் தொல்காப்பியம் போன்றவைகளிலும் சைவ சித்தாந்தத்திலும் அமைப்பியல் வித்துக்களைக் கண்டு அதைப் பயிரிட தங்கள் உழுநிலங்களைத் தயார் பண்ணிக்கொண்டிருக்கும் அமைப்பியல்வாதிகளுக்கும் நெக்ரோ சின்ட்ரமுக்கும் உறவு

உண்டா?

*18. இந்திய சாதி அமைப்புக்கும் நெக்ரோஃபீலியாவுக்கும் உள்ள உறவுகளை எப்படி எப்படி வகைப்படுத்தலாம்?*

நூற்பட்டியல்:


1. The Perpetual Orgy-Maria Vargas Llosa.
2. The Anatomy of Human Destructiveness - Erich Fromm.
3. The Arabian Mythology - Edited by Emile Habiby (1971).
4. Anthropologie - 'Ete', 1984.
5. Anthropologie - Printemps, 1989 "Le monde outopie de Didier" by Ealachi (page: 72-81)
6. The Story of the Eye - George Bataille.
7. The extitct animals of the world - Carlos Gonzalez.
8. Anti- Oedipus-Deleuse-Guattari.
9. Quartely Medical Journal-Fall, 1989.


முன்றில்
அக்-டிச, 1993

# சைக்கிள்

வீட்டுக்கு எதிரே தெரிந்த கூட்டத்தை பார்த்ததும் 'பகீர்' என்றது. கிட்டத்தில் போனதும்தான் எதிர் வீட்டில் கூடியிருந்த கூட்டம் என்று தெரிந்தது. ரூபவதியின் கணவர் கத்திக்கொண்டிருந்தார். 'அடிப்பேன், வெட்டுவேன், குத்துவேன், கூறு கூறாகக் கிழித்துப் போடுவேன்' என்றும், இன்னும் பிரசுரிக்க முடியாத வகையிலும் வசைகள் சரமாரியாக வந்து விழுந்துகொண்டிருந்தன.

பக்கத்து தெரு சண்முகத்தின் மனைவிதான் ரூபவதியின் கணவனோடு மல்லுக்கு நின்று கொண்டிருந்தாள். இரண்டு பேரையும் ஒரு பத்து பதினைந்து பேர் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தார்கள். விட்டால் இரண்டு பேரும் தெருவில் கிடந்து புரளுவார்கள் போல் தெரிந்தது. அல்லது சண்டை போடும் ஆர்வம் அணைந்து ஒன்றும் பேசாமல் அவரவர் ஜோலியைப் பார்த்துக்கொண்டு போனாலும் போய்விடலாம். சொல்வதற்கில்லை.

கத்திக் கத்தி இரண்டு பேருக்குமே தொண்டை கட்டிவிட்டது போலும். ரூபவதியின் கணவனுக்கு பெண் குரலும், சண்முகத்தின் மனைவிக்கு ஆண் குரலும் வந்துவிட்டிருந்தது. சண்டையை விலக்கி

விட்டுக்கொண்டிருந்தவர்கள் சோர்வடைந்துவிட்டதனாலோ அல்லது சுவாரசியம் குறைந்துவிட்டதனாலோ ஒவ்வொருவராக சண்டைக் களத்திலிருந்து விலகிக் கொண்டிருந்தார்கள்.

ரூபவதி தன் பெயருக்கேற்ற அழகு பொருந்தியவள் என்று சொன்னால் கதைக்காகப் பொய் சொல்வதாகிவிடும். ஆனால், அதே சமயத்தில் அவலட்சணமும் அல்ல என்றுதான் சொல்ல வேண்டும். பெண்களின் சராசரி உயரத்தைவிட சற்று அதிகப்படியான உயரம். ஊடுருவிப் பார்க்கும் பார்வை. வசீகரிக்கும் சிரிப்பு. இதில் சண்முகம் எதைக் கண்டு மோகம் கொண்டானோ தெரியவில்லை, ரூபவதியே கதியாகக் கிடந்தான், தன் கடையையும் மறந்து.

ரூபவதிக்கு இரண்டு பையன்கள். முதல் பையன் எட்டாம் வகுப்பு. இரண்டாவது பையன் ஐந்தாம் வகுப்பு. ரூபவதியின் கணவர் ஒரு அரசாங்க அலுவலகத்தில் டிரைவர். அதிகாரிகளோடு இன்ஸ்பெக்ஷன் என்று சொல்லி அடிக்கடி வெளியூர் போய் விடுவார். ஊரில் இருந்தாலும் 'சைடு' பிசினசாக வீட்டு மனை வாங்க, விற்க உதவும் தரகு வேலையும் பார்க்கிற காரணத்தால் வீட்டுக்கு வர இரவு பத்து மணிக்கு மேல் ஆகிவிடும். இதற்கெல்லாம் வசதியாக ஒரு பைக்கும் வைத்திருக்கிறார்.

ஆனால், அவர் மனைவி ரூபவதிக்கோ சைக்கிள் மீது தான் மோகம். சைக்கிள், சண்முகத்தின் சைக்கிளாக இருந்தால் இன்னும் அதிக மோகம் வரும்.

காலையில் ரூபவதியின் கணவர் வெளியே போகும் பைக் சத்தம் கேட்டதும், ஒரு சில நிமிடங்களிலேயே சண்முகத்தின் சைக்கிள் மணிச் சத்தம் ரூபவதியின் வீட்டு வாசலில் கேட்கும். சைக்கிளை விட்டு இறங்காமலேயே ஒரு காலை தரையில் ஊன்றிக்கொண்டு பெல்லை அழுத்துவான். சத்தம் கேட்டதும், சிரித்துக்கொண்டே வெளியே ஓடி வருவாள் ரூபவதி. (நிஜமாகவே ஓடித்தான் வருவாள். அப்போது அவளைப் பார்த்தால் எட்டாம் வகுப்பு படிக்கும் ஒரு பையனின் அம்மா என்றே நம்ப முடியாது– பள்ளி மாணவி ஒருத்தியின் துள்ளலுடன் ஓடி வருவாள்). சில வேளைகளில் ஓரிரு நிமிடங்கள் சைக்கிளை விட்டு

இறங்காமலேயே பேசிக்கொண்டிருந்து விட்டுப் போய்விடுவான் சண்முகம். சில வேளைகளில் சைக்கிளை ஓரமாக நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே போவான்.

நான் ஜன்னலுக்குப் பக்கத்தில் நின்று முகச் சவரம் பண்ணிக் கொண்டிருக்கும்போது தெரியும் காட்சி அது. ஆர்வ மிகுதியால் சற்று எட்டிப் பார்த்தால் 'அப்படி என்ன அடுத்தவங்க விஷயத்தில் அக்கறை?' என்று கேட்டு ஜன்னலை சாத்துவாள் என் மனைவி. ஜன்னல் சாத்தப்பட்ட தினங்களில் லைட்டைப் போட்டுக்கொண்டுதான் சவரம் செய்ய வேண்டியிருக்கும்.

'காதல் ஜோடி இருவரும் ஏன் தத்தம் கணவனையும், மனைவியையும் 'டிவோர்ஸ்' செய்துவிட்டு புதிதாகக் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாது?' என்று ஒருநாள் என் மனைவி யிடம் கேட்டேன்.

'இது என்ன அமெரிக்கான்னு நினைச்சீங்களா? வாயை மூடுங்க. யாராவது கேட்டால் என்ன நினைப்பாங்க?' என்றாள்.

அவள் சொல்வதும் சரிதான். ஏதோ ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையில் படித்த ஞாபகம் வந்தது. வழக்கம்போல் நீதிமன்றத்துக்கு வந்த நீதிபதி, நீதிமன்றத்தில் அன்றைய தினம் ஜோடிகள் கூட்டம் எக்கச்சக்கமாக நின்றுகொண்டிருக்கவே விஷயம் புரியாமல் முழித்திருக்கிறார். பிறகு, ஒருவாறு தெளிந்து அவர்களிடம், 'லேடீஸ் அன்ட் ஜென்டில்மென்... நீங்கள் தவறான இடத்துக்கு வந்திருக்கிறீர்கள். இது திருமணப் பதிவாளர் அலுவலகம் அல்ல. நீதிமன்றம்!' என்று சொல்லியிருக்கிறார். உடனே அந்த ஜோடிகள் கோரசாக, 'சாரி மிலாட்! இது நீதிமன்றம் என்று தெரிந்துதான் வந்திருக்கிறோம். நாங்களெல்லாம் 'டிவோர்ஸ்' வாங்க வந்திருக்கும் ஜோடிகள்' என்று சொல்ல அதிர்ந்து போனாராம் நீதிபதி.

சண்டை எல்லாம் முடிந்து தெரு அமைதியான பிறகு, என் மனைவி நல்ல மூடில் இருக்கிறாளா என்பதையும் சோதித்து அறிந்த பிறகு சண்டையைப் பற்றித் தெரிந்துகொள்ள அவ்வளவாக ஆர்வமில்லாதவன் போல், ஏதோ எதேச்சையாகக் கேட்பவனின்

தொனியை சிரமப்பட்டு வரவழைத்துக்கொண்டு விசாரித்தேன்.

“கேக்கலேன்னா உங்களுக்கு மண்டை வெடிச்சிடும்னு எனக்குத் தெரியும்... விஷயம் ரூபவதியின் புருஷனுக்குத் தெரிந்துவிட்டது. அதுதான் ரகளை” என்றாள்.

இது மாதிரி விஷயத்தில் மட்டும் கணவனுக்குத்தான் கடைசியில் தெரிகிறது என்று நினைத்துக்கொண்டேன்.

பிறகு சண்டை தினமும் தொடர்ந்தது. ‘உன் மனைவியைக் கண்டித்து வை’ என்று சண்முகத்தின் மனைவியும், ‘உன் புருஷன் இங்கே இனிமேல் வந்தால் அவன் குடலை உருவி விடுவேன்’ என்று ரூபவதியின் கணவனும் பரஸ்பரம் மிரட்டிக்கொண்டார்கள்.

இப்போதெல்லாம் தெருவாசிகள் யாரும் சண்டையை விலக்கி விடப் போவதில்லை. சண்டை முடிந்து கடைசியில் சண்முகத்தின் மனைவி தெரு மண்ணை வாரி வாரி இறைத்துவிட்டுப் போவாள். இவ்வளவுக்கும் அவளுடைய ஒரு வயதுக் குழந்தை அவள் இடுப்பிலேயே தொற்றிக்கொண்டு கிடக்கும்.

இவ்வளவு சண்டை தொடர்ந்து நடந்துகொண்டிருந்தபோதும், சண்முகத்தின் சைக்கிளை எதிர் வீட்டில் நான் பார்க்கத் தவறியதில்லை.

“இப்போது எல்லாம் பகல் பூராவும், சைக்கிள் எதிர் வீட்டிலேயே தான் கிடக்கிறது” என்று நான் கேட்காமலேயே சொன்னாள் என் மனைவி.

இப்படி இருந்துகொண்டிருக்கும் போதுதான், ஒருநாள் சண்முகத்தை போலீசார் வந்து அழைத்துக் கொண்டு போனார்கள். ரூபவதிதான் தன்னை தினமும் வீட்டுக்கு அழைக்கிறாள் என்றும், அவள் தனக்கு எழுதிய கடிதங்களே கத்தை கத்தையாக இருக்கிறது என்றும் சொல்லி, வீட்டுக்கு வந்து அந்தக் கடிதங்களை எல்லாம் அள்ளிக்கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷனில் காட்டினானாம் சண்முகம். இது எல்லாவற்றையும் அவன் மனைவி தெருவில் நின்றுகொண்டு அடிக்கடி ரூபவதி வீட்டுப்

பக்கம் மண்ணை வாரித் தூற்றிக்கொண்டே சொல்லி அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

போலீசார் ரூபவதியையும் வந்து அழைத்துக் கொண்டு போனார்கள். அவளுடன் அவள் கணவரும் போனார்.

ஸ்டேஷனிலிருந்து ரூபவதி தம்பதியார் வீட்டுக்குத் திரும்பி வந்தபோது எதேச்சையாக நான் வாசலில் நின்று கொண்டிருந்தேன். (எதேச்சையாக என்பதை என் மனைவி ஆட்சேபிப்பாள். அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை, எனக்கு அவசர ஜோலி எதுவும் இல்லை என்று சொன்னாலும் கூட அவளிடம் எடுபடாது). ரூபவதியின் கணவர் என்னைப் பார்த்து புன்முறுவல் பூத்தார். ஒரு வெற்றிப் புன்னகை மாதிரி இருந்தது. என்னுடன் ஏதோ பேச விரும்புகிறார் போலவும் தோன்றியது. பதிலுக்கு நானும் பூத்து வைத்தேன். உடனே 'சிக்னல்' கிடைத்துவிட்டது போல், 'அந்தத் தறுதலைப் பயலை எனக்கு யாரென்றே தெரியாது. அடிக்கடி எங்கள் வீட்டுப் பக்கமாக வந்து என்னைத் தொந்தரவு செய்துகொண்டிருக்கிறான் என்று ஸ்டேஷனில் சொல்லி விட்டாள் சார் இவள்' என்று பெருமிதத்துடன் தன் மனைவியைச் சுட்டிக்காட்டி என்னிடம் சொன்னார்.

நான் பதிலுக்கு, 'அப்படி என்றால் உங்கள் மனைவி அவனுக்கு எழுதின கடிதங்கள்?' என்று கேட்க வாயெடுத்து, ஆனால் அது அவ்வளவு நாசுக்கானதல்ல என்பதை உடனே உணர்ந்தவனாய், 'அப்படீங்களா? அப்படீன்னா சரி' என்று சொல்லி தலையை பலமாக ஒரு ஆட்டு ஆட்டிவிட்டு உள்ளே போனேன்.

இனிமேல், ரூபவதியின் வீட்டுப் பக்கம் போனால் தோலை உரித்து விடுவோம் என்று மிரட்டி போலீசார் சண்முகத்தை வீட்டுக்கு அனுப்பினார்கள் என்ற செய்தி காதில் விழுந்தது.

ஆனால், அதற்குப் பிறகும் கூட சண்முகத்தின் சைக்கிளை எதிர் வீட்டில் பார்த்தபோதுதான் விஷயம் சீரியசாகிவிட்டது புரிந்தது. என்னதான் எனக்கு சம்பந்தம் இல்லாத பிரச்னையாக இருந்தாலும், சண்முகத்தின் மனைவியின் இடுப்பிலேயே எப்போதும் தொற்றிக் கொண்டிருந்த அந்தக் குழந்தையின்

ஞாபகம் வந்து என் வயிற்றைக் கலக்கியது.

பிறகு, போலீசார் மறுபடியும் வந்து சண்முகத்தை அழைத்துப் போனார்கள். போலீசாரை ரூபவதியின் கணவர் நன்றாக கவனித்து விட்டார் என்று தெருவில் பேசிக்கொண்டார்கள்.

அன்றைய தினம் மாலையே தெருவில் திடீரென்று 'புசு புசு'வென்று ஒரு வதந்தி பரவியது. சண்முகத்தை போலீஸ் ஸ்டேஷனில் ஆடைகளை எல்லாம் கழற்றிவிட்டு, நிர்வாணமாக்கி, அடியோதண்டமென்று அடிக்கிறார்கள் என்ற வதந்தியே அது. வதந்தி உண்மையா என்ற சர்ச்சை கிளம்பியது. யார் யாரோ பார்த்தேன் என்றார்கள். ஊர்ஜிதப்படுத்திக்கொள்ள சில தைரியசாலிகள் ஸ்டேஷனை நோக்கி நடந்தார்கள்.

நானும் ஓரளவு தைரியம் பெற்றவனாய் கிளம்பினேன். வதந்தி உண்மைதான். உடம்பு பூராவும், ரத்தக் காயங்களுடன், தோல் கிழிந்து சதை தெரிய உடம்பில் வஸ்திரம் எதுவுமின்றி குப்பையாய்க் கிடந்தான் சண்முகம்.

போலீஸ் ஸ்டேஷனுக்கு வெளியே தரையில் கிடந்த அவனை, சில பேர் தூக்கி இடுப்பில் துண்டைக் கட்டி ரிக்ஷாவில் போட்டு வீட்டுக்குக் கொண்டு வந்தார்கள்.

மறுநாள், நான் ஆபீசுக்குப் போய்விட்டு வீட்டுக்குத் திரும்பியபோது சண்முகத்தின் வீட்டு வாசலில் கூட்டம். வேகத்துடன் போய் எட்டிப் பார்த்தேன்.

உத்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தான் சண்முகம். இரண்டு மூன்று பேர் ஆஜானுபாகுவான அவனை உத்தரத்திலிருந்து இறக்க சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

வீட்டுக்கு வெளியே கேட்பாரற்று விழுந்து கிடந்தது சைக்கிள்.

தினமலர்-கதைமலர்
பெப்ருவரி, 1994

# சிதைவு

பஸ் ஸ்டாண்டின் ஒரு மூலையில் ஒட்டப்பட்டிருந்த அந்த சுவ ரொட்டியையே சற்று நேரம் வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றிருந்தேன். 'தோழர் சூரியகாந்தன் தலித் பிரச்னையைப் பற்றி பேசுவார்' என்று தெரிவித்தது அந்த சுவரொட்டி.

சூரியகாந்தன் ஒரு காலத்தில் என் உற்ற நண்பனாக இருந்தவன். என்னுடன் ஒரே தட்டில் சாப்பிட்டவன். அப்போது நாங்கள் இருவரும் ஒரு புரட்சிகர இயக்கத்தில் பங்கு கொண்டிருந்தோம். சதா நேரமும், ஏன், எங்கள் உறக்கத்திலும், கனவிலும் கூட நாங்கள் புரட்சியின் நினைவாகவே இருந்தோம். ஒருவரை ஒருவர் நீண்ட நாட்களுக்குப் பிறகு சந்தித்துக்கொண்டால் கூட அரைவர்களின் சுக துக்கங்களைப் பற்றி விசாரித்துக்கொள்ளாமல் புரட்சி எப்படி இருக்கிறது, புரட்சி எப்போது வரும் என்றுதான் கேட்டுக்கொள்வோம்.

நாங்கள் அப்படித்தான் நம்பியிருந்தோம். இன்னும் ஒரு சில மாதங்களில் - ஏன், ஒரு சில தினங்களிலேயே கூட - புரட்சி வந்துவிடும் என்பதுதான் எங்களின் கனவாக இருந்தது.

இதற்காக நாங்கள் எண்ணற்ற கஷ்டங்களை சகித்துக்கொண்டோம்.

நாங்கள் அனைவருமே பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மிக அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேறியவர்கள் என்பது இதற்கு ஒரு உதாரணம். எங்களில் பலர் மிக உயர்வான வேலைக்குப் போயிருக்கலாம். ஆனால் இப்படியே எல்லோரும் தத்தம் சுயநலத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் புரட்சியை யார் முன்னின்று நடத்துவது?

எங்கள் இயக்கத்திற்கு அப்போதுதான் சமீபத்தில் வந்து சேர்ந்திருந்தான் குமார் என்ற ஒரு டாக்டர். அது மட்டுமல்லாமல் மருத்துவத்தில் தனது உயர்படிப்பையும் பாதியில் விட்டுவிட்டு வந்திருந்தான் அவன். பள்ளியில் படிக்கும்போதே அகில இந்திய போட்டித் தேர்வுகளில் முதன்மையாக வந்து அவன் படிப்புச் செலவு முழுவதையுமே அரசாங்கம்தான் ஏற்றுக் கொண்டிருந்தது. வேறு வார்த்தைகளில் சொன்னால் ஒரு ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த அவனை அரசாங்கமே தத்து எடுத்துக்கொண்டிருந்தது. பள்ளியில் அவன் எனக்கு இரண்டு வருடம் ஜூனியர். சென்ற வருடம்கூட அவனைப் பார்த்தபோது மேற்படிப்பைத் தொடர்வதற்காக அமெரிக்கா அல்லது பிரிட்டன் போக இருப்பதாக சொன்னவன், இப்போது புரட்சிக்காக தன்னுடைய எதிர்காலத்தையே தியாகம் செய்துவிட்டு வந்து நிற்கிறான்.

தோழர்கள் அனைவரும் அவனை ஏகோபித்து வரவேற்றனர். ஆனால் நான் மட்டும் அதை எதிர்த்தேன்.

'நீ எங்களுடைய புரட்சி இயக்கத்தில் வந்து சேர்ந்துதான் சமூகத் தொண்டு செய்ய வேண்டும் என்பதில்லை. உன் மருத்துவப் படிப்பை முடித்துவிட்டு கிராமங்களுக்குச் சென்று பணிபுரிவதே இதைவிடவும் மேலான காரியம். புரட்சிக்கு ஆயிரம் பேர் கிடைப்பார்கள். ஆனால் கிராமங்களுக்குப் போகும் மருத்துவர்கள் நம்மிடையே இல்லை. இருதய மாற்று அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர் வயல்களில் பயிர்களைக் கடித்து தொந்தரவு செய்யும் எலிகளைக் கொன்று சமூகப் பணி செய்யப் போகிறேன் என்று புறப்படுவது கேலிக்குரிய விஷயம்' என்றெல்லாம் அவனைக் கடுமையாக விமர்சித்தேன்.

ஆனால், அப்போது என் சொல் அவன் செவிகளில் ஏறவில்லை. அந்த அளவுக்கு அவனை சூரியகாந்தன் மூளைச் சலவை செய்து வைத்திருந்தான். எங்கள் இயக்கத்தில் வந்து சேர்ந்த பிறகு அவன் பேச்சும், பழக்கவழக்கங்களும் அடியோடு மாறிப்போயின. எங்கள் இயக்கத்தின் கடுமையான விதிகளையும், சட்டதிட்டங்களையும் மனமுவந்து ஏற்றுக்கொண்டுவிட்ட அவனுக்கும் ஒரு சோதனையான நேரம் வந்தது.

அது எப்படி நேர்ந்தது என்றெல்லாம் யாருக்கும் தெரியவில்லை. யாராலும் யூகிக்க முடியவில்லை. அவனுக்கும் எங்கள் குழுவின் மற்றொரு தோழரான கருணாகரனின் மனைவிக்கும் தொடர்பு இருந்து அவர்கள் இருவரையும் பார்க்கக் கூடாத விதத்தில் கருணாகரனே பார்த்து விட்டார்.

இந்த விஷயம் இயக்கத்தின் பார்வைக்கு வந்து, விவாதத்துக்கும் வைக்கப்பட்டது. முதலில் குமார் விசாரிக்கப்பட்டான். அவன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு இயக்கம் தரும் தண்டனையையும் ஏற்றுக்கொள்ளச் சித்தமாக இருப்பதாக பணிவுடன் சொன்னான். ஆனால் அவன் சொன்னதையெல்லாம் யாரும் காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. ஆளுக்கு ஆள் எழுந்து அவனைத் திட்டினார்கள். அவனுடைய பெரிய படிப்புதான் இதற்குக் காரணம் என்று கண்டறிந்து சாடினார் ஒரு தோழர். சூரியகாந்தனோ ஒருபடி மேலேபோய், 'கருணாகரனைப் போல் சிறுவயதிலிருந்து இரவுபகல் பாராமல் சுவர்களில் நோட்டீஸ் ஒட்டி, சிறைசென்று, போலீசிடம் அடிவாங்கி, இயக்கத்திற்காக உழைத்த ஒரு தோழருக்கு இந்த இயக்கம் தரும் பரிசு இதுதானா? இப்படிப்பட்ட குற்றத்திற்கு குமாரின் உறுப்பை வெட்டி எறிய வேண்டியதுதான் சரியான தண்டனையாக இருக்க முடியும்' என்று மேடைப் பேச்சு பாணியில் முழக்கமிட்டான்.

எல்லாவற்றையும் கேட்ட நான் 'ஒரு ஆணின் உடம்பில் இரண்டு இஞ்ச் நீளத்தில் தொங்கும் ஒரு சதைத் துணுக்குத்தான் ஒரு புரட்சியாளனின் முழுத்தன்மையையுமே நிர்ணயிக்க முடியுமா? அந்த சதைத்துணுக்கை வெட்டியெறிந்துவிட்டால் புரட்சி புனித மடைந்துவிடுமா? முதலில் தோழர் கருணாகரனின் துணைவியை

அழைத்து விசாரியுங்கள்' என்று சொன்னேன்.

இப்படிச் சொன்னதற்காக என்னை வக்கிரம் பிடித்தவன் என்றும், அமெரிக்கச் சீரழிவுக் கலாச்சாரத்தை ஆதரிப்பவன் என்றும் வசை பாடினான் சூரியகாந்தன்.

நான் எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. என்னுடைய வேண்டுகோளிலேயே நான் தீர்மானமாக நின்றேன். 'மெத்தப் படித்து மேட்டுக்குடி ஆசாமியாகிவிட்ட ஒருவனின் துர்ப்போதனையினாலும், சந்தர்ப்பவசத்தினாலும் ஒரு மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்ட ஒரு பெண் தோழரை இப்படி எல்லோர் முன்னிலையிலும் கூப்பிட்டு விசாரிப்பது அந்தப் பெண் தோழரை மிகவும் அவமானப்படுத்துவதாகும்' என்று சொல்லி என் வேண்டுகோளை நிராகரிக்க முயற்சி செய்தார்கள் பல தோழர்கள்.

ஆனாலும், நான் என்னுடைய வேண்டுகோளை வலியுறுத்துவதிலும், அதன் நியாயத்தை எடுத்துச் சொல்வதிலுமே குறியாக இருந்தேன்.

'சமத்துவம் பேசி சமத்துவத்திற்காகப் பாடுபடும் நாம் இந்த விஷயத்தில் மட்டும், தவறு செய்த இரண்டு பேரையும் விசாரிக்காமல், ஒருவரை மட்டும் விசாரித்துவிட்டு, ஒருவரை, அவர் பெண் என்பதற்காக விட்டுவிடுவது நாம் பேசும் சமத்துவத்துக்கே எதிரானது இல்லையா?' என்று கடைசியில் ஒரு போடு போட்ட பிறகுதான் எல்லாரும் அடங்கினார்கள்.

இப்படி நான் அந்தப் பெண் தோழரை அழைத்து விசாரிக்க வேண்டும் என்று சொன்னதற்கு ஒரு காரணம் இருந்தது. அதுவும் எனக்கு மட்டும்தான் தெரியும்.

தோழர் கருணாகரனுக்கு புரட்சிகரத் திருமணம் முடிந்ததுமே அவர் வேறு ஒரு மாவட்டத்திற்கு, அந்த மாவட்டத்தில் புரட்சியைத் துரிதப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டுவிட்டார். அவர் அங்கே போய் இரண்டு வருடங்கள் நான் அவரை சந்திக்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் அந்த மாவட்டத்திற்கு ஒரு புரட்சிக்காரியமாக நான் செல்ல வேண்டி வந்தபோது அவரை அவர் வீட்டிற்குப்

மின்நூலாக்கம்



முரளிதரன்

போய்ப் பார்த்தேன். வழக்கம்போல், 'புரட்சி எப்படி இருக்கிறது?' அல்லது 'புரட்சி எப்போது வரும்' என்று தோழர் கேட்கத் துவங்குவதற்கு முன்னாலேயே, நான் முந்திக்கொண்டு 'திருமண வாழ்க்கை எப்படி இருக்கிறது தோழர்?' என்று ஆரம்பித்தேன். அவர் எனக்கு பதில் சொல்லாமல் 'தோழருக்கு ஒரு டம்ளர் மோர் கொண்டு வாருங்கள் தோழர்' என்று வீட்டிற்குள்ளிருந்த தன் துணைவியாரைப் பார்த்து சொன்னார். அவர் தன் மனைவியையும் 'தோழர்' என்றே அழைத்து, 'வாருங்கள்... செல்லுங்கள்' என்று பன்மையில் குறிப்பிடும் வழக்கம் உள்ளவர் என்பதை அப்போது தெரிந்துகொண்டேன்.

பிறகு என்னைப் பார்த்து, நான் அவரைக் கேட்ட கேள்வியையே மறந்துவிட்டு 'புரட்சி எப்படி இருக்கிறது தோழர்?' 'புரட்சி எப்போது வரும்?' என்று ஆரம்பித்தார். நான் அவருக்குப் பதில் எதுவும் சொல்லாமல் அவர் திருமண வாழ்க்கை பற்றியே மீண்டும் விசாரிக்க ஆரம்பித்தபோது, அதற்கு அவர் பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை என்பதை உணர்த்துவதுபோல் 'டங் டங்' என்று எங்கள் பக்கத்தில் இரண்டு மோர் டம்ளர்களை வைத்தார் தோழர் புனிதவல்லி. வைத்த வேகத்தில் சிந்திய மோர் எங்கள் இருவரின் வேட்டிகளையும் நனைக்க, நான் என் ஆச்சரியத்தை அடக்கிக் கொண்டு தோழர் புனிதவல்லியை நோக்கிப் புன்முறுவல் செய்தேன். தோழர் புனிதவல்லியும் எங்கள் இயக்கத்தில் நீண்ட காலம் இருந்தவர் என்பதாலும், என்னுடன் இணைந்தும் சிலகாலம் செயல்பட்டிருக்கிறார் என்பதாலும் அவர் என்னுடன் ஏதேனும் பேசுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவர் என் புன்முறுவலைச் சிறிதும் கண்டுகொள்ளாமல் சிடுசிடுப்புடன் முகத்தைத் தூக்கிக்கொண்டு உள்ளே போனார். நான் மோரைக் குடித்து முடித்தேன்.

தோழர் கருணாகரனை வெளியே தனியாக அழைத்துக்கொண்டு போய், அவருடைய திருமண வாழ்க்கையைப் பற்றி அந்தரங்கமாக விசாரித்தேன். முதலில் பிடி கொடுக்காமல் பேசிய தோழர் கடைசியில் உண்மையைச் சொன்னார். திருமணமானதிலிருந்து இன்றைய தினம் வரைக்கும் அவர் தன் மனைவியைத் தீண்டிய தில்லை, உறவு கொண்டதில்லை என்ற உண்மைதான் அது.

பதறிப்போன நான் 'என்ன தோழர் இது?' என்று கேட்டபோது, அவர் சாவகாசமாக 'அதெல்லாம் புரட்சிக்குப் பிறகுதான் கவனிக்க வேண்டும் தோழர். முதலில் புரட்சி. அதுக்குப்பிறகே நம்முடைய சொந்த சந்தோசமெல்லாம்' என்றார்.

அப்போதுதான் எனக்கு மோர் டம்ளர்கள் தரையில் ஏற்படுத்திய சப்தத்தின் காரணம் புரிந்தது.

பிறகு அவரிடம் தாம்பத்ய உறவின் முக்கியத்துவம் பற்றி ஒரு மணி நேரம் 'லெக்சர்' கொடுத்துவிட்டு வந்தேன். ஆனால், நான் சொன்னதையெல்லாம் அவர் பொருட்படுத்தவே இல்லையோ என்ற சந்தேகத்தினால்தான் நான் அப்போது அவ்வளவு பேர் எதிரிலும் தோழர் புனிதவல்லியை அழைத்து விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

தோழர் புனிதவல்லி அழைக்கப்பட்டார். ஆனால் அவர் சொன்ன பதிலைக் கேட்டு எல்லோருமே ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

அவர் தோழர் கருணாகரனுடன் தனது உறவை முறித்துக்கொள்ள விரும்புவதாகவும், தோழர் குமாருடன் சேர்ந்து வாழ அனுமதிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

'அமெரிக்கச் சீரழிவுக் கலாச்சாரம் புரட்சிகர இயக்கத்திற்குள்ளும் ஊடுருவ நாங்கள் ஒருக்காலும் அனுமதிக்க மாட்டோம்!' என்று சொல்லி தோழர் புனிதவல்லியின் வேண்டுகோளை மறுத்தது இயக்கம். அதோடு மட்டுமல்லாமல், இரண்டு பேரும் ஒருவருட காலத்திற்கு இயக்கத்திலிருந்து தற்காலிக நீக்கமும் செய்யப்பட்டனர்.

அன்று இரவு, குமார் தனது விரல் ஒன்றை வெட்டிக்கொண்டான்.

அதற்குப் பிறகு ஒருமாத காலத்திற்குள்ளாகவே தோழர் புனிதவல்லிக்கு மனநிலை பாதிப்பு ஏற்பட்டு, மனநோய் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். பிறகு, மனநோய் மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட சிகிச்சையின் காரணமாகவே மனநோய் மேலும் முற்றி ஒட்டுமொத்தமாக மனநிலை பிறழ்ந்து போனார்.

குமாரை அதற்குப் பிறகு நான் சந்திக்கவில்லை. இப்போது எங்கே இருக்கிறான் என்றும் தெரியவில்லை.

நாங்கள் எதிர்பார்த்தபடி புரட்சி வராததினாலோ அல்லது வேறு காரணத்தினாலோ காலப்போக்கில் எங்கள் இயக்கம் உடைந்து சிதறியது. இயக்கத்தின் மூத்த தலைவர், இளந்தோழர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். (சுட்டுக் கொல்லப்பட்ட போது அவருக்கு வயது 89).

நான் அரசாங்க வேலை ஒன்றில் சேர்ந்தேன்.

சூரியகாந்தன் தலித் இயக்கம் ஒன்றைக் கூட்டினான் என்ற செய்தியை கேள்விப்பட்டபோது மட்டும் சற்று ஆச்சரியமடைந்தேன். புரட்சியை தாமதப்படுத்தும் முக்கியமான சக்திகளுள் ஒன்றாக நாங்கள் சாதியை அடையாளம் கண்டுகொண்டிருந்தோம் என்பதால், எங்கள் இயக்கத்தில் சாதியைப் பற்றிய எந்தவித விவாதத்தையும் நாங்கள் அனுமதித்ததில்லை. அப்போது ஒருநாள் சூரியகாந்தன், 'காரிலேயே சிறந்த கார் எந்த கார்?' என்று என்னிடம் கேட்டான். திடீரென்று அவன் இப்படிக் கேட்டதால் நான் ஒன்றும் புரியாமல் விழிப்பதைப் பார்த்துவிட்டு, சிரித்துக்கொண்டே 'அம்பேத்கார்' என்றான். பளீரென்று அவன் கன்னத்தில் அறைந்தேன்.

'ஒரு தலித்தாக தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த நீயும், நானுமே, இப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் போராடிய ஒரு மாபெரும் தலைவனை அவமரியாதை செய்வது நியாயமா? என்று அன்றைய தினம் நான் அவனைக் கேட்டது இப்போது இந்த சுவரொட்டியைப் பார்த்தபோது எனக்கு ஞாபகம் வந்தது.

தினமலர் - கதைமலர்
ஜனவரி, 1994

# இணைகோடுகள்

மேஜையின் மீது தலையைக் கவிழ்த்தபடி லத்திகா அழுது கொண்டிருந்த அந்த தினம் ரவியின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு தினம்.

கேவிக் கேவி அழுதுகொண்டிருந்தாள். இன்னும் பத்து மணி ஆகவில்லை. பக்கத்து இருக்கை காமினியும், ஜஸ்பீரும் இன்னமும் வரவில்லை. ரவியின் பாஸ் கபூருக்கு, ஆண்களைக் கண்டாலே ஆகாது. அதனால்தான் காமினி, ஜஸ்பீர், லத்திகா என்று பெண் உதவியாளர்களையே வேலைக்கு அமர்த்திக்கொண்டிருந்தான்.

ஆனால், அலுவலகத்தில் யாரும் பெண் ஸ்டெனோ இல்லாததால் ரவியை எடுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆக, மூன்று இளம் பெண்களுக்கு நடுவில் ரவி. காமினியும், ஜஸ்பீரும் பஞ்சாபிகள். அவர்களின் நுனி நாக்கு ஆங்கிலமும், அடாவடிப் பேச்சுக்களும், ஸ்லீவ்லெஸ்சும், ஏனைய ஆடம்பரங்களும் அவர்களிடமிருந்து ரவியை வெகுவாக விலக்கி வைத்தன.

லத்திகா நேர் எதிர். ஒரு தேர்ந்த கலைஞனின் புல்லாங்குழலிலிருந்து வரும் மிருதுவான சங்கீதத்தை ஒத்த குரல். தேனில் ஊறிய பலாச்

சுளையை ஒத்த சாயப்பூச்சு இல்லாத அதரங்கள். லாகிரியில் கிறங்க அடிக்கும் காந்தக் கண்கள். கேரளத்துப் பெண்களுக்கே உரிய வாளிப்பான தேகக் கட்டு. அருகில் நின்று பேசினால் கஸ்தூரி மஞ்சளும், தேங்காய் எண்ணையும் கலந்து வரும் ஒரு ரம்மியமான மணம்.

இதுவும் இன்ன பிறவும்தான் லத்திகா...

அவள் அருகில் சென்றான். முகம் புதைத்து அழுதுகொண்டிருந்த அவள் தலையை வருடி என்னவென்று கேட்க நினைத்து அதை அடக்கிக்கொண்டான்.

என்ன விஷயமென்று குழப்பமாக இருந்தது. ஊரிலிருந்து ஏதேனும் துர்செய்தியா? உடல் சுகமில்லையா?

"லத்திகா, என்ன விஷயம்? ஏன் அழுகிறாய்?"

பதில் இல்லை, தலை குலுங்கியது. விசும்பல் ஒலி மட்டுமே கேட்டது.

அதற்கு மேல் ரவியால் ஒன்றும் யோசிக்க முடியவில்லை. தயங்கவும் இல்லை. அவளது முன்னந்தலையைத் தொட்டு லேசாக நிமிர்த்தினான்.

"நாய் கடித்துவிட்டது ரவிஜீ!"

"சே... இதற்கா இப்படி அழுவார்கள்? உடனே கிளம்பு... ஆஸ்பத்திரி போகலாம்" என்று சொல்லி ஆட்டோவைப் பிடித்து பக்கத்திலிருந்த படா இந்துராவ் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனான்.

காயம் அதிகம் இல்லை. சொல்லப் போனால் காயமே இல்லை. கீறல்தான். இருந்தாலும் பரவாயில்லை என்று டாக்டர் ஒரு ஊசியைப் போட்டு, இனி பயப்பட ஒன்றும் இல்லை' என்றும் சொல்லி விட்டார்.

அதற்குமேல் அவர்கள் அன்றைய தினம் அலுவலகத்திற்குப் போகவில்லை.

தொடர்ந்து அவர்களது பழக்கம் அதிகமாகி, ஓட்டல், பார்க் என்று அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தனர்.

பாரகம்பா சாலை. இருபுறமும் கவியும் பெரிய பெரிய நாவல் மரங்கள். வெகுதூரம் பார்க்க முடியாதபடி வெண்ணிறப் பனி. எப்போதேனும் கடந்து செல்லும் வாகனங்களின் 'ஹெட் லைட்' வெளிச்சம். எலும்புக்குள் ஊடுருவும் குளிர்.

சாலையில் அந்த இருவரைத் தவிர வேறு ஒரு உருவம்கூட தட்டுப்படவில்லை.

"என்ன, பேச்சையே காணோம்?"

"நீதானே சொன்னாய் பேசாமல் நடக்கலாம் என்று..."

"இந்தக் 'கடி'தானே வேண்டாம்ங்கிறது... பேசாமல் இருக்கிறதுக் காகவா இப்படி நடந்தே போகலாமென்று சொன்னேன்... ம்..?"

சொல்லிவிட்டு அவன் இடுப்பில் தன் ஆள்காட்டி விரலால் குத்தினாள்.

துள்ளிக் குதித்தான் ரவி.

"பேசலாம்... பேசவேண்டும்... உன்னிடம் நான் ஒன்று சொல்ல வேண்டும்."

"என்ன...?"

"சொல்லத் தயக்கமாக இருக்கிறது லத்திகா..."

"ஏன் தயக்கம்?"

"நீ தவறாக எடுத்துக்கொள்ளலாம். என்னுடைய சிநேகிதத்தை முறித்துக்கொள்ளலாம். என்னை மோசமான ஆளாக நினைத்து விடலாம்..."

"மாட்டேன்... மாட்டேன்... மாட்டேன்... சொல்லுங்கள்...!"

அப்போதும் தான் சொல்ல நினைத்ததைச் சொல்லாமல் நடந்து கொண்டிருந்தான் அவன்.

'சொல்லாவிட்டால் மேலே ஒரு அடி கூட எடுத்து வைக்க மாட்டேன்...'

சொல்லிவிட்டு இரு கைகளையும் கட்டிக்கொண்டு நின்றுவிட்டாள் லத்திகா.

அவளருகே மிக நெருங்கி சன்னமான குரலில் அதை சொன்னான் ரவி.

"லத்திகா... ஐ லவ் யூ..."

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் அவள் உடல் ஒருகணம் சிலிர்த்துக் குலுங்கியது.

ஒன்றும் பதில் சொல்லாமல் நடக்க ஆரம்பித்தாள் அவள். அவனும் எதுவும் பேசாமலேயே அவள் பக்கத்தில் சென்று கொண்டிருந்தான்.

பாரகம்பா சாலையின் குறுக்கே ஓடிய கஸ்தூர் பா காந்தி மார்க்கை வந்து சேர்ந்திருந்தனர்.

லத்திகாவின் ஆஸ்டலுக்கு இடதுபுறம் திரும்பவேண்டும்.

அப்படித் திரும்பியபோதுதான், அவன் சற்றும் எதிர்பாராதபடி அவள் அதைச் செய்தாள்.

அவனது ஒரு கரத்தைப் பற்றியெடுத்து அதில் தன் ஈர உதடுகளால் முத்தம் பதித்தாள் லத்திகா.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின் லத்திகாவுக்கு அமெரிக்காவில் (நியூயார்க்) ஒரு வேலை கிடைத்தது.

"உடனடியாக திருமணம் செய்து கொள்வோம். இரண்டு பேரும் கிளம்புவோம்" என்றாள் லத்திகா.

"அப்படியெல்லாம் என்னால் திடீரென்று புறப்பட முடியாது. இதைப் பற்றி யோசிக்கவே எனக்கு ஆறு மாத காலம் அவகாசம் வேண்டும்."

"அப்படியானால்..."

"நீ போகாதே என்று தடுக்க மாட்டேன். ஆனால் வேறு வழி எதுவும் எனக்குப் புலப்படவில்லை."

"கடைசியாகக் கேட்கிறேன்... நீ இப்போது என்னுடன் புறப்பட்டு வருவாயா?"

"லத்திகா... நான் சொல்வதைக் கேள்..."

"என்னுடன் வருவாயா? மாட்டாயா? அதற்கு பதில் சொல்..."

ரவி மவுனமாக இருந்தான்.

"ரவி... ஒய் ஆர் யூ ஸோ அடமண்ட்?"

இவைதான் லத்திகா ரவியிடம் பேசிய கடைசி வார்த்தைகள்.

அதற்குப் பிறகு லத்திகாவை தன் வாழ்க்கையில் மீண்டும் சந்திக்க முடியும் என்று ரவி கனவில் கூட நினைத்ததில்லை. ஆனால், சுமார் பத்து ஆண்டுகளுக்குப் பின், சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது.

ரவி தன் ஆறு வயது பெண் குழந்தையுடனும், மனைவியுடனும், தன் நண்பன் ஒருவனை வழியனுப்புவதற்காக அந்தப் பன்னாட்டு விமான நிலையத்திற்கு வந்திருந்தான்.

அப்போதுதான் அந்த மஞ்சள் நிற தேவதையை அவன் மறுபடியும் அங்கே கண்டான். அவள் பக்கத்தில் ஆஜானுபாகுவான ஒரு வெள்ளைக்காரன். கணவனாகத்தான் இருக்க வேண்டும். பக்கத்தில் ஐந்து அல்லது ஆறு வயது மதிக்கத்தக்க புஷ்டியான ஒரு சிறுவன்.

அவனைக் கடந்து சென்றபோது - பனிரண்டு வருடங்களுக்கு முன் பாரகம்பா சாலையில் சோடியம் விளக்கொளியில் பார்த்த அதே பரவசம் முகத்தில் மின்ன லேசாக, மிக லேசாக புன்முறுவல் காட்டினாள்.

நிற்கவில்லை. பேசவில்லை.

அவனும் லேசாய் புன்முறுவல் செய்தான்.

"ரவி... ஒய் ஆர் யூ ஸோ அடமண்ட்?"

அவள் தன் மகனை அதட்டியது அவன் காதில் விழுந்தது... தன் மகனுக்கு என் பெயரையா வைத்திருக்கிறாள்?

ஒருகணம் அவன் மனதில் ஏதோ தடம் புரண்டது போல் இருந்தது. அந்த இடத்திலேயே அமர்ந்து 'ஓ...?' என்று வாய்விட்டு அழவேண்டும் போல் தோன்றியது.

முகத்தை கைகளால் இறுகத் துடைத்தபடி திரும்பிப் பார்த்தான். அவளும் அதே கணத்தில் திரும்பிப் பார்த்தாள்.

"அப்பா... அந்த ஆன்ட்டி உன்னைத் திரும்பித் திரும்பிப் பார்க்கிறாளே... உனக்கு அவளைத் தெரியுமா?" அவன் கையைப் பற்றியிருந்த அவன் மகள் கேட்டாள்.

"எந்த ஆன்ட்டி?"

"அப்பா, நீ ஏன் அழுகிறாய்?"

"கண்ணில்... தூசு விழுந்துவிட்டது செல்லம்" என்று சொல்லிவிட்டு கைக்குட்டையை எடுத்து கண்களைத் துடைத்துக்கொண்டான் ரவி.

தினமலர் - தீபாவளி மலர்
1995

# கண்மணிக்கு ஒரு கடிதம்

என் அன்புக் கண்மணிக்கு,

ரவி எழுதிக்கொள்வது. தில்லிக்குச் சென்றவுடன் கடிதம் எழுதுகிறேன் என்று சொல்லிச் சென்ற நான் இப்போது பனிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

உன் உயிரின் உயிராய்க் கலந்திருந்த நான் தில்லிக்குச் சென்ற பிறகு உன்னைத் தொடர்பு கொள்ளாமல் - உனக்கு ஒரு கடிதம் கூட எழுதாமல் - உன் வாழ்க்கையில் இருந்தே காணாமல் போய் விட்டது உன்னை எத்தனை தூரம் வதைத்திருக்கும் என்பதை உணராத மரத்துப்போன மனநிலையில் பத்தாண்டுகள் ஓடி மறைந்து விட்டன.

நான் செத்துப் போய்விட்டதாகக் கூட நீ எண்ணியிருக்கலாம்.

ஆம். மரணத்தைத் தவிர வேறு எந்த சக்தியாலும் பிரிக்க முடியாததாய் இருந்தது நம் காதல்...

சாகவில்லை. உயிரோடுதான் இருக்கிறேன். பிறகு என்னதான் நடந்தது?

உன் உயிரோடு உயிராய்க் கலந்து ஒன்றேயாகிப் போன நான் இந்தப் பனிரண்டு ஆண்டுக்காலமாக உன்னைத் தொடர்பு கொள்ளாமல் போனது ஏன்?

பித்துதான் பிடித்துப் போயிருந்தது கண்ணே...

கலைப் பித்து.

தில்லிக்குப் போனவுடன் அங்கு இருந்த கலைச்சூழல் என்னையே மறக்கச் செய்தது. ஃபெலினி, ரோஸலினி, தர்க்காவ்ஸ்கி, கொதார், ஃபாஸ் பைண்டர் என்று ஏகப்பட்ட கலைஞர்களின் சினிமா...

மல்லிகார்ஜுன் மன்சூர், கங்குபாய் ஹங்கல், டாகர் பிரதர்ஸ் என்று ஒரு இசை உலகம்.

மண்டி ஹவுஸ் தில்லிக் கலை உலகின் மையம். தேசிய நாடகப் பள்ளி, ஸ்ரீராம் சென்டர், மாவ்லங்கர் ஆடிட்டோரியம், கமானி ஆடிட்டோரியம், சாகித்ய அகாதமி நூலகம், சங்கீத நாடக அகாதமி என்று மண்டி ஹவுசில் திரும்பின இடமெல்லாம் கலை அரங்குகள், நூலகங்கள்.

ஒரு மாதத்தில் குறைந்தது இருபது சினிமா பார்த்தேன். எஞ்சிய தினங்களில் நடனம், இசை, கூத்து, நாடகம், ஓவியக் கண்காட்சி...

நம் எதிர்கால வாழ்வை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக உத்தியோக நிமித்தமாக அங்கே சென்ற நான் ஒரு சில தினங்களிலேயே என் அலுவலகத்தைக் கூட மறந்து போனேன்.

ஆனாலும் ஒரு அதிர்ஷ்டம் என் அலுவலகத்தில் என்னை ஒரு எழுத்தாளனாக அங்கீகரித்தார்கள். எப்போது வேண்டுமானாலும் வா, வந்து கையெழுத்து மட்டும் போட்டுவிட்டுப் போய் விடு என்றார்கள்.

கேட்க வேண்டுமா பிறகு? நூலகம், படிப்பு, படிப்பு, படிப்பு, மாலை நேரங்களில் மண்டி ஹவுஸ்.

இப்படித்தான் என்னையும், என் உயிரின் ஒளியான உன்னையும்

மறந்து போனேன் கண்ணே! பத்து ஆண்டுகள் இப்படியே ஓடிற்று.

1993 – நான் தில்லியில் இருந்த கடைசி ஆண்டு – கிரேட்டர் கைலாஷில் இருந்த அர்ஜென்டீனிய கலாச்சார மையத்தில் ஸ்பானிஷ் கற்றுக்கொண்டிருந்தேன்.

அப்போதுதான் அது நடந்தது.

அவள் பெயர் செலஸ்தினா. என்னுடைய ஸ்பானிஷ் ஆசிரியை. சிறு பெண். கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு புவெனஸ் அய்ரஸிலிருந்து இந்தியக் கலாச்சாரத்தால் ஈர்க்கப்பட்டு இங்கே வந்தவள்.

“பொதுவாக மற்றவர்கள் ஃப்ரெஞ்ச், ஜெர்மன் என்றுதானே கற்றுக்கொள்ள போவார்கள். நீ எப்படி ஸ்பானிஷுக்கு வந்தாய்?” என்று கேட்டாள் செலஸ்தினா.

“சே குவேரா பேசிய மொழி. மார்க்கேஸ் எழுதிய மொழி” என்றேன்.

செலஸ்தினாவும் நானும் நெருக்கமான சிநேகிதர்கள் ஆனோம்.

லத்தீன் அமெரிக்காவின் சினிமா, இலக்கியம், ஃபிடல் காஸ்ட்ரோ, பொலிவியன் டயரி, புவெனஸ் அய்ரஸ், போர்ஹேஸ், பெரூவின் புரட்சிகர அரசியல், பாப்லோ நெரூதா, டாக்டர் அயெந்தே என்று மணிக்கணக்கில் பேசினோம். வாரத்தில் இரண்டு தினங்கள் ஸ்பானிஷ் வகுப்பு போக மற்ற தினங்களில் மண்டி ஹவுஸில் சந்தித்தோம்.

குளிருக்கு இதமாக தேநீர் அருந்திக்கொண்டே மண்டி ஹவுஸ் புல் தரைகளில் அமர்ந்து பேசிக்கொண்டிருப்போம்.

அப்போது ஒரு நாள் செலஸ்தினா என்னிடம் கேட்டாள்.

“ரவி, உன்னை நான் காதலிக்கிறேன். நீயும் விரும்பினால் நாம் திருமணம் செய்துகொள்ளலாம்.”

இந்தக் கேள்விதான் செலஸ்தினாவை ஒரு பெண் என்று என்னை உணர வைத்தது. ஒரு கனவுலகில் சஞ்சரித்துக்கொண்டிருந்த என்னை கீழே மண்ணுக்கு இழுத்துக்கொண்டு வந்து போட்டது. இதுநாள் வரை கலை இலக்கிய உலகில் ஒரு சக பயணி என்பதாக மட்டுமே ஞாபகம் கொண்டிருந்த என்னை நிலைகுலையச் செய்தது. மண்டி ஹவுசிலிருந்து என்னை நேரடியாகக் கொண்டுவந்து தஞ்சாவூர் வெங்கடேச பெருமாள் கோவில் தெருவில் உன் வீட்டின் முன் போட்டது.

வெங்கடேச பெருமாள் கோவில் தெரு...

ஒவ்வொரு எழுத்தாக உச்சரித்துப் பார்க்கிறேன். நாம் சுற்றித் திரிந்த இடம். காதலித்த இடம். கனவு நதியில் நீச்சலிட்ட இடம். ஒருவர் கண்களை ஒருவர் விழுங்கிக் காலப் பிரக்ஞையற்று மௌனித்திருந்த இடம்.

உன்னுடைய அம்மாவும் என்னுடைய அம்மாவும் நாகூரில் ஒரே தெருவில் பிறந்து ஒரே இடத்தில் விளையாடியவர்கள். ஒன்றாய்ப் படித்தவர்கள். பிறகு தஞ்சாவூரில் பெரிய உத்தியோகத்திலிருந்த மாப்பிள்ளைக்கு உன் அம்மாவைத் திருமணம் செய்து கொடுக்க, என் அம்மாவுக்கு நாகூரிலேயே திருமணம் முடிந்ததெல்லாம் பழைய கதை. இந்தப் பிணைப்பு அடுத்த தலைமுறைக்குமாய் தொடர்ந்தது. நாம் சிறு பிராயத்திலிருந்தே நண்பர்களானோம். எவ்வளவு சின்ன விடுமுறையாக இருந்தாலும் நான் உன் வீட்டுக்கு வந்துவிடுவேன். நாட்கள் செல்லச் செல்ல நமது நட்பு காதலாய் மாறியது.

அப்போதுதான் உன் தந்தையின் அகால மரணம் நிகழ்ந்தது. அத்தை உடைந்து போனார்கள். சொந்த வீடும், பென்ஷனும்தான் உங்கள் உயிர்காத்தது.

என் பள்ளிப்படிப்பு முடிந்து உன்னை உத்தேசித்தே நான் தஞ்சாவூர் வந்து சரஃபோஜி கல்லூரியில் சேர்ந்தேன்.

('வெளியில் எங்கும் தங்க வேண்டாம். இங்கேயே தங்கி விடு. எனக்கும் துணையாக இருக்கும்' - அத்தை)

உனக்கு நான் – எனக்கு நீ – நாம் இரண்டு பேரும் ஒரே உயிரின் இரண்டு பிம்பங்களென உணர்ந்துகொண்ட நாட்கள் அவை.

அத்தையும் புரிந்துகொண்டார்கள். நாமிருவரும் வேறு வேறு சாதியாக இருந்தாலும் அத்தைக்கு அது ஒரு பொருட்டாக இல்லை. தான் பாண்டியும், பல்லாங்குழியும் விளையாடிய தன் சிறு பிராயத்துத் தோழியின் பையனுக்குத் தன் பெண்ணை மணமுடித்துக் கொடுப்பதில் அவர்களுக்கு சந்தோஷம்தான்.

('சீக்கிரம் படிப்பை முடித்துவிட்டு உத்தியோகத்தில் சேர்ந்து முதல் வேலையாக இவளுக்கு ஒரு தாலியைக் கட்டு.' - அத்தை)

உன் பள்ளிப்படிப்பும் முடிந்தது. படிப்பில் உனக்கு நாட்டமில்லை.

('எப்படி இருக்கும்? எந்தப் புத்தகத்தைப் பிரித்தாலும் உன்னுடைய முகம்தானே தெரிகிறது. ராஸ்கல், நீ என் படிப்பைக் கெடுத்து விட்டாய்.)

காதல், காதல், காதல், மனசு பூராவும் காதல். எப்போது என் படிப்பு முடியும்? எப்போது வேலை கிடைக்கும்?

திடீரென்று நான் படித்துக்கொண்டிருக்கும்போதே எழுதிய அரசு வேலை வாய்ப்புக்கான தேர்வு ஒன்றில் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலைக்கான உத்தரவும் வந்தபோது நாம் எவ்வளவு தூரம் குதூகலித்துப் போனோம்.

ஆனால் தில்லியில்தான் வேலை. ('இருந்தால் என்ன? இந்த உலகத்தின் எந்த மூலைக்கு நீங்கள் போனாலும் நானும் அங்கே வருவேன்' -நீ.)

இதை எழுதும்போது என் கண்களில் துளிர்க்கும் கண்ணீரை என்னால் அடக்க முடியவில்லை கண்ணே...

பாவி நான். துரோகி நான். பெண் பாவம் பொல்லாதது. விரைவில் உன்னை மணமுடித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே வேலைக்கான தேர்வு எழுதி படிப்பையும் இடையிலேயே நிறுத்திவிட்டு வேலைக்குச் சென்ற நான் உன்னை எப்படி மறந்து போனேன்? எந்த சைத்தான் என் மனசுக்குள் வந்து புகுந்தது?

ஏன் இப்படி நடந்தது? எனக்கு என்ன தண்டனை? வாழ்நாள் முழுதும் உன்னை என்னால் சந்திக்கவே முடியாமல் போய் விடுமோ?

செலஸ்தினா அப்படிக் கேட்டவுடன் "எனக்கு ஏற்கனவே திருமணமாகி விட்டது" என்று சொன்னேன்.

அதற்குப் பிறகு எல்லாம் சடுதியில் முடிந்தது. தில்லியிலிருந்து சென்னைக்கு உத்தியோக மாற்றம். வந்தவுடனே தஞ்சாவூருக்குப் போனேன்.

"அவர்கள் வீட்டை விற்றுவிட்டு மதுரைக்குப் போய் ஐந்தாறு, வருடங்கள் இருக்குமே... அவர்கள் பெண்ணுக்குக் கல்யாணமாகி மதுரைக்குப் பக்கத்தில்தான் மாப்பிள்ளையின் ஊர்."

"எந்த ஊர்?"

யாருக்கும் தெரியவில்லை.

இதற்கிடையில் என் தந்தை நாகூரிலிருந்த வீட்டை விற்றுவிட்டு திருச்சிக்கு என் தங்கை வீட்டோடு போய் விட்டார்கள்.

திருச்சிக்குப் போய் அம்மாவைக் கேட்டேன்.

"ஆமா... பத்திரிகை கூட வந்தது. நேரில் வந்து கொடுக்கவில்லை. அதுகூட பரவாயில்லை. ஒரு வரிகூட எழுதவில்லை. எங்கயோ மதுரைக்குப் பக்கத்தில் கல்யாணம். மாப்பிள்ளைக்கு அந்த ஊராம்! நான் போகலே. அதுசரி... நீதான் அவங்க வீடே கதின்னு இருப்பியே... ஒனக்குக்கூட பத்திரிகை அனுப்பலியா அவள்?" என் அம்மா.

நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

மீண்டும் தஞ்சாவூருக்கு வந்தேன். உன் பள்ளியில் உன்னோடு படித்த தோழிகள் யாரையேனும் பார்த்துக் கேட்க முடியாதா என்று ஒரு நப்பாசை.

பத்தாண்டுகள்... எவ்வளவு பெரிய கால இடைவெளி! எல்லாமே மாறிப் போயிருந்தது.

ஆட்கள், தெருக்கள், வாகனங்கள், வீடுகள், மரங்கள், கடைகள்... எல்லாம். மேல வீதியிலும், வி.பி. கோவில் தெருவிலும், பிருந்தாவனத் தோட்டத்திலும், சிவகங்கா கார்டனிலும், பெரிய கோவிலிலும்... இன்னும் நாம் சுற்றித் திரிந்த இடங்களிலெல்லாம் அர்த்தமற்று அலைந்தேன்.

ஏதோ ஓர் குருட்டு நம்பிக்கையில் மதுரைக்குப் போனேன். போய்ச் சேர்ந்த பிறகுதான் அது அசட்டுக் காரியமென்று புரிந்தது.

மதுரை என்றதும் ஞாபகம் வருகிறது... அனைத்துக் கல்லூரி பேச்சுப்போட்டி ஒன்றுக்காக என் கல்லூரி சார்பாக நான் மதுரை போக இருந்தேன். காலையில் போட்டி... முந்தின தினம் மாலை நான் கிளம்பவேண்டும். நீ என்னைக் கிளம்ப விடவில்லை. 'இரு... இன்னும் கொஞ்ச நேரம் இரு... இங்கிருந்து மதுரை பக்கம்தானே? அப்புறம் போகலாம். இன்னும் கொஞ்ச நேரம்' என்று சொல்லிச் சொல்லியே அதிகாலை மூன்று மணிவரை ஆக்கிவிட்டாய். இரவு பூராவும் பேசினோம். மூன்று மணி ஆனதும்தான் இனியும் தாமதித்தால் போட்டியில் கலந்துகொள்ள முடியாதென அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடி பஸ்ஸைப் பிடித்தேன்.

கிளம்பிக்கொண்டிருந்த பஸ்ஸை ஓடிப் போய் பிடித்ததில் ஒரு விஷயத்தை மறந்து போனேன். ஒன்றுக்குப் போக வேண்டியதன் அவசரம் பஸ்ஸில் உட்கார்ந்த பிறகுதான் புரிந்தது. என்ன ஒரு அவஸ்தை... நிறுத்தச் சொன்னால் நிறுத்துவார்களா? திட்ட மாட்டார்கள்? ஒரு மணி நேரம் பல்லைக் கடித்துப் பொறுத்துக்கொண்டேன்.

வேர்த்து விறுவிறுத்துப் போன பிறகுதான் டிரைவரை நிறுத்துமாறு கேட்டேன்.

"இவ்வளவு கஷ்டமும் உன்னால்தானே?" என்று ஊருக்குத் திரும்பி வந்து சொன்னபோது நீ சிரியோ சிரியென்று சிரித்தாய். ஒரு இரண்டு நாட்கள் பிரிந்திருப்பதற்காக ஒரு இரவு பூராவும் பேசினோம்.

மற்றொரு நாள்... மாலை மங்கிய நேரம்... மொட்டை மாடியில் நான் நின்று கொண்டிருக்கிறேன். உன் கொலுசுச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறேன். எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு மதியம் ஒரு குட்டித் தூக்கத்திற்குப் பிறகு முகத்தைக் கழுவிக்கொண்டு தேவதையாய் நீ... தேவி நீ... தேவலோகத்துக் கன்னிகை நீ...

என் தேவியின் கன்னம் ஏன் இப்படிச் சிவந்து கிடக்கிறது? அதிலும் ஒரு பக்கத்துக் கன்னம்? ஆச்சர்யத்துடன் உன் கன்னத்தைத் தொடுகிறேன். முதல் ஸ்பரிசம்... தொடுவதற்கு முன்னால் காமம் இல்லை. ஆச்சர்யம் மட்டுமே இருந்தது. ஆனால் ஸ்பர்சித்த தருணத்தில் எல்லாம் மாறிப் போனது. அந்த மென்மை எனக்குள் தகிப்பை உண்டு பண்ண காம மிகுதியில் உன் அதரங்களைத் தொடுகிறேன்.

ஸ்பர்சித்த விரல்களை நீ முத்தமிடுகிறாய்.

நீயும் நானும் ஒன்றேயென ஆன பிறகு இந்த உடம்பை மட்டும் ஏன் தாளிட்டு வைத்திருக்க வேண்டும்? நம் இருவர் உடலும் ஒருடலாய்க் கரையலாகாதா?

அழுதுகொண்டே கீழே இறங்கி ஓடி விட்டாய் நீ... நான் கீழே இறங்கவில்லை. உன்னைப் பார்க்க பயம். உன்னைத் துன்புறுத்திவிட்டதான குற்றவுணர்வு. அப்படியே படுத்துக் கிடக்கிறேன்.

முழு நிலவின் உதயத்தைப் பார்த்தபடியே... எப்போதென அறியாது உறங்கிப் போகிறேன்.

தட்டில் சோறு போட்டுக்கொண்டு வந்து எனக்கு ஊட்டுகிறாய். விக்கியபோது தலையில் தட்டி யாரது உன்னை நினைப்பதென்று கேட்க, வெகு தூரத்திலுள்ள என் காதலி ஒருத்தி என்று கூற, அப்படியானால் போ... போய் அவளிடமே ஊட்டிக்கொள் எனச் சொல்லி விருட்டென்று நீ திரும்பி ஒரு மூலையில் போய் நின்று கொள்ள... எழுந்து நான் உன் பின்னே வந்து காதருகில் குனிந்து தூரத்தில் இல்லை, இதோ இங்கேதான்

இருக்கிறாள் என்று கிசுகிசுக்க, திரும்பிய நீ அப்படியே என் மீது சாய, வேட்கையும் காமமும் தாபமும் வெறியாய் மாறி உன்னைக் கட்டியணைத்து முத்தம் பதிக்கிறேன்.

எத்தனை நேரம் போனதென்று தெரியவில்லை. காலமும் பௌதிக வெளியும் நம் ஞாபகத்திலிருந்து கழன்று வீழ அந்த அனுபூதி நிலையிலிருந்து நாம் எப்போது எப்படி வெளியே வந்தோம்?

காலையில் நித்திரை கலைந்த நான் 'என்ன ஒரு அருமையான கனவு' என்று சுகத்தோடு அசைபோட்டுக் கொண்டிருந்தபோது வேகமாய் ஓடி வந்த நீ 'பார்... இப்போது அம்மாவின் முகத்தில் எப்படி விழிப்பேன்? என்னை என்னவெல்லாம் பண்ணி வைத்திருக்கிறாய் நீ?' என்று உன் கன்னத்தையும் கழுத்தையும் காட்டினாய்.

அப்போதுதான் நடந்ததெல்லாம் கனவல்ல, நனவென்று புரிந்தது எனக்கு.

தொட்டாலே ரத்தம் வந்துவிடுமோ என்று எண்ண வைக்கும் உன் செக்கர் மேனியெங்கும் காமத் தழும்புகள், கன்னத்திலும் கழுத்திலும் ரத்தம் உறைந்துவிட்டது போல் முத்தத்தின் தடங்கள்.

அன்றைக்கே அத்தை என்னிடம் சொன்னார்கள். "ரவி... நீ அவளை இப்போதே திருமணம் செய்துகொள்... உனக்கு வேலை கிடைக்கும் வரை உங்கள் ரெண்டு பேரையும் என்னால் கவனித்துக்கொள்ள முடியும்."

"இல்லை அத்தை... வேண்டாம். முதலில் வேலை. அப்புறம்தான் கல்யாணம். நீங்கள் கவலைப்பட வேண்டாம். இனிமேல் ஜாக்கிரதையாக இருப்பேன்..."

"அதுக்குச் சொல்லல்லே... உங்கள் ரெண்டு பேரையும் பார்த்தா ரொம்ப பாவமா இருக்கு... நீங்களும் நீங்க படற அவஸ்தையும்... அதான் சொன்னேன்..."

என் கண்மணி... உனக்கு இப்போது குழந்தைகள் கூட இருக்கலாம். எத்தனை குழந்தைகள்? பெண்ணா? ஆணா?

அல்லது இரண்டுமா? உன் குழந்தை உன்னை மாதிரியேதான் இருப்பாள்.

குட்டி சைஸில் கண்மணி. அந்த என் குட்டி பொம்மையை நான் பார்க்க வேண்டுமே? பார்த்துத் தூக்கி முகர வேண்டுமே?

கண்மணீ... வேறு எதுவும் வேண்டாம். உன்னை ஒரே முறை... ஒரே ஒரு முறை பார்த்தால் போதும்... வேறு எதுவும் வேண்டாம்.

நீ இப்போது வேறு ஒருவருக்குச் சொந்தமானவள். அதனால்தான் உன் பெயரைக் கூட உச்சரிக்காமல் கண்மணி கண்மணி என்கிறேன். உனக்குப் புரியும். நீ இதை வாசிப்பாய். என்னை அறிந்துகொள்வாய்.

நான் உன்னுடைய மன்னிப்பை யாசிக்கவில்லை. என் தவறுக்கு மன்னிப்பும் கிடையாது.

வாழ்வே நிர்மூலமாகிவிட்ட பிறகு இனி மன்னிப்பென்ன வேண்டிக் கிடக்கிறது. இன்று நான் தனி மரமாய் நிற்கிறேன் கண்ணே... என் பைத்தியக்காரத்தனத்தினால் என் வாழ்வின் அர்த்தத்தை இழந்துவிட்டு இன்று அபத்தமாய் நின்று கொண்டிருக்கிறேன்.

ஆனாலும்...

உன் நினைவுகள் என்னை வியாபித்திருக்கும் வரை, உன் பௌதிக உருவை நான் தொலைத்துவிட்டாலும் நான் அனாதை இல்லை...

இருந்தாலும் கண்ணே... உன்னை ஒரு முறை தரிசிக்க வேண்டும். இல்லாவிட்டால் மரணத்திலும் கூட என் கட்டை வேகாது.

கண்மணி... நீ எங்கிருக்கிறாய்? எப்படி இருக்கிறாய்?

இப்படிக்கு,<br>
உனதே உனதான<br>
ரவி

கதையை எழுதி முடித்துவிட்டு, காத்துக்கொண்டிருந்த பத்திரிகை ஆபீஸ் பையனிடம் கொடுத்துவிட்டு நிமிர்ந்தேன். மனது பாரமாக

இருந்தது. ஆஷ்ட்ரேயில் அனாதையாகப் புகைந்துகொண்டிருந்த சிகரெட்டை எடுத்து உதடுகளில் பொருத்தினேன். என் கண்மணி நிச்சயமாக இந்தக் கதையைப் படிப்பாள் என்ற நினைப்பே ஒரு நிம்மதியைத் தந்தது.

புதிய பார்வை
ஜூன், 1995

# கண்ணீருண் சிறுத் தாம்பு

என் ப்ரிய ஸ்நேகிதிக்கு,

உன் பெயரை நான் அறியேன். இருந்தாலும் இந்தக் கடிதத்தை நான் உனக்கு எழுதுவதன் காரணம்... இப்போது வேண்டாம். போகிற போக்கில் நீயே புரிந்துகொள்வாய்.

முதலில் நேற்று நடந்த சம்பவத்தை நான் உனக்குச் சொல்ல வேண்டும்.

நேற்று முழுமையும் என் தனி அறையிலேயே அடைந்து கிடந்து விட்டு மாலை மங்கியதும் வெளியே கிளம்பினேன்.

எங்கே செல்வது என்பதற்கான முன் கூட்டிய திட்டங்கள் எதுவும் இல்லை. அது சாத்தியமும் இல்லை. எங்கே போவது? நண்பர்களைச் சந்திக்கவா? கடற்கரைக்கா? புத்தகச் சாலைக்கா? மது அருந்தவா? இல்லை. நான் தனிமையில் மது அருந்தியதே இல்லை.

இன்றும் மற்ற தினங்களைப் போலவே எதற்கான சாத்தியமுமற்று தனித்துக் கிடந்தது. நண்பர்களின் எண்ணிக்கையும் சிறிது

சிறிதாய்க் குறைந்து இன்று ஒன்றில் வந்து நின்றுவிட்டது.

நசீம்.

ஆனால் அவனை இன்று சந்திக்க முடியாது. நேற்றுதான் சந்தித்திருந்தேன்.

"நாம் அடிக்கடி சந்தித்துக்கொண்டிருக்கிறோம். வேண்டாம். நான் சில தினங்கள் தனித்திருக்க விரும்புகிறேன்" என்றான்.

"தனிமை உனக்குப் பிரச்சினையாக இல்லையா?"

"முதலில் பிரச்சினையாகத்தான் இருந்தது. பிறகு நான் என்னையே நேசிக்கக் கற்றுக் கொண்டு விட்டேன்."

நானும் என்னை நேசிக்கத்தான் செய்கிறேன். ஆனாலும் என்னால் தனித்திருக்க முடியவில்லை. ஒருவித சூன்ய உணர்வில் மனம் நைந்துவிடுகிறது.

"உன்னைக் கண்டு நீயே பயப்படுகிறாய். இதை இப்படியே விட்டால் தற்கொலை உணர்வாக மாறிவிடக்கூடும். இது ஒருவிதமான மனநோய். உடனே ஒரு நல்ல சைக்கியாட்ரிஸ்டிடம் கலந்து ஆலோசிப்பதுதான் நல்லது" என்றான் நசீம்.

அந்த மனநோயின் பெயரையும் ஆங்கிலத்தில் சொன்னான். எனக்கு மறந்து போய்விட்டது.

எனக்கு சைக்கியாட்ரிஸ்டுகளிடம் எந்த நம்பிக்கையும் இல்லாததால் போய் ஆலோசிக்கவில்லை. ஆலோசித்தால் இப்போதிருக்கும் மனநோய் இன்னமும் அதிவேகத்தில் முற்றி விடக்கூடும் என்ற பயமும் ஒரு காரணம். மேலும், மனம் என்ற ஒன்றே எனக்கு இருக்கிறதா என்ற சந்தேகமும் எனக்கு உண்டு. அல்லது, இருந்து கொண்டிருக்கிற மனம் அறவே மரத்துப் போயும் இருக்கலாம். மரத்துப்போன மனதை உணர்வு பெறச் செய்து வீணான பிரச்சினைகளை இழுத்துப் போட்டுக்கொள்வதும் நல்லதல்லதான்.

என் நண்பன் கண்ணன் அடிக்கடி சொல்லுவான்:

“என் கண்களை மூடினால் போதும், நான் இயேசு கிறிஸ்துவிடம் கூடப் பேசுவேன்.” ஆனால் நான் கண்ணை மூடினால் தூக்கம்தான் வருகிறது.

நேற்று நசீமைப் போய் பார்க்கலாமா வேண்டாமா என்று யோசித்துக் குழம்பியதிலேயே மதியம் வந்துவிட்டது.

நிறைய புத்தகங்கள் இருந்தும் மனம் அவற்றில் லயிக்கவில்லை. தாங்கவொண்ணாத அனாதை உணர்வு மனதைக் கவ்வ, இத்தனை பெரிய மக்கள் கூட்டத்தில் நமக்கென்று ஓர் ஆத்மா இல்லாமல் போனதைப் பற்றிய சலிப்புத் தோன்ற தூங்க ஆரம்பித்தேன். நிறைய துர்சொப்பனங்கள்.

பாலைவெளியில் தனித்து நடந்து போய்க் கொண்டிருக்கிறேன். தாகமும் அயர்வும் மிக, திசை புரியாது கலங்கி வீழ்கிறேன். என் சவத்தைப் பேர் தெரியாத பாலைவனத்துப் பறவைகள் பல கொத்தித் தின்கின்றன.

மலைகளில் தனித்து அலைந்து கொண்டிருக்கிறேன். பசுமை காணாத வறட்டு மலைகள். முட்செடிகள் என் தசையைக் குத்திக் கிழிக்கின்றன. சாம்பல் நிறத்தில் குருதி வடிகிறது.

எழுந்த பிறகு இனியும் இந்த நாலு சுவர்களுக்குள் முடங்கிக் கிடப்பது சாத்தியமற்றதாகத் தோன்றவே வெளியே கிளம்பினேன்.

நசீமின் அறைக்குப் போகலாமா? போனால் அறையில் இருக்க மாட்டான். பரவாயில்லை. சாவியை அறைக்கு வெளியே வைத்து விட்டுப் போயிருந்தால் அங்கேயே பொழுதைக் கழிக்கலாம். அவனுடைய அறையில் தனிமைப் பாரம் மூச்சு முட்ட அழுத்துவதில்லை. அவனுடைய சுவாசக் காற்றினால் நிரம்பிய அந்த அறை நான் அங்கே தனித்திருந்தாலும் சக மனித ஜீவி ஒன்றின் அண்மையையும், இருப்பையும் உணர்த்திக் கொண்டே இருப்பது போலிருக்கும்.

ஆனால் நசீம் அறையில் இருந்துவிட்டால் எனது வரவை எப்படி எதிர்கொள்வானோ என்று திடீரென ஓர் எண்ணம் தோன்ற மியூசிக் அகாதமி நிறுத்தத்திலேயே பஸ்ஸிலிருந்து

இறங்கிக் கொண்டேன்.

நண்பர்கள் இல்லாத இந்த மாலைப்பொழுதை இனி என்ன செய்ய?

உயிரினும் உயிராயிருந்த நண்பன் சுகதன் "இனிமேல் நாம் நண்பர்களாயிருப்பது சாத்தியமில்லை" என்று சொல்லி உறவை முறித்துக் கொண்டான். நான் இடதுசாரிகளைக் கொச்சைப்படுத்துகிறேன் என்பது அவன் புகார். ஆனால் 'அந்தக் கதைகளில் முன் வைக்கப்பட்டிருப்பவை எங்களது தலையாய பிரச்சினைகள்' என்று என் மதிப்புக்குரிய சில இடதுசாரி நண்பர்கள் என்னிடம் சொன்னதை நான் சுகதனிடம் தெரிவிக்கவில்லை.

"இனி நமக்குள் எவ்விதத் தொடர்பும் வேண்டாம்" என்று அவன் தன்னிச்சையாக இந்த நட்பை முடிவுக்குக் கொண்டுவந்திருந்தான். மனித உறவுகளைவிட கொள்கைப் பிரகடனங்களும், ரத்தமும் சதையுமற்ற வெற்றுக் கோட்பாட்டுக் கூச்சல்களும் அவனுக்குப் பெரிதாகத் தோன்றியிருக்கலாம். அல்லது இதையே அவன் வேறோர் கோணத்திலிருந்து பார்த்து அந்த முடிவுக்கு வந்திருக்கலாம். வாக்குமூலத்திற்குக் கூட அருகதையற்றவனாக என்னை அவன் தரப்படுத்தி இருக்கலாம்.

எப்படி அந்த உணர்வு வந்தது என்றே அறியாமல் நான் விரைந்து வந்து கொண்டிருந்த அந்த நான்கு சக்கர வாகனத்தின் முன்னே விழுந்தேன். நல்வினையா தீவினையா என்று தெரியவில்லை. மிகச் சரியாக அந்த நேரத்தில் சிக்னல் விழ அந்த வாகனம் கிறீச்சிட்டபடி நின்றது. வாகனத்திலிருந்து வெளியே எட்டிப்பார்த்து 'ஓரமாக வரக்கூடாதா?' என்று கோபமாகக் கேட்க ஆரம்பித்த அந்தக் கனவான் எனக்குக் கீழே எதையோ பார்த்துவிட்டு "ஸாரி பிரதர்... இந்த ஆளுங்களுக்கு குடிச்சிட்டு விழுந்து புரள இந்த இடம்தானா கிடைச்சிது? இந்த ஆளால்தான் தடுக்கி விழுந்திட்டீங்களா? சிக்னல் விழாமல் இருந்திருந்தால் இந்நேரம் உங்களுக்கு ஏதாவது ஆகியிருக்கும்" என்றார்.

அப்போதுதான் நான் கீழே கவனித்தேன். சாலையோரத்தில் ஒரு

ஆள் மயங்கிய நிலையில் விழுந்து கிடந்தான். அவனைத் தூக்கி பிளாட்ஃபாரத்தில் கிடத்தினேன். இருள் கவியத் துவங்கியிருந்தது. வாகனங்களைக் கட்டுப்படுத்தி அனுப்பிக்கொண்டிருந்த போலீஸ்காரரையே கவனித்தபடி நின்றுகொண்டிருந்தேன். எட்டுத் திசைகளில் சீறியபடி சென்றுகொண்டிருந்தன வாகனங்கள்.

திட்டமிடப்படாத ஒரு மாலைப் பொழுதைப் பற்றி ஒரு ஆஸ்திரேலிய எழுத்தாளன் எழுதிய கதை ஒன்றும், ஆத்மாநாமின் தற்கொலையும் ஞாபகத்திற்கு வந்தன.

இதே போன்றதொரு மாலைப் பொழுதில் தனிமையில் வந்து கொண்டிருந்தபோது முன்பின் அறிந்திராத ஒரு பெண்ணைச் சந்திக்க நேர்ந்து அவளுடன் சிநேகம் கொண்டது பற்றி எழுதியிருக்கிறான் அந்த ஆஸ்திரேலிய எழுத்தாளன்.

இங்கு தமிழ்நாட்டில் இம்மாதிரியான சாத்தியக்கூறுகள் எதுவும் கிடையாது என்பது மனதில் தைத்தது.

இங்கும்தான் எத்தனையோ ஆண்கள், பெண்கள், நூறு, ஆயிரம், லட்சம், கோடி என்று... இந்த ஜன சமுத்திரத்தில் தனித்துப்போன ஒரு துகள். சே.... Self pity... Self pity... Self pity is nonsence.

ஒரு ஐந்து வயதுச் சிறுமி சிக்னலில் நின்றுகொண்டிருந்த வாகனங்களின் ஊடே நெளிந்தும் வளைந்தும் ஓடி ஓடி மாலை தினசரிகளை விற்றுக்கொண்டிருந்தாள்.

மற்றொரு சிறுமி – செய்தித்தாள் விற்றுக்கொண்டிருந்தவளை விடவும் சிறியவள் – ஒரு வேளை அவளுடைய சகோதரியாகவும் இருக்கலாம். சாலையின் ஓரத்தில் முன்னங்கால்களை மடித்து உட்கார்ந்து நெற்றி தரையில் தொட்டுத் தொட்டு நிமிர தொழுகை செய்வதுபோல் இரண்டு கைகளையும் பக்கவாட்டில் இணைத்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தாள்.

"என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் இங்கே?" என்றவாறு என் தோளில் தோழமையுடன் விழுந்தது ஒரு கை.

திரும்பிப் பார்த்தேன்.

நடேசன். எப்போதேனும் சந்திக்கக்கூடிய ஒரு நண்பர்.

"ஒன்றும் திட்டமில்லாமல் நின்று கொண்டிருக்கிறேன்."

"ஆச்சரியம்! நானும் எந்தத் திட்டமும் இல்லாமல்தான் நடந்து கொண்டிருக்கிறேன்."

தேநீர் அருந்தலாம் என்று நடந்தோம்.

அலுவலகத்தில் இன்று அவருடைய நெருங்கிய தோழி ஒருத்திக்கு வேற்றூருக்கு மாற்றலாகிவிட்டது பற்றியும், அதனால் மனம் சரியில்லாமல் பிரிவு உபசார விழாவில் கூட கலந்து கொள்ளாமல் இப்படி மனம் போனபடிக்கு நடந்துகொண்டிருப்பதாகவும் சொன்னார்.

"இன்று காலையில் அவள் அலுவலகத்தில் நுழைந்து என்னைப் பார்த்த போது அவள் கண்கள் பனித்திருந்தன. ஷீ இஸ் மேரிட், யூ ஸீ..."

சிறிது நேரம் எதுவும் பேசாமல் நடந்துகொண்டிருந்தோம். காலையில் பார்த்த பனித்த கண்களையே அவர் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

"சமீபத்தில் என்ன சினிமா பார்த்தீர்கள்?" என்று கேட்டார் சட்டென்று.

"சினிமா பார்க்கவில்லை. நாடகம் பார்த்தேன். வீணா பாணி சாவ்லாவின் பீமா. பாரதக் கதையை பாரதக் கதையாகவே திரும்ப நடித்துக் காட்டாமல் அதை ஒரு சம காலத்திய நாடகமாக மாற்றியிருந்தார் இயக்குனர். போர் முடிந்துவிட்டது. மரண வெளிப் பிரதேசமாக மாறிப் போயிருந்தது பூமி. எதிரிகளைக் கொன்றாகி விட்டது. பலிகளும் ஏராளம். சாதனை முடிவில் பீமனுக்கு மகிழ்ச்சி இல்லை. தனிமையுணர்வும் விரக்தியும் மிஞ்ச எல்லையற்ற சூன்ய வெளியில் தானொரு துரும்பாய் நிற்பதை உணர்கிறான் பீமன். இத்தனை சாவுகளும் எதன் பொருட்டு? இதற்கெல்லாம் அர்த்தமென்ன? இந்த நாசகாரப் பேரழிவில் தனது இடமென்ன? தான் வேட்டையாடிய முதல்

மிருகத்தை நினைத்துப் பார்க்கிறான்... ஆம்... இப்போது தான் வேட்டையாட வேண்டிய மிருகம் தனக்குள்ளே இருப்பதை உணர்கிறான்..."

பேசிக்கொண்டே வந்ததில் மேம்பாலம் வந்துவிட்டது.

"இனிமேல் என்ன காஃபி? கமான். ஐ வில் டேக் யூ டு எ டிரிங்க்..." என்றார் நடேசன்.

நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலைக்குள் நுழைந்தோம். வருமான வரி அலுவலகத்தின் எதிரிலிருந்த பஸ் நிறுத்தத்தின் அருகே வந்தபோது என் நண்பன் மாணிக்கம் ஒரு பெண்ணுடன் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். அது அவனுடைய தோழியாக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம். என்னை அவன் பார்த்த பிறகுதான் திரும்பிக்கொண்டானா அல்லது எதேச்சையாகத் திரும்பினானா என்று அனுமானிக்க முடியாதபடி திரும்பி அந்த பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்தான். நானும் அவனைக் கண்டுகொள்ளாமல் நடேசனுடன் பேசிக்கொண்டே நடந்தேன்.

பக்கத்திலிருந்த ஒயின் ஷாப்பில் அரை பாட்டில் வாங்கிக்கொண்டு கடையின் எதிரிலிருந்த திறந்தவெளி பாரில் ஒரு இருட்டு மூலையைக் கண்டுபிடித்து அமர்ந்தோம்.

திடீரென்று மதுரகவியின் பாசுரம் ஞாபகத்திற்கு வந்தது, 'கண்ணி நுண் சிறுத் தாம்பு...' எவ்வளவு அடர்த்தியான வார்த்தைகள்!

ஆனால் எனது உலகமோ தட்டையான செறிவற்ற வார்த்தைகளைக் கொண்டதாக இருக்கிறது. மிகத் தீவிரமாய் நான் உணர்ந்த தனிமையை உனக்கு எழுதும்போது அந்த அனுபவம் நீர்த்துப் போன வார்த்தைகளின் வழியே கெக்கலித்தபடி தப்பியோடிவிடுகிறது. உணர்வுகளின் ஊற்றுக்கண்ணை நோக்கிச் செல்ல முடியவில்லை. பதிவுகள் அழுத்தமானதாக இல்லை. இருந்தாலும் எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன். வலிமையற்ற எனது வார்த்தைகளைக் கொண்டு எனது வலிகளை மெலிதாகச் சொல்ல விரும்புகிறேன். இதன் மூல வேர்களையும் கரு மையங்களையும் தேடிப் பிடித்து புரிந்துகொள்ள முயற்சி செய்.

என் ப்ரிய ஸ்நேகிதி... உன்னை நான் அறியேன்... என்னையும் நீ அறியாயோ அல்லவோ? இருந்தாலும் கண்ணில் விழும் சிறு துரும்பை விடவும் மெலிதான தூரம்தான் நமக்கிடையே... இதைக் கடந்து வந்து நீ உன்னை என்னிடம் சொல்... நான் என்னை உன்னிடம் சொல்கிறேன்... வா...

கணையாழி

மே, 1996

## பிள்ளைப்பூச்சி

சித்தியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. உடனடியாக இப்போது சிதம்பரம் கிளம்பியாக வேண்டும். "ஆஸ்பத்திரியில் என்னை அட்மிட் பண்ணியிருக்கிறார்கள். உடனே உன்னைப் பார்க்க வேண்டும்." இவ்வளவுதான் கடிதத்தில் கண்டிருந்தது. அதுவும் சித்தியின் கையெழுத்திலேயே, ஏதோ நடந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் சித்தப்பாதானே கடிதத்தை எழுதியிருக்க வேண்டும்? ஆஸ்பத்திரியிலிருந்து சித்தியே எழுதுவது என்றால்...? உடனே பதினைந்து நாள் விடுப்பு எடுத்துக்கொண்டு கிளம்பினேன்.

"வாடா... என்ன, லெட்டர் போட்டிருந்தாளா?" என்னைப் பார்த்ததும் ரொம்ப சாவகாசமாக வரவேற்றார் சித்தப்பா. "இல்லை இல்லை... மல்லிகா எழுதியிருந்தாள்..." "ஆமாண்டா... எவனாவது காதில் பூ வைத்துக்கொண்டு வருவான்... அவன்ட்ட போய்ச் சொல்லு... மல்லிகா எழுதியிருந்தாளாம்... அவளுக்கு மேல் கள்ளமாச்சே நீ... சரி சரி... வா."

அத்துடன் பேச்சை வெட்டிக்கொண்டு உள்ளே போய் சூட்கேஸை வைத்தேன். குளித்துவிட்டு ஆஸ்பத்திரி கிளம்ப வேண்டும்.

வீட்டில் பாட்டியையும் காணோம். ம்... அவள் ஆஸ்பத்திரிக்குப் போயிருப்பாள். சித்தியை அவள் கவனித்தால்தான் உண்டு. வேலைக்காரப் பாட்டி. இருந்தாலும் என் நினைவு தெரிந்த திலிருந்து இங்கேயே இருக்கிறாள். குடும்பத்தில் ஒருத்தியாக ஒன்றிவிட்டாள். இந்த ஆள் ஆஸ்பத்திரி பக்கமே தலைகாட்டி யிருக்கமாட்டார். நெஞ்சில் ஈரமில்லாத ஜென்மம். ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' பண்ணுகிற அளவுக்கு என்ன விஷயம் என்று தெரியவில்லை. இவரிடம் கேட்டால் குதர்க்க பதில்தான் வரும்.

குளித்துவிட்டு வந்தேன். தயாராக கையில் காப்பியோடு வந்தார் சித்தப்பா.

எனக்கு இவரைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. எனக்காக இவரே காப்பி போட்டிருக்கிறார். ஊருக்கு வந்தாலும் சரி, ரொம்பப் பதவிசாக, ஆட்டுக்குட்டி மாதிரி நடந்துகொள்வார். சகலர்தான் என்றாலும் கூட ஒன்றாகப் பிறந்தவரைப் போல் அண்ணா, அண்ணா என்று அப்பாவின் மேல் உயிரை விடுவார். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஆச்சரியமாக இருக்கும். (இப்படி இருக்கிற ஆளா நம் பெண்ணைப் போட்டு சித்திரவதை பண்ணுகிறார்?) ஊரில் இருக்கும்போது சித்தியிடமும் ரொம்ப நல்ல மாதிரியாக நடந்துகொள்வார்.

காப்பியை வாங்கிக் குடித்துவிட்டுக் கிளம்பினேன். "நீங்க வர்றீங்களா சித்தப்பா?" "ஆமாண்டா, அவதான் என்னமோ இல்லாத கூத்தெல்லாம் ஆடறான்னா இவனுக்கும் வேற வேலையில்லை... சும்மா எரிச்சலைக் கிளப்பாதடா."

நான் பதில் பேசாமல் கிளம்பிவிட்டேன்.

சித்தியைப் பார்த்து அதிர்ந்துபோனேன். தலையில் பெரிய கட்டு. முகமெல்லாம் வீங்கிப் போயிருந்தது. பாட்டி பெரிதாக சத்தம் போட ஆரம்பித்துவிட்டாள். "வாய்யா... வந்து பாரு. அவன் பண்ற அநியாயத்தை... என்னமா மாட்டை அடிக்கிறா மாதிரி அடிச்சிப் போட்டுட்டான். பாவி. நீ அனுபவிச்சுத்தாண்டா போப்போறெ. பாரு. எங்கண்ணு முன்னாலெய்யா... கையெ மடக்கிக்கிட்டு விட்டான் பாரு, அப்படியே சுருண்டுட்டா

பொண்ணு. விழுந்ததிலெ முத்தத்து மோடையிலெ தலை பட்டு... ஏங்கேக்கிற போ எனக்கே மயக்கம் வந்திடுச்சு... ஓரே ரத்தம். அடிச்சுப்போட்டுட்டு அவம்பாட்டுக்கு போயிட்டான். கொலகாரப் பாவி. அப்புறமா நம்ப மல்லிகா அவுங்க அம்மாதான் டாக்ஸி புடிச்சி கொண்டு வந்து..."

சித்தி பாட்டியைப் பார்த்து அமர்த்தினாள். பாட்டி அப்போதும் நிறுத்தவில்லை. "இவளுக்கும் வேணும் சண்டாளி. சொன்னா கேக்றாளா, அந்த ராட்சசன்ட்ட வாய் குடுக்காதடீன்னா? ஏதோ எழுதிக்கிட்டு இருந்திருக்கா. அவன் வந்து 'எவனுக்குடீ எளுதிக்கிட்டுருக்கே'ன்னானாம். இவ ஏதோ சொல்லியிருக்கா. அவ்வளவுதான், இப்படி இங்க கெடக்கா... தாங்குற ஓடம்பா இது... பாரு. எனக்கு நெஞ்செல்லாம் எரியுது..."

நான் சித்தியைப் பார்த்தேன். கலங்கியிருந்தது கண்கள். அருகில், போய் உட்கார்ந்தேன். "எப்பய்யா வந்தே? ஆபீஸ்லெ லீவு கெடச்சுதா?" "வந்து ஒரு மணி நேரம் இருக்கும் சித்தி. வீட்டுக்குப் போய்விட்டு வர்றேன்."

"ராஜா... என்னாலெ முடியலெய்யா... ரொம்ப பயம்மா இருக்கு. இப்படியே இருந்தா சீக்கிரம் செத்துருவேன். அடிக்கடி எதையாவது தின்னுட்டு செத்துப்போய்ட்டா என்னான்னு தோணுது. என்னாலே இனிமே தாங்க முடியாது ராஜா. ஒன்னோட நானும் மெட்ராஸ் வந்திடவா? ஒனக்கு சமைச்சுப்போட்டுக்கிட்டே காலத்தைத் தள்ளிருவேன்..."

மெதுவான குரலில் பேசினார்கள் சித்தி. "சரி சித்தி... அதைத் தவிர வேற வழியில்லை. இந்த அளவுக்கு ஒரு மனுசன் அடிக்கிறதுன்னா என்ன அர்த்தம்? ஒன்று, என்னோடு மெட்ராஸ் வந்துவிடுங்கள். இல்லாவிட்டால் நாகூர் போய் நம் வீட்டிலேயே இருந்துவிடுங்கள். இப்படி இந்த மனிதனோடு குடும்பம் நடத்தியது போதும்."

"ஏய்யா, நான் உன்னோடு மெட்ராஸ் வந்துவிடக் கூடாதா...?"

ரொம்ப கெஞ்சுதலோடு எதையோ யாசிப்பது போல் சித்தியின் கண்கள்... சுங்குத்தானில் அடிபட்டு விழுந்த சின்னக் குருவி

சிறகை அடித்துக்கொண்டு உயிருக்குத் துடிப்பதைப் போல் அந்தக் கண்கள்...

"வந்துவிடுங்கள் சித்தி. அதைவிட வேறென்ன எனக்கு வேணும்? இனிமேல் நீங்கள் இங்கு இருக்க முடியாது... ம்... என்ன அரக்கத்தனமா அடிச்சிருக்கார்."

அந்த வீங்கிய உதட்டில் விரலை வைத்தேன். "அழாதய்யா ராஜா, போய் வீட்டில் கொஞ்ச நேரம் தூங்கிட்டு அப்புறம் சாயங்காலமா வா. சரி சாப்பிட்டியா?" "சித்தப்பா காப்பி போட்டு கொடுத்தாங்க". "ம்.. அதெல்லாம் செய்வார். நான் மட்டும்தான் அவருக்கு பிசாசா தெரியிறேன். சரி. மத்தியானம் ஹோட்டல்ல சாப்பிட்டுக்க. நான் இன்னும் நாலு நாள்ள வீட்டுக்கு வந்திருவேன். உனக்கு லீவ் இருக்குல்லெ?" "இருக்கு சித்தி. பதினைஞ்சு நாள் போட்டிருக்கேன்."

நான்கு நாட்களும் இப்படியே கழிந்தது. காலையிலும் மாலையிலும் சித்தியை ஆஸ்பத்திரியில் பார்ப்பது. சித்தப்பாவுடன் ஹோட்டல் சாப்பாடு. அவர் தினமும் சினிமாவுக்குக் கூப்பிட்டார். ஒரு நாள் போனேன். ஏதோ ஒரு தமிழ்ப்படம். சகிக்க முடியாத தலை வேதனை. சித்தப்பா ரசித்துப் பார்த்தார் என்று தோன்றியது. சிரிப்புக் காட்சிகளில் அட்டகாசமாக வாய்விட்டுச் சிரித்தார். எனக்கு சிரிப்பே வரவில்லை.

இன்றைக்கு சித்தி டிஸ்சார்ஜ் ஆகி விட்டார்கள். போய் அழைத்துக் கொண்டுவந்தேன். ஏற்கனவே இருந்த பூஞ்சை உடம்பு இப்போது பாதி உடம்பாகி விட்டது. பாட்டி சித்தியை சமைக்கவிடவில்லை. ஆனாலும் பரிமாறுவது சித்திதான். "பேசாமல் படுத்துக் கிடங்களேன். நாங்கள் செய்து கொள்கிறோம்" என்றேன். கேட்கவில்லை.

அப்போதும் கூட சித்தப்பா பேசவில்லை.

சித்தி வீட்டுக்கு வந்து நான்கு நாட்கள் கழிந்த பிறகு கேட்டேன்.

"எப்ப வர்றீங்க சித்தி?"

"..."

"மெட்ராசுக்குத்தான்."

"சட்டென்று என்னை நிமிர்ந்து பார்த்தார்கள்."

"இங்கே வா."

"போனேன்."

"அதை இன்னம் நினைச்சுக்கிட்டிருக்கியா என்ன? அதெல்லாம் நடக்கிற காரியமா? நீ வாழப்போற பிள்ளை. கல்யாணத்துக்கு வேற அப்பா பேசிக்கிட்டிருக்காங்க, நாளைக்கு உன் பெண்டாட்டி வந்தப்புறம் நான் அங்கே இருக்கிறதெல்லாம்..."

"அதெல்லாம் இல்லை சித்தி. நான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை. நீங்கள் வந்துவிடுங்கள்."

சித்தி ஒரு பெருமூச்சுடன் மறுபடியும் அதையே சொன்னார்கள்.

"அதெல்லாம் நடக்கிற காரியமா ராஜா?"

"எல்லாம் நடக்கும். உங்கள் கையில்தான் இருக்கு."

"இல்லய்யா, அது நம் கையில் இல்லை."

"ம்... நான் சொல்லி நீங்கள் எதைக் கேட்டிருக்கிறீர்கள்? இந்த மாதிரி அடி வாங்கிக் கொண்டு இங்கேயே இருக்கிறதுன்னா இது என்ன உடம்பா, கல்லா?"

திடீரென்று சம்பந்தமே இல்லாமல் சொன்னார்கள் சித்தி.

"நான் ரொம்பப் புண்ணியம் செஞ்சிருக்கணும்."

"பாவம்னு சொல்லுங்க சித்தி. இந்த மனிதரிடம் இப்படி வந்து மாட்டிக்கொண்டதுக்கு..."

"நான் அதைச் சொல்லலை ராஜா."

"பின்னே?"

"உனக்குத் தெரியலே?"

சொல்லிவிட்டு என் கண்களையே பார்த்தார்கள் சித்தி. அந்தப் பார்வை என் கண்களின் வழி என் உடம்பு பூராவிலும் ஊடுருவிப் பாய்ந்தது. எனக்கு ஏதோ புரிகிற மாதிரியும், ஆனால் அதே சமயம் புரியாதது மாதிரியும் இருந்தது.

திடீரென்று நான் கேட்டேன்.

"எப்ப சித்தி நான் ஊருக்குப் போறது?"

"ஏன்? அதுதான் பதினைந்து நாள் லீவ் என்று சொன்னியே? அதுக்குள் என்ன?"

"இல்லை சித்தி... இவ்வளவு தூரம் வந்துவிட்டு நாகூருக்குப் போகாமல் திரும்புவதா? நாளைக்குக் கிளம்பலாம்னு பார்க்கிறேன்."

"என்னை இங்கே இவரிட்ட இப்படியே விட்டுட்டா?"

"மெட்ராஸ் வர்றீங்களா?"

"உனக்கு எல்லாம் ரொம்ப சுலபமா இருக்கு ராஜா. சரி நாளைக்குப் போகவேண்டாம். இன்னும் ரெண்டு நாள் இருந்துட்டுப் போ."

ஒரு பெருமூச்சுடன் சொல்லிவிட்டு என் மடிமேல் படுத்துக் கொண்டார்கள். உடம்பு குலுங்கியது. 'ம்... இப்படி குழந்தை மாதிரி இருந்தால் நான் என்ன பண்ணட்டும்? ஒரு முடிவும் எடுக்க மாட்டாமல் இப்படி அவஸ்தைப் பட்டுக்கொண்டு... இதுக்கு என்னதான் வழி?'

ஆனால் சித்தி சொன்ன மாதிரி இரண்டு நாள் தங்கியிருக்க முடியாமல் ஒரு சம்பவம் நடந்தது. இனிமேல் இந்த வீட்டுக்கு வருவது என்பது கூட எவ்வளவு தூரம் சாத்தியம் என்று புரியவில்லை. ஆனால் சித்தாப்பாவின் மனம் விஷமாகி விட்டது என்பது மட்டும் புரிந்தது. நடந்தது இதுதான்.

சித்தப்பா லீவ் போட்டுவிட்டு வீட்டில் இருந்தார். அந்தச்

சமயத்தில் ரேடியோவை மும்முரமாக ரிப்பேர் பண்ணிக் கொண்டிருந்தார். அடுக்களையிலிருந்து சித்தி கையைக் காட்டினார்கள். உள்ளே வரச் சொல்லி போனேன்.

“கண்ணை மூடிக்கொள்.”

“ம்.”

“வாயைத் திற.”

தம்ரூட், எனக்கு ரொம்பப் பிடித்த பண்டம்.

“ஏது சித்தி?.”

“மல்லிகா அவுங்க அப்பா நாகூர் போயிருந்தாராம். அந்தப் பெண் கொண்டுவந்து அண்ணனுக்குக் கொடுங்கள் என்று கொடுத்து விட்டுப் போனாள். சரி சரி... இந்தா இதையும் வாங்கிக் கொள்”

மெதுவான குரலில் சொல்லிக்கொண்டே இன்னும் கொஞ்சம் தம்ரூட்டையும் தர வந்தார்கள். வாங்கிக் கொள்ளாமல் நானும் மெதுவாகவே கேட்டேன்.

“ஏன் சித்தாப்பாவுக்குக் கொடுக்கவில்லை?”

“ஆமா... அவருட்ட கொடுத்தா குப்பையிலெ தூக்கி எறிவாரு. சரி, உன் விசாரணையெல்லாம் அப்புறமா வச்சுக்கலாம். முதல்லெ இந்தா... ஆ...”

தின்றுவிட்டு வாயைத் துடைத்துக்கொண்டே வந்தேன். அப்புறம் கொஞ்ச நேரம் கழித்து போஸ்ட் ஆபீசுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தால் வீட்டில் ரகளை நடந்துகொண்டிருந்தது. அடுக்களையில் சித்தப்பாதான் கத்திக்கொண்டிருந்தார். நான் வந்ததைக் கவனிக்கவே இல்லை...

“அவந்தான் தொடச்சிக்கிட்டே வந்தானடீ... நான் ஒருத்தன் குத்துக்கல்லாட்டம் வீட்டில் இருக்கும்போதே இந்தக் கூத்து அடிக்கிறியா நீ? அப்படின்னா ஊரன்லெ தினவெடுத்துப் போச்ச

உனக்கு, ம்...?"

"என்னங்க அத்தான் இது? நான் அதுக்கு..."

"எதுத்துப் பேசாதடீ... பேசினே இங்கே கொலை விழும். அத்தானாம் அத்தான். அவுசாரிக்கு ஊரெல்லாந்தான் அத்தான்"

அதற்கு மேல் என்னால் கேட்டுக்கொண்டிருக்க முடியவில்லை. 'சித்தப்பா' என்று கத்தி விட்டேன்.

"என்னால் ஒன்றும் பிரச்சனை வேண்டாம் சித்தப்பா. நான் இந்த நிமிஷமே கிளம்பிடுறேன்."

சொல்லிவிட்டு சூட்கேசில் எல்லாவற்றையும் திணித்துக்கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்து விட்டேன். அழுதுகொண்டே சித்தி அறைக்குள் போய்விட்டது கண்முன்னால் நின்றது. சித்தப்பா ஒன்றுமே பேசவில்லை. பாட்டிதான் "இனிமேல் இந்த வீட்டில் என்னால் இருக்க முடியாதுடா ராஜா... அப்பாவிடம் ஒரு வழி பண்ணச் சொல்லு" என்றார்கள்.

நெஞ்சே நின்று போவது மாதிரி ஒரு பயம் கப்பென்று அடைத்தது. 'இனிமேல் சித்தியை உயிருடன் பார்க்க முடியுமா?'

சித்தியை இந்த நிலைமையில் விட்டுவிட்டு வந்துவிட்டது மகா பாதகம்தான். இப்படி விட்டு வந்திருக்கக் கூடாது. அந்த உடம்பு இனி ஒரு அடியைக் கூட தாங்காதே; இப்போது என்ன செய்வது?

எப்படியாவது சித்தியை சமாதானம் பண்ணி மெட்ராசுக்கு அழைத்துப் போகாமல் இப்படி ஒரு அரக்கனிடம் விட்டுவிட்டு பஸ் ஸ்டாண்டில் வந்து நிற்கிறேன். இதைவிட தற்கொலை செய்து கொண்டு செத்துத் தொலைந்தால் என்ன? நாகூர் பஸ் வந்தது. ஏறிக்கொண்டேன். ஊருக்குப் போய் உடனே அப்பாவை அனுப்பி அழைத்துவரச் சொல்லிவிட வேண்டியதுதான். இதில் தாலி வேறு. மயிரை நக்கின தாலி... அறுத்து அவன் மூஞ் சியில் விட்டெறிந்துவிட்டு வரவேண்டாம்?

வீட்டுக்கு வந்து அப்பாவிடம் சித்தி படுகிற பாட்டைச் சொன்னேன். போய் உடனே அழைத்துக் கொண்டு வந்தால்தான்

உயிரோடு பார்க்க முடியும் என்பதையும் சொன்னேன். ஆனால் எனக்குப் பெரிய ஏமாற்றம். அப்பா கிளம்பவில்லை. அம்மாவிடம் போய் கேட்டார்கள்.

“ஏன் பங்கஜம்! நான் போய் அழச்சிக்கிட்டு வர்றது சரியா யிருக்குமா? அவர் என்ன நெனச்சிக்குவாரு?”

இப்படி தயங்கிக்கொண்டே இருந்ததில் ஒரு நாள் கழிந்தது. மறுநாள் அம்மாவிடம் போய்க் கத்தினேன்.

“என்னம்மா இது? அங்க அவுங்க சாகக்கெடக்கிறாங்க. அப்பா என்னன்னா மொறை கிறையெல்லாம் பார்த்துக்கிட்டிருக்காங்க? போய் தங்கி இருந்திட்டாவது அழச்சிக்கிட்டு வரச் சொல்லுங்க நீங்க...”

அன்றே கிளம்பிப்போனார்கள் அப்பா.

எனக்கு பயம் விட்டபாடு இல்லை. ஓடிவந்துவிட்டது மனசைக் குத்திக்கொண்டே இருந்தது. ஆனால் நான் சென்னைக்குக் கிளம்புகிற அன்று அப்பாவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதைப் படித்த பிறகுதான் மனசு நிம்மதியானது.

அப்பா எழுதியிருந்தார்கள். சித்தப்பா ரொம்ப நல்லமாதிரி நடந்து கொள்கிறாராம். சித்தியிடம் அன்றைக்கு நான் கிளம்பி வந்த அன்று அதுக்கு மேல் ஒன்றும் பேசவில்லையாம். சித்தியே 'லீவில் வந்து தங்கியிருந்த பிள்ளையை விரட்டி அனுப்பிவிட்டார்' என்று சொல்லிக் கொண்டிருந்ததற்குக்கூட ஒன்றுமே சொல்லவில்லையாம்.

நிம்மதியாய் நஸீமுடன் ஊர் சுற்றிவிட்டு சென்னை கிளம்பினேன், அன்று இரவு.

ஒரு மாதம் எந்தக் கவலையுமில்லாமல் கழிந்தது. சித்தியும் நாகூரில்தான் இருக்கிறார்களாம். ஒரு நாள் சித்தியிடமிருந்து கடிதம் வந்தது. ('உன்னைப் பார்த்து ரொம்ப நாள் ஆனது மாதிரி இருக்கு. ஒரு ரெண்டு மூணு நாளாவது வந்து தங்கிவிட்டுப் போவாயா?')

இரண்டாம் சனிக்கிழமைக்காகக் காத்திருந்து மூன்று நாள் லீவ் எடுத்து ஐந்து நாளாக ஆக்கிக்கொண்டு ஊருக்குக் கிளம்பினேன்.

ஒரு மாதத்தில் சித்தியின் உடம்பு கொஞ்சம் தேறித்தான் இருந்தது. ஆனால் எனக்குத்தான் ஊருக்குப்போன அன்றே ஒரு வினோதமான வியாதிபிடித்துக் கொண்டு விட்டது. அதை என்னவென்று சொல்வது?

தூங்குவதற்குப் படுக்கிறேன். லேசாகக் கண் அயரும் சமயத்தில் யாரோ வந்து மேலே அமுக்குவது மாதிரி இருந்தது. உடனே பயந்துபோய் அம்மா என்று கத்த வாயெடுத்தேன். அப்போது தான் என் பயம் அதிகமானது. வாயையே திறக்க முடியவில்லை. எழுந்துவிடலாம் என்று நினைத்தாலும் கை காலை அசைக்க முடியவில்லை. தூக்கக் கலக்கமெல்லாம் பறந்துபோய் விட்டது. அப்போது என் முழுப் பிரக்ஞையில்தான் இருக்கிறேன். ஆனாலும் வாயைத் திறக்க முடியவில்லை. கை காலை அசைக்க முடியவில்லை, யாரோ பிடித்து அழுத்துகிற மாதிரி இருந்தது. அதுவும் ஓர் அருவமாக. என்னால் ஒரு எதிர்ப்பையும் காட்ட முடியாமல் போனதும் கொஞ்சம் நானே என்னை நிதானப்படுத்திக்கொண்டு எழுந்து கொள்ளவோ, அல்லது கை கால்களை அசைக்கவோ முயற்சிக்காமல் அப்படியே படுத்திருந்தேன். ஒரு பத்துப் பதினைந்து நிமிடம் கழித்து மிக மெதுவாக கையை அசைத்துப் பார்த்தேன். அசைந்தது. அப்புறம்தான் 'அம்மா' என்று கூப்பிட்டேன். கூப்பிட முடிந்தது.

சித்திதான் "என்னப்பா ராஜா, தண்ணி வேணுமா?" என்று கேட்டார்கள். திண்ணையிலேயேதான் உட்கார்ந்திருந்தார்கள் போலிருக்கிறது. நான் உடனே அரக்க பரக்க எழுந்து சித்தியிடம் விஷயத்தைச் சொன்னேன். சித்தி அம்மாவை எழுப்பினார்கள். 'அமுக்குப் பிசாசுதான் இது' என்றார்கள் அம்மா, மிக நிச்சயமாக.

"அதுக்குத்தான் சொல்றது... சொன்னா கேக்கிறானா? தலச்சம் புள்ளடா, தனியா போவாதே வராதேன்னா கேக்குறதில்லை. படிச்சுப்புட்டாரு பெருசா. நாளைக்கு காலையிலே எழுந்ததும் வஹாப் சாபெ போய் மொதல்ல பாரு, வியாக்கியானம்லாம் பேசிக்கிட்டு நிக்காம..."

எனக்கு ஒன்றும் புரியவில்லை. பிசாசாவது மண்ணாங்கட்டியாவது. ஆனால் இப்போது அனுபவித்த இந்த வேதனை... இதுக்கு என்ன அர்த்தம்?

காலையில் நாலு மணிக்கு பஸ் ஸ்டாண்டிலிருந்து வந்து கொண்டிருந்தபோது நடந்த ஒரு சம்பவம் சம்பந்தமில்லாமல் நினைவில் வந்தது.

தெரு விளக்கெல்லாம் அணைந்திருந்தது. தும்ப மடத்தெரு வந்து திரும்பும்போது அந்த முக்கில் ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். என்னைப் பார்த்துவிட்டும் எழுந்திருக்கவில்லை. எனக்குக் கோபம் வந்தது.

"யாரது? ஆள் வாரது தெரியலை? நடுத்தெருவுதான் கிடைச்சுதா ஒக்கார்றதுக்கு?"

இதுக்கும் பதிலே இல்லை. அந்தப் பெண்ணும் எழுந்து கொள்ளவில்லை. எனக்குச் சந்தேகம் வந்தது. இப்படியும் ஒரு பெண் நம் தெருவில் யார் இருக்க முடியும்?

'ஒரு வேளை, அது பெண்தானா? அல்லது பன்றி மாதிரி ஏதாவது நின்றுகொண்டிருக்கிறதா? இல்லையில்லை பெண்ணேதான். பெண்ணாயிருந்தால் குரலும் கொடுத்த பிறகு இப்படி உட்கார்ந்திருப்பாளா என்ன?' எனக்கு லேசாக பயம் தட்டியது. திரும்பி நான் பாட்டுக்கு வந்துவிட்டேன். வந்தபிறகு என் பயத்தை நினைத்து சிரித்துக்கொண்டேன், ஏதோ ஒரு குத்துக்கல்லைப் பார்த்து பயந்து ஓடி வந்துவிட்டோமே என்று. நன்றாக விடிந்ததும் குளிப்பதற்காக ஈச்சந்தோட்டம் போகும்போது இருட்டில் அந்த உருவம் உட்கார்ந்திருந்த இடத்தைப் பார்த்தேன். அங்கே எந்தக் குத்துக்கல்லும் இல்லை. யாரோதான் உட்கார்ந்திருக்க வேண்டும். அதற்குப்பிறகு அந்த விஷயத்தைச் சுத்தமாக மறந்து போனேன். அது இப்போது ஏனோ நினைவில் வந்து மோதியது.

மறுபடியும் படுத்துத் தூங்க முயற்சி செய்தேன். அப்போதும் அதே அனுபவம். அம்மா 'வஹாப் சாபுவிடம் கருக்கல்லெ போ,

சரியாயிடும்' என்று சொல்லிவிட்டுப் போய் படுத்துவிட்டார்கள். சித்திதான் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்கள்.

என் அவஸ்தையைப் பார்த்துவிட்டு சித்தி சொன்னார்கள்: "அப்போது எனக்கு நாலு அஞ்சு வயசிருக்கும். நான் சடங்காகி வீட்டில் இருக்கேன். ஒருநாள் - அன்னைக்கு நான் வீட்டுக்கு விலக்கு-காலையில் எழுந்து கொல்லைக்குப் போனேன். அவ்வளவுதான். திடீர்னு யாரோ என்னைப் புடிச்சி கட்டிக்கிட்டாப் போல இருந்தது. அதுவும் மனுசாள் மாதிரியும் இல்லெ. அதை எப்படி சொல்றதுன்னே தெரியலை. இப்ப நீ சொல்றா மாதிரிதான்... காத்து மாதிரி... மூச்சு திணறியது. ஒரு ரெண்டு நிமிஷம் இருக்கும். அதுக்குப் பிறகுதான் விட்டா மாதிரி இருந்தது. பயந்துபோய் வீட்டுக்குள் ஓடி வந்துவிட்டேன். ஒருவாரம் அடிச்சுப்போட்ட மாதிரி ஜுரம். அக்காதான் யார் யாரையோ கூட்டி வந்து மந்திரிச்சுது. ஒருவாரம் கழிச்சு தானா ஜுரம் நின்னு போச்சு. ஆனா அப்ப புடிச்ச தொந்தரவு இன்னும், இன்னைய வரைக்கும் விட்டபாடில்லை."

"அது என்ன தொந்தரவு? அதுதான் ஜுரம் நின்று போச்சுன்னு சொல்றீங்களே?"

"அதை எப்படி சொல்றது ராஜா. ஜுரம் நின்னு போச்சு. ஆனா ரெண்டு நாள் கழிச்சு ஒரு ராத்திரி தூங்கிக்கிட்டு இருக்கையிலே திடீர்னு மூச்சு அடைச்சிது. விழிப்பு வந்திடுச்சு. ஆனாலும் கையைக் காலை அசைக்க முடியலே. வாயைத் திறக்க முடியலே. நீ இப்ப என்னன்ன சொல்றியோ அதே மாதிரிதான். அப்புறம் ஒரு பத்து நிமிஷம் கழிச்சுத்தான் அது போச்சு. எனக்கு ஒண்ணுமே புரியலெ. அழுகையாய் வந்தது. யாரிடமும் சொல்லவும் முடியலே. சொன்னாலும் யார் நம்புவா சொல்லு? கிட்டத்தட்ட அன்னைக்கே என் ஒடம்பு அழுக்காயிட்டுது. ஆனா அதனாலெ வேற ஒரு தொந்தரவும் இல்லெ. அதோடு மட்டுமில்லெ. அடிக்கடி இப்படி வந்து கொண்டிருந்தது. நானா ஒரு சமாதானம் பண்ணிக்கொண்டேன். கல்யாணம் ஆனா சரியாப் போயிடும்னு. ஆனா அப்புறமும் வந்துகொண்டுதான் இருந்திச்சு. உன் சித்தப்பாவிடம் நான் இதப்பத்தி வாயையே

திறக்கவில்லை. இப்பத்தான் ஒரு ரெண்டு வருஷமா அடிக்கடி அப்படியாறது இல்லெ. இருந்தாலும் ரெண்டு மாசத்துக்கு ஒரு தடவை. இப்படி. இன்னைய வரைக்கும் இதை நான் வேற யார்கிட்டயும் சொன்னதில்லை... இப்ப உன் ஒரு ஆள் கிட்டதான் சொல்றேன்."

சித்தியை நினைத்தால் எனக்குப் பாவமாக இருந்தது. அவர்கள் தலையையே வருடிக்கொண்டிருந்தேன். பின்னந்தலையில் ஒரு இடத்தில் வழவழவென்று தோல். முடியே இல்லாமல். அந்தக் காயம்தான் போல. அதையே வருடிக்கொண்டிருந்தேன்.

"இந்த வேதனை போதாதுன்னு உன் சித்தப்பா வேற... நானும் ஒரு பெண், எனக்குன்னும் ஒரு மனசு இருக்கு, உணர்ச்சிகள் இருக்குங்கிறதையெல்லாம் அவர் ஒரு நிமிஷமாவது நினைத்துப் பார்த்திருப்பாரா? அவர் நினைப்பெல்லாம் நான் ஒரு செக்குலக்கைங்கிறதுதான். வரவேண்டியது. வந்து மிருகம் மாதிரி விழுந்து எந்திரிச்சுப் போக வேண்டியது."

சொல்லிக்கொண்டே சித்தி என் தோளில் சாய்ந்தார்கள். என்னால் அதுக்கு மேல் பொறுக்க முடியவில்லை. மார்பில் முகம் புதைத்தேன். இறுகத் தழுவி முத்தமிட்டேன். காதோரங்களைக் கடித்தேன்.

வெகுநேரம் நான் என்னிடமே இல்லை. உடம்பிலிருந்தே விடுபட்ட மாதிரி, நினைவிழந்து, காற்றில் கரைந்துவிட்ட மாதிரி, இருவருமே ஒன்றாகிவிட்ட மாதிரி.

எவ்வளவு நேரம் போனதென்று தெரியவில்லை. ரொம்ப நேரம் கழித்து சித்தி என் கழுத்தோரத்தில் முத்தமிட்டுக்கொண்டே முனகலாகச் சொன்னார்கள், "என் ராஜா இதுபோதுமையா எனக்கு, இதுபோதும்... இதோடு செத்துவிடலாம் நிம்மதியா. இந்த நிமிஷம் மாதிரி நான் இதுவரையில் வாழ்ந்ததில்லையடா கண்ணே..."

என் வாய் சித்தி, சித்தி என்று முனகிக்கொண்டே இருந்தது.

மறுநாள் காலை எழுந்து அம்மாவின் நச்சரிப்பு தாங்க முடியாமல்

வஹாப் சாபுவைப் பார்க்க நஸீமையும் அழைத்துக்கொண்டு போனேன். நஸீமுக்குத்தான் அவரைத் தெரியும். நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவ்வளவுதான். பார்த்ததில்லை. ரொம்பப் படித்தவர் என்று நஸீமும் சொல்லியிருக்கிறான்.

ஒரு சின்ன வீடு. வெகு சுத்தமாக இருந்தது. உள்ளே நஸீம் எட்டிப் பார்த்தான்: 'கொஞ்சம் பொறு' என்று சைகை காட்டினார். உள்ளே சிலர் உட்கார்ந்திருந்தார்கள். நாங்கள் அங்கிருந்த திண்ணையில் காத்திருந்தோம். சிறிதுநேரம் கழித்து அவர்கள் போனதும் உள்ளே போனோம். வஹாப் சாபு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். வீடு வெகு அமைதியாக இருந்தது. நாங்கள் அவருக்கு எதிரே இருந்த பாயில் அமர்ந்தோம்.

"என்னாங்கனி நஸீம், இந்தப் பக்கமே காணம்? ரொம்ப பிஸியா யிட்டீரா? என்ன படிக்கிறீர்? வாப்பா வந்திருக்காஹாண்டு கேள்விப்பட்டனே?"

"ஆமா ஹஜ்ரத். வாப்பா வந்திருக்காஹாண்டு தந்தி வந்திச்சு. அதான் கிளம்பி வந்தேன். மெட்ராஸ்லெ ஏஸிஎஸ்ஸில் சேர்ந்திட்டதிலெ நேரம் கிடைக்கிறதில்லை ஹஜ்ரத். அதான் வந்து உங்களைப் பார்க்க முடியலே."

சொல்லிவிட்டு நஸீம் என்னை அறிமுகப்படுத்தி வைத்தான். நான் விபரத்தைச் சொன்னேன். எனக்குக் கொஞ்சம்கூட நம்பிக்கை இல்லை. அம்மாவின் தொணதொணப்பு சகிக்க முடியாமல் வந்திருந்தேன்.

ஹஜ்ரத் என்னை குழாயிலிருந்து கொஞ்சம் தண்ணீரை எடுத்து வரச்சொல்லி அதை வாயருகே கொண்டுபோய் மூன்றுமுறை ஊதி என் கையில் கொடுத்தார், மூன்று வேளை குடிக்கச் சொல்லி. குடித்தேன்.

அன்றிரவு சுகமாகத் தூங்கினேன். எந்தத் தொந்தரவும் இல்லை. நடுச்சாமத்தில் விழிப்பு வந்தது. பார்த்தால் சித்தி அருகில் உட்கார்ந்துகொண்டு என் கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டிருந்தார்கள். கொஞ்ச நேரம் அப்படியே படுத்திருந்தேன்.

இன்று சில்லடியில் அலைந்த அலைச்சல் கொஞ்ச நஞ்சமில்லை. கால்களைப் பிடித்து விடுவது சுகமாக இருந்தது.

திடீரென்று நினைவு வந்தது. நான் சிறு பிள்ளையாயிருந்தபோது செய்கிற பிடிவாதம். தினமும் சித்திதான் வந்து என்னை தூங்கப் பண்ண வேண்டும். எப்படி? லேசாக கை விரல்களால் என் முதுகு, கைகளில் எல்லாம் வருடி விட வேண்டும். சித்தி நான் தூங்கிவிட்டேனா என்று பார்த்துக் கொண்டே கையை எடுப்பார்கள். நான் சிணுங்கிக்கொண்டு 'வருடி விடுங்க சித்தி... நான் இன்னும் தூங்கலை' என்பேன். அப்புறம் நான் எப்போது தூங்குவேன், சித்தி எப்போது எழுந்து போவார்கள் என்றெல்லாம் எனக்குத் தெரியாது. இப்படியேதான் தினமும்.

இந்த சித்திக்கு என் தோலை செருப்பாகத் தைத்துப் போட்டாலும் ஈடாகுமா என்று தோன்ற, திடீரென்று எழுந்து அவர்கள் காலைக் கட்டிக்கொண்டு அழுதேன்.

திடுக்கிட்ட சித்தி "என்ன ராஜா... என்ன இது?" என்றார்கள். என்னால் பேச முடியவில்லை. "என்னோடு வந்திடுங்க சித்தி" என்று மட்டுமே சொல்ல முடிந்தது. அன்று இரவும்... காலையில் எழுந்து பார்த்தால் சித்தப்பா.

கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான் வந்தார்களாம். "நீ எப்போது வந்தாய்?" என்று என்னைக் கேட்டார்கள். "மூன்று நாளா யிற்று" என்றேன்.

உடனே குளித்து முடித்துவிட்டு நஸீம் வீட்டுக்குப் போய்விட்டேன். இன்று அவன் தம்பிக்கு சுன்னத். கட்டாயம் போயாக வேண்டும் போனாலும் வர ராத்திரி ஆகிவிடும். சித்தியிடம் சொல்லிவிட்டுக் கிளம்பினேன். 'இந்த ஆள் ஏன் இப்போது வந்திருக்கிறார்?' ஆனால் நம் வீட்டில் எல்லாம் மறந்து போனது. ஓரே கும்மாளம். விருந்து உண்டுவிட்டு வீட்டுக்கு வந்தேன்.

வீட்டு வாசலில் ஐந்தாறு பேர் நின்றுகொண்டிருந்ததைப் பார்த்து எனக்கு பயம் கப்பியது. என்னைக் கண்டதும் பக்கத்து வீட்டு பாட்டி அடித்து மோதிக்கொண்டு வந்தார்கள்.

"தம்பி, உடனே ஆஸ்பத்திரிக்குப் போப்பா... பாவி, உன் சித்தியைப் போட்டுக் கொன்னுட்டான். அதைத்தாங்க மாட்டாம அவ அரளிக் கொட்டையை அரச்சிக் குடிச்சிருக்கா... அதிலேயும் ஒரு நல்ல காலம். பங்கஜம்தான் இவ மயங்கி மயங்கி விழுறதைப் பார்த்து சந்தேகப்பட்டு என்னைக் கூட்டியாந்தா... வந்து பாத்தா வாயால் நுரை தள்ளுது. ஒடனே கை வைத்தியமா நரகலைக் கரைச்சு ஊத்தி வாயலெடுக்க வச்சோம். தங்கராசு சொன்னான் உயிருக்கு பயமில்லேன்னு. ஆஸ்பத்திரிக்கு போயிருக்காங்க."

கேட்டதும் எனக்குப் பதற ஆரம்பித்துவிட்டது.

"அம்மா அப்பா எல்லாம் இருக்கும்போது எப்படி இந்த ஆள்... எங்க இருந்தாங்க? அப்பா தோட்டத்துக்குப் போயிடுச்சி. ஒங்கம்மா துணியெல்லாம் அள்ளிக்கிட்டு கொளத்துக்குப்போயிட்டா. இந்தக் கவுட்டுக்காரப்பய எப்ப எல்லாம் போவாங்கன்னு இருந்திருக்காம் போலிருக்கு. ரெண்டு மணியிருக்கும். சத்தம் கேட்டு ஓடியாந்து பாத்தா வெளக்கமாத்தாலேயே விளாறிக்கிட்டிருக்கான், மயிரைப் புடிச்சிக்கிட்டு. வெலக்கிவுட்டு அவளெ இழுத்துக்கிட்டு வாரதுக்குள்ளே நாம் பட்டபாடு. ஐயோ... தங்கத் தாம்பளத்துலே தாங்க வேண்டிய பொண்ணுல்லய்யா அவ... ஒடம்பெல்லாம் வெளக்கமாத்துக் குச்சி ஒடிஞ்சி... அந்தக் கொடுமைய என்னான்னு சொல்லுவேன்? முள்ளுக் குத்துனாப்லெ ஒடம்பு பூரா வெளக்கமாத்துக் குச்சி... படுக்க வச்சு நானும் ஒங்கம்மாவுமா ஊக்காலயே ஒன்னொன்னா எடுத்தம். கண்றாவிய சகிக்க முடியலெ போ. ஒங்கப்பாரே 'ஒன்னைக் கோர்ட்டுலெ பாத்துக்கிறேன்'னு கத்திடுச்சி அவங்கிட்ட. பாவி அவம் போயிட்டான். நீ போய்யா... சீக்கிரம் போ..."

எங்கே போனேன் எப்படிப் போனேன் என்று ஒன்றுமே தெரியாது. நஸீம்தான் என் தோள்களைப் பிடித்துக்கொண்டு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தான். "பதறாதடா ராஜா... எஜமானை நேந்துக்க... ஒன்னும் ஆகாது."

இங்கே இன்று

அக்.-நவ.-டிசம்பர், 1986

## ரங்கையன் கோட்டை

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு என் நண்பன் மூர்த்தி என்னை ஞாபகம் வைத்திருந்து எனக்குக் கடிதம் எழுதுவான் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

கடிதத்துடன் திருமண அழைப்பிதழும் இருந்தது. திருமணம் அவன் மகளுக்கு.

நானும் மூர்த்தியும் பள்ளி இறுதியில் கடைசி இரண்டு ஆண்டுகள் ஒன்றாகப் படித்தவர்கள். என் அப்பா வங்கி அதிகாரியாக இருந்து ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருந்தபோது - இரண்டு ஆண்டுகள் மூர்த்தியின் ஊரில்.

அந்த ஊரை விட்டுச் சென்ற பிறகும் மூர்த்தியோடு சிலகாலம் நான் கடிதத் தொடர்பு வைத்திருந்தேன். கடைசியாக நான் அவனை சந்தித்தது - அவன் திருமணத்தில்.

தன் அப்பாவின் மருந்துக்கடையை கவனித்துக்கொண்டு ஊரிலேயே இருந்துவிட்டான்.

நான் ஒரு வங்கி வேலையில் தொற்றிக்கொண்டு ஊர் ஊராக

அலைந்துகொண்டிருந்தேன். இடையிடையே சிறுகதைகளும் பல பத்திரிகைகளில் எழுதுவதுண்டு. நீண்டகாலம் கடிதத் தொடர்பே இல்லாமல் என் முகவரியை ஏதோ ஒரு பத்திரிகை ஆபீசிலிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறான்.

இத்தனை ஆண்டுகளில் ஊரில் பெரிய மாற்றங்கள் எதுவும் தெரியவில்லை. மக்கள் கூட்டம்தான் சற்றுப் பெருகியிருந்தது. அப்போது ஒருவன் என்னை தயக்கத்துடன் அணுகி "சார்..." என்றான்.

"என்ன?" என்றேன் எரிச்சலுடன்.

"சார்... இதைக் கொஞ்சம் பாருங்களேன்..."

அவன் கையில் பெரிய அளவில் ஒரு நாணயம்.

"வெரி ஓல்ட் காய்ன் சார்... இதை நீங்க வாங்கிக்கறீங்களா?"

எனக்குப் பழைய நாணயங்கள் சேர்க்கும் பழக்கம் இல்லை. அதனால் 'வேண்டாம்' என்றேன்.

"சார்... இந்த மாதிரி ஆயிரம் காசு இருக்கு. இது வெள்ளிக்காசு. இன்னும் என்கிட்ட தங்கக் காசுங்களே இருக்கு... சீப்பா தர்றேன் சார்..."

என்ன இது, ஏதேதோ சொல்லுகிறான் என்று நினைத்தபடி அந்த நாணயத்தை வாங்கிப் பார்த்தேன்.

வெள்ளிக்காசுதான். வருடத்தைப் பார்த்தேன். 1936. ஏமாற்று வேலை எதுவுமில்லை. உண்மையிலேயே பழைய காசுதான்.

நாணயத்தின் எழுத்துக்கள் வித்தியாசமாக இருந்தன. வெனிசுவலா நாட்டு நாணயம். இந்த ஆளுக்கு எப்படிக் கிடைத்தது. அதுவும் ஆயிரம் காசு இருப்பதாக சொல்கிறானே...!

"இந்தக் காசு. உங்களுக்கு ஏது?" என்றேன்.

"இது ரங்கையன் கோட்டையில் கிடைச்ச காசு. இதை வச்சுக்கிட்டு ஒரு அம்பது ரூபா குடுங்க சார். நாளைக்கு இதே

எடத்துக்கு இதே நேரத்துக்கு வந்தீங்கன்னா தங்கக் காசுங்களே எடுத்துக்கிட்டு வர்றேன்... ஒரு பானை நிறைய தங்கக் காசுங்க கிடைச்சிருக்கு..."

அவன் சொல்வதை நம்பவும் முடியவில்லை. நம்பாமலும் இருக்க முடியவில்லை. 50 ரூபாயை எடுத்துக் கொடுத்து அந்த நாணயத்தை வாங்கிக்கொண்டேன்.

"நாளைக்கு மறக்காம வந்திடுங்க சார்... தங்கக் காசு..." என்று ஆசைகாட்டினான் அவன்.

திருமண வேலைகள் எல்லாம் முடிந்து மூர்த்தி கொஞ்சம் ஆசுவாசமாக இருந்தபோது அந்த வெள்ளிக் காசை எடுத்துக் காட்டினேன். ரங்கையன் கோட்டை பற்றிக் கேட்டேன். மறுநாள் சொல்வதாகச் சொல்லி என்னை தங்கச் சொன்னான்.

மறுநாள் காலை அந்த ஆளைத்தேடி அதே இடத்துக்குப் போனேன். பானைத் தங்கத்தையும் பார்ப்பதற்கு ஆர்வமாக இருந்தது. ஆனால் கடைசியில், அந்த ஆள் வரவேயில்லை. கால் கடுக்க நின்றதுதான் கண்டபலன்.

திருமண வேலையெல்லாம் முடிந்தபிறகு மூர்த்தி என்னை அழைத்துக் கொண்டு கிளம்பினான்.

ரங்கையன் கோட்டை ஊருக்கு வெளியே இடுகாட்டுக்குப் பக்கத்தில் இருந்தது.

ரங்கையன் கோட்டையில், கோட்டை என்பது வெறும் பெயரில் தான் இருந்ததே தவிர அது ஒரு பெரிய மண்டபத்தைத்தான் ஞாபகப்படுத்தியது. சத்திரம் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

"இதை ரங்கையன் மடம் என்று சொல்வார்கள்" என்றான் மூர்த்தி. ஒரு கிழவி கம்பை ஊன்றியபடி கீழே குனிந்து தேடிக்கொண்டிருந்தாள்.

"என்ன ஆயா... புதையலா?" என்று கேட்டான் மூர்த்தி

சிரித்தபடி...

"ம்... ஆமாம் போ. அந்த ரங்கையன் புதைச்சு வச்ச காசெல்லாம் மச்சு வீட்டுக்காரங்களுக்குத்தானே கிடைக்குது? நம்ம மாதிரி ஏளெ பாளெங்களுக்கு எங்கே கெடைக்குது? தேடித் தேடி கண்ணுதான் பூத்துப் போவுது..."

மூர்த்தி என்னைப் பார்த்து சிரித்தான். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"வா... விபரமாச் சொல்றேன்..." என்று சொல்லியபடி என்னை மதகடிக்கு அழைத்துப் போனான்.

எழுபது ஆண்டுகளுக்கு முந்தின கதை இது.

அப்போது ரங்கையன் என்று ஒருவர் பர்மாவிலிருந்து வந்து ஊரிலேயே வீடு வாசல் வாங்கிக் கொண்டு 'செட்டில்' ஆகிவிட்டார்.

"அப்போது இங்கே இடுகாடு, சுடுகாடு எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார் ரங்கையன்" என்றான் மூர்த்தி.

"என்ன நீ ரங்கையனை பார்த்திருக்கிறாயா?"

"பின்னே... பார்க்காமல்? அப்போது அவருக்கு 90 வயது இருக்கும். அவர் சொன்ன விசித்திரமான கதையைக் கேள்."

"பர்மாவிலிருந்து அவர் நேராக இந்தியாவுக்கு வரவில்லை. ஒரு நண்பருடன் தென்னமெரிக்க போயிருக்கிறார். போய், ஒவ்வொரு நாடாக சுற்றிப் பார்த்திருக்கிறார். நாடோடியாய் அலைந்து திரிந்திருக்கிறார்."

"அப்போதுதான் அவருக்கு ஒரு மந்திரவாதிக் கிழவியிடமிருந்து தாயத்து ஒன்று கிடைத்திருக்கிறது. அந்தத் தாயத்தை அவர் சாகும் வரை, ஏன் அவர் செத்த பிறகும் கூட அவரிடமிருந்து யாராலும் பிரிக்க முடியவில்லை."

"அவருடைய எதிரிகள் அவருக்கு விஷம் கூடக் கொடுக்கிறார்கள்.

ம்ஹூம்... ஒன்றும் நடக்கவில்லை."

தென்னமெரிக்காவில் 'வூடூ' என்ற சூன்ய வித்தை ரொம்பவும் பிரபலம். பெரிய பெரிய சர்வாதிகாரிகளையெல்லாம் தூக்கி அடித்திருக்கிறது இந்த வூடூ. இப்போது மூர்த்தி சொல்வதைக் கேட்டபோது அந்த விஷயம் ஞாபகம் வந்தது. மூர்த்தி தொடர்ந்தான்.

"உண்மை... அந்தத் தாயத்தில் இன்னொரு முக்கியமான விசேஷம் என்னன்னா, அவர் அதைக் கட்டியிருந்த வரை சூதாட்டத்தில் யாரும் அவரை ஜெயிக்க முடியவில்லை. சுற்று வட்டாரத்தில் அவரிடம் தோற்காத ஜமீன்தாரோ, பண்ணையாரோ ஒருவருமே இல்லை.

"வேடிக்கையைக் கேள். ரொம்ப நாள் சென்ற பிறகுதான் ரங்கையனின் இவ்வளவு ஜெயிப்புக்கும் காரணம் அந்தத் தாயத்து என்பது பெரிசுகளுக்குத் தெரியவந்தது. அது தெரிந்ததும் அந்த தாயத்தை அவரிடமிருந்து அபகரிக்க ரொம்பப் பேர் திட்டம் தீட்டினர். ஆனால், ஒன்றும் பலிக்கவில்லை. ஒருமுறை, வயிறு முட்ட முட்ட கள்ளை வாங்கி ஊற்றி அவரைக் குடை சாய வைத்துவிட்டு தாயத்தை கழற்றிக்கொண்டு போய்விட்டார் மேல்முட்டம் பண்ணையார். ஆனா, அப்படியும் ஒண்ணும் நடக்கல்லே!"

"ஏன்?"

"அதை நீ நம்ப மாட்டே. தாயத்தை எடுத்துக் கொண்டுபோய் நகைப்பெட்டியில் வைத்திருக்கிறார் பண்ணையார்.

"மறுநாள் ரொம்ப உற்சாகத்தோடு வந்து ரங்கையனோடு ஆடியிருக்கிறார். விட்டதையெல்லாம் எடுத்து விடலாம் என்று ஆசாமிக்கு ரொம்ப நம்பிக்கை. ஆனால் வழக்கம் போலவே தொடர்ந்து தோல்வி!

"பண்ணையாருக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாவற்றையும் தோற்று விட்டு, தன் அரண்மனை போன்ற வீட்டை வைத்து ஆடலாமா என்று யோசித்தார் பண்ணையார். ரங்கையனுக்கு

வழக்கம் போலவே தொடர்ந்து ஜெயம். 'ரொம்ப கசகசன்னு இருக்குல்லே...' என்று சொல்லிக்கொண்டே தன் ஜிப்பாவைக் கழற்றினார் ரங்கையன்.

"பண்ணையாருக்கு ஆச்சரியத்தில் பேச்சே நின்று போனது. ரங்கையனின் கழுத்தில் அதே தாயத்து! ஆட்டத்திலிருந்து பாதியிலேயே எழுந்து தன் வீட்டுக்கு ஓடி வந்து நகைப்பெட்டியைத் திறந்து பார்த்திருக்கிறார். வைத்த இடத்தில் தாயத்தை காணோம்!

"உன் கையில் இருக்கும் இந்த வெள்ளிக்காசு? உன்னிடம் இந்தக் காசை கொடுத்தவனைப் போல் இந்த ஊரில் எத்தனையோ பேர் ரங்கையன் கோட்டையில் இந்தக் கிழவி மாதிரி புதையலைத் தேடி அலைஞ்சுக்கிட்டு இருக்காங்க...

"ரங்கையன் தான் சூதில் ஜெயித்த காசு, தென்னமெரிக்காவில் ஜெயித்த காசு எல்லாத்தையும் அவரோட வீட்லதான் புதைச்சு வச்சிருக்காரு... ரங்கையனோட சூதாடி, சொத்தை இழந்து போண்டியானவங்க ஏராளம். அதையெல்லாம் ரங்கையன் தானும் அனுபவிக்கல்லே... யாரையும் அனுபவிக்கவும் விடல்லே... எல்லாம் மண்ணுக்குள்ள கெடக்கு..."

"சரி.. அதைவிடு... ரங்கையனோட முடிவு?"

"முடிவு என்னா முடிவு.... எந்தத் தாயத்துதான் சாவை ஜெயிக்க முடியும்? கடைசி வரைக்கும் கல்யாணமே பண்ணிக்காம ஒண்டிக் கட்டையாவே இருந்து செத்துப்போனாரு..."

"என்னது, கல்யாணமே பண்ணிக்கலையா?"

"ம்ஹூம்..."

"அடப்பாவமே... சரி, அந்தத் தாயத்து?"

"நீ நம்ப மாட்டே..."

"பரவால்ல சொல்லு..."

"செத்த பிறகு ரெங்கயனோட ஒடம்பைக் குளிப்பாட்டினப்ப

அந்தப் பக்கம் வந்த மேல் முட்டம் பண்ணையார் 'அந்தச் சனியன் வேற ஏன் கழுத்திலே கெடக்கு... கழட்டுங்க' என்று சொல்லி ரங்கையனின் தாயத்தை வாங்கிக்கொண்டாராம்... ஆனால், வழக்கம்போலவே அந்தத் தாயத்து பண்ணையார் கிட்டேர்ந்து உடனே காணாமப் போயிடுச்சி...

"எல்லாரும் என்ன பேசிக்கிட்டாங்க தெரியுமா? தாயத்து மறுபடியும் ரங்கையனோட கழுத்துக்கே போயிருக்கும்னு... யார் கண்டது...?" என்று முடித்தான் மூர்த்தி.

மதகடியில் ஆசை தீரக் குளித்தேன். எவ்வளவு காசு கொடுத்தாலும் பெரு நகரங்களில் இப்படி ஒரு ஆனந்தமான குளியலை அனுபவிக்க முடியுமா?

குளித்துவிட்டு இடுகாட்டைக் கடந்து திரும்பி வரும்போது ரங்கையனின் சமாதியைக் காண்பித்தான் மூர்த்தி.

தூரத்தில் ரங்கையன் கோட்டையில் புதையலைத் தேடிக் கொண்டிருந்த அந்தக் கிழவியின் உருவம் ஒரு நிழலாய் தெரிந்தது.

தினமலர் - வாரமலர்
ஜனவரி, 1999

# என் முதல் ஆங்கிலக் கடிதம்!

பார்பராவைச் சந்தித்தது ரொம்பவும் எதேச்சையாக நிகழ்ந்த ஒன்று. ஒருவேளை எல்லாச் சந்திப்புகளுமே எதேச்சையானது தானோ என்னவோ! ஒரு வருடத்திற்கு முன்னால் மதுரையில் ஒரு நாடகவிழா நடந்தபோது அதில் என் நண்பன் மாணிக்கம் எழுதிய நாடகம் பங்கு பெறுகிறது என்றும், அதன் இயக்கத்தில் என் உதவி தேவைப்படுகிறது என்றும் அவன் என்னை அழைத்திருந்ததால் நானும் அதில் பங்குபெற நேர்ந்தது. அந்த நாடக விழாவில்தான் நான் பார்பராவைச் சந்தித்தேன்.

பார்பரா தமிழ் பேசத் தெரிந்த ஒரு அமெரிக்கப் பெண். வயது இருபதிலிருந்து இருபத்தைந்து இருக்கலாம். தமிழ்நாட்டுக்கு, அதுவும் இதுபோன்ற கலை விழாக்களுக்கு வரும் அமெரிக்கர்கள் என்றாலே எனக்கு ஒரு எரிச்சல் உண்டு. காரணம் - இவர்கள் ஒரு குறிப்பிட்ட குழுவுடனேயே தங்களை இணைத்துக்கொண்டு விடுவதுதான். இலக்கியம் என்றால்கூட அது சங்க இலக்கியம் - அல்லது அதிகம் போனால் பக்தி இலக்கியம் வரை வருவார்கள். அதற்கும் மேல் நவீன இலக்கியம் என்றால் - மூச்! பேசக்கூடாது.

ஆக, பார்பராவும் இப்படிப்பட்ட ஒரு அமெரிக்கப் பெண்தான்

என்று நினைத்து அதிகம் பேசாமல் இருந்துவிட்டேன். அதனாலேயே நாடக விழாவின் கடைசி நாளன்று நடக்க இருந்த எங்கள் நாடகத்தை பற்றிக்கூட அவளிடம் பிரத்யேகமாக எதுவும் சொல்லவில்லை.

விழாவில் பங்குபெற்ற நாடகங்கள் எல்லாமே ஒரே 'கடி'யாக இருந்ததால் (எல்லாம் நவீன நாடகங்கள்!) பார்பரா கடைசி நாளன்று வராமல் இருந்துவிட்டாள். நாங்கள் பாலியல் விவகாரங்களையும் எங்கள் நாடகத்தில் சேர்த்திருந்ததால் ஆபாச நாடகம் என்று சொல்லி ஒரே கலாட்டாவும், அடிதடியுமாகப் போய்விட்டது. அது போதாதென்று நாடகத்தில் ஒரு பாத்திரத்தின் பெயர் மதுரையின் ஒரு முக்கியமான அரசியல் புள்ளியின் பெயராகவும் போய்விடவே அந்த புள்ளியின் ரசிகமணிகளும் அடிதடியில் இறங்கினர். அடிதடி முடிந்தபிறகு 'இதையெல்லாம் முன்கூட்டியே யோசித்திருக்க வேண்டாமா மடையா?' என்று மாணிக்கமும் நானும் ஒருவரையொருவர் திட்டிக்கொண்டது வேறு விஷயம்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு மாணிக்கத்திடமிருந்து ஒரு கடிதம் வந்தது. மேலும் ஒரு நாடகம் எழுதியிருக்கிறானோ என்று பயந்து கொண்டே கடிதத்தைப் பிரித்தால் அதில் அவன் பார்பராவைப் பற்றி எழுதியிருந்தான். அவள் தன்னை வந்து சந்தித்தாகவும், நடந்த அடிதடிகளைப் பற்றி மிகுந்த அக்கறையோடு விசாரித்ததாகவும் எழுதியிருந்தான். அப்போதும் பார்பராவிடம் எனக்கு அதிக ஈடுபாடு ஒன்றும் ஏற்படவில்லை. பிறகு சில மாதங்கள் கழித்து வந்த கடிதத்தில் பார்பராவை அடிக்கடி சந்தித்துக் கொண்டிருப்பதாக எழுதியிருந்தான்.

இந்த நிலையில் ஒரு மாதத்திற்கு முன்பு சென்னைக்கு வந்த மாணிக்கம் 'பார்பராவைப் பார்க்கப் போகலாம் வா' என்று அழைத்தான். அவனுடன் வந்திருந்த நண்பர்களையும் சேர்த்து என் மகள் ரேஷ்மா உட்பட மொத்தம் ஒன்பது பேர் பார்பராவின் வீட்டுக்குச் சென்றோம்.

பார்பரா சிகாகோ பல்கலைக்கழகத்திலிருந்து தமிழ்நாட்டின் செக்ஸ் தொழிலாளிகளைப் பற்றி ஆய்வு செய்ய இங்கு

வந்ததாகவும், இரண்டு வருடம் மதுரையிலும் இப்போது ஒரு வருடம் சென்னையிலும் ஆய்வு செய்து முடித்துவிட்டதாகவும், இன்னும் ஒரு மாதத்தில் யு.எஸ்.திரும்ப இருப்பதாகவும் ('யு.எஸ்.' என்பதை 'யூவெஸ்' என்று சொன்னாள் பார்பரா) தெரிந்தது.

தமிழ் நன்றாகவே பேசினாள். ஆனாலும், அந்தச் சந்திப்பில் அவளுடன் அதிகம் பேசமுடியவில்லை. ஏனென்றால் மொத்தம் பத்து பேருக்கான சமையலில் ஈடுபட்டிருந்தாள் பார்பரா. சாம்பாரும், தொட்டுக்கொள்ள கோவைக்காய் கறியும். நாங்கள் வரும்போதே கோவைக்காய் வாங்கி வந்திருந்தோம்.

இரவு பார்பராவின் வீட்டிலேயே தங்கிவிட்டு மறுநாள் காலை கிளம்ப ஆயத்தமானோம்.

"இருங்கள். சாப்பிட்டுவிட்டுப் போங்கள். நேற்று இரவு கூட நீங்கள் யாரும் சரியாக சாப்பிடவில்லை" என்று சொன்னாள் பார்பரா. சொல்லிவிட்டு மூன்று பெரிய தூக்குகளை எடுத்துக்கொண்டு மாணிக்கத்துடன் ஸ்கூட்டரில் கிளம்பினாள்.

திரும்பிவந்தபோது கிட்டத்தட்ட நாற்பது பேர் திருப்தியாக சாப்பிடும் அளவுக்கு இட்லி, பொங்கல், வடை, சாம்பார், சட்னி என்று வந்து இறங்கியது.

எக்கச்சக்கமாக மீதியாகிப் போகவே எல்லாவற்றையும் மறுபடியும் ஸ்கூட்டரில் ஏற்றிக்கொண்டு கிளம்பினாள். "எங்கே?" என்று கேட்டேன், "ஏதாவது ஒரு அனாதை இல்லத்துக்குப் போய் கொடுக்கப் போகிறேன்" என்றாள். கிளம்பும்போது "மீண்டும் வாருங்கள் சாவகாசமாகப் பேசலாம்" என்றாள்.

ஒரு வாரம் கழித்து போன் செய்தேன். வெகுநாள் பழகிய தொனியில் பேசினாள். அன்றைக்கு மறுபடியும் சந்தித்தேன். அன்று கூடவே ரேஷ்மாவையும் அழைத்துப் போயிருந்தேன். அன்று இரவு முழுக்கவும் பேசிக் கொண்டிருந்தோம். "எப்போதோ நாம் சந்தித்திருக்கலாம்" என்றாள். கிட்டத்தட்ட ஒரு வருடமாக சென்னையில்தான் இருப்பதாகவும், மாதம் இரண்டு முறை மதுரை போய் வந்துகொண்டிருப்பதாகவும் சொன்னாள்.

பிறகு இரண்டு நாட்களுக்கு ஒருமுறை சந்தித்தோம். நூற்றுக்கணக்கான கேள்விகள் கேட்டாள் பார்பரா. இங்கு உங்கள் நாட்டில் ஓரல் செக்ஸ் என்பதெல்லாம் ரொம்பவும் அசாதாரணமான விஷயமா என்ன? நான் சந்தித்த செக்ஸ் தொழிலாளிகளெல்லாம் அவர்களிடம் வரும் பெரும்பாலானவர்கள் ஓரல் செக்சுக்காகத்தான் வருவதாகச் சொல்கிறார்களே?

இப்படி எத்தனை எத்தனையோ கேள்விகள். விவாதங்கள். ஊருக்குக் கிளம்பும் நாள் நெருங்க நெருங்க சிநேகிதமும் தீவிரமானது.

நான் என்னுடைய நாவலையும், என் நண்பன் ரமேஷின் நாவலையும் அவளிடம் காண்பித்தேன். அதன் அட்டைகளைப் பார்த்த மாத்திரத்திலேயே குதிக்க ஆரம்பித்துவிட்டாள் பார்பரா.

"உங்கள் நாவலை படிக்கச் சொல்லி ஒரு நண்பர் அடிக்கடி என்னிடம் குறிப்பிடுவார்" என்றாள்.

"யார், மாணிக்கமா?" என்று கேட்டேன்.

"இல்லை. குமார் என்று வேறு ஒரு நண்பர்."

"குமாரும் எனக்குத் தெரிந்தவன்தான். ஆக, என் நாவலைப் பற்றிக்கூட உனக்கு (இதற்குள் நாங்கள் ஒருமையில் பேசும் அளவுக்கு நெருங்கியிருந்தோம்) மாணிக்கம் சொல்லவில்லையா? நான் மட்டும் உன்னை ஒரு வருடத்திற்கு முன்னால் சந்தித்திருந்தால் உன் கால் கைகளை கட்டி பாண்டிச்சேரிக்குத் தூக்கிக்கொண்டு போயிருப்பேன்."

"இரண்டு விஷயங்கள் புரியவில்லை. ஒன்று – எதற்குக் கால் கைகளைக் கட்ட வேண்டும்? இரண்டாவது – பாண்டிச்சேரியில் என்ன விசேஷம்?"

"பாண்டிச்சேரியில்தான் என் நெருங்கிய நண்பன் ரமேஷ் இருக்கிறான். அங்கே கூப்பிட்டால் நீ அப்புறம் பார்க்கலாம் என்று ஏதாவது சாக்குபோக்கு சொல்வாய். அதனால்தான்..."

"நீ என்னைப் புரிந்துகொண்டது அவ்வளவுதானா? நான்

அமெரிக்காவில் இருந்தாலும் நானும் உன்னைப்போல் ஒரு அனாதைதான். அங்கே ஜனாதிபதியிலிருந்து அடிமட்டக் குடிமகன் வரை எதிர்க் கலாச்சாரம் பேசுவதால் என்னைப் போன்ற ஆட்கள் மிகவும் தனிமைப்பட்டுக் கிடக்கிறோம்."

"இங்கே எங்கள் நாட்டிலும் கூட எதிர்க் கலாச்சாரம் என்பது அந்த நிலையில்தான் இருக்கிறது. சமீபத்தில் என் நண்பர்கள் நடத்திய ஒரு ஜாதி ஒழிப்புக் கருத்தரங்கில் மாட்டுக்கறி சாப்பிட்டு அதைத் தங்களின் எதிர்க் கலாச்சார நடவடிக்கையாக அறிவிப்பு செய்தார்கள்."

இதைச் சொன்னதும் பார்பரா விழுந்து விழுந்து சிரித்தாள். பிறகு சற்று நேரம் கழித்து, சற்று சீரியசான குரலில் "மாட்டுக் கறிக்கும் எதிர்க் கலாச்சாரத்துக்கும் என்ன சம்பந்தம்? நாய்க்கறியோ, பூனைக் கறியோ சாப்பிட வேண்டியதுதானே? உங்கள் நாட்டில் ஒரு நாடோடி இனத்தைச் சேர்ந்தவர்கள் பூனையையும் காகத்தையும் சாப்பிடுவதாகப் படித்திருக்கிறேன். யார் அவர்கள்? பெயர் மறந்துவிட்டது" என்று கேட்டு நிறுத்தினாள்.

"குறவர்கள்."

"யெஸ் குறவா. நாய்க்கறி என்றதும் எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. நீங்கள் அரிசி சாப்பிடுவதைப் போல் நாங்கள் மாட்டுக்கறி சாப்பிடுகிறோம். நாங்கள் மாட்டுக்கறி சாப்பிடுவதைப் போல் வியட்நாமியர்கள் நாய்க்கறி சாப்பிடுகிறார்கள். ஒருமுறை நான் வியட்நாம் சென்றிருந்த போது அங்கே என் வியட்நாமியத் தோழி ஒருத்தி என்னை அவள் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தாள். போனதும் 'உனக்கு இன்று ஒரு ஸ்பெஷல் ஐட்டம் ஒன்று தயார் பண்ணப்போகிறேன்' என்றாள். 'என்ன அது?' என்று ஆர்வத்துடன் கேட்ட என்னை கிச்சனுக்குள் அழைத்துச் சென்று ப்ரிஜ்ஜைத் திறந்து காட்டினாள். அவ்வளவுதான். பேயைக் கண்டதுபோல் அலறிவிட்டேன். ஆமாம். பேயேதான். ப்ரிஜ்ஜுக்குள் பேயின் தலை, தோலெல்லாம் உரிக்கப்பட்டு பயங்கரமாகக் கண்களை விழித்துக்கொண்டு– ஒரு நாயின் தலை! அவர்கள் நாட்டில் நாய்த்தலைதான் ஸ்பெஷலாம்! நீ என்னவென்றால் மாட்டுக் கறி சாப்பிடுவதை

எதிர்க்கலாச்சாரம் என்கிறாய்!"

எனக்கும் அவள் சொன்னது நியாயமாகவே தோன்றியது. ஏனென்றால் அந்தக் கருத்தரங்கில் நானும், ரமேஷும் சாப்பாட்டில் கடைசிப் பந்தியாகிவிட்டோம். சாப்பிடுவதற்கு முன்னால் கொஞ்சம் பீர் சாப்பிட்டுவிட்டு வரலாம் என்று நினைத்ததால் வந்த வினை. கடைசிப் பந்தி என்பதால் குழம்பில் ஒரு துண்டு கூட கிடைக்கவில்லை. ஆனால், சாப்பிட்டு முடித்து இலையை எடுத்துக்கொண்டு குப்பைத்தொட்டிப் பக்கம் போனபோதுதான் நண்பர்கள் எவ்வளவு தீவிரமான எதிர்க் கலாச்சாரவாதிகள் என்பது தெரிந்தது. ஏனென்றால் குப்பைத்தொட்டியைச் சுற்றிலும் ஒரே கறி. ஆறு கிலோ கறி எடுத்து அதில் நான்கு கிலோவை குப்பைத்தொட்டியில் வீசி எறிந்திருக்கிறார்கள். 'என்ன அநியாயம் இது?' என்றேன் ரமேஷிடம். "இதெல்லாம் பழக்கமில்லாமல் ஒரே நாளில் வந்துவிடுமா? போகப் போகத்தானே பழகும்" என்றான் ரமேஷ். "அடப் போடா, இவர்கள் பழகுவதற்குள் நம் நாட்டிலுள்ள அத்தனை மாடுகளும் காலியாகிவிடும் போலிருக்கிறதே!" என்றேன்.

இதை பார்பராவிடமும் சொன்னேன். சிறிது நேரம் யோசித்துவிட்டு "உங்கள் நாட்டில் மாட்டுக்கறி சாப்பிடுவதை விட, வெஜிடேரியனாக இருப்பதுதான் எதிர்க் கலாச்சாரமாக இருக்க முடியும் என்று தோன்றுகிறது. ஏனென்றால், சமீபத்தில் ரியோவில் நடந்த மாநாட்டில் இந்தியாவில் மாடுகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும், மாட்டுச்சாணம்தான் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுவதற்கு முக்கிய காரணம் என்றும் பணக்கார நாடுகள் சொல்லியிருக்கின்றன. முக்கியமாக யு.எஸ். அவர்கள் இப்படிச் சொல்வதற்குக் காரணம், அவர்களுக்குத் தோல் வேண்டும் என்பதுதான். ஒரு மாட்டின் மொத்த கறிக்குமான விலையைவிட பலநூறு மடங்கு அதிகமான விலையில் அவர்கள் அந்தத் தோலை ஏற்றுமதி செய்கிறார்கள். தோலை எடுத்துக்கொண்டு ஒன்றுக்கும் உதவாத கறியை உங்களிடம் தருகிறார்கள். நீங்கள் என்னவென்றால் அவர்கள் தூக்கிப் போடும் கறியைத் தின்றுவிட்டு எதிர்க் கலாச்சாரம் என்கிறீர்களே. வேடிக்கைதான்" என்றாள்.

பார்பரா சொல்வது சரிதான். மாட்டுக்கறி, நடுத்தர வர்க்கத்து உணவில் சேர்ந்துவிட்டது. மைலாப்பூர், அண்ணாநகர், திருவல்லிக்கேணி என்று எல்லா இடங்களிலும் தெருவுக்குத் தெரு தள்ளுவண்டிகளில் இரவு எட்டு மணியிலிருந்து நைட்ஷோ விடுகிற வரை சூடான இட்லியுடன் மாட்டுக்கறி வறுவலும் சேர்ந்து ஐந்து வருடம் ஆகிறது.

நான் வேலூரில் வேலை பார்த்தபோது அங்கே தள்ளு வண்டியில் 'பீப் பிரியாணி' என்ற போர்டை பார்த்து பல நாட்கள் அர்த்தமே புரியாமல் மிரண்டிருக்கிறேன். யாரிடமும் கேட்கவும் துணிவில்லாமல் தலைமுடியைப் பிய்த்துக்கொண்டு குழம்பியிருக்கிறேன். பிறகு சென்னைக்கு வந்து இங்குள்ள தள்ளுவண்டிகளில் 'பீஃப் பிரியாணி' என்று போட்டிருப்பதைப் பார்த்த பிறகுதான் விஷயம் விளங்கியது. ஆயுத கலாச்சாரத்தைப் பார்த்து பயந்தோ என்னவோ வேலூரில் ஆயுதத்தை எடுத்துவிட்டார்கள் போலும்! இப்படி, தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் ஆயுதத்தோடும், ஆயுதமில்லாமலும் மாட்டுக்கறி உணவு கொடிகட்டிப் பறக்கிறது. பாண்டிச்சேரி கடற்கரையில் காந்தி சிலையை ஒட்டியுள்ள மூன்று தள்ளுவண்டிகளில் ஒவ்வொரு வண்டியிலும் தினந்தோறும் ரூ.3000/க்கு குறையாமல் வியாபாரம் நடக்கிறது. ஒரு பிளேட் மாட்டுக்கறி வறுவல் ரூ.7. நான்கு அல்லது ஐந்து துண்டுகள் இருக்கும். ஒரு ஆள் நிச்சயமாக நான்கு பிளேட்டுகள் சாப்பிடலாம்.

எல்லாவற்றையும் பார்பராவிடம் விளக்கமாகச் சொன்னேன். "மாடு என்பது உங்களுக்கு ஒரு அசூயை தரக்கூடிய பிராணியாக இல்லாமல் இருப்பதால்தான் அதை சுலபத்தில் ஏற்றுக்கொண்டுவிட்டீர்கள் என்று நினைக்கிறேன். ஆனால் அதே சமயத்தில் உங்களால் எந்தக் காலத்திலும், பன்றிக்கறியை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று சொன்னாள்.

"ஆமாம். நீ சொல்வது சரியாக இருக்கலாம். ஒரு அராபியருக்கு பெட்ரோல் கிணறு எப்படியோ அப்படித்தான் எங்களுக்கும் ஒருகாலத்தில் பசுவும், முருங்கையும் இருந்தது. முருங்கை

அழிந்துபோன நிலையில் ஒரு சினிமா நடிகர் வந்துதான் அதைக் காப்பாற்றினார். இப்போது மாட்டை எப்படி, யார் காப்பாற்றப் போகிறார்கள் என்று தெரியவில்லை."

"ஓகே. நாம் டீ சாப்பிடலாம்" என்று சொல்லிவிட்டு இரண்டு பேருக்கும் டீ போட்டுக்கொண்டு வந்தாள்.

ஒரு கனத்த அமைதிக்குப் பிறகு "நாம் எப்போதோ சந்தித்திருக்க வேண்டும். இந்த ஒரு வருடமும் நான் பேசுவதற்குக் கூட ஆள் இல்லாமல் தவித்துக் கிடந்தேன்" என்றாள்.

"ஏன்? உனக்கு இங்கே நண்பர்கள் யாரும் கிடையாதா?"

"நான் யாரிடமும் பேசுவது? இது ஒரு செக்ஸ் வறட்சிபிடித்த சமூகமாக இருக்கிறது. என் கைகளைக் கூட வெளியே காட்ட முடியவில்லை. நீ கோபித்துக் கொள்ளாதே சாரு. இங்கே இருக்கும் ஒரு ஆணுக்குக் கூட, என் கண்களைப் பார்த்துப் பேசத் தெரியவில்லை. எல்லாருமே என் மார்பைப் பார்த்துத்தான் பேசுகிறார்கள். சீக்கிரமாக இங்கிருந்து போய் விட வேண்டும் என்ற வேகத்தில் இருந்தபோதுதான், உன்னைச் சந்திக்க நேர்ந்தது. இப்போது ஏன் போகிறோம் என்று இருக்கிறது. ஆனால், எல்லாமே முடிந்துவிட்டது. இனிமேல் தள்ளிப் போட முடியாது."

இறுக்கமாக என் கைகளைப் பற்றியிருந்த அவளுடைய கைகள் நடுங்கிக்கொண்டிருந்ததை என்னால் உணர முடிந்தது. ஒரு வருடமாக அவளைப் பற்றி 'பிலிம்' காண்பித்துக்கொண்டிருந்த மாணிக்கத்தை மனதாரத் திட்டினேன்.

"இருந்துவிடு பார்பெல்... எல்லாவற்றையும் கேன்சல் செய்துவிட்டு இருந்துவிடு" என்றேன்.

"என்னை இதுவரை யாருமே பார்பெல் என்று கூப்பிட்டதில்லை" என்று புன்முறுவலுடன் சொல்லிவிட்டுத் தொடர்ந்தாள் "முடியாது சாரு... இந்த 'பி.எச்.டி.'யை முடித்தால்தான் ஓரளவுக்குப் பிழைக்க முடியும். காலம் கடந்துவிட்டது. உன்னை ஒருவருடத்திற்கு முன்பு சந்தித்திருந்தால் சரியாகத் திட்டமிட்டிருக்கலாம். சரி. ஒன்று சொல்கிறேன், கேட்பாயா? ஏதோ பெரிதாக சிநேகிதி.

சிநேகிதி என்று காதில் பூ சுற்றுகிறாயே..." என்று சொல்லிக் கொண்டிருந்தவளை இடைமறித்து "காதில் பூ சுற்றுவதெல்லாம் கூட உனக்குத் தெரியுமா?" என்று கேட்டேன்.

"அதற்கெல்லாம் நான் என் புரொபசருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்" என்றாள்.

(புரொபசர் என்று அவள் சொன்னது சமீபத்தில் காலமான ஏ.கே. ராமானுஜத்தைத்தான். பார்பரா, ஏ.கே.ராமானுஜத்திடம் தமிழ் படித்தவள்.)

"சரி, நான் சொல்ல வந்ததைச் சொல்லிவிடுகிறேன். ரேஷ்மாவை என்னுடன் அழைத்துப் போகிறேன். என்ன சொல்கிறாய்?"

ரேஷ்மா, பார்பராவுடன் போனால் பிரமாதமாக இருப்பாள்தான். ஆனால், ரேஷ்மாவை இந்த நான்கு வயதில் முழுக்க முழுக்கப் பிரிவது என்பதை என்னால் கற்பனை செய்தே பார்க்க முடியவில்லை.

"நோ பார்பெல்... சாத்தியமேயில்லை" என்றேன். பிறகு நீண்ட நேரம் மௌனம். புல் தரையில் கைகளைத் தலைக்கு வைத்தபடி மௌனமாகப் படுத்திருந்த பார்பரா திடீரென்று என்னைப் பார்த்து சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"எனக்குத் தெரியும் நீ இப்படித்தான் சொல்வாய் என்று."

"என்ன பார்பெல் இது? உன்னைப் பிரிவதே எனக்குத் தாங்க முடியாத வலியாகவும், சித்ரவதையாகவும் இருக்கிறது. ரேஷ்மாவும் போய் விட்டால்... நான் அனாதையாகிவிடுவேன் பார்பெல்."

"ஓக்ஹாய்... ஃபர்கெட் இட்."

அவளுடைய ஓக்ஹாயை ரசித்தேன். அமெரிக்க ஓகே. பிறகு மீண்டும் அவள் ஆரம்பித்த இடத்திற்கே வந்தேன். இங்கு நம்முடைய காதல் தேவதையாக இருக்கும் ஒரு சினிமா நடிகையைப் பற்றிச் சொல்லி "அவளைப் போலவே நீயும் இருப்பதால்தான்

உன்னை அப்படிப் பார்க்கிறார்கள். மற்றபடி இது செக்ஸ் வறட்சி கொண்ட நாடு என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இதிலும் ஒரு பிரச்சினை இருக்கிறது. அமெரிக்காவில் செக்ஸைப் பொறுத்தவரை ஓரளவுக்கு எந்தத் தடையும் கிடையாது. ஆனால், அப்படிப்பட்ட ஒரு வெளிப்படையான சமூகத்திலும் கூட 'போர்னோ' என்பது மிகப் பெரிய வியாபாரமாகத்தானே இருந்து வருகிறது?" என்றேன்.

"இதற்கு என்னால் உடனடியாக பதில் சொல்ல முடியவில்லை. யோசித்து எழுதுகிறேன்" என்றாள்.

எனக்கு அப்போது ஒரு பயம் பிடித்துக்கொண்டது. நான் பார்பராவுக்குக் கடிதம் எழுத வேண்டுமானால் ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும். அவளுக்குப் பேச்சுத் தமிழ் நன்றாகவே தெரிந்திருந்தாலும் எழுதவும், படிக்கவும், சரளமாக வராது. எனக்கோ அலுவலகத்தில் 'காஷுவல் லீவ்' விண்ணப்பத்தைத் தவிர வேறு எதுவுமே ஆங்கிலத்தில் எழுதிப் பழக்கமில்லை. அவளிடம் இதையும் சொன்னேன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ எழுதுகிறாய்" என்றாள்.

தொடர்ந்து "ஒவ்வொரு நாளும் ஊருக்குக் கிளம்புவேனா என்றே சந்தேகமாகிக்கொண்டு வருகிறது" என்று சொல்லி சற்று நேரம் யோசித்துக் கொண்டிருந்தவள் "நோ... போய்த்தான் ஆக வேண்டும்" என்றாள்.

சொல்லிவிட்டு அப்படியே திரும்பி தலையைக் கவிழ்த்துக்கொண்டு படுத்தாள். எதுவும் பேசவில்லை. குலுங்கி அழுவது தெரிந்தது. "நோ பார்பெல்... நோ" என்று சொல்லியபடி அவளுடைய முதுகில் சாய்ந்தேன்.

நீண்டநேரம் கழித்து சன்னமான குரலில் "ஒரு கால் நூற்றாண்டுக் காலம் மிகத் தீவிரமாக பழகிய பிறகு எவ்விதத் தொடர்பும் இல்லாமல் – ஒரு பத்தாண்டுகளுக்குப் பிறகு அந்த நபரை ஓடிக் கொண்டிருக்கும் ஒரு ரயிலிலிருந்து பார்த்து கைகளை அசைத்தால் எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது. இது ஒரு சித்ரவதை சாரு. இதை என்னால் தாங்க முடியவில்லை..." என்றாள்.

பார்பரா ஊருக்குக் கிளம்ப இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது. அன்று ஒரு விடுமுறை தினம். காலை பத்து மணி அளவில் போன் செய்தேன். "வருகிறாயா? உடனே வா. உடனே உன்னைப் பார்க்க வேண்டும். எப்போது வருகிறாய்? நான் இரண்டு மணிக்குக் கிளம்ப வேண்டும்" என்றாள்.

"வருகிறேன். பனிரெண்டு மணி அளவில் சந்திக்கிறேன்" என்றேன்.

"பிரேக்பாஸ்ட் முடித்தாயிற்றா?" என்று கேட்டாள். நான் காலையில் அருகம்புல் சாறு மட்டுமே குடித்திருந்தேன். 'கபகப்'வென்ற பசி. இருந்தாலும் "ஆயிற்று" என்றேன்.

'சாப்பிட்டாயா?' என்று என்னை, ரமேஷைத் தவிர வேறு யாரும் கேட்டு எவ்வளவு ஆண்டுகளாயிற்று என்று நினைத்துக் கொண்டேன். நினைக்க நினைக்க நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொண்டது. இது என்ன நாற்பது வயதில் – அதிலும் ஒரு வாரத்தில் யு.எஸ்.போய் விடப் போகிற ஒரு பெண்ணிடம் இத்தனை ஈடுபாடு என்று தோன்றியது.

அண்ணா நகரிலிருந்து பார்பரா இருக்கும் பெசன்ட் நகருக்கு கிட்டத்தட்ட இரண்டு மணி நேரப் பயணம். அடையாறு டெப்போவில் இறங்கி எதிரே இருந்த ஐயங்கார் பேக்கரியில் பை நிறைய நொறுக்குத்தீனி வாங்கிக்கொண்டு ஆட்டோ பிடித்து, பார்பராவின் வீட்டை அடைந்தபோது மணி 12.15.

நான் அண்ணாநகரிலிருந்து பெசன்ட் நகர் வரும் பயணத்தைப் பற்றி விளக்கினேன். அப்படியே தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

"மை காட்! என் சாருவை ஒவ்வொரு முறையும் இவ்வளவு தூரம் சிரமப்படுத்தியிருக்கிறேனா?" என்று திரும்பத் திரும்பக் கேட்டாள்.

இரண்டு மணிக்கு நான் அந்த செக்ஸ் தொழிலாளர்களை சந்திக்க வேண்டும். நாம் இப்போது இரண்டு மணி நேரம்தான் பேச முடியும். இரண்டு மணி நேரம்பேச நான்கு மணி நேரப் பயணமா!" என்று வருத்தத்துடன் சொன்னாள்.

"சரி. அப்படியானால் நாளை மாலை வருகிறேன். இரவு முழுவதும் பேசலாம். ரேஷ்மாவையும் அழைத்து வருகிறேன்" என்றேன்.

அப்படியே சந்திப்பது என்று முடிவாயிற்று.

மறுநாள் மாலை வந்தபோது வீட்டுக்கு வெளியிலிருந்த புல் தரையில் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்தபடி அமர்ந்திருந்தாள் பார்பரா. நானும் பக்கத்தில் அமர்ந்தேன். ரேஷ்மாவிடம் கொஞ்சி விட்டு என்னைப் பார்த்து "இன்னும் ஐந்து நாட்கள்" என்றாள்.

"வேறு ஏதாவது பேசேன் பார்பெல்."

திடீரென்று அவளும் ரேஷ்மாவைப் போல் ஒரு குழந்தையாகத் தோன்றினாள்.

நானே போய் மூன்று பேருக்கும் டீ போட்டுக்கொண்டு வந்தேன். டீயைக் குடித்துவிட்டு ரேஷ்மா 'டிவி' பார்க்க உள்ளே போய்விட்டாள்.

திடீரென்று மணியைப் பார்த்தேன். எட்டு ஆகியிருந்தது. "ஓகே பார்பெல்... ரேஷ்மாவுக்குப் பசிக்கும். மூன்று பேரும் எங்காவது ரெஸ்டாரண்டுக்குப் போய் வருவோம்" என்றேன். பார்பரா பேசவில்லை. நானும் அவள் பேசட்டும் என்று எதிர்பார்த்து அமர்ந்திருந்தேன். திடீரென்று வெறிபிடித்தாற்போல் என் தோள்களை உலுக்கி "ஒய் டிட்யூ மீட் மீ? ப்ளீஸ் கோ அவே. ப்ளீஸ்... இன்று இரவு இங்கே தங்காதே" என்று சொல்லிவிட்டு நான் சற்றும் எதிர்பாராதவிதமாக என் கண்களில் முத்தமிட்டுவிட்டு முழந்தாளிட்டு தலை கவிழப் படுத்துக்கொண்டாள்.

நான் அவள் பக்கத்தில் போய் "இதோ பார் பார்பெல்... இன்றிரவு நான் தங்குவதுதான் பிரச்சினை என்றால் நீயும் ரேஷ்மாவும் மாடிக்குப் போய் தூங்குங்கள். நாம் பேச வேண்டாம். இங்கே நான் படுத்துக் கொள்கிறேன். மற்றதை காலையில் பார்த்துக் கொள்ளலாம்" என்றேன்.

ஆனால், அவள் மறுபடியும் "புரிந்துகொள்ள முயற்சி செய்

சாரு.. தயவுசெய்து இன்று இரவு இங்கே தங்காதே..... ப்ளீஸ்" என்றாள். அவள் உடம்பு முழுவதும் குலுங்கிக்கொண்டிருந்தது.

நான் ஒன்றுமே சொல்லாமல் அவள் தோளைத் தொட முயன்றபோது பின் பக்கம் திரும்பாமலேயே "டோன்ட் சாரு. ப்ளீஸ் டோன்ட். ஐ பெக் யூ..." என்றாள்.

சட்டென்று எழுந்து உள்ளே போய் ரேஷ்மாவைக் கூப்பிட்டேன். கிளம்புகிறோம் என்று அறிந்ததும் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள் ரேஷ்மா. ஷூவையும் போடமாட்டேன் என்று அடம்பிடித்தாள். ஷூவை எடுத்து பையில் போட்டுவிட்டு அவளைத் தூக்கிக்கொண்டு கிளம்பினேன்.

அதற்குப் பிறகு இரண்டு நாட்கள் பார்பராவைப் பார்க்கவில்லை. போனிலும் தொடர்பு கொள்ளவில்லை. ஆனால் மூன்றாம் நாளும் என்னால் அப்படி இருக்கமுடியவில்லை. மண்டையே வெடித்து விடுகிறாற்போல் ஒரு உணர்வு. உள் ஜுரம். அவள் ஊருக்குக் கிளம்ப இன்னும் இரண்டே நாட்கள்தான் இருந்தன.

போனில் தொடர்பு கொண்டேன். நான்தான் என்று தெரிந்ததுமே "இன்று மட்டும் நீ போன் செய்யாமல் இருந்திருந்தால் நானே நேராகக் கிளம்பி வந்து உன்னைக் குத்திக் கொலை செய்திருப்பேன். உடனே கிளம்பி வா" என்றாள்.

போனேன். மிகவும் சோர்வாகப் படுக்கையில் சாய்ந்திருந்தாள். பதற்றத்துடன் "என்ன ஆயிற்று?" என்று கேட்டு கையை அவள் நெற்றியருகே கொண்டு போனவன் சட்டென்று ஞாபகம் வந்தவனாய் கையை இழுத்துக்கொண்டேன்.

"டோன்ட் பி சில்லி மேன்..." என்று சொல்லி என் கையைப் பிடித்து தன் நெற்றியிலும், கழுத்திலும் வைத்தாள். "இரண்டு நாளாய் கடுமையான ஜுரம். அது இருக்கட்டும். நீ ஆபீசில் தான் வேலை செய்கிறாயா? அல்லது எதாவது அன்டர்கிரவுன்ட் வேலையில் ஈடுபட்டிருக்கிறாயா? ஜுரத்தில் படுக்கையை விட்டுக் கூட எழுந்துகொள்ள முடியாமல் உனக்கு போன் செய்து செய்து கை முறிந்துவிட்டது. மீனாட்சி மட்டும் இருந்திருக்காவிட்டால் என்ன ஆகியிருப்பேன் என்றே தெரியவில்லை" என்றாள்.

"அமெரிக்கப் பெண்ணான உனக்கு இங்குள்ள அரசாங்க அலுவலகம் பற்றிச் சொன்னால் புரியாது. அதைப் புரிய வைக்கவும் இப்போது நேரமில்லை. உன் உடல்நிலை இப்போது எப்படி இருக்கிறது? முதலில் அதைச் சொல்."

"இப்போது சரியாகிவிட்டது. அது சரி... அன்றைக்கு எப்படிப் போனாய்? நீ போன பிறகுதான் உனக்கு அந்த நேரத்தில் பஸ் கிடைத்ததோ, இல்லையோ என்ற ஞாபகமே வந்தது. ஐயாம் ரியலி சாரி சாரு. நீ என்னை மன்னிக்கத்தான் வேண்டும். அன்றைக்கு நான் என் வசத்திலேயே இல்லை. உன்மத்தம் பிடித்த நிலையில் இருந்தேன். நீ மட்டும் அதற்குமேல் ஒரு நிமிடம் தாமதித்திருந்தாலும் நான் யூவெஸ் போவது நடக்காமல் போயிருக்கும். அதற்காக நான் உனக்கு நிச்சயம் நன்றி சொல்ல வேண்டும். ஆனாலும் நீ ஒரு கல்நெஞ்சக்காரன்தான். ஊருக்குப் போக இன்னும் ஒரு சில நாட்களே இருக்கிற இந்தநிலையில் இரண்டு நாட்களாக போன் செய்யாமல் இருந்துவிட்டாயே?" என்றாள்.

பின்குறிப்பு: இப்போது பார்பரா ஒரு கனவு. அவளுடன் பழகிய அந்த ஒரு மாத காலம் ஒரு கனவு. அந்த பெசன்ட் நகர் வீட்டின் புல்தரை ஒரு கனவு. 'சாப்பிட்டாயா?' என்று என்னை அவள் ஆதுரத்துடன் கேட்டது ஒரு கனவு. என் கைகளைப் பற்றிக் கொண்டிருந்தபோது அவள் கைகள் நடுங்கிக்கொண்டிருந்தது ஒரு கனவு. 'என்னைத் தொடாதே; போய்விடு' என்று சொல்லி குலுங்கிக் குலுங்கி அழுதது ஒரு கனவு. கனவையெல்லாம் நினைவாக்கி இப்போது பார்பராவுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறேன்.

என் முதல் ஆங்கிலக் கடிதம்.

தினமலர் - கதைமலர்
செப்டம்பர், 1993

# உடல்

சமீபத்தில் எனக்கு வந்த ஒரு கடிதத்தை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். கடிதம் எழுதியவருக்கு என்னைப் போன்ற பிரபலமில்லாத ஒரு எழுத்தாளனின் முகவரி எப்படிக் கிடைத்திருக்கக் கூடும் என்பதே இன்னமும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. கடிதம் எழுதியவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நபர்களின் பெயர், ஊரின் பெயர், சாதிப்பெயர் போன்றவைகளை மாற்றியிருக்கிறேன். மற்றபடி கடிதத்தில் நகாசு வேலைகள் எதுவும் தேவையில்லை என்று தோன்றியதால் அதில் எந்த மாறுதலும் செய்யாமல் அப்படியே தந்திருக்கிறேன். இனி வருவது கடிதம்.

என் பெயர் முனியன். ஆனால், என் பெயர் இங்கு அவசியமில்லை. ஏனென்றால் நான் உங்களுக்கு எழுத நினைப்பது என் நண்பன் கலைச்செல்வனைப் பற்றி. கலைச்செல்வன் மேல் சாதி, நான் தாழ்த்தப்பட்ட சாதி. நீங்கள் பெரும் படிப்பாளியாகவும், நகரவாசியாகவும் இருப்பதால் உங்களுக்கு நான் இப்படி எடுத்த எடுப்பில் எங்கள் சாதியைச் சொல்லி அறிமுகம் செய்துகொள்வது முகச்சுளிப்பை ஏற்படுத்தலாம். எனக்கும் சாதியில் நம்பிக்கை இல்லைதான். ஆனால், சாதி என்பது நாங்கள் விரும்பினாலும்

விரும்பாவிட்டாலும் எங்களின் உடல் உறுப்புகளில் ஒன்றாக ஆகிவிட்ட ஒன்று.

சரி, விசயத்திற்கு வருகிறேன். எங்கள் ஊரின் நடுவே ஓடும் மண் ரோட்டுக்கு கிழக்கால் இருப்பது மேல்சாதி மக்கள் வாழும் பகுதி. மேற்கால் இருப்பது தாழ்த்தப்பட்டவர்களாகிய நாங்கள் வாழும் பகுதி. மேல் சாதி கீழ்ச்சாதி என்று சொல்லிக்கொள்கிறார்களே தவிர எங்கள் வாழ்க்கை வசதிகளைப் பொறுத்தவரை அதிக வித்தியாசம் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. நாங்கள் பன்றிக்கறியும், மாட்டுக் கறியும் சாப்பிடுவதுதான் ஒரே ஒரு வித்தியாசம். அவர்கள் ஆடு, கோழி என்பதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். மற்றபடி நாங்களும் மிளகாய் கடித்துக்கொண்டுதான் கூழ் குடிக்கிறோம். அவர்களும் மிளகாய் கடித்துக்கொண்டுதான் கூழ் குடிக்கிறார்கள். நாங்கள் வாழ்வது குடிசையில்.

எங்கள் பெண்டுகள் வயக்காட்டில் வேலை செய்வது மாதிரிதான் அவர்கள் பெண்டுகளும் வயக்காட்டில் வேலை செய்து பிழைக்கிறார்கள். எங்கள் பகுதிப் பையன்களும் ப்ளஸ்டூ படித்துவிட்டோ அல்லது 20 கி.மீ. தொலைவிலுள்ள டவுனுக்குப் போய் காலேஜில் பி.ஏ. படித்துவிட்டோ வேலையில்லாமல் ஆலமரத்தடியில் சீட்டாடிக் கொண்டோ அல்லது கஞ்சா அடித்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். அவர்கள் பையன்களுக்கும் அதே நிலைதான். இருந்தாலும் ஊருக்கு நடுவே ஓடும் ஒரு மண்ரோடு எங்களை மேல்சாதி கீழ்ச்சாதி என்று பிரித்து வைத்திருக்கிறது.

கலைச்செல்வனும் நானும் ஒரே பள்ளியில்தான் படித்தோம். பள்ளிக்கூடம் எங்கள் ஊரிலிருந்து மண்ரோடு வழியே போனால் ஒன்பது கிலோமீட்டர் தூரம். வயக்காட்டு குறுக்குப் பாதையில் போனால் அதில் பாதி. அவனிடமும் சைக்கிள் இல்லை. என்னிடமும் சைக்கிள் இல்லை. ஆக, நாங்கள் இருவரும் நடந்தே பள்ளிக்கூடம் சென்று வந்தோம். பிளஸ் டூ முடித்த பிறகு கலைச்செல்வன் வேலை தேடி சென்னைக்குப் போய்விட்டான். அவனுடைய மாமா வீட்டில் தங்கிக்கொண்டு

ஒரு பத்திரிகை ஆபிசில் வேலை பார்த்தான். தபால் வழியாகவே எம்.ஏ., படித்து முடித்தான். வருடத்திற்கு ஒருமுறை ஊருக்கு வந்துபோவான். எனக்கு அடிக்கடி கடிதம் எழுதி என்னையும் சென்னைக்கு வரச்சொல்லி எழுதுவான். நாம் இரண்டு பேரும் தனி அறை ஒன்று எடுத்துக்கொண்டு தங்கிக்கொள்ளலாம். உனக்கும் ஏதாவது ஒரு சின்ன வேலை கிடைக்கும் வரை என் சம்பளத்திலேயே இரண்டு பேரும் சமாளித்துக் கொள்ளலாம் என்று எழுதுவான். ஆனால், என்னால்தான் ஊரை விட்டுக் கிளம்ப முடியாமல் போனது. ஊருக்கு மத்தியில் ஒரு கெமிக்கல் பேக்டரி வந்ததுதான் காரணம்.

எங்கள் சேகரிக்கும் மேல் சாதிக்காரர்களின் குடியிருப்புப் பகுதியான கீழ்த்தெருவுக்கும் நடுவில் முளைத்தது கெமிக்கல் பேக்டரி. அது வந்த பிறகு காற்று கெட்டுப் போனது. வயதானவர்களும், குழந்தைகளும், சமயங்களில் பெண்டுகளும் திடீர் திடீரென்று மயங்கி விழுந்தார்கள். பேக்டரியில் வேலைக்குப் போன சின்னானும், ராமலிங்கமும் கியாஸ் கசிவில் மயங்கி விழுந்து செத்துப் போனார்கள். சின்னான் எங்கள் பக்கத்துப் பையன். ராமலிங்கம் கீழத் தெருவைச் சேர்ந்த சம்சாரி. சின்னானின் வயதான தாயும், கல்யாணத்திற்கு குதிர்ந்து நின்ற தங்கையும், ராமலிங்கத்தின் பிள்ளைத்தாய்ச்சி மனைவியும் மண்ணில் விழுந்து புரண்டு அழுதார்கள். ராமலிங்கத்திற்கு திருமணமாகி இப்போதுதான் ஏழெட்டு மாதம் ஆகியிருந்தது.

ஊரே கலவரப்பட்டுப்போனது. ஆண்டாண்டு காலமான பகையையும் மறந்து கீழத்தெரு இளைஞர்களும், எங்கள் பகுதி இளைஞர்களும் ஒன்று சேர்ந்து கலெக்டரிடம் மனு கொடுத்தோம். தொகுதி எம்.எல்.ஏ. வீட்டுக்கும் அலையாய் அலைந்து பார்த்தோம். இதற்கெல்லாம் எந்தப் பலனும் இல்லாமல் போனது. அந்தச் சமயத்தில்தான் பேக்டரியில் மேலும் ஐந்து பேர் செத்துப் போனார்கள். ஏதோ அரை வயிற்றுக் கூழுக்காக விவசாயக் கூலி வேலை செய்துகொண்டிருந்த எங்களுக்கு பேக்டரி வேலையைக் கொடுத்து கூடவே கையில் மரணச் சீட்டையும் தந்திருப்பதைப் பார்த்து இரண்டு பகுதி மக்களும் கொதித்துப் போனார்கள்.

இந்தத் தடவை செத்துப் போன ஐந்து பேரும் எப்படிச் செத்தார்கள் என்பதைப் பற்றி பேக்டரியில் வேலை பார்த்தவர்களெல்லாம் பதட்டத்தோடு வந்து சொன்னார்கள். உள்ளே சென்ற ஆள் வரவில்லையே என்று இரண்டாவது ஆள் போக அவரும் வரவில்லையே என்று மூன்றாவது ஆள் போக, இப்படியே ஒருவர் பின் ஒருவராக நான்கு பேர் வராமல் போகவே அங்கிருந்தவர்கள் சந்தேகப்பட்டு இன்ஜினியரைப் பார்த்து விஷயத்தைச் சொல்ல, அவரும் உள்ளே போனவர் திரும்பவில்லை. இப்படித்தான் ஐந்து பேர் செத்துப் போனார்கள். இந்த நிலையில்தான் இனி மனுக்கள் கொடுத்து பயனில்லை என்று பேக்டரிக்கு எதிரே கொடி பிடித்து ஊர்வலம் சென்றோம். ஊருக்கு மத்தியில் இருக்கும் பேக்டரியை வேறு எங்காவது ஆள் இல்லாத இடத்துக்கு மாற்றச் சொல்லியும், பேக்டரியில் வேலை செய்பவர்களுக்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து தரச்சொல்லியும் அங்கேயே காலவரையறை உண்ணாவிரதம் இருந்தோம். எங்களை அப்புறப்படுத்த வந்த போலீசாருக்கும் எங்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டது. இதற்கெல்லாம் பிறகுதான் அந்த இடத்திற்கு வந்தார் கலெக்டர். எங்கள் ஊருக்கு என்ன பாதுகாப்பு என்று கேட்டு கலெக்டரை மறியல் செய்தோம்.

“பேக்டரியை அப்புறப்படுத்துவதெல்லாம் இப்போது இந்தக் கட்டத்தில் முடியவே முடியாத காரியம். உங்கள் குடியிருப்புப் பகுதியை வேண்டுமானால் இங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றிக்கொள்வது பற்றி யோசிக்கலாம்” என்று சொன்னார் கலெக்டர். சொல்லி முடித்தவுடன் அவர் முகத்தில் வந்து விழுந்தது யாரோ வீசிய செருப்பு. அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் வழக்கமாக நீங்கள் செய்தித்தாள்களில் படிக்கக் கூடியதுதான். தடியடி, கண்ணீர்ப் புகை, நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே துப்பாக்கிச் சூடு. ஊர்ச்சனங்களில் ஆறு பேர் சாவு. கல்லடி பட்டு ஒரு போலீஸ்காரர் சாவு. சம்பந்தப்பட்டவர்களையும், படாதவர்களையும் போலீசார் கைது செய்தார்கள். நானும் அதில் ஒருவனாக இருந்தேன்.

சிறைவாசம் முடிந்து திரும்பிய அன்று கலைச்செல்வனை டீக்கடையில் சந்தித்தேன். நகரத்தில் வசித்ததனால் ஏற்பட்ட

மாற்றமோ என்னவோ, நான் கொட்டாங்கச்சியில் டீ குடிப்பதைப் பார்த்த கலைச்செல்வன் நேராக டீக்கடை கந்தனிடம் போய் இனிமேல் கொட்டாங்கச்சியில் டீ கொடுக்கக் கூடாது என்றும், எல்லாரையும் போலவே மேலத்தெரு ஆட்களுக்கும் கிளாசில்தான் டீ கொடுக்க வேண்டும் என்றும் சட்டம் பேசினான். “அதையெல்லாம் ஊர்ப் பஞ்சாயத்தில் போய் சொல்” என்று முகத்தில் அறைந்தாற் போல் சொல்லிவிட்டான் டீக்கடை கந்தன்.

வேறு மாதிரியாகத்தான் இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும் என்று என்னிடம் கலைச்செல்வன் சொல்லிக் கொண்டிருந்த போது டீக்கடைக்கு ஒரு வினோதமான உடையில் வெளியூர்க்காரர் ஒருத்தர் வந்தார். காதில் கடுக்கனும், தலைப்பாகையும் அணிந்து ஜமுக்காளத்தையே கோமணமாக கட்டி, மேலுக்கு சட்டை எதுவும் போடாமல் ஜமுக்காளத்தையே போர்த்திக் கொண்டிருந்தார் அவர். ஆஜானுபாகுவாக கன்னங் கரேலென்று எங்கள் ஊர் எல்லைச்சாமி வீர முனீஸ்வரனைப் போன்ற தோற்றம். முகத்தில் பெரிய குங்குமப் பொட்டு. பிறகு அவர் பேச்சிலிருந்துதான் அவர் ஆந்திராவைச் சேர்ந்தவர் என்பதும், முகத்தைப் பார்த்தே குறி சொல்பவர் என்பதும் தெரிந்தது.

கலைச்செல்வனை உற்றுப் பார்த்த அவர், “தம்பீ, உனக்கு இந்த ஊரில் ஜலதோஷத்தினால் மரணம் வரக்கூடும். இந்த ஊர்ப்பக்கத்திலேயே நில்லாதே. உடனே வெளியூருக்குப் போய் விடு” என்றார். கலைச்செல்வன் விழுந்து விழுந்து சிரித்து விட்டு அவருக்கு பதில் எதுவும் சொல்லாமல் என்னையும் அழைத்துக் கொண்டு ஆலமரத்தடிக்கு வந்தான்.

அங்கே இருந்த இளைஞர் பட்டாளத்தைக் கூட்டி விஷயத்தை விளக்கினான். அவன் என்ன பேசினான் ஏது பேசினான் என்பதையெல்லாம் நான் உங்களுக்கு விளக்க வேண்டிய அவசியமில்லை. ஏற்கனவே பேக்டரி ஒழிப்புப் போராட்டத்தின் காரணமாக ஓரளவுக்கு ஒன்று சேர்ந்திருந்த தாழ்த்தப்பட்ட சாதியையும், மேல் சாதியையும் சேர்ந்த இளைஞர்களை

திக்கங்குகளாய் வந்து விழுந்த கலைச்செல்வனின் ஆக்ரோஷமான பேச்சு மேலும் ஒன்றாய்ப் பிணைத்தது.

“பஞ்சாயத்து பற்றியெல்லாம் எங்களுக்குத் தெரியாது. நாளைக்குள் இந்தக் கொட்டங்கச்சிகளை எடுக்காவிட்டால் எல்லாவற்றையும் நாங்களே அப்புறப்படுத்துவோம்” என்று சொன்னான் கலைச்செல்வன்.

சாதி வித்தியாசம் இல்லாமல் இப்படி இரண்டு தரப்பிலுமிருந்த இளைஞர்கள் ஒன்றாக வந்து குழுமியதைப் பார்த்த டீக்கடை கந்தன் ஆச்சரியப்பட்டிருக்கலாம்.

மறுநாள் நாங்கள் டீக்கடைக்குச் சென்றபோது கீழத்தெருவைச் சேர்ந்த பத்து பதினைந்து பேர் கழி கம்புகளுடன் டீக்கடைக்கு முன்னால் நின்றிருந்தார்கள். “நாம் இப்போது திரும்பி விடலாம், இவர்களோடு சண்டை போடுவதோ அல்லது நாமும் ஆயுதங்களோடு வந்து இவர்களைத் தாக்குவதோ நம்முடைய வேலை அல்ல. இப்போது திரும்பிவிட்டு வேறொரு சமயம் வரலாம்” என்றான் கலைச்செல்வன்.

ஆனால், இவர்கள் என்னதான் செய்கிறார்கள் என்று பேசிப்பார்த்து விடலாம் என்றார்கள் மற்றவர்கள். சரி என்று தயக்கத்துடன் சொல்லி கலைச்செல்வன் கடையை நோக்கி நடக்க ஆரம்பித்ததுதான் தாமதம். கண்ணிமைக்கும் நேரத்தில் திடீரென்று அவர்கள் எங்களைத் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள். “திரும்புங்கள்” என்று கத்திக் கொண்டே கலைச்செல்வன் எங்களையெல்லாம் இழுத்துக்கொண்டு ஓடினான். குறிவைத்து அடித்தது போல் எனக்கும் கலைச்செல்வனுக்கும் மட்டும் பலத்த அடி.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு கலைச்செல்வனும் சென்னைக்குத் திரும்பாமல் ஊரிலேயே தங்கினான். டீக்கடையில் ஒரு சிறிய மாற்றம் நடந்திருந்தது. கொட்டாங்கச்சிக்குப் பதிலாக எங்களுக்கென்று தனியாக டீ கிளாஸ் வைக்கப்பட்டது. நாங்கள் எங்களுக்கென்று ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் கிளாசில் டீ குடித்துவிட்டு அதை நாங்களே

கழுவி வைத்துவிட வேண்டும். எங்கள் பக்கத்து ஆட்களுக்கு இது ஓரளவுக்கு ஆறுதலாக இருந்தது என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் கலைச்செல்வன் இதற்கும் கொட்டாங்கச்சிக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை என்றான். இதற்கும் ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும் என்று கீழத்தெரு இளைஞர்களும் வற்புறுத்தினார்கள்.

மறுபடியும் டீக்கடைக்கு கூட்டமாகச் சென்று, "இப்படி தனி கிளாஸ் வைக்கக் கூடாது, வைத்தால் அப்புறப்படுத்துவோம்" என்று சொன்னோம். மறுநாள் போன போது டீக்கடையில் எந்த மாற்றமும் இல்லாததைப் பார்த்து தனி கிளாஸ்களை எடுத்துப்போட்டு உடைத்தோம். மறுபடியும் தனி கிளாஸ் வைத்தால் மறுபடியும் வந்து உடைப்போம் என்று சொல்லிவிட்டுத் திரும்பினோம். ஆனால், அடுத்த நாளே தனி கிளாஸ் வைக்கப்பட்டது. கடைக்குப் பாதுகாப்பாக ஒரு வேன் நிறைய போலீஸ் வந்திருந்தது. அதற்குப் பிறகு நடந்ததை மிகச் சுருக்கமாக சொல்லி விடலாம்.

கலைச்செல்வன் கைது செய்யப்பட்டான். ஒரு வாரத்துக்குப் பின் அவன் லாக்கப்பிலேயே இறந்துவிட்டதாக தகவல் வந்தது. முதலில் பிரேதத்தைத் தருவதற்கு மறுத்துவிட்டார்கள். பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும் அது இது என்று என்னென்னவோ காரணம் சொன்னார்கள். கிராமமே திரண்டு போய் போலீஸ் ஸ்டேஷன் வாசலில் உட்கார்ந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது. அப்போது திடீரென்று நாங்கள் யாரும் எதிர்பாராத வகையில் கலைச்செல்வனின் பெற்றவர்களைக் கூப்பிட்டு அனுப்பி பிரேதத்தை ஒப்படைத்தார்கள்.

ஐயா, பின்வரும் வார்த்தைகளை வெறும் வார்த்தைகள் என்று மட்டுமே எடுத்துக்கொள்வதோ அல்லது அதற்கும் மேல் போய் அர்த்தமாக்கிக்கொள்வதோ உங்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. வார்த்தைகள் வெறும் பொய். பிளஸ் டூ மட்டுமே படித்திருக்கும் என்னால் இதையெல்லாம் வார்த்தைகளால் விளக்குவது கடினம். எங்களிடம் வாழ்க்கை இல்லை. வார்த்தைகளும் இல்லை.

உயிருடன் இருக்கும்போதே அந்த உடல் குதறி எடுக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தெரிந்தன. எஞ்சியிருந்த மிச்சத்தை பிரேதப் பரிசோதனை என்று சொல்லி மேலும் குதறிப் போட்டிருந்தார்கள். அதை ஒரு பிரேதம் என்று சொல்வதைவிட ஒரு சதைப் பொட்டலம் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும். முன் பற்கள் இரண்டும் காணாமல் போயிருந்தது. முழங்காலும், உறுப்பும் வீங்கி அழுகிப் போயிருந்தது. கையிலும், காலிலும் நகங்கள் பிடுங்கப்பட்டு சதை பிய்ந்து கிழிந்து ரத்தம் உறைந்து கிடந்தது. உடலெங்கிலும் பொட்டு பொட்டாக தீப்புண்கள், புண்களில் தோல் கருகி உள் சதை கருஞ்சிவப்பாய்த் தெரிந்தது.

ஐயா, இதற்கு மேல் என்னால் எதுவும் எழுத முடியவில்லை. 'டிவி' நாடகங்களைப் பார்த்து சிரித்துக்கொண்டிருக்கும் நகரவாசிகளுக்கும், தமிழ் சினிமாவில் மலைகளும் ஆறுகளும் அருவிகளும் பச்சை வயல்களுமாய் சிலுசிலுத்துக்கொண்டிருக்கும் கிராமங்களைப் பார்த்து கிறங்கிப் போயிருக்கும் மக்கள் கூட்டத்துக்கும் இதெல்லாம் உங்கள் கதை மூலம் தெரியவந்தால் என்னுடைய இந்தக் கடிதத்திற்கு ஒரு அர்த்தம் கிடைக்கலாம்.

பின் குறிப்பு: பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர்கள், ஜலதோஷத்தினால்தான் கலைச்செல்வன் செத்தான் என்பதாக ரிப்போர்ட் செய்திருந்தார்கள்.

தினமலர் - கதைமலர்
பெப்ருவரி, 1993

# மயக்கம்

அப்போது தங்சாவூரில் என் பெரியம்மா வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தேன். பெரியப்பாவுக்கு வெளியூரில் வேலை. சனிக்கிழமை வந்துவிட்டு, திங்கட்கிழமை அதிகாலை கிளம்பி விடுவார்.

பெரியம்மாவுக்கு குழந்தைகள் கிடையாது. என்மேல் அவர்களுக்குப் பிரியம் அதிகம். "நானே அவனை காலேஜில் படிக்க வைக்கிறேன்" என்று என் அப்பா அம்மாவிடம் சொல்லி சம்மதிக்க வைத்து என்னைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு வந்தார்கள்.

சரபோஜி கல்லூரியில் பி.ஏ.வரலாறு. படிப்பது வரலாறு என்றாலும் இலக்கியத்தில்தான் ஆர்வம் அதிகம்.

பிடித்த எழுத்தாளர் ஆஸ்கார் ஒயில்ட். அவரது பொன்மொழிகளை ஒரு போஸ்டரில் வண்ண எழுத்துக்களில் எழுதி வீட்டின் வெளிச் சுவரில் ஒட்டியிருப்பேன்.

ஒயில்டின் பொன்மொழிகள் ஒரே கலாட்டா மொழிகள். ஒரே ஒரு உதாரணம்.

திருமணமானவனின் சந்தோஷம், அவன் திருமணம் செய்து கொள்ளாத பெண்களைப் பொறுத்தே அமைகிறது.

ஒயில்டின் எழுத்துக்களில் இருந்த ஆர்வம் எனக்கு வரலாற்றில் இல்லை. அவ்வப்போது போய் வகுப்பில் தலையைக் காண்பித்துவிட்டு வருவதோடு சரி. அட்டென்டென்ஸ் விஷயத்தில் பேராசிரியர்கள் அவ்வளவு கெடுபிடி செய்வது இல்லை. வகுப்புக்கு வந்து தூக்கி விழுந்து மற்ற மாணவர்களைக் கெடுப்பதை விட வெளியிலேயே இருந்து தொலையட்டும் என்று அவர்கள் நினைத்திருக்கலாம்.

பொதுவாகவே நான் கூச்ச சுபாவம் உள்ளவன் என்பதால் எனக்கு நண்பர்கள் யாரும் கிடையாது. கல்லூரி நூலகத்தில் வந்து உட்கார்ந்திருந்துவிட்டு வீடு திரும்புவதுதான் தினப்படி வேலை. பரீட்சை சமயத்தில் மட்டும் மும்முரமாக ஒருவாரம் புத்தகங்களைப் புரட்டினால் போதும். வரலாற்றில் நாம் எழுதுகிற விடைத்தாள்களின் எடையை வைத்துத்தான் மதிப்பெண் போடுவது வழக்கம் என்று மாணவர்கள் கிண்டல் செய்வதுண்டு. எத்தனை பக்கத்திற்கு 'ரீல்' விடுகிறோமோ அத்தனை மதிப்பெண்!

அப்புறமென்ன? ஒயில்டின் உலகத்தில் ஆழ்ந்துவிட வேறென்ன தடை?

ஆனால் நூலகத்தையும் ஒயில்டையும் விட அப்போது என்னை பைத்தியமாக்கிக் கொண்டிருந்த ஒரு விஷயமும் இருந்தது. ஒரு வேளை அதிலிருந்து தப்பிக்கத்தான் ஒயில்டின் எழுத்துக்களில் தஞ்சமடைந்தேனோ என்னவோ!

ஆனால் எதிலிருந்து தப்பிக்க நினைத்தேனோ அதிலேயே இன்னும் தீவிரமான ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது ஒயில்டின் எழுத்து.

அப்போது மனசு பூராவையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த விஷயம்—பெண்!

எல்லாருக்குமே அந்த வயதில் அப்படித்தான் இருக்குமோ? இருக்கலாம். ஆனால் என் விஷயம் சற்றே வித்தியாசமானது.

மற்றவர்களுக்கு சிநேகிதர்கள், அரட்டை, விளையாட்டு, படிப்பு என்று பலவிதமான வழிகள் இருக்கும் – நேரத்தைப் போக்கவும், தனிமையை விரட்டவும். எனக்கு அப்படி எதுவும் இல்லை.

தனிமை, தனிமை, தனிமை. நூலகம். "யாரையாவது காதலி, காதலிக்காவிட்டால் வாழ்க்கையில் அர்த்தமே இல்லை" என்று உபதேசிக்கும் ஒயில்டின் எழுத்துக்கள்.

பெண்களிடம் போய்ப் பேசுவதற்கு பயம், கூச்சம். அதே சமயத்தில் யாரைப் பார்த்தாலும் ஒரு ஈர்ப்பு. பார்க்கும் பெண்களையெல்லாம் காதலிக்க வேண்டும் என்று ஆர்வம்.

ஒரு கட்டத்தில் இது வெறியாகவே மாறி, மனம் தறிகெட்டு ஓடலாயிற்று.

பெரியம்மா வீடு அப்போது வெங்கடேச பெருமாள் கோவில் தெருவில் இருந்தது. பெருமாள் கோவில் பக்கத்தில் அனுமார் கோவில்.

மனப்பேயை விரட்ட கோவிலைத் தேர்ந்தெடுத்தேன். ஆனால் அதற்கும் பலனில்லாமல் போனது. சந்நிதியில் கடவுள் எதிரே நின்றபோதும் கூட அந்த எண்ணமே தீயாய்ப் பற்றி எரிந்ததால், முதலில் மனதைச் சுத்திகரித்துவிட்டு கோவிலுக்கு வரலாம் என்று நினைத்து, கோவிலுக்குப் போவதையும் நிறுத்தினேன்.

அப்போதுதான் காயத்ரியுடன் அந்த எதிர்பாராத சிநேகிதம் ஏற்பட்டது.

அந்த வருட இறுதியில் தஞ்சாவூரிலுள்ள அனைத்துக் கல்லூரிகளுக்குமான பேச்சுப்போட்டி ஒன்றுக்கு அழைப்பு வந்திருந்தது.

வித்தியாசமாக இருக்கட்டுமே என்று ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் பெயர் கொடுத்தேன். கொடுத்த பிறகுதான் அசட்டுத்தனம் செய்து விட்டோமோ என்று தோன்றியது. அதுவரை நடந்த எல்லா பேச்சுப் போட்டிகளிலும் நான்தான் முதல் பரிசு பெறுவது வழக்கமாக இருந்தது. ஆனால் அவை

எல்லாம் தமிழ்ப் பேச்சுப் போட்டி.

எப்படி ஆங்கிலத்தில் பேசுவது என்று குழம்பினேன். அதோடு காயத்ரி என்ற பெண்தான் இதுவரை ஆங்கிலப் போட்டிகளில் எப்போதும் முதல் பரிசு வாங்குபவள் என்றும் கேள்விப்பட்டேன்.

மகளிர் கலைக் கல்லூரியில் ஆங்கில இலக்கியம் படிப்பவள் காயத்ரி.

யார் என்று பார்த்ததில்லை. எப்படிப் பேசுவாள் என்று தெரியவில்லை. நிச்சயம் நமக்குத் தோல்விதான் என்று ஒரு விட்டேற்றியான மனநிலையில் இருந்தேன்.

போட்டிக்கான தலைப்பு கொடுக்கப்பட்டது.

"ஜனநாயகம் இந்தியாவுக்கு உகந்ததா? இல்லையா?"

உகந்ததல்ல என்று சர்வ நிச்சயமாக நம்பினேன். ஆனாலும் உகந்தது என்ற பேசுபவர்களுக்குத்தான் பரிசு கொடுப்பார்கள்.

'உகந்ததல்ல' என்ற தலைப்பை காயத்ரி தேர்ந்தெடுத்திருப்பதாக அறிந்தேன். ஆச்சரியம். இவ்வளவு நாள் இப்போட்டிகளில் கலந்து கொண்டவளுக்கு வெற்றி பெறும் சூட்சுமம் தெரியவில்லையே.

அப்போதுதான் எனக்குள் ஒரு சிறு நம்பிக்கை துளிர்த்தது. ஆனாலும் ஆங்கிலம் தெரியாமல் என்ன செய்வது? முதலில் கருத்துக்களை தமிழில் எழுதிக்கொண்டு, ஆங்கிலம் நன்கறிந்த நண்பன் ஒருவனிடம் கொடுத்து மொழிபெயர்த்துக்கொண்டேன்.

பிறகு அதை நன்றாக நெட்டுருவும் போட்டுக்கொண்டேன்.

போட்டியின் போது எனக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. காயத்ரி யார் என்று தெரிந்ததுதான் அந்த ஆச்சரியம்.

எங்கள் தெருவில் நான் அடிக்கடி பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த தேவதைதான் காயத்ரி.

பல தினங்கள் அவள் வீட்டை விட்டுக் கிளம்பும் நேரத்தில் அவளைக் காண்பதற்காக தவம் கிடந்திருக்கிறேன். ஆனால் அவள்

என்னை ஒருபோதும் சட்டை செய்ததாகவே தெரிந்ததில்லை.

அவள்தான் காயத்ரி.

வெண்ணிலவின் குளுமை. சுழித்து ஓடும் புத்தாற்று வெள்ளத்தை ஞாபகப்படுத்தும் திரட்சி. உன்மத்தம் பிடிக்கச் செய்யும் பார்வை. மோகவெறி ஊட்டும் நனைந்த உதடுகள். இது எதுவுமே தனக்குத் தெரியாது என்பது போன்ற வெகுளிச் சிரிப்பு.

இதுதான் காயத்ரி.

ஆச்சரியத்தைக் கொஞ்சம் ஒத்திப் போட்டேன். இப்போது போட்டியில் எப்படியும் வென்றாக வேண்டும். இத்தனை நாள் பார்த்து ஏங்கிய அவள் முன் தோற்றுவிடக் கூடாது. முன்பே நெட்டுருப் போட்டது ஒரு துளியும் தெரியாமல், அப்போதுதான் சிந்தித்துப் பேசுகிற மாதிரியும், அதே சமயம் ஒரு சிறிதும் தடங்கலோ யோசனையோ இல்லாமலும் சரளமான குரலில் மிகச்சரியான ஏற்ற இறக்கங்களோடு பேசி முடித்தேன்.

காயத்ரி குழந்தைத்தனமான குதூகலத்துடன் என்னோடு கை குலுக்கினாள்.

"இவ்வளவு அட்டகாசமாகப் பேசுகிறீர்களே? எங்கே ஒளிந்திருந் தீர்கள் இதுவரை?"

"உங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கும் அனுமார் கோவிலில்."

பூக்களை வாரி இறைத்தாற்போல சிரித்தாள்.

"நான் உங்களை அடிக்கடி கவனித்திருக்கிறேன். அந்த எல்பார் ஷர்ட் உங்களுக்குப் பிரமாதமாக இருக்கும்."

"உங்களோடு பேச வேண்டும் என்று பல முறை நினைத்திருக்கிறேன். ஆனால் தைரியம் வராது. இவ்வளவு அழகான பெண் எங்கே நம்மோடு பேசப் போகிறாள் என்று பயம்..."

ஒருவித நாணத்துடன் என்னைப் பார்த்து "அடேயப்பா!" என்றாள்.

"என்ன?"

"இந்தப் போடு போடுகிறீர்களே! போட்டியில் வேறு கலக்கி விட்டீர்கள்..."

அப்போது நாங்கள் ஒரு மூலையில் தனியாக நின்று கொண்டிருந்தோம். அதனால் எனக்கு அவ்வளவாக ஆங்கிலம் வராது என்பதையும், நெட்டுருப் போட்டு வந்ததையும் சொன்னேன்.

எதைக் கண்டு மயங்கினாளோ, என்னிடம் அப்படி மயங்கிப் போனாள் காயத்ரி.

பிறகு ஒரு ஐந்து வருடங்கள் நெருங்கிப் பழகினோம். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டதாக நம்பினோம். திருமணம் செய்துகொள்ளத் திட்டமிட்டோம்.

**அன்புள்ள 'கல்கி' ஆசிரியர் அவர்களுக்கு. கதையில் ஒரு இக்கட்டான நிலையில் முடிவு எதுவும் எடுக்க முடியாமல் தத்தளிக்கும் சூழ்நிலை. அந்த இருவரும் திட்டமிட்டபடி திருமணம் செய்து கொண்டார்களா? அல்லது பிரிந்துவிட்டார்களா? தெரியவில்லை...**

**என்று எழுதிவிட்டு எந்த முடிவும் எழுத முடியாமல் மீதியை நாளை எழுதிக்கொள்ளலாம் என்று தூங்கிவிட்டேன். கனவு வந்தது. கனவில் கதையும் வந்தது. முடிவும் சேர்ந்தே வந்தது.**

**இருவரும் திருமணம் செய்துகொண்டு சில ஆண்டுகள் இனிதே வாழ்ந்து பிறகு 'டிவோர்ஸ்' செய்துகொண்டார்கள் என்றது கனவு!**

**கல்கி**

**ஆகஸ்ட் 1997**

# உள்முகம்

"ஏல அளிசொடே... எந்திரில..."

அம்மாவின் குரல் கேட்டு, புரண்டு படுத்தான் அழிசோடை. எழுந்துகொள்ள முடியாமல் தூக்கம் அவனை அழுத்தியது.

"எலே தம்பி... எந்திரிச்சி ஓடைக்கி போய்ட்டு வாலே..." அம்மாவின் குரல் மறுபடியும் கேட்டது.

இனிமேல் தப்ப முடியாது. எழுந்து கொள்ளும் வரை குரல் வந்து கொண்டேயிருக்கும்.

ஏனென்றே தெரியவில்லை. காலைநேரத்தில் அப்படி ஒரு தூக்கம் வந்தது அழிசோடைக்கு. அய்யா எப்படித்தான் அஞ்சு மணிக்கே எழுந்து கம்மங்கஞ்சி குடித்துவிட்டு ஆறு மணிக்கெல்லாம் மில்லுக்குப் போகிறாரோ...! அழிசோடைக்கு ஆச்சரியமாக இருந்தது.

எழுந்து உட்கார்ந்து பாயைச் சுருட்டிக் கொண்டிருக்கும்போதே கண்கள் செருக உறங்கி விழுந்த அவன் முதுகில் அம்மா ஒன்று வைத்த பிறகுதான் உறக்கம் லேசாகக் கலைந்தது.

எழுந்து ஓடைப்பக்கம் போனான் அழிசோடை. அரைத் தூக்கத்திலேயே குடைபோல் விரிந்த ஓட்டடை மரம் தந்த மறைவில் உட்கார்ந்திருந்துவிட்டு ஓடையில் காலைக் கழுவிக்கொண்டு, வீட்டுக்குத் திரும்ப நடந்தான்.

அழிசோடைக்கு ஒவ்வொரு நாளும் இப்படித்தான் புலர்வது வழக்கம்.

இந்நேரம் பெருமாள்சாமி என்ன செய்து கொண்டிருப்பான்? எழுந்து பல் விளக்கி குளித்து நெற்றியில் திருநீறு இட்டுக்கொண்டு அமைதியாக பாடங்களைப் படித்துக் கொண்டிருப்பான். ஆனால் தெருவெங்கும் ஒவ்வொரு வீட்டிலும் கேட்கும் 'தடக் தடக்' என்ற கைத்தறி சத்தத்தை சகித்துக்கொண்டு அவனால் எப்படிப் படிக்க முடிகிறது?

அழிசோடையும் பெருமாள்சாமியைப் போல் படிக்கத்தான் ஆசைப்பட்டான். ஆனால் காலை நேர அலுப்பு எல்லா ஆசைகளையும் ஓரம்கட்டி வைப்பதாயிருந்தது. பெருமாள்சாமி அழிசோடையின் நண்பன். ரெண்டு பேரும் ஓரே கிளாஸ், ஓரே ஸ்கூல். நடராஜர் நாட்டுத் தொடக்கப் பள்ளி.

அழிசோடை இந்தப் பள்ளியில் சேர்ந்து ஒரு ஆறேழு மாதம் ஆகிறது. அதற்கு முன்னால் அஞ்சாம் வகுப்பு வரை படித்தது காந்திபுரம் ஹரிஜனப் பள்ளியில். அது அவனுடைய தெருவிலேயே இருக்கும் பள்ளி. அந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து அழிசோடையும் அவனை ஒத்த ஐம்பது மாணவர்களும் விலக்கப்பட்டார்கள். காரணம் ஒரு தேர்தல்.

காந்திரபுரம் சமுதாய நாட்டாமைத் தேர்தல்.

அஞ்சு வருசத்துக்கு ஒருமுறை தேர்தல் நடத்தி நாட்டாமையைத் தேர்ந்தெடுப்பார்கள். நாட்டாமைதான் பள்ளிக்கூடத்தின் நிர்வாகியும். அதுதான் வழமை.

கடந்த அஞ்சு வருசமாக அவன் அய்யாதான் சமுதாய நாட்டாமை. ஆனால் சென்ற வருடத் தேர்தலில் அய்யா தோற்றுவிட்டார். ஜெயித்தவர் கணக்கன் அய்யனார். அய்யனார்

செங்கொடிக் கட்சிக்காரர். அய்யா காங்கிரஸ் கட்சி.

ரெண்டு பேருமே ஓரே சாதிதான் என்றாலும் கட்சி வேறு வேறு ஆயிற்றே! அதுதான் பிரச்சினை.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஆட்களின் பிள்ளைகள் அம்பது பேருக்கு சீட்டு கிழிக்கப்பட்டது. அதனால்தான் அவர்கள் வெளியே வந்து வேறு ஒரு தொடக்கப்பள்ளியில் சேர்ந்தார்கள்.

பெரிசுகள் போட்டுக்கொள்ளும் சண்டைக்காக நாம் ஏன் வேறொரு பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டும் என்று அழிசோடைக்குப் புரியவில்லை.

எதையெதையோ யோசித்துக்கொண்டே கூழைக் குடித்தான் அழிசோடை. தொட்டுக்கொள்ள மீந்துபோன நேற்றைய பன்றிக் கறியை வைத்தாள் அம்மா. அதை ஒதுக்கி வைத்துவிட்டான். அழிசோடைக்கு பன்றிக்கறியில் அவ்வளவு விருப்பம் இல்லை. அதிலும் நேற்று சமைத்த கறி என்றால் தொடவே மாட்டான்.

ஈராங்காயைக் கடித்துக்கொண்டு கூழைக்குடித்தான்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் தெருவில் பன்றி அடித்தார்கள். வாரம் ஒரு தடவை இது இங்கே வழக்கம். வெளித்தெரு ஆட்கள் சில பேர் கூட ரகசியமாக வந்து வாங்கிப் போவார்கள்.

நேற்று பெருமாள்சாமியின் அப்பா கூட காந்திபுரத்துக்கு வந்திருந்தார் கையில் மஞ்சள் பையுடன். அழிசோடை அவரை இங்கே அடிக்கடி பார்த்திருக்கிறான். அவர் எதற்காக இங்கே வருகிறார்? நிச்சயமாக கறி எடுப்பதற்காக இருக்க முடியாது.

இந்தப் பன்றிக்கறியை வைத்து பெருமாள்சாமி தன்னை எத்தனை நாள் அவமானப்படுத்தியிருக்கிறான்?

"அளிசோடெ. தள்ளி நில்லுலே... ஒம் உடம்புலேர்ந்து கொச்ச வாட அடிக்கி... நீ பன்னிக்கறி சாப்டிருக்கே."

"அளிசொட தள்ளி நில்லுலே... ஒம் வாயி நாறுதுலே."

தினமும் பல் விளக்க வேண்டும், தினமும் குளிக்க வேண்டும் என்றுதான் தினமும் நினைத்துக்கொள்வான் அழிசோடை. ஆனால் காலையில் எழுந்தால் எல்லாம் மறந்துபோகும்.

அதோடு அவனை யாரும் பல் விளக்கச் சொல்லி சொல்லுவதும் இல்லை. வீட்டிலும் அய்யாவைத் தவிர வேறு யாரும் பல் விளக்குவதில்லை. எல்லாம் வாரம் ஒரு தடவை குளிக்கும்போது செய்வதோடு சரி.

தினமும் பல் விளக்கினால் வாய் நாற்றத்தைப் போக்கிவிடலாம். ஆனால் உடல் நாற்றத்தை? நம் ஒருத்தனுக்காக பெரிசுகள் பன்றிக்கறி சாப்பிடுவதை நிறுத்திவிடுமா?

ஜாமட்ரி பாக்சில் வைத்திருக்கும் காம்பசை எடுத்து அப்படியே பெருமாள்சாமியைக் குத்த வேண்டும் போல் கோபம் கோபமாக வரும். ஆனாலும் கோபத்தை அடக்கிக்கொள்வான்.

பன்றிக்கறி சாப்பிட்டால் உடம்பு நாறுமா என்பதும் அழிசோடைக்குப் புதிராகவும் சந்தேகமாகவும் இருந்தது. யாரும் இல்லாத சமயங்களில் ஒரு கையின் மேற்புறத்தை மற்றொரு கையால் சூடு பறக்கத் தேய்த்து முகர்ந்து பார்ப்பான். மலநாற்றம் அடிக்கும்.

ஆனால் சில மேல்ஜாதிப் பையன்களோடு விளையாட்டாக இதை அவர்களையும் செய்யச் சொல்லி பார்த்து அவர்களும் முகம் சுளித்தபோது அழிசோடைக்கு சந்தேகம் தட்டியது.

தன்னை அவமானப்படுத்துவதற்கென்றே பெருமாள்சாமி பொய் சொல்கிறானோ?

ஆனால் பெருமாள்சாமியின் நட்பை எதற்காகவும் விட முடியாது. பெருமாள்சாமி நன்றாகப் படிப்பான். அவன் கையெழுத்தும் முத்து முத்தாக இருக்கும். அழிசோடைக்குத் தேவைப்படுகிற சமயங்களில் அவனுடைய நோட்டுப் புத்தகங்களை வாங்கித்தான் தன்னுடைய நோட்டில் எழுதிக் கொள்வான்.

இது தவிர, அழிசோடை சொல்லுகிற நூற்றுக்கணக்கான

கதைகளை ஆர்வத்துடன் கேட்பதற்கும் அவனுக்கு ஒரு ஆள் வேண்டும். பெருமாள்சாமியின் வீட்டைத் தாண்டித்தான் பள்ளிக்கூடத்துக்குப் போக வேண்டும் என்பதால் தினமும் அவன் வீட்டில் போய் அவனையும் அழைத்துக்கொண்டு விதவிதமான கதைகளைச் சொல்லிக்கொண்டு போவது வழக்கமாகிவிட்டது.

காந்திபுரம் சஞ்சீவி மலையின் அடிவாரத்தில் இருக்கிறது. அனுமார் லங்கையைத் தூக்கிக்கொண்டு வந்தபோது அதிலிருந்து விழுந்த ஒரு சின்ன பகுதிதான் சஞ்சீவி மலை என்பது அழிசோடை சொன்ன பிறகுதான் பெருமாள்சாமிக்குத் தெரியவந்தது. மலையில் அனுமார் உட்கார்ந்ததால் ஏற்பட்ட வால் தடம் இப்போதும் இருப்பதாகச் சொல்வான் அழிசோடை.

ஒருநாள் அழைத்துக்கொண்டுபோய் காண்பிப்பதாகவும் பெருமாள்சாமியிடம் சொல்லியிருக்கிறான்.

“மலையிலேர்ந்து நரி வரும்... நடுச்சாமத்துலெ எங்க வூட்டுப் பக்கம் மேஞ்சுகிட்டு அலையும். அத்தோட மளெ காலத்துலே கூகெ, ஆந்தெயிலாம் கூட வரும். சமயத்திலெ நானும் பாத்திருக்கேன். அதுக்கு பகல்லெ கண்ணே தெரியாதாம். ஆத்தா சொல்லியிருக்கு. ஒரு நா ராவுல நானும் பாத்தேன். ஒவ்வொரு கண்ணும் முட்டெமாரி இருந்திச்சி. அதுக்கு உள்ளார கோலிகுண்டு மாரி கொட கொடன்னு உருண்டுகிட்டு இருந்திச்சி முளி. அது மட்டுமில்ல... அது கத்தும்போது எப்புடி இருக்கும் தெரியுமா? எந்தங்கச்சி பொறந்து கொளந்தையா இருக்கறப்போ அளுவா, அதே மாரி இருந்திச்சி. மளெ காலத்துலே பாம்பு வந்தா... அதுவும் ஓடையம் பாம்பு வந்தா லேசா சரடு மாரி ஊறிக்கிட்டே கூரெ எறவானத்து வளியா வூட்டுக்குள்ள வந்திரும்.. அதெ அடிக்க பயந்துகிட்டு பக்கத்து வூட்டு கோயந்தனத்தான் கூப்பிடும் ஆத்தா. அவன் அதெ காலாலயே நசுக்கி கையால் தூக்கி எம் மூஞ்சிக்கி நேரா ஆட்டி ஆட்டி காட்டுறப்போ நா ஒன்னுக்கே போயிருவேன்... அதுக்கு மாத்ரம் ‘ஏன்ல இப்டி பயந்து சாவுறே’ன்னு கேட்டு ஆத்தா என்னெ அடிக்கிம்... ஆமா, பெருமாசாமி... நா சொல்ல சொல்ல நீ வாய பொளந்துகிட்டு கேக்றியே... வேண்ணா வந்து பாரேன். ஓங்க வூட்டுக்கெல்லாம் இதெப்போல பாம்பு நரி ஆந்தேல்லாம் வராது... ஓங்க

தெருவுலாம் மச்சு வூடு, ஓட்டு வூடுன்னு நெறஞ்சி கெடக்கு. கண்ணே கூசுற மாரி நாலு வூட்டுக்கு ஒருக்க டியூப் லைட்டு போட்டு குடுத்திருக்காங்க... அதோட ஓங்க தெருவே சிமென்ட் ரோடுதானே... அங்கேலாம் இதுங்க எப்டி வரும்...?"

அழிசோடை சொல்லும் கதைகளையெல்லாம் கேட்டுவிட்டு பெருமாள்சாமி தானும் வந்து அதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டபோதுதான், அவனை அழைத்துக் கொண்டு போய்க் காண்பிப்பதாகச் சொல்லியிருந்தான் அழிசோடை.

இன்றைக்கு அய்யா வந்ததும் பெருமாள்சாமி நம் வீட்டில் ஒருநாள் இரவு வந்து தங்க அனுமதி வாங்க வேண்டும். ஆனால் அய்யாவை நேரில் பார்க்கும்போது அவரைக் கேட்க வேண்டும் என்று நினைத்து வைத்திருந்த விஷயமெல்லாம் சட்டென்று மறந்து போய்விடுகிறது! இன்றைக்கு மறக்காமல் கேட்க வேண்டும் என்று திரும்பத் திரும்ப முணுமுணுத்துக்கொண்டே நடந்து போய்க் கொண்டிருந்தான் அழிசோடை....

ஒரு வேளை அவர் மறுத்துவிட்டால்? இந்த சாதியை எவன் கண்டுபிடிச்சது?

யோசித்துக் கொண்டே வந்ததில் கீழே கொட்டிக் கிடந்த கஞ் சியில் காலை வைத்துவிட்டான்.

சாலியர் தெரு வந்துவிட்டது. பாவு போட்டு தெரு முழுக்க பசையும் கஞ்சியுமாய் விரவிக் கிடக்கும் இங்கே.

திடீரென்று அழிசோடைக்கு போன வாரம் பெருமாள்சாமியுடன் போட்ட சண்டை ஞாபகம் வந்தது.

"டேய், ஊத்தப் பல்லு..."

"போடா, கஞ்சிக்கில்லாத பயலே."

"மொரட்டுப் பயலே."

"பசக் கஞ்சிப் பயலே."

இதைக் கேட்டதும் கண்கள் சிவக்க கோபத்துடன் பற்களைக் கடித்துக்கொண்டு பெருமாள்சாமி தன் கடைசி ஆயுதத்தை எடுத்து வீசினான்.

"போலே... பன்னிக்கறி சாப்டுற பயலே..."

இதற்கு அழிசோடையிடம் பதில் இருக்காது.

இந்தப் பன்றிக்கறி தவிர தனக்கும் பெருமாள்சாமிக்கும் என்ன வித்தியாசம் என்று யோசனை பண்ணினான் அழிசோடை.

பெருமாள்சாமி தன்னைவிட ஏழ்மையானவன்தான் என்று ஏற்கெனவே தெரிந்து வைத்திருந்தான் அவன்.

முன்பெல்லாம் ஒருநாள் தறியில் ஐந்தாறு சேலைகளாவது அறுக்க முடியும் என்று நினைத்திருந்தான் அழிசோடை. ஆனால் பெருமாள்சாமியிடம் கேட்டபோதுதான் தெரிந்தது, ஒருநாள் பூராவும் ஒரு தறி போட்டால் ஒரே ஒரு சேலைதான் அறுக்க முடியும் என்று. அழிசோடையால் அதை நம்பவே முடியவில்லை. ஒரு சேலை அறுத்தால் இருபத்தஞ்சு ரூபாய் கூலியாம். ஒரு நாளைக்கு ஒரு சேலைதான் அறுக்க முடியும்.

பெருமாள்சாமி வீட்டில் ஒரே ஒரு தறிதான் இருப்பதையும் கவனித்திருக்கிறான் அழிசோடை.

தன் அய்யா நிச்சயம் இதைவிட இரண்டு மூன்று மடங்கு அதிக சம்பளம் வாங்குவார் என்று நினைத்துக் கொண்டான் அவன்.

அய்யா மட்டுமல்ல, இப்போது காந்திபுரத்தில் முக்கால்வாசிப் பேர் விவசாயத்தை விட்டுவிட்டு மில்லில் சேர்ந்து விட்டார்கள். ஆனால் சாலியர் தெருவில் இன்னமும் எல்லோரும் தறியை மட்டுமே நம்பியிருந்தார்கள். காலை அஞ்சு மணிக்கு மில் சங்கு ஊதும் சத்தத்துடன் தறி அடிக்கும் சத்தமும் ஆரம்பமாகிவிடும்.

அழிசோடை வரும் நேரத்திற்கு பெருமாள்சாமி தயாராக வீட்டு வாசலில் நின்று கொண்டிருப்பான்.

இன்று அப்படி அவன் நிற்கவில்லை. ஒருவேளை தன்னை விட்டு

விட்டு ஸ்கூலுக்குப் போய் விட்டானோ என்ற சந்தேகத்துடன் உள்ளே எட்டிப் பார்த்தான்.

அழிசோடை வந்ததை வீட்டில் யாரும் கவனிக்கவில்லை.

பெருமாள்சாமி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"போடு... அவனுக்கு இன்னம் கொஞ்சம் கறி போடு. அவனே பிரியமா கேக்குறப்ப நீ ஏன் மளுமார்ற? பன்னிக்கறி குளுமென்னாலும் ஒடம்புக்கு நல்லது. நீ சாப்புடுலே நல்லா..."

பெருமாள்சாமியின் அய்யா சொல்லிக்கொண்டிருந்தார்.

தன்னை யாரும் கவனிக்காததால் மேலும் உள்ளே போகாமல் திரும்பி வெளியே வந்து ஸ்கூலுக்கு தனியே நடக்க ஆரம்பித்தான் அழிசோடை.

பெருமாள்சாமியை நினைத்து அவனுக்குப் பாவமாக இருந்தது.

கல்கி

ஜூலை 1997

# நடிகை சுஷ்மாவுடன் ஒரு பேட்டி

நடிகை சுஷ்மாவுடன் ஒரு பேட்டி எடுக்க முடியுமா என்று ஒரு பிரபல பத்திரிகை என்னைக் கேட்டிருந்தது. உடனே சரி என்று ஒப்புக் கொண்டேன். பத்திரிகைக்கான பேட்டி முடிந்தபிறகும் பேசிக்கொண்டிருந்தோம். அது பேட்டியில் வர வேண்டாம் என்றும், வேண்டுமானால் உங்கள் கதையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றும் சொன்னாள் சுஷ்மா.

"நான் உங்களுடைய தீவிரமான ரசிகன்" என்றேன் நான். இது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"நான் உங்களுடைய நாவலைப் படித்திருக்கிறேன். நீங்கள் ஒரு சீரியஸ் எழுத்தாளர் என்றும் புரிந்து வைத்திருக்கிறேன். நீங்கள் எப்படி என்னுடைய ரசிகனாக இருக்க முடியும்? நம்ப முடியவில்லையே?" என்றாள்.

"சார்த்தர் என்ற எக்சிஸ்டென்ஷியலிச தத்துவவாதியைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?"

"நான்தான் முன்னாலேயே சொல்லிவிட்டேனே உங்கள் நாவலை

நான் படித்திருக்கிறேன் என்று. அதில் அவரைப் பற்றிய விஷயங்கள் சுவாரசியமாக இருந்ததால் அவருடைய பீயிங் அண்ட் நத்திங்னெஸை வாங்கினேன். முதலில் தயக்கமாகத்தான் இருந்தது, இவ்வளவு பெரிய தத்துவப் புத்தகத்தை எப்படிப் படிக்கப் போகிறோம் என்று. ஆனால் படிக்கப் படிக்க ஒரு நாவலைப் போன்ற சுவாரசியம் ஏற்பட்டது. அதிலும் அவர், 'நான் நானாக இல்லை' என்று சொல்லி அதை விளக்கும் பகுதியெல்லாம் ஏதோ என்னைப் பற்றியே எழுதியிருப்பது போல் இருந்தது."

சுஷ்மாவின் இந்த பதிலைக் கேட்டவுடன், ஸ்டெஃபிகிராஃபுக்குப் பிடித்த எழுத்தாளர் சார்த்தர் என்று தெரிந்தபோது ஏற்பட்டதைவிட அதிக ஆச்சரியம் அடைந்தேன். அதைக் காட்டிக்கொள்ளாமல், அப்படிப்பட்ட சார்த்தர், மர்லின் மன்றோவின் தீவிரமான ரசிகர் என்பதைச் சொன்னேன். "எனவே நான் உங்கள் ரசிகனான இருப்பது ஒன்றும் ஆச்சரியமான விஷயமல்ல."

"சரி, அதுதான் எப்படி என்று கேட்கிறேன். நான் வெறும் கிளாமர் ரோல்களில் நடிக்கும் ஒரு சாதாரண நடிகைதானே?"

"சாதாரண ஒரு ரிக்ஷாத் தொழிலாளி ஒருவர் எப்படி உங்கள் ரசிகராக இருக்கிறாரோ அதே மாதிரிதான் நானும் இருக்கிறேன். தவறாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள் என்றால் உண்மையைச் சொல்கிறேன். உங்களுடைய அசாதாரணமான அழகுதான் காரணம்."

நான் சொன்னதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்தாள் சுஷ்மா. ஆனால், அது மட்டுமல்ல. என்னதான் அவள் கிளாமர் ரோல்களில் மட்டுமே நடிப்பவள் என்றாலும் நடிப்பிலும் அவள் ஒரு பெரிய ஆள்தான். அதையும் சொன்னேன்.

"ஒரு படத்தில் உங்கள் கணவன் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டு உங்களை ஏமாற்றி வந்ததற்காக பயங்கரமான கோபத்திலும், வெறியிலும் உங்கள் இரண்டு குழந்தைகளையும் கொன்றுவிடுகிறீர்கள். ஸ்கிசோஃப்ரீனியா

என்று சொல்லி உங்களை மன நோயாளிகள் விடுதியில் வைத்திருக்கிறார்கள். அந்தப் படத்தில் உங்கள் நடிப்பு உலகப் புகழ்பெற்ற நடிகர்களின் தரத்திற்கு நிகராக இருந்தது. அந்தக் கதாபாத்திரத்தின் உணர்வுகளையும், வெறியையும் அவ்வளவு தத்ரூபமாக வெளிப்படுத்தி இருந்தீர்கள். ஆனாலும் பாருங்கள், நான் மட்டும் உங்களுடைய தீவிரமான ரசிகனாக இல்லை. இந்தத் தமிழ்நாடும், ஆந்திரப் பிரதேசமும் உங்கள் பெயரால் கிறங்கிப் போய் கிடக்கிறது. இதற்கு என்ன காரணம்?" என்று கேட்டு தனிமனிதனின் செக்ஸ் தேவைகள், நிறைவேறாத ஆசைகள், கனவுகள், ஃபான்டசி, சமூக ரீதியான செக்ஷுவாலிட்டி என்றெல்லாம் ஒரு குட்டி லெக்சர் அடித்துவிட்டு முடிவாக, "நாங்கள் எங்கள் கனவுகளை இழந்துவிட்டோம்; நீங்கள் எங்கள் எல்லாருக்குமான கனவாக விளங்குகிறீர்கள்" என்று முடித்தேன்.

பிறகுதான் பேச்சு சுஷ்மாவின் வாழ்க்கையைப் பற்றித் திரும்பியது. அப்போது பேச்சின் இடையே குறுக்கிட்டு, "இன்னிக்கு எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. கொஞ்சம் டிரிங்க் சாப்பிடலாம் போலிருக்கு. உங்களுக்கு....?" என்று கேட்டாள் சுஷ்மா. நானும் சரி சொல்ல, விஸ்கி அருந்திக்கொண்டே பேச்சு தொடர்ந்தது. ஒன்றிரண்டு சமயங்கள் தவிர அவள் பேச்சில் நான் குறுக்கிடவே இல்லை. விஸ்கி உள்ளே சென்ற உடனேயே சுஷ்மாவின் பேச்சு ஆங்கிலத்திற்குத் தாவியது. மிகவும் உணர்ச்சிவசப்பட்டு பேசிக் கொண்டிருப்பது போல் தோன்றியது. அவள் சொன்னதெல்லாம் டேப்பில் பதிவானது போல் என் மனதில் பதிவாகி இருந்ததால் அதை அப்படியே இங்கே தருகிறேன்.

"நான் அம்மா இல்லாத பெண். எனக்கு ஏழு வயதாக இருந்தபோது என் அம்மாவை இழந்தேன். அப்பா மறுமணம் செய்து கொண்டார். பிறகு வழக்கமான சித்தி கொடுமை. அதோடு இருந்திருந்தால் கொஞ்சம் பரவாயில்லாமல் இருந்திருக்கும். ஆனால், சித்திக்கு ஒரு தம்பி இருந்தான். பெயர் சேகர். வீட்டோடுதான் இருந்தான். அவன் எனக்குப் பத்து வயதாக இருக்கும்போது கற்பழித்தான். சித்திக்கும் எல்லாம் தெரியும். ஆனாலும், அவள் இதற்கெல்லாம் துணையாகத்தான் இருந்தாள். அப்பா ஒரு பேடி. உட்கார் என்றால் உட்காருவார்.

நில் என்றால் நிற்பார். (அப்பாவைப் பற்றி பேசும்பொழுது தமிழில் கன்னாபின்னாவென்று திட்டினாள். அவன் இவன் என்று ஒருமையிலேயே குறிப்பிட்டாள்.)

என்னைக் கொடுமைப்படுத்திய சித்தியையும், அவள் தம்பி சேகரையும் கூட என்னால் மன்னிக்க முடியும். ஆனால், இதையெல்லாம் தெரிந்துகொண்டும் சும்மா இருந்தாரே என் அப்பா, அவரை மட்டும் என்னால் மன்னிக்கவே முடியாது. இப்போது நான் பெரிய நடிகை ஆனதும் என் வீட்டைத் தேடி வந்த அவர்களை கூர்க்காவை விட்டு அடித்துத் துரத்தச் சொன்னேன்.

அப்போது எனக்கு ஆறு அல்லது ஏழு வயது இருக்கும். பால் வாங்கி வரும்போது அதைக் கொட்டி விட்டதற்காக ஒரு இரவு பூராவும் கக்கூசிலேயே என்னைப் போட்டு அடைத்தார்கள். குளிரில் நடுங்கிக்கொண்டு கக்கூசில் உட்கார்ந்த நிலையிலேயே தூங்கினேன். அடிக்கடி இந்த கக்கூஸ் சிறைவாசம் உண்டு. பதினைந்து வயதில் நான் வீட்டை விட்டு ஓடி வரும் வரை பெரும்பாலான இரவுகளை நான் கக்கூசிலேயோ, பாத்ரூமிலேயோதான் கழித்திருக்கிறேன். நடு இரவில் அங்கே வந்து சேகர் என்னை கற்பழிப்பான். ஒவ்வொரு முறையும் என் உடம்பு நார்நாராய் கிழியும். பகலில் துடைப்பத்தாலும், செருப்பாலும் என் சித்தி அடி அடியென்று அடித்துக் கொல்லுவாள்.

அவளை இப்படியெல்லாம் அடிக்காதே என்று சொல்லி சேகர் அவன் குடித்துக் கொண்டிருக்கும் சிகரெட் முனையால் என்னை சுடுவான். முதல் முறை அப்படி அவன் சுட்டபொழுது வலி தாங்க முடியாமல் அலறிவிட்டேன். "அக்கம்பக்கத்து வீட்டில் இருப்பவர்களைக் கூப்பிட்டு எங்களை மாட்டிவிடப் பார்க்கிறாயா?" என்று கேட்டு வீட்டில் தட்டுமுட்டுச் சாமான்கள் போட்டிருந்த ஒரு இருட்டு அறையில் தள்ளி வெளியே தாளிட்டு விட்டார்கள். மூன்று நாட்கள்... அந்த இருட்டுக் கிடங்கிலேயே எலிகளோடும், கரப்பான்பூச்சிகளோடும் கழித்தேன்.

பசி, பயம், எலி, இருட்டு. திடீரென்று கதவை லேசாகத் திறந்து சில காய்ந்த பிரட் துண்டுகளை விட்டெறிவாள் சித்தி. அப்படி

முதல் முறை திறந்தபோது, "பாத்ரூம் போக வேண்டும்" என்று மெலிந்த குரலில் சொன்னேன். "ஏன், சித்தி என்று கூப்பிட மாட்டாயா? சித்தி என்று கூப்பிட முடியாத சிறுக்கி இந்த வீட்டில் ஏன் இருக்கிறாய்?" என்ற கேள்வியோடு தலையில் 'ணங்'கென்று ஒரு குட்டு வைத்தாள். பிறகு உடைந்துபோன ஒரு கலயத்தைக் கொண்டுவந்து கொடுத்து, "இதுதான்... இதிலேயே போ" என்றாள்.

இரவு எது, பகல் எது என்று தெரியாமல் அந்த இருட்டுக் குழியில் கிடந்த எனக்கு அதைத் தெரிந்துகொள்ள ஒரே ஒரு வழிதான் இருந்தது. வெளியே நடமாட்டம் கேட்டால் அது பகல். சப்தமே இல்லாதிருந்தால் அது இரவு. இப்படித்தான் இரவு பகலைத் தெரிந்து கொண்டேன். தெரிந்துகொண்டு என்ன செய்ய? தூங்க முடியாது. தூங்கினால் எலிகள் வந்து கால்களைப் பிறாண்டும்.

மூன்று நாட்களுக்குப் பின் சித்தி பிரட் துண்டுகளை விட்டெறிந்த போது உள்ளே எந்த சப்தமும் இல்லாததைப் பார்த்த நான் தூங்கிக் கொண்டிருக்கிறேன் என்று நினைத்து அதற்காக என்னை உதைக்க உள்ளே வந்தாள். என்னை நாலைந்து முறை உதைத்தும் கூட நான் எழுந்துகொள்ளாததைப் பார்த்து வெளியே தூக்கிப் போட்டிருக்கிறாள். பிறகு ஏதோ தீவிர சிகிச்சை கொடுத்த பிறகுதான் நான் பிழைத்திருக்கிறேன். பிழைத்த பிறகுதான் ஏன் பிழைத்தோம் என்று தோன்றியது. அப்படியே செத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று நினைத்து நினைத்துத் தனியாக இருக்கும்போதெல்லாம் அழுதேன்.

இருட்டுக் கிடங்கில் போட்டு பூட்டிய சம்பவத்திற்குப் பிறகு நான் சத்தம் போட்டு அழுவதில்லை. எரியும் சிகரெட் துண்டால் என் மார்பில் சுடுவான். தொடையில் சுடுவான். பற்களைக் கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்வேன். கடித்துக் கடித்து கீழுதடு கிழிந்து ரத்தம் வந்துவிடும். ஆனால், என்ன ஆனாலும் சத்தம் மட்டும் போடமாட்டேன்.

சிகரெட் வடுக்களைப் பார்த்து பின்னாளில் எத்தனைபேர் இது என்ன என்று கேட்டிருக்கிறார்கள் தெரியுமா? அவர்களுக்கெல்லாம்

முகத்தில் அடித்தாற்போல் பதில் சொல்லி இருக்கிறேன். “அது என்னவாக இருந்தால் உனக்கென்ன? வந்த வேலையை முடித்துவிட்டுப் போ” என்று மூர்க்கமாக கத்தியிருக்கிறேன்.

சில கஸ்டமர்கள் எங்கள் வீட்டு அம்மாவிடம் - அந்த வீட்டில் இருந்த அத்தனை பெண்களும் எங்கள் முதலாளியம்மாவை அம்மா என்றுதான் கூப்பிட வேண்டும்; அதுதான் வழக்கமும் கூட - போய் நான் அனாவசியமாக எரிந்து விழுவதாகவும், கோபப்படுவதாகவும் சில சமயங்களில் புகார் செய்வதுண்டு. அம்மாவுக்கு என்னைப் பற்றி எல்லாம் தெரியும். “சிகரெட் தழும்புகளைப் பற்றி கேட்கிறான்கள் அம்மா. நான் என்ன சொல்லட்டும்?” என்று சொல்லி அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கதறி இருக்கிறேன். அவள் இன்று இல்லை. அது ஒரு தனிக்கதை. அப்புறம் சொல்கிறேன். இப்போதைக்கு என் சித்தி வீட்டைப் பற்றி பார்ப்போம்.

சில சமயங்களில் அவர்கள் மூன்று பேரும் தூங்கிக்கொண்டிருக்கும் போது அவர்கள் மீது மண்ணெண்ணையை ஊற்றிக் கொளுத்திவிட்டு விட வேண்டும் என்று தோன்றும். ஆனால், தைரியம் இருக்காது. மாட்டிக்கொண்டால் என் நிலைமை சித்தியிடமும், சேகரிடமும் என்ன ஆகும் என்று நினைத்துப் பார்த்தாலே உடம்பு நடுங்கும். நானே தற்கொலை செய்து கொள்ளலாமா என்று தோன்றும். பல முறை அப்படி நினைத்திருக்கிறேன். ஆனால், தைரியம் வராது.

இவ்வளவு சித்ரவதை செய்யும் இவர்கள் ஏன் என்னை இன்னும் ஒரேயடியாகக் கொல்லாமல் இருக்கிறார்கள் என்ற சந்தேகமும் வரும். ஆனால், இவர்கள் என்னைக் கொல்லமாட்டார்கள். பிறகு நான் செய்யும் வேலைகளை இவர்களுக்கு வேறு யார் செய்து போடுவது?

நான் அந்த நரகக் குழியிலிருந்து தப்பி ஓடி வந்தபோது எனக்குப் பதினைந்து வயது. வீட்டிலிருந்த பணத்தைத் திருடிக்கொண்டு ரயிலேறி சென்னை வந்தேன். இறங்கியவுடன் சென்ட்ரல் ஸ்டேஷனிலேயே தரகர்கள் கண்ணில் சிக்கினேன். பிறகென்ன, நீங்கள் வழக்கமாக செய்தித்தாளில் வாசிப்பதுதான். என்னுடைய

அதிர்ஷ்டம் நான் வெளியூரில் கொண்டுபோய் விற்கப்படவில்லை. அப்போது என் விலை ரூபாய் 5000. இப்போது ஒரு படத்திற்கு எவ்வளவு வாங்குகிறேன் தெரியுமா? தமிழில் 15 லட்சம், தெலுங்கில் 30 லட்சம். ஆனால், தெலுங்கில் சில படங்களுக்கு 70 லட்சம் வரைக்கும் கூட வாங்கியிருக்கிறேன்.

சரி அது கிடக்கட்டும். ஒரு பணக்கார வீட்டில் வீட்டு வேலை செய்ய ஆள் வேண்டும் என்று சொல்லி அங்கே சேர்த்துவிடுகிறேன் என்று அழைத்துப் போனான் அந்த ஆள். போய்ச் சேர்ந்ததும் விஷயம் புரிந்துவிட்டது. என் சித்தி வீட்டைவிட நிச்சயமாக இது பரவாயில்லைதான். ஆனாலும் நான் அழவில்லை. அடி, உதை, சிகரெட் சூடு, கிடங்குச் சிறை, கட்டிலுக்கு அடியில் அல்லது கக்கூசில் தூக்கம் என்று எதுவும் இங்கே கிடையாது. ஆனால் நாற்றம்தான் சகிக்க முடியவில்லை. குமட்டலெடுக்கும் நாற்றம். எத்தனை முறை குளித்தாலும் தீராத, நம் உடம்பை விட்டு அகலாத நாற்றம். பிறகு அதற்கும் பழகிக்கொண்டேன்.

அத்தனை சின்ன வயதிலும் தொழிலில் ரொம்பவும் சீனியரைப் போல் நடந்துகொண்டேன். சில மாதங்களில் என்னை வேறு ஒரு பணக்கார இடத்தில் ரூபாய் 25,000க்கு விற்றார்கள். அந்தப் புது இடத்தில் நாற்றமில்லை. குமட்டல் இல்லை. அங்கே ரேட்டும் அதிகம். வரும் ஆட்களும் டீசன்டாக இருந்தார்கள். அதோடு சமயங்களில் வெளியூர் பயணங்களும் உண்டு. வெளியூர் போனால் அதிகபட்சம் ஒரு மாதம் என் ஒரு ஆளின் மாத வருமானம் ரூ. 20,000. எப்படித் தெரியுமா?

ஒரு நபருக்கு ரூ.200 சராசரியாக ஒரு நாளில் பத்து பேர். 200 x 10 = 2000 x 25 நாட்கள் (சராசரியாக மாதத்திற்கு 5 நாட்கள் விடுமுறை) = 50,000 ரூபாய். இதில் ரூ.30,000 அம்மாவுக்குப் போய்விடும். எனக்கு 20,000 ரூபாய். ஆனால் இவ்வளவு பெரிய தொகையில் கடைசியில் அம்மாவுக்குச் சேருவது மிகவும் சொற்பமாகத்தான் இருக்கும். ஏனென்றால் போலீஸ்காரர்களுக்குச் சேர வேண்டிய மாதாந்திர தொகை, தொகுதியின் முக்கிய புள்ளிகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகை, எங்கள் எல்லாருக்குமான ரெகுலர் மெடிகல் செக்கப்

மற்றும் வைத்திய செலவுகள், சாப்பாட்டுச் செலவு, எட்செட்ரா, எட்செட்ரா... வெளியே எப்போதாவது போக வேண்டுமென்றால் பஸ்ஸில் போக முடியாது. ஆட்டோ பயணம்தான். சிக்கன், மட்டன் என்று சாப்பிட்டு உடம்பை தெம்பாகவும், 'சிக்' கென்றும் வைத்துக்கொள்ள வேண்டும்.

"நீங்கள் கொடுக்கும் பணத்தில் ஒரு நயா பைசா நான் பார்த்த தில்லையடி பெண்டுகளா... எல்லாம் வரவுக்கும், செலவுக்குமே சரியாய் போகுது. எனக்கு ரிடையர்மென்ட் கொடுத்திட்டு நீங்க யாராவது இந்த நிர்வாகத்தைப் பாருங்கடீ... ஏன்டி சுஷ்மா, நீ சின்ன வயதா இருந்தாலும் (எனக்கு அப்போது பதினெட்டு வயது) பெரிய விஷயக்காரியா இருக்கியேடி... நீதான் கொஞ்சம் இந்த கணக்கு வழக்கையெல்லாம் பாரேன். நான் வேணுமானா ஒனக்கு ஒத்தாசையா இருக்கேன்" என்பார்கள் அம்மா திடீரென்று.

அப்படி நிர்வாகம் பண்ணுவதில் ஒரு வசதி இருக்கிறது. யார் நிர்வாகத்தைக் கவனிக்கிறார்களோ அவர்கள் தொழிலில் ஈடுபட வேண்டிய கட்டாயமில்லை. அது அவர்களின் விருப்பத்தைத் பொறுத்தது.

"போங்கம்மா... இவ்வளவு வரவு செலவு பார்த்து நிர்வாகம் பண்றதுன்னா அதுக்கு ஏதாவது படிச்சிருக்க வேணாமா?" என்று கேட்டேன் நான்.

"என்னடீ கிண்டலா பண்றே ? நான் என்ன எம்.ஏ., எம்.பி.ஏன்னா படிச்சிருக்கேன். நான் நிர்வாகம் பண்ணலே?" என்று அம்மா சொன்னதுதான் தாமதம். எங்களில் படித்த பெண்கள் பலரும், 'பாருங்கடீ, அம்மாவுக்கு எம்.பி.ஏ.எல்லாம் தெரிஞ்சிருக்கு!' என்று கிண்டல் செய்தார்கள்.

"ஆமாம்... போங்கடீ... இங்கேதான் எம்.பி.பி.எஸ்.லேர்ந்து எம்.பி.ஏ., வரைக்கும் எல்லா படிப்பு படிச்சவனும் வந்துட்டுப் போறானுவளே... இதைத் தெரிஞ்சுக்கிறது ஒரு விஷயமா?" என்று பதிலுக்கு ஒரு போடு போட்டார்கள் அம்மா.

அங்கே இருந்தபோது நடந்த இரண்டு சம்பவங்களைப் பற்றியும் நான் உங்களுக்கு சொல்லியாக வேண்டும். ஒன்று- திடீரென்று ஒருநாள் நடந்த போலீஸ் ரெய்டு. பொதுவாக எங்கள் இடத்தில் போலீஸ் ரெய்டு நடப்பதில்லை. பெரிய இடம் என்பதாலும், போலீஸ்காரர்களுக்கு பெரிய கையிலிருந்து கடைசி கை வரைக்கும் ரொம்ப விசேஷமாக அம்மா கவனித்து விடுவதும்தான் காரணம். அப்படியும் ஒருமுறை போலீஸ் ரெய்டு வந்துவிட்டது.

அம்மா எந்த எதிர்ப்பும் காட்டவில்லை. "அழைத்துக்கொண்டு போகிறவர்களை அழைத்துப் போங்கள். எப்படி வெளியே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எனக்குத் தெரியும்" என்றுதான் அமைதியாகச் சொன்னார்கள். அப்படியும் ஒரு போலீஸ்காரன் ஒரு பெண்ணை முரட்டுத்தனமாக அவள் வயிற்றில் பூட்ஸ் காலால் எக்கி உதைக்க, அவள் சுருண்டு போய் விழுந்தாள். அப்போதுதான் அம்மாவுக்கு அவ்வளவு கோபம் வந்து பார்த்தேன். வெறி வந்தாற்போல் ஒரேயடியாக தாவிப் போய் அந்த போலீஸ்காரரை கடித்துக் குதற ஆரம்பித்து விட்டார்கள் அம்மா. அந்த ஆள் நிலைகுலைந்து விழ, நாங்கள்தான் போய் அம்மாவை விலக்கிவிட்டோம்.

பிறகு அது பெரிய பிரச்சினையாகப் போய் பெரிய அதிகாரிகளையும், அரசியல்வாதிகளையும் பார்த்து பணத்தைத் தண்ணீராய் செலவு செய்து ஒரு மாதிரியாக சமாதானம் ஆனது.

அதற்கடுத்த ஒரு சில மாதங்களில் மற்றொரு சம்பவம் நடந்தது. அது எங்களுக்கு ஒரு புதிய அனுபவம். ஏனென்றால் பணத் தகராறு என்பதை நாங்கள் அதுவரை பார்த்ததே இல்லை. ஆனால், அன்றைக்கு வந்த இரண்டு இளைஞர்கள் பார்ப்பதற்குக் கல்லூரி மாணவர்களைப் போன்ற தோற்றம், பணக்கார வீட்டுப் பிள்ளைகள் என்பதைத் தெரிவிக்கும் அடையாளங்கள் - அவர்களில் ஒருவன், பணத்தகராறு செய்ய ஆரம்பித்தான். 'உனக்கு இஷ்டமிருந்தால் வா, இங்கு யாரும் அவிழ்த்துப் போட்டுக்கொண்டு உன்னை அழைக்கவில்லை. நடையைக் கட்டு பையா. இது ஒன்றும் கத்திரிக்காய் வியாபாரம் இல்லை பேரம் பேச' என்று கடுமையாகச் சொன்னார்கள் அம்மா.

அம்மா இப்படிச் சொல்லி முடித்ததும் நாங்கள் யாரும் சற்றும் எதிர்பாராத விதத்தில், 'என்னடீ... உனக்கு இவ்வளவு திமிர்' என்று சொல்லி அம்மாவை ஒரு அறையும் அறைந்துவிட்டான் அவன். உடனே பக்கவாட்டில் நின்று கொண்டிருந்த நான் அவனுடைய முகத்தை நோக்கி ஒரு குத்து விட்டேன். அப்படியே மல்லாந்து சாய்ந்தவன் எழுந்துகொள்ளவே இல்லை. குனிந்து அவனை எழுப்பினார்கள் அம்மா. என்ன உலுக்கியும், முகத்தில் தண்ணீர் தெளித்தும் அவன் எழுந்து கொள்ளவில்லை. அவனுடன் வந்திருந்தவன் குனிந்து உட்கார்ந்து அவன் நெஞ்சில் தன் காதை வைத்துப் பார்த்து எங்களை பீதியுடன் நோக்கினான். கண்ணிமைக்கும் நேரம்தான். "கொலை கொலை" என்று அலறிக்கொண்டே வெளியே ஓடினான்.

ஆமாம். கண்ணிமைக்கும் நேரத்தில் அது நடந்துவிட்டது. இந்த ஒரு சம்பவம்தான் என் வாழ்க்கையை ஓரேயடியாய் மாற்றியது. நானும், மற்றவர்களும் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் நான்தான் அந்தக் கொலையைச் செய்தேன் என்று சொல்லி மற்றவர்களையும் சொல்லச் செய்து ஜெயிலுக்குப் போனார்கள் அம்மா. நான் எப்படியும் விரைவில் வெளியே வந்துவிடுவேன் என்று எனக்குச் சமாதானம் சொல்லிவிட்டுப் போனார்கள்தான். ஆனால் திரும்பவே இல்லை. அந்த இளைஞன் ஒரு மந்திரியின் பையனாம். ஏற்கனவே அம்மாவின் மேல் போலீசுக்கு வன்மம். சக்கையாகத் துவைத்துவிட்டார்கள். அத்தனை வயதில் அத்தனை அடியை அந்த உடம்பு தாங்கவில்லை போலும், இரண்டே வருடத்தில் அம்மா ஜெயிலிலேயே செத்துப் போனார்கள்.

இப்படி ஒருவர் செய்த குற்றத்தைத் தன் மீது தாங்கிக்கொண்டு, தன் உடலை அணுஅணுவாய் சித்ரவதைக்கு உள்ளாக்கிக்கொண்டு உயிரையும் விட்டவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? எங்களை விபச்சாரிகள் என்றும், விலைமாதர்கள் என்றும் சொல்லும் நடுத்தர வர்க்கத்தில் இப்படி ஒரு பெண்ணை, இப்படி ஒரு ஆளை நீங்கள் காண்பிக்க முடியுமா?

அம்மா ஜெயிலுக்குப் போனதுமே நான் அந்த வீட்டின் நிர்வாகியாக ஆக்கப்பட்டேன். அம்மா போன பிறகு எனக்கு

இந்தத் தொழிலின் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. இது எல்லாவற்றையும் உதறி எறிந்துவிட்டு ஒரு நிமிடத்தில் நான் வெளியேறி விடலாம். என் கணக்கில் எக்கச்சக்கமான பணம் இருந்தது. யாரும் என்னைத் தடுக்கப் போவதில்லை. ஆனால், வெளியே போய் என்ன செய்வது? ஒன்றும் புரியவில்லை. குழப்பமாக இருந்தது. அப்போதுதான் நிறைய புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தேன். அப்போதுதான் ஒரு சினிமாக்காரரின் பழக்கமும் ஏற்பட்டது. நடிக்க வருகிறாயா என்று கேட்டார். உடனே சம்மதித்தேன்.

பிறகு நடந்ததெல்லாம் பத்திரிகைச் செய்தி. இப்போது என்னை அடித்த போலீஸ்காரர்களுக்கும், என்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் கண்டெடுத்த அந்தத் தரகருக்கும் இன்னும் லட்சக்கணக்கான- அல்லது கோடிக்கணக்கான, ம்? - மக்களுக்கும் நான் ஒரு ட்ரீம் கேர்ள். ஆரம்பத்தில் இந்தச் சமூகத்தைப் பழிவாங்கிவிட்ட குரூரமும், திருப்தியும் எனக்குள் இருந்தது. இப்போது அதுவும் போய் விட்டது. சில நல்ல நண்பர்கள், புத்தகங்கள், எப்போதாவது என் பழைய தோழிகள் எனக்கு ஷூட்டிங் இல்லாத நேரத்தில் வந்து தங்கிவிட்டுப் போவார்கள்."

-இந்த இடத்தில் நான் குறுக்கிட்டேன். "சார்த்தரை எல்லாம் படிக்கும் நீங்கள் இப்படி லட்சக்கணக்கான மக்களுக்கு காமக் கிளுகிளுப்பு ஊட்டி வாழ்ந்துகொண்டிருப்பது தவறாகத் தெரிய வில்லையா? குறைந்தபட்சம் இந்த வாழ்க்கை முறை பற்றிய வருத்தம் கூட உங்களுக்கு இல்லையா?"

"பாருங்கள்... நான் என் வாழ்க்கையை இழக்க விரும்பவில்லை. எனக்கு இரண்டே இரண்டு சாய்ஸ்தான் இருக்கிறது. இரண்டுக்கும் இடையில் கடல் அளவு இடைவெளி. ஒன்று, பிஎம்டபிள்யூ காரில் பயணம் செய்வது. மற்றொன்று, காலில் சாக்கைக் கட்டிக்கொண்டு உருக்கும் வெயிலில் தார்ச்சாலையில் ரோடு போடுவது. ஒரு வாய் கஞ்சிக்குக் கூட வழியில்லாத கோடானுகோடி மக்கள் ஒரு பக்கம். ஷாம்ப்பேய்ன் பருகும் நான் ஒரு பக்கம்.

"நான் காரில் போகும்போது காலில் சாக்கைக் கட்டிக்கொண்டு

சரளைக் கற்களை தாரில் கலந்து ரோலரில் போட்டு உருட்டும் ஆட்கள் என்னைப் பார்த்து கைகளை ஆட்டுகிறார்கள். அவர்கள் தரும் பணத்தில்தான் என்னுடைய இந்த வாழ்க்கை. அவர்களைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தேனானால் நான் ஒரு போராளியாக மாற வேண்டும். போலீசால் அடிபட்டுச் சாகவேண்டும். என் ஆயுள் பூராவையும் சிறைக்கொட்டடியில் போக்க வேண்டும் அல்லது என் சக மனிதர்களைப் பற்றி நினைத்து நினைத்து பட்டினி கிடந்து சாக வேண்டும்.

“இப்படியெல்லாம் தியாகியாக வாழ எனக்கு விருப்பமில்லை. அதற்கான திராணியும் இல்லை. நான் ஒரு தியாகியாகத்தான் வாழ்ந்தாக வேண்டும் என்று என்னை நீங்கள் எப்படி நிர்பந்திக்க முடியும்? நீங்களே சொல்லுங்கள், முடியாது. என்னால் தியாகம் செய்ய முடியாது.

(சற்றுநேர மவுனத்திற்குப் பிறகு மீண்டும் தொடர்ந்தாள்.) அம்மாவுடன் இருந்தபோது அம்மாவின் நேசமும், சக பெண்களின் அன்பும், ஆதரவும் தவிர அங்கே இனிமையான வேறு எந்த ஒன்றும் இருந்ததில்லை. ஒரு நாளில் பத்துப் பதினைந்து பேரிடம் என் உடலைக் கிடத்த வேண்டியிருந்தது. அந்த அனுபவத்தைப் பற்றி உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியுமா? உங்கள் எழுத்தில் அதை வெளிப்படுத்த முடியுமா? வார்த்தைகளால் அதை விளக்க வேண்டுமானால் ஒரே ஒரு வார்த்தைதான் இருக்கிறது - வலி வலி வலி வலி வலி வலி வலி வலி வலி வலி வலி... ஆனால், என் சித்தி வீட்டில் இருந்ததற்கும் இதற்கும் இருந்த வித்தியாசம் என்னவென்றால் – அங்கே இருந்த பீதியும், பயமும் இங்கே அம்மாவின் வீட்டில் இல்லை.

“எனக்கு வேண்டியவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை எனக்கு இங்கு கிடைத்தது. நம்ப முடிகிறதா உங்களால்?”

நம்பத்தான் முடியவில்லை. பலவிதமான உணர்வுகளின் கொந்தளிப்பில் மௌனமாக இருந்தேன். அவளும் எதுவும் பேசவில்லை. இப்படியே எவ்வளவு நேரம் கடந்ததென்று தெரியவில்லை. உணர்வு பெற்றபோது அவளுடைய கைகளை என் கைகளுக்குள் இறுகப் பற்றிக் கொண்டிருப்பது தெரிந்தது.

ஒரு குழந்தையின் கைகளைப் போல் தோன்றியது. மிருதுவாக வருடிவிட்டேன். திடீரென்று உயிர் பெற்ற பதுமையைப் போல் மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

“எனக்கு நிகழ்ந்ததெல்லாம் ஏதோ ஒரு தனித்த அனுபவமாகத் தோன்றவில்லை. இதுபோல் ஏராளமான பெண்கள், ஏராளமான சித்திகள், ஏராளமான சித்தி தம்பிகள், ஏராளமான சிகரெட் வடுக்கள். வடுக்கள் என்றதும் ஞாபகம் வருகிறது. ஆரம்பத்தில் சினிமாத் துறையில் நுழைந்த புதிதில் அந்த வடுக்களை ரொம்பவும் ஆச்சரியமாக பார்ப்பார்கள் மேக்கப் மேன்கள். இப்போது நிரந்தரமான மேக்கப் மேன்.

“நான் செய்ததெல்லாம் சரியா தவறா... எனக்கு நடந்ததெல்லாம் என்ன? இப்போது நினைத்தால் எல்லாம் கனவுபோல் இருக்கிறது. நிஜமாக நடந்தது போலவே இல்லை. நிஜம் என்பதை இந்த சிகரெட் வடுக்கள்தான் சாட்சி சொல்லிக்கொண்டிருக்கின்றன.

“என் இப்போதைய வாழ்க்கை முறை பற்றி யார் எப்படிப் பேசினால் என்ன? எனக்கு இப்போது வலி இல்லை. உடம்பின் வலியை குறைக்கக்கூடிய எந்த வாழ்க்கை முறையாக இருந்தாலும் அது சரியானதுதான் இல்லையா சாரு?”

தினமலர் - கதைமலர்
மே, 1993

## நாகமணி

சேகருடனும் தஸ்தகீருடனும் அப்படி என்னதான் பேசுவேன் என்று இப்போது ஞாபகம் இல்லை.

முதலில் சேகர் வீட்டுத் திண்ணை. பிறகு தஸ்தகீர் வீடு. அங்கேயே மதியம் சாப்பிட்டு விட்டு ரயிலடி. ரயிலடியில் பயணிகள் கூட்டம் வந்து விட்டால் அங்கிருந்து கிளம்பி தர்கா. தர்காவின் 'குளுந்த மண்டபம்' பெயருக்கேற்றபடி எந்த நேரத்திலும் குளிர்ச்சியாகவே இருக்கும்.

காலையில் ஒன்பதுக்கோ பத்துக்கோ ஆரம்பிக்கும் பேச்சு முடிவே இல்லாமல் நீண்டு கொண்டே போகும். இரவு பதினோரு மணி வாக்கில் தர்காவில் படுப்பதற்காக 'நேந்து' கொண்டவர்கள் குளிர்ந்த மண்படத்தில் இடத்தைப் பிடிக்கும் அவசரத்தில் வந்து படுக்கையை விரிப்பார்கள்.

மனசே இல்லாமல் நாங்கள் எழுந்து கொள்வோம்.

அப்போதுதான் பேசவே ஆரம்பித்தது போல் இருக்கும். கடைத் தெரு வழியாகப் பேசிக்கொண்டே வருவோம். பஷீர் அல்வா கடையை நெருங்கியதும் கால்கள் தயங்கும்.

எங்கள் வீட்டை விட சேகரும் தஸ்தகீரும் சற்று வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டு பேரின் அப்பாவுக்கும் சிங்கப்பூரில் வேலை. என் அப்பா கௌதியா மிடில் ஸ்கூலில் வாத்தியார். (இப்போது கௌதியா ஸ்கூல் ஊரிலேயே பெரிய உயர்நிலைப் பள்ளியாக மாறிவிட்டது என்று கேள்வி. கேள்விப்பட்டதோடு சரி, நேரில் போய் பார்க்க வாய்க்கவில்லை. அப்பா உத்தியோக ஓய்வு பெற்றதும் என் தங்கை வீட்டோடு போய்விட்டார். இப்போது ஊரில் உற்றமோ சுற்றமோ எதுவும் இல்லை. சேகரும் தஸ்தகீரும் தங்கள் தந்தையரின் வழியில் சிங்கப்பூர் 'சபராளி'*களாகி விட்டனர்).

அல்வா கடையில் அந்த நேரத்திலும் பஷீர் சுறுசுறுப்பாக வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருப்பான். வியாழக் கிழமைகளில் கூட்டம் சற்று அதிகமாகவே இருக்கும். பஷீர் எங்களுடன் பள்ளி இறுதி வரை ஒன்றாகப் படித்தவன். கூட்டம் இல்லாமல் இருந்தால் அவனுடன் ஒரு ஐந்து நிமிடம் அரட்டை.

தம்ரூட்டோ, அல்வாவோ வாங்கிச் சாப்பிட்டுவிட்டு ஆளுக்கொரு பாதையில் பிரிவோம். பிரியும்போது மணி பத்துக்கும் மேல் ஆகியிருக்கும்.

நான் நடுத்தெருவையும் தாண்டி மேட்டுத்தெரு போக வேண்டும். தெருவின் கடைசி வீடு எங்களுடையது. வீட்டுக்குப் பின்னால் இடுகாடு.

வீட்டுக்குப் பின்னாலிருந்து பார்த்தால் வெட்டாறும், ஆற்றங் கரையில் சுடுகாட்டுக் கட்டிடமும் தெரியும். பாலக்காட்டுக்குச் செல்லும் மண்பாதை அங்கிருந்துதான் ஆரம்பிக்கிறது.

இடுகாடு மற்றும் சுடுகாட்டுக்குப் பக்கத்தில் பிறந்து வளர்ந்ததால் பேய் பிசாசுகள் மீது எனக்கு ஆரம்பத்திலிருந்தே பயம் இல்லாமல் போய்விட்டது.

ஆனாலும் மனுஷனுக்கு ஏதாவது ஒரு பயம் இருக்கும் போல. எனக்கு நாய் பயம்.

* சபராளி வெளிநாட்டில் வேலை செய்து 'சம்பாத்தியம்' செய்பவர்கள். ஸஃபர் பயணம்.

எங்கள் தெருவின் ஜனத்தொகையைவிட நாய்களின் எண்ணிக்கை அதிகம். யாராலும் இந்த நாய்களை ஒன்றுமே செய்ய முடியவில்லை. யாரையாவது நாய் கடித்து முனிசிபாலிட்டியில் போய் புகார் பண்ணினால் நாய் வண்டி வரும். ஆனாலும் அந்த வண்டி நாலு தெருவுக்கு முன்னால் வரும்போதே இந்த நாய்கள் மோப்பம் பிடித்து ஓடி விடும். எங்கே ஓடித் தொலையும் இத்தனை நாய்களும் என்று யாருக்குமே தெரியாது. ஒரு நாய் கூட மாட்டாது. இரண்டு நாட்களுக்கு ஒரு நாய் கூட தெருப்பக்கம் எட்டிப் பார்க்காது. எல்லா நாய்களும் பாலக்காட்டுப் பக்கம் ஓடி விடும்போல. ஆக, நாய் வண்டி நாய்களைப் பிடிப்பதற்கென்று இல்லாமல், நாய்களின் எக்ஸ்கர்ஷனுக்குத்தான் பயன்பட்டு வந்தது.

எல்லாத் தெருக்களுமே இப்படித்தான் என்கிறார்கள் சேகரும் தஸ்தகிரும். ஆனால் அவன்களுக்கு நாய் பயம் இல்லை. நாய் குரைத்தால் இவன்களும் அதைப் போலவே குரைத்து விரட்டி விடுவான்கள். அதுகளும் பயந்து ஓடிவிடும். (பார்ப்பதற்குத் தன்னைப் போல் அல்லாமல் வேறோர் உருவத்தில் இருந்து கொண்டு தன்னைப் போலவே சப்தம் எழுப்பினால் அதுகள் பயப்படாமல் வேறென்ன செய்யும்?)

ஆனால் அவன்களுக்கு பேய் பயம் உண்டு.

என்னைச் சிறுவயதில் நாய் கடித்திருக்கிறது. லேசான கடி என்பதால் தொப்புளைச் சுற்றி ஊசி போடவில்லை. நாய் விஷம் நம் உடம்பில் ஏறினால் நமக்கும் நாய் போன்ற பாவனைகள் வந்துவிடுமாம். கைகளை முன்னங்கால்களாக்கி நாலு காலில் ஆரம்பித்து குரைத்துக் குரைத்து மரணம் வரை போகும் என்கிறார்கள்.

இந்த வயதிலேயே எனக்கு நாயாக மாறுவதில் சம்மதமில்லாமல் இருந்தது.

இப்படித்தான் ஒரு நாள் இரவு அரட்டையை முடித்துவிட்டு நாயை நினைத்துப் பயந்துகொண்டே பெருமாள் கோவில் தெற்கு வீதியைக் கடந்து புளியந்தோப்புக்கு வந்தேன். புளியந்தோப்பைத்

தாண்டினால் மேற்கு வீதி. அதை அடுத்து நடுத்தெரு.

பொதுவாக யாரும் இரவு நேரத்தில் இந்தக் குறுக்கு வழியில் வர மாட்டார்கள் குடிகாரர்களைத் தவிர. அவர்களுக்கும் நாய் பயமாயிருக்கலாம்.

புளியந்தோப்பைப் பற்றி அம்மாச்சி கதை கதையாய் சொல்லி யிருக்கிறார்கள். புளியமரத்தில் தூக்குப்போட்டுக்கொண்டு மடிந்த பெண்களின் கதைகள், பறக்கும் மாணிக்க நாகத்தைப் பற்றிய கதைகள் என்று பலவிதமான கதைகள். இங்கேதான் ஒரு காலத்தில் சிவாஜி கணேசன் சிறு பிராயத்தில் பாய்ஸ் கம்பெனியில் இருந்தபோது பெண் வேடமிட்டு சொந்தக் குரலில் பாடி நடித்தாராம். தான் நேரில் பார்த்த அந்த சிவாஜிகணேசன் இன்று பெரிய நடிகராகி புகழ் பெற்று விளங்குவதில் அம்மாச்சிக்கு ரொம்பவும் பெருமை.

எதை எதையோ யோசித்துக்கொண்டே வந்து கொண்டிருந்த என் காதில் ஒரு பெண்ணின் அழுகை சப்தம் கேட்டது.

பக்கத்திலிருந்த குடிசைக்கு வெளியே உட்கார்ந்து கொண்டு தலைவிரி கோலமாய் உச்ச ஸ்தாயியில் குரலெடுத்து அழுது கொண்டிருந்தாள் ஒரு பெண். இளம் பெண். கிட்டத்தில் போனேன். அழகி. அந்தக் குடிசைக்குப் பொருந்தாத செழிப்பான உடல். சோளி எதுவும் போடாமல் சேலையால் போர்த்தியிருந்தாள்.

"ஏம்மா இப்படி அழறே? என்ன விஷயம்?"

அழுகையை சற்று நிறுத்திவிட்டு என்னை ஏறிட்டுப் பார்த்தாள்.

"யாருப்பா நீ?"

என் அம்மாச்சியின் பெயரைச் சொன்னேன். சிவகாமி ஆச்சியைத் தெரியாதவர்கள் எங்கள் வட்டாரத்தில் யாரும் கிடையாது.

"ஓ.. சிவகாமி பேரனா?"

எனக்கு ஒரு கணம் துணுக்குற்றது. ஆச்சியின் பெயரை ஒருமையில்

சொல்கிறாளே. ஒரு வேளை சித்த பிரமையாக இருக்குமோ?

திரும்பவும் அழ ஆரம்பித்தாள் அந்தப் பெண். இப்போது ஏதோ ஓர் மிருகத்தின் ஓலத்தைத் தொலைத்தூரத்திலிருந்து கேட்பது போல் இருந்தது.

அதற்கு மேல் சுவாரசியம் இல்லாமல் திரும்பி நடக்க ஆரம்பித்தேன்.

"இன்னைக்கு ராத்திரி அடிபட்டுச் சாகப்போறத நெனச்சுத்தான் அழுவுறேன்..."

இதைக் கேட்டதும் சட்டென்று நின்றேன். மீண்டும் அவளிடம் வந்தேன்.

"அடிபட்டுச் சாகப்போறியா? யாரது? ஒனக்குன்னு யாரும் இல்லியா?"

"யாருமே இல்லாத இந்த அனாதச் சிறுக்கிய அடிச்சுக் கொன்னு போடப்போறான் அந்தச் சண்டாளப் பாவி, அவந்தான் எம் புருசன். போன மாசம் என் பாம்படம் வேணும்னு சொல்லி நான் கொடுக்கலைன்னதும் என் காதையே அறுத்தான் அந்த ஊரு கழிச்சல்ல போவான். நேத்து என்னை வெசம் வச்சுக் கொல்லப் பார்த்தான். நான் கண்டு புடிச்சிட்டேன். அந்த வெசச் சாப்பாட்டெ கொண்டுபோய் அவனோட செல்ல நாய்க்கி வச்சேன். நாய் செத்துப் போச்சு. அந்த நாயாட்டம் செத்துப் போயிருக்க வேண்டியவ நான். பொளச்சுக்கிட்டேன். இன்னைக்கு வருவான் குடிச்சிப்பிட்டு. வெட்டியே கொன்னிருவான். தப்பிச்சு ஒண்ட ஒரு எடமில்லை. ஓழச்சிப் பொளக்கலாம். ஆனா ஒண்ட எடம்? ராத்தங்குறதுக்கு இந்த ஒடம்புக்கு யாரு எடம் கொடுப்பா? கௌட்டு நாய்ங்களுக்குத்தான் எடம் கெடைக்கும்..."

சொல்லிவிட்டு மீண்டும் பெருங்குரலெடுத்து அழுதுகொண்டே விரிந்து கிடந்த தலைமுடியை அள்ளிச் சொருகினாள். அப்போதுதான் அவள் காதுகளைக் கவனித்தேன். ஒரு காது வெற்றிடமாக தட்டையாக இருந்தது. அவள் சொல்வது உண்மையாகத்தான் இருக்க வேண்டும்.

"எப்படியாவது இந்த ஒரு ராத்திரிய சமாளிச்சுக்க. நாளைக்கு வந்து எங்க அம்மாச்சியப்பாரு. எங்கேயாவது வீட்டு வேலைக் கும் தங்கறதுக்கும் ஏற்பாடு பண்ணிக் குடுப்பாங்க" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினேன்.

வாசல் திண்ணையில் அம்மாவும் அம்மாச்சியும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ஏன்டா, தாமசமா வர்றதுக்கும் ஒரு அளவு இல்லியா? இன்னேரமா என்னதான் பேசிக்கிட்டு இருப்பே..?" என்றார்கள் அம்மா. ஒன்றும் பேசாமல் உள்ளே போனேன்.

"என்னடா மூஞ்சியப் பாத்தா ஒரு தினுசா இருக்கு? எங்கன போயிருந்தே?" என்று கேட்டுக்கொண்டே என்னைத் தொடர்ந்து உள்ளே வந்தார்கள் அம்மாச்சி.

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் கை கால்களைக் கழுவிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தேன். அடுப்பைப் பற்ற வைத்து அதற்குள் தோசைக் கல்லையும் வைத்திருந்தார்கள் அம்மாச்சி.

மதியம் சமைத்த சோற்றையும் குழம்பையுமே இப்போது சாப்பிட்டு விடலாம். அடுப்பு மூட்ட வேண்டிய அவசியம் இல்லை. சொன் னால் கேட்க மாட்டார்கள். "சூடா சாப்பிடோணும்" என்று சொல்லி ராத்திரி பனிரண்டு மணிக்கு தோசையை வார்த்து வார்த்துப் போடுவார்கள். தொட்டுக்கொள்ள மிளகாய்ப் பொடி அல்லது மதியம் மீன் குழம்பு என்றால் மீன் குழம்பு.

திட்டினாலும் பரவாயில்லை. ஆனால் இந்த மாதிரி நடு ராத்திரியில் விறகு அடுப்பைப் பற்ற வைத்து தோசை வார்த்துக் கொடுப்பதைத் தவிர்ப்பதற்காகவே சீக்கிரம் வந்துவிடவேண்டும் என்று ஒவ்வொரு நாளும் சங்கல்பம் செய்துகொள்வேன். ஆனாலும் பேச்சு சுவாரசியத்தில் முதல் நாள் சங்கல்பம் மறந்து போய்விடும்.

சமயங்களில் திண்ணையில் யாரும் இல்லாவிட்டால் கதவைத் தட்டாமல் கமுக்கமாக திண்ணையிலேயே படுத்துவிடுவேன்.

அதனால் அம்மாவும், அம்மாச்சியும் நான் வரும்வரை திண்ணை யிலேயே உட்கார்ந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

சீக்கிரம் வேலை கிடைத்து பட்டணம் போய்விட்டால் தேவலை என்று வழக்கம்போல் யோசித்தபடியே அன்று இரவும் தூங்கினேன்.

மறுநாள் காலை எழுந்துகொள்ள முடியாதபடி ஜுரம். ராத்திரியெல்லாம் என்னென்னவோ உளறினேன் என்றார்கள் அம்மாச்சி.

நெற்றியில் ஈரத்துணியைப் போட்டுப் போட்டு எடுத்தபடி பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தார்கள்.

"ராத்திரி எங்கடா போயிருந்தே? என்னடா நடந்திச்சு?"

நடந்ததைச் சொன்னேன்.

அவ்வளவுதான். "அடி சக்களத்தி... எம் பேரனை வந்து மயக் குனியா? இதோ போய் ரங்கையனை அழைச்சிட்டு வந்து ஒன்னை என்ன செய்யறேன் பாரு" என்று என்னென்னவோ கத்தியபடி விளக்கு மாடத்திலிருந்து திருநீறை எடுத்து வந்து என் நெற்றி பூராவும் அப்பிவிட்டு அவசர அவசரமாகக் கிளம்பி வெளியே போனார்கள் அம்மாச்சி.

ரங்கையன் எங்கள் ஊரின் பிரசித்தி பெற்ற மந்திரவாதி. எப் பேர்ப்பட்ட பேயாக இருந்தாலும் அதை ஓட ஓட விரட்டி விடுவதில் வல்லவர்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. "எதற்கு இப்போது ரங்கையன்? என்ன விஷயம்" என்றபடி அம்மாவைப் பார்த்தேன்.

அம்மா கதையைச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

என் ஆச்சியின் தங்கை நாகமணி. வெளியூரில் கல்யாணம் முடித்து இரண்டு குழந்தைகளும் பெற்ற பிறகு புருஷனை விஷம் வைத்துக் கொல்ல முயன்றதாக அபவாதம். குழந்தைகளை அழைத்துக் கொண்டு அக்கா வீட்டுக்கு வந்துவிட்டாள்.

"வெசம் வைச்சுக் கொல்லப் பாத்தேங்கிறது வெறும் புரளி. அதை நம்பாதீங்க..." என்று காலில் விழுந்து கதறிய தங்கையை சிவகாமியால் சந்தேகப்பட முடியவில்லை.

ஆனால் மறுநாளே வந்து கந்தசாமி சொன்ன விஷயம் எல்லோரையும் அதிர வைத்தது. கந்தசாமி நாகமணியின் கணவர். கந்தசாமி ஒருநாள் வேலைக்குப் போய்விட்டு வந்து குளித்துக் கொண்டிருக்க நாகமணி அவருக்குச் சோறு போட்டு குழம்பு ஊற்றி வைத்துவிட்டு எங்கோ போய்விட்டாள். குளித்துவிட்டுச் சாப்பிட வந்து உட்காரும் போது யாரோ வந்து கூப்பிட, அவரிடம் பேசி அனுப்பிவிட்டு வந்தபோது சோற்றுக்குப் பக்கத்தில் செத்துக் கிடந்திருக்கிறது பூனை. சந்தேகப்பட்டு மீதிச் சோற்றைக் கோழிகளுக்குப் போட்டியிருக்கிறார் கந்தசாமி. கோழிகளும் செத்துச் செத்து விழுந்திருக்கின்றன.

"சமைக்கும்போது ஏதோ விஷ ஜந்து கூரையிலிருந்து விழுந்திருக்க லாம். நான் ஏதும் அறியேன்" என்று தன் குழந்தைகளின் மேல் சத்தியம் செய்தாள் நாகமணி.

கந்தசாமிக்குத் தன் மனைவியின் வார்த்தையில் நம்பிக்கை இல்லை. மனைவி தன்னை ஒரு மனுசனாகவே மதிப்பதில்லை என்பதும் அவருக்குத் தெரியும். மேலத்தெரு கோவிந்தனை அவள் வைத்துக் கொண்டிருக்கிறாள் என்று ஊரே பேசிக்கொண்டது.

முந்தின நாள்தான் அதுபற்றி தன் மனைவியிடம் கேட்டார் கந்தசாமி. வார்த்தை தடித்து கைகலப்பில் முடிந்தது.

நாகமணி தீர்மானமாகச் சொல்லிவிட்டாள். "அப்படித்தான் அது. ஒன்னால ஆனத செஞ்சுக்க."

கந்தசாமிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. குழந்தைகளின் மேல் அவருக்குப் பிரியம் அதிகம்.

மறுநாள்தான் இப்படி நடந்திருக்கிறது.

சகலை பஞ்சாயத்து செய்து வைத்தார். நாகமணி இனிமேல் புருசனுக்குக் கட்டுப்பட்டு நடப்பாள். கந்தசாமியும் விஷம் கிஷம் என்று வீண் பழி சுமத்தக் கூடாது.

இது நடந்து கணவனும் மனைவியும் குழந்தைகளும் ஊர்போய்ச் சேர்ந்து ஒரு மாதம் ஆவதற்குள் மர்மமான முறையில் செத்துப் போனார் கந்தசாமி. காலையில் சாப்பிட்டுவிட்டு வேலைக்குக் கிளம்பியவர் மயங்கி விழுந்தார். எழவே இல்லை.

சாவுச் சடங்குகள் முடிந்து குழந்தைகளை அழைத்துக்கொண்டு அக்காள் வீட்டுக்குப் போனாள் நாகமணி. குழந்தைகளை வைத்துக் கொண்டு நாகமணியை வீட்டுக்குள் சேர்க்கவில்லை அக்காள். கொலைகாரப் பாவி என்ற வசவு வேறு.

"அவன் சாவுக்கு நாங் காரணமில்ல."

"சொன்னா ஆச்சா... என்னா ஆதாரம்?"

"இந்தா பிடி... இதுதான் ஆதாரம்" என்று கத்தியபடியே பக்கத்தில் கிடந்த அரிவாளை எடுத்து தன் காது ஒன்றை அறுத்து அக்காளின் மூஞ்சியில் வீசியெறிந்தாள் நாகமணி.

அதிர்ச்சியில் சிவகாமி விக்கித்து நிற்க, அந்தக் கணமே அங்கிருந்து விடுவிடுவென்று புறப்பட்ட நாகமணியை அப்புறம் யாரும் உயிருடன் பார்க்க நேரமில்லை.

புளியந்தோப்பில் தூக்குப் போட்டுக்கொண்டு தொங்கிய நாக மணியின் சடலத்தையே பார்க்க முடிந்தது.

எல்லாம் நடந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேல் இருக்கும். ரங்கையனின் மந்திரத்திற்கு நாகமணியின் ஆவியும் கட்டுப்பட்டது. சில தினங்களில் என் உடம்பு குணமாகிய பிற்பாடு சேகரையும் தஸ்தகீரையும் அழைத்துக்கொண்டு ஒரு பகல் நேரத்தில் அந்தப் புளியந்தோப்புக்குப் போனேன்.

நான் சில தினங்களுக்கு முன்பு பார்த்த அந்த இடத்தில் குடிசை எதுவும் இல்லை!

தினமணி கதிர்
மே.1997

# ஷங்கர்லால் இசை விழா

இன்றைக்கு லீவ் போட்டிருந்ததால் பிரச்சினை இல்லாமல் போயிற்று. இல்லாவிட்டால் ஏழரை மணிவரை நேரத்தை வீணே கடத்த வேண்டியிருக்கும். வீட்டிலிருந்து சாவகாசமாகக் கிளம்பி ஏழரை மணிக்கு மாடர்ன் ஸ்கூல் வந்து சேர்ந்தேன். வாசலில் இருமருங்கும் போலீசார் வரிசையாக விறைப்புடன் நின்றிருந்தனர். வேறு ஆட்கள் யாருமில்லை. எனக்கு நுழையத் தயக்கமாக இருந்தது. யாரோ வி.வி.ஐ.பி. வருகிறார்களாயிருக்கும். கொஞ்சம் துணிவை வரவழைத்துக் கொண்டு நுழைந்தேன். உள்ளேயும் கூட்டமில்லை. கூட்டமில்லாதது வழக்கமான விஷயம்தான். ஷங்கர்லால் இசை விழாவில் ஒரே நாளில் இரண்டு நிகழ்ச்சிகள் இருக்கும். பொதுவாக இரண்டாம் தின நிகழ்ச்சியே முக்கியமானதாக இருக்கும். இன்றும் அப்படித்தான். பாகிஸ்தானிலிருந்து வரும் சலாமத் அலி– ஷராஃபத் அலியின் நிகழ்ச்சி இரண்டாவது. எட்டரை மணிக்கு மேல்தான் கூட்டத்தை எதிர்பார்க்கலாம். திறப்பு விழாப் பிரமுகர் யார் என்று தெரியவில்லை. இன்னும் சற்று நேரமாகும்போல் இருந்ததால் எழுந்து ஒன்றுக்கிருக்க வெளியே வந்தேன். முதல் முறை இந்த ஷங்கர்லால் இசை விழாவுக்கு இங்கு வந்தபோது டாய்லெட்டைக் கண்டுபிடிக்கப் பெரிதும் திண்டாடினேன். யாருக்குமே தெரிந்திருக்கவில்லை. அப்பறம் எப்படியோ நானாகவே கண்டுபிடித்தேன்.

மாடர்ன் ஸ்கூல் தில்லியில் மிகவும் 'விலை உயர்ந்த' பள்ளிகளுள் ஒன்று. என்னுடைய ஒருமாத ஊதியமும் ஒரு மாணவனின் ஒருமாதக் கட்டணமும் சமம். மாணவர்களை மிக நாகரிகமான, திறமை வாய்ந்த குடிமக்களாக உருவாக்குவதற்கு இத்தனை செலவாகிறதாம். நான் படித்த நகராட்சிப் பள்ளியில் இப்போதும் கூட வருடாந்திரக் கட்டணம் இருபது ரூபாய்தான். பல விசேஷ 'குறள்'கள் கிறுக்கப்பட்ட கக்கூஸைக் கொண்ட பள்ளி அது. அந்தக் குறள்கள் அத்தனையும் இப்போதும் என் ஞாபகத்தில் இருக்கிறது. மாடர்ன் ஸ்கூல் டாய்லெட்டில் ஆங்கிலத்தில் இதுபோல் பல Couplets கிறுக்கப்பட்டிருந்தன.

ஹெறால்ட் ராபின்ஸ் புத்தகத்திலிருக்கும் பல 'டெக்னிகல்' வார்த்தைகள் சரளமாகக் கையாளப்பட்டிருந்தன. சென்ற வருடம் மாடர்ன் ஸ்கூல் மாணவன் ஒருவன் தன் வகுப்புப் பையன் ஒருவனைக் கத்தியால் குத்திய சம்பவம் ஒன்றும் பேப்பரில் படித்தது ஞாபகம் வந்தது.

வந்து ஒரு டீ குடித்தேன். பக்கத்தில் பிரமாண்டமான தோசைக் கல் வடிவத்திலிருந்த ஒரு கல்லில் ஒருவன் 'டிக்கி' செய்து கொண்டிருந்தான். கொஞ்ச நேரம் அதை வேடிக்கை பார்த்தேன். ஒரு பிளேட் சாப்பிடலாம் போலிருந்தது. ஆனாலும் இரண்டு காரணங்களால் அந்த யோசனையைக் கைவிட்டேன். *(1)* வெளியே ஐம்பது பைசாவுக்குக் கிடைக்கும் டீயை இங்கே ஒரு ரூபாய்க்கு விற்றான். ஆக, டிக்கியை எவ்வளவு ரூபாய்க்கு விற்பான் என்று சொல்ல முடியாது. *(2)* இப்போது டிக்கி சாப்பிட்டுவிட்டால் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட முடியாது. பாப்பா சாப்பிடாமல் காத்திருப்பாள்.

டிக்கி சாப்பிடாமலேயே உள்ளே போனேன். ஐந்து ரூபாய் டிக்கட்டிற்கு மேடையிலேயே தரையில் அமர வைத்திருந்தார்கள். பத்து, பதினைந்துக்கும் கூட நாற்காலி இல்லை. ஆனால் மெத்தையும் திண்டும் போடப்பட்டிருந்தது. காலணிகளைக் கழற்றி எல்லாரும் வெளியே வைத்திருந்தார்கள். நானும் ஷூவைக் கழற்றி அவற்றோடு வைக்க எத்தனிக்கையில் யாரேனும் போட்டுக் கொண்டுபோய் விட்டால் என்ன செய்வதென்று சந்தேகம் தட்டியது. இல்லை.

அதற்குச் சாத்தியமில்லை. இது மேல்தட்டு மனிதர்கள் வரும் நிகழ்ச்சி. இங்கு அப்படி நடக்காது என்ற எண்ணம் தோன்றியது. இருந்தாலும் சற்றே தள்ளி வெளிச்சம் இல்லாத இடத்தில் ஷூவைப் பத்திரமாக வைத்துவிட்டு உள்ளே போய் மேடைக்கு மிக அருகில் பக்கவாட்டில் உட்கார்ந்துகொண்டேன். கூட்டம் இன்னமும் மிகக் குறைவாகவே இருந்தது. பத்துப் பதினைந்திலெல்லாம் எல்லோருக்கும் பாலிதீன் பைகள் கொடுக்கப்பட்டு அவர்கள் முன்னாலேயே காலணிகள் இருந்தன.

சற்று நேரத்தில் துவக்க விழாப் பிரமுகர்கள் வந்தார்கள். லெஃப்டினண்ட் கவர்னர்தான் விழாவைத் துவக்கி வைப்பவர். விழாக் காரியதரிசி, எல்.ஜி.யை அவருடைய பல அலுவல்களுக்கிடையே விழாவுக்கு வந்து சிறப்பித்தமைக்காக நன்றி கூறிக் கொண்டிருந்தார். மேடையை நோக்கி வந்த எல்.ஜி. ஷூவைக் கழற்ற குனிந்து பார்த்தார். முடியவில்லை. பிறகு ஒற்றைக் காலில் நின்று கொண்டு இன்னொரு காலைத் தூக்கிக் கழற்ற முயன்ற போது தடுமாறினார். உடனே கையில் ஃபைல் வைத்திருந்த ஒருவர் தன்னுடைய தோளை எல்.ஜி. கை வைத்துக்கொள்ள கொடுத்து உதவினார். முழங்காலை மடக்கிக் கொண்டு அதற்காக அவர் 'எஸ்' வடிவில் நிற்க வேண்டியிருந்தது. எல்.ஜி. இதை எதிர்பார்த்திருக்கவில்லை போலும். அவரால் சம்மணமிட்டு உட்கார முடியவில்லை. பேப்பரில் எல்.ஜி.யின் போட்டோவைப் பார்க்க நேர்ந்த சமயங்களில் அவர் ஏன் கேடி மாதிரி நெற்றிக்கு மேல் பந்துபோல் முடி வைத்திருக்கிறார் என்று நான் நினைத்ததுண்டு. இப்போதுதான் காரணம் புரிந்தது. தலையில் அந்தப் பந்தைத்தவிர வேறு ஒன்றுமே இல்லை. வெளிச்சத்தில் பளீரிட்டது. மனிதன் பிறந்த கணத்திலிருந்து சாகும் வரை இசையே அவனோடு பெரிதும் தொடர்புள்ள ஒன்று என்பதை இரண்டு உதாரணங்களின் மூலம் (தாலாட்டு, ஒப்பாரி) விளக்கினார் எல்.ஜி. பிறகு விளக்கேற்றி விழாவைத் துவக்கினார். எல்.ஜி. இப்போது எப்படி ஷூவைப் போடப்போகிறார் என்ற கவலை என்னைத் தின்றுகொண்டிருந்தது. கால்களை ஷூவில் நுழைத்ததும் கையில் ஃபைல் வைத்திருந்தவர் தானே குனிந்து ஷூவைப் போட்டுவிடப் போனார். 'Doesn't matter?' என்று முனகிவிட்டு லேஸைப் போடாமலேயே, சேற்றில் கால்கள் புதையப் புதைய நடப்பவன் மாதிரி நடந்து போய்ப்

பக்கவாட்டில் போட்டிருந்த நாற்காலிகள் ஒன்றில் உட்கார்ந்து கொண்டார் எல்.ஜி. முதல் காரியமாக லேஸைக் கட்டினார். கையில் ஃபைல் வைத்திருந்தவர் சிலை மாதிரி எல்.ஜியின் பின்பக்க இருக்கை ஒன்றில் உட்கார்ந்தார். இந்த அளவுக்கு இவர் 'சம்ச்சா'வாக இருப்பது எல்.ஜி.யின் இமேஜையே கெடுத்துவிடும் என்று நினைத்தேன். நாளைக்கே எக்ஸ்பிரஸில் எல்.ஜி.க்குப் பொது நிகழ்ச்சி ஒன்றில் ஷூ போட்டு விட முயன்றார் அவர் பி.ஏ. என்ற செய்தி வந்தாலும் வரலாம்.

இவருக்கு முன்னால் இருந்த எல்.ஜி. இதற்கு நேர் எதிரானவர். இப்போதைய எல்.ஜி. பிரதம மந்திரியின் மகனுடைய பள்ளித் தோழராம். பிரதம மந்திரிக்கு ரொம்பவும் வேண்டியவர். அதனால்தான் இவருக்கும் சீனியரான பல அதிகாரிகளை ஒதுக்கிவிட்டு இவரை எல்.ஜி. ஆக்கினது. இதை எதிர்த்துப் பல சீனியர் அதிகாரிகள் ராஜினாமா செய்தது எல்லாம் பழைய கதை. அது எழுபத்தெட்டில். பிறகு எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்து இவர் தண்ணியில்லாக் காட்டுக்கு மாற்றல் செய்யப்பட்டார். அடுத்து பழைய கட்சியே மறுபடியும் ஆட்சியைத் திரும்பப் பிடித்ததும் தண்ணியில்லாக் காட்டில் இருந்தவரை இதே ஊருக்கு மாற்றிக்கொண்டார் பிரதம மந்திரி.

முந்தைய எல்.ஜி. பந்தா இல்லாதவர். நேர்மையானவர். கண்டிப்பானவர். எளிமையானவர். எல்லாவற்றுக்கும் மேலாக பெரிய இசைப் பிரியர். ஆனால் அவர் இசைப் பிரியராய் இருந்தது பிற இசைப்பிரியர்களுக்கெல்லாம் சிரமமாக இருந்தது. இசை நிகழ்ச்சி ஒன்றையும் விடாமல் வந்து நிகழ்ச்சி துவங்கும் முன்னர் அந்தக் குறிப்பிட்ட இசைக் கலைஞருக்கும் தனக்குமுள்ள சிநேகிதம், ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டாம் வருடம் அந்த இசைக் கலைஞரின் வீட்டில் முதன்முதலாக தான் அவருடைய இசையைக் கேட்க நேர்ந்தது எல்லாவற்றைப் பற்றியும் மிக விஸ்தாரமாக முக்கால் மணி நேரம் பேசுவார். தன் பதவிக் காலத்தில் ஊழலை ஒழிப்பதற்காக அவர் எடுத்த அதிரடி நடவடிக்கைகள் இன்னும் பல வருடங்களுக்கு இந்த அரசு ஊழியர்களின் மதிய உணவுப் பேச்சுக்கு அவலாக இருக்கும். மற்ற அலுவலகங்களைப் பற்றி எனக்கு விபரமாகத்

தெரியாது; ஆனால் எங்கள் அலுவலகத்தில் அவர் இட்ட சட்டங்களுள் ஒன்று, ஒவ்வொரு மண்டல அதிகாரியும் தங்கள் மண்டலத்தில் உள்ள நியாயவிலைக் கடைகளை வாரத்திற்கு ஒருமுறை நேரடியாகப் போய்ச் சோதிக்க வேண்டும் என்பது. இப்படி ஒரு மண்டல அதிகாரி இயங்க ஆரம்பித்தால் அவருக்கு அலுவலகத்தில் உட்காரவே நேரம் இருக்காது. சோதனையிலேயே 'நாள் முழுதும் கழிந்துவிடும். இது அவர்களைப் பெரும் மனப் பாதிப்புக்குள்ளாக்கி ஊழல் அதிக அளவில், உயர் அதிகாரிகளின் ஆதரவுடனேயே பல்கிப் பெருகியது.

இசை விழாவின் முதல் நிகழ்ச்சியாக ஷரன் ராணியின் சரோத் துவங்கியது. நான் எல்.ஜி.யையும், கையில் ஃபைல் வைத்திருந்தவரையுமே பார்த்துக்கொண்டிருந்தேன். ஐந்து நிமிடம்போல் இருந்துவிட்டு எல்.ஜி. கிளம்பிவிட்டார். கையில் ஃபைல் வைத்திருந்தவரும் விழுந்தடித்துக்கொண்டு புறப்பட்டுப் போனார். நல்லவேளை, நான் இந்த இக்கட்டில் மாட்டிக் கொள்ளவில்லை என்று சந்தோஷப்பட்டுக் கொண்டேன். ஒரு ஐந்து வருடத்திற்கு முன்னர் இந்த எல்.ஜி.யின் அந்தரங்கச் செயலகத்தில் வேலை செய்ய எனக்கு அழைப்பு வந்தது. நான் எல்.ஜி.யின் செயலாளரின் காலில் விழுந்து கும்பிட்டு என்னை எடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டேன். அவரும் இணங்கினார். அந்தப் பகுதியிலிருந்த ஊழியர்கள் என்னை விநோதமாகப் பார்த்தார்கள். இங்கு வேலைக்கு வந்தால் வீடு கிடைக்கும். ஐந்து வருடத்தில் ஒரு சில லட்சங்களைப் பார்க்கலாம். இப்படி பல அனுகூலங்கள் இருந்தன. ஆனால், எனக்கு அதிலெல்லாம் அப்போது விருப்பமில்லை. அதனால்தான் 'ஒருநாள் தானே' என்று செயலாளரின் காலில் விழுந்தேன். இல்லாவிட்டால் பல வருடங்களுக்கு எல்.ஜி.க்கு கால் கழுவிவிட வேண்டியிருக்கும். ஆனால் இப்போது நினைத்துப் பார்க்கும் போது அது அத்தனை சரியான முடிவாகத் தோன்றவில்லை. ஐந்து வருடம் நாயாக இருந்து ஐந்தாறு லட்சங்களைத் தேற்றிக்கொண்டு விட்டு, பிறகு காலம் பூராவும் கலைஞனாக வாழ்ந்திருக்கலாம். தன்மானம் பார்த்தது தவறாகிவிட்டது.

திடீரென்று ஒரு பத்துப் பன்னிரண்டு சர்தார்ஜிகள் உள்ளே

நுழைந்தார்கள். ஒவ்வொருவரும் ஆறரை அடி உயரம், மூன்றடி பருமன். அதிலும் ஒரு சர்தார்ஜி ஏதோ ஒரு மலை நகர்ந்து வருவதுபோல் வருவதைப் பார்த்து என் பக்கத்திலிருந்த ஒரு பெண் தன் தோழியிடம் சிரித்தாள். எனக்குச் சிரிப்பு வரவில்லை. ஏதோ கலவரம்தான் நடக்கப் போகிறதென்று நினைத்தேன். திடீரென்று கைதட்டல் சத்தம் கேட்டது. மணியைப் பார்த்தேன். ஒன்பதரை ஆகியிருந்தது. தொடர்ந்து ஷரன் ராணியே வாசிக்கப் போவது போல் இருந்தது. முன்பு வந்த அத்தனை சர்தார்ஜிகளும் மற்ற எல்லாரையும் முந்திக்கொண்டு மேடைக்கு மிக அருகில் முதலாவதாக உட்கார்ந்திருந்தார்கள். எழுந்து வெளியே வந்தேன். ஷூ நான் வைத்த இடத்திலேயே இருந்தது. போட்டுக்கொண்டேன். குளிர் தாங்க முடியாததாக இருந்தது. இரண்டு ஸ்வெட்டர் போட்டிருந்தும் நடுங்கியது. அநேகமாக வெளியில் நின்றிருந்த அனைவருமே சால்வை போர்த்தியிருந்தார்கள் என்பதைக் கவனித்தேன். வயிறு வேறு பசித்தது. அந்த டிக்கி, மற்றும் பட்டூரா எல்லாம் எண்ணெயில் சுடச்சுடப் பொரிவதைப் பார்த்தபோது சாப்பிட்டு விடலாம் என்றே தோன்றியது. ஆனால் மறுபடியும் அதே தயக்கம். சாப்பிடும் எண்ணத்தைக் கைவிட்டு வெறும் 'பான்' மட்டும் போட்டுக்கொண்டேன். உள்ளே பார்த்த சர்தார்ஜிகள் சோலே பட்டூராவை விழுங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சில் சலாமத் அலியின் பெயர் வரக் கேட்டேன். எனக்கேற்பட்ட பயம் தெளிந்தது.

இன்னும் சலாமத் அலியின் நிகழ்ச்சி துவங்கவில்லை. இனிமேல் துவங்கி அது முடிய மணி ஒன்று ஆகிவிடும். அதற்கு மேல் நைட் பஸ் கிடைக்கவேண்டும். அதற்காக எத்தனை நேரம் நிற்க வேண்டியிருக்குமோ? வீட்டுக்குப் போய்ச் சேர எப்படியும் இரண்டு இரண்டரை ஆகிவிடும். பாப்பாவிடம் பன்னிரண்டு மணிக்குள் வந்து விடுவதாகச் சொல்லி வந்திருந்தேன். பத்து மணி ஆகியும் இன்னும் முதல் நிகழ்ச்சியே முடியவில்லை. நாளைக்கு ஆபீசுக்குப் போக வேண்டியது வேறு நினைவுக்கு வந்து எரிச்சலை உண்டாக்கிக் கொண்டிருந்தது. இவ்வளவு சிரமத்தையும் தாங்கிக் கொள்ளலாம்தான். சலாமத் அலி ஒரு Legendary figure. பாகிஸ்தானி வேறு. நம் விருப்பப்படி இவரைக் கேட்க வாய்க்காது. ஆனால் நாளை அலுவலகம் போக வேண்டியதை நினைத்தால்தான் இசை

கேட்கும் மனநிலையே போய்விடுகிறது. இன்று வராததற்காக ஆபீசர் கத்துவான். வரா விட்டாலாவது போகிறது. தகவல்கூடத் தராதது ஏன் என்று கத்துவான். அதற்கு எப்படிக் கதைவிடுவது என்று புரியவில்லை. ஏனென்றால் உண்மையைச் சொல்ல முடியாது. காலையில் குழாயில் தண்ணீர் வரவில்லை. அதனால் 'போரிங் பம்ப்' இருக்கும் இடத்திற்குப் போய் கியூவில் நின்று தண்ணீர் எடுத்து வருவதற்குள் நேரமாகி விட்டது. மணி பத்தரை. சாப்பிட்டுத் தயாராகி விட்டேன். ஆனால் பாப்பா சாப்பிட்டிருக்கவில்லை. என்னுடனேயே கிளம்புகிறேன் என்றாள். எனக்கு இரண்டு பஸ் மாற வேண்டுமாதலால் இனியும் தாமதமானால் அலுவலகம் போய்ச் சேர மதியமாகி விடும். சாப்பாட்டைக் கூட விட்டு விட்டு என்னுடன் சேர்ந்து வருவதில் என்ன குதூகலம் இருக்க முடியும் என்று நினைத்து வியந்து 'சரி, சாப்பிட்டு விட்டே வா, காத்திருக்கிறேன்' என்று சொல்லி அவளை முத்தமிட்டேன். திடீரென்று 'இன்று லீவு போட்டு விடலாமாடா?' என்றாள். உடனே எனக்கும் லீவ் போட்டு விடலாம் என்று ஆசையாயிற்று.

லீவ் போட்டு விட்டோம். பக்கத்து வீட்டிலிருந்த ஃபோன் மூலம் செய்தியைத் தெரியப்படுத்தி விடலாம் என்று போனேன். பூட்டியிருந்தது வீடு. இந்த இடத்தில் பொதுத் தொலைபேசியும் கிடையாது. நாளைக்கு எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டது தவறாகப் போயிற்று.

பலவாறாக யோசித்துப் பார்த்தும் தகவல் கொடுக்கக்கூட முடியாமல் போனதற்கான காரணத்தை இட்டுக்கட்ட முடியவில்லை. மறுபடியும் கைத்தட்டல் சத்தம் கேட்டது. ஷரன் ராணி நிகழ்ச்சி முடிந்து எல்லோரும் வெளியே வந்தார்கள். இன்னும் பதினைந்து நிமிடத்தில் சலாமத் அலியின் நிகழ்ச்சி துவங்குவதாக அறிவிக்கப்பட்டது. மணி கேட்டேன். பத்தரை. விடுவிடு என்று நடையைக் கட்டினேன்.

கணையாழி

ஏப்ரல், 1986

## காஞ்சனா

ஏதோ பாட்டும், டான்சும், சிரிப்பும், கைத்தட்டலுமாகக் காதில் விழுந்ததைக் கேட்டு அந்த ஓர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டலின் முதல் மாடியிலிருந்த அறையை விட்டு வெளியே வந்து, காரிடாரின் கைப்பிடியில் சாய்ந்துகொண்டு கீழே பார்த்தாள் காஞ்சனா. ஏழெட்டு அலிகள் எதிர்வீட்டு பங்களா வாசலில் டான்ஸ் ஆடிக் கொண்டிருந்தனர். ஒரு அலி 'டோலக்'கை அடித்துக்கொண்டிருக்க, மற்ற அலிகள் கைகளை டப் டப்பென்று அடித்துக்கொண்டும், பேசிச் சிரித்துக் கொண்டும் இருந்தனர். அவர்கள் தமிழில் பேசிக்கொண்டதைக் கேட்ட காஞ்சனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு தூரம் டில்லி வரை வந்து இந்தத் தொழிலா என்று நினைத்தாள். பக்கத்தில் வந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த ரூம்மேட் ஜஸ்பீர் கவுரைக் கேட்டாள். ஆனால், அவள் சொன்னதைக் கேட்ட பிறகு அவர்களை அலி என்ற பெயரால் நினைத்துப் பார்க்கவே மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாக இருந்தது.

குழந்தை பிறந்து சில தினங்களான வீடுகளாகப் பார்த்து வந்து பாட்டும், டான்சுமாக அந்த நிகழ்ச்சியை இவர்கள் கொண்டாடுவதும், 'பக்ஷீஸ்' வாங்கிப் போவதும் இங்கே சர்வ சகஜமான விஷயம் என்று சொன்னாள் ஜஸ்பீர்.

"குழந்தை பிறந்த வீட்டை இவர்கள் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?"

"அதற்கு எத்தனையோ வழிகள் உண்டு. பதிவாளர் அலுவலகம், நர்சிங் ஹோம் என்று எப்படியோ இவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள்."

பேசிக்கொண்டிருக்கும்போதே ஆட்டமும், பாட்டமும் முடிந்து 'பக்ஷீஸ்' வாங்கிக் கொண்டிருப்பதை ஆச்சரியத்துடன் பார்த்தேன். ஆச்சரியத்துக்குக் காரணம் பக்ஷீஸ் என்பது ஐந்தோ பத்தோ அல்ல. நூறு ரூபாய் நோட்டுக்கள். ஒரு ஆயிரம் ரூபாயாவது தேறும் போலிருந்தது.

"ஆமாம், ஒரு ஹிஜிடாவுக்குக் குறைந்தபட்சம் ஐம்பது ரூபாயாவது வரவேண்டும். பணக்கார வீடுகளில் இது நூறாகவும் இருக்கும்" என்றாள் ஜஸ்பீர்.

ஹிஜிடா?

"உங்களுக்கு 'ர' வராதா?" என்றேன். பதிலுக்கு அவள் சொன்னாள். அது 'ர'வும் இல்லையாம். 'ட'வும் இல்லையாம். இரண்டுக்கும் இடையில் இருந்தது அவள் சொன்னது. அலிகட், சண்டிகட் என்று தொடர்ச்சியாக சொல்லிக் காண்பித்தாள். ம்ஹூம். என்னால் அப்படிச் சொல்ல முடியவில்லை.

எல்லாம் முடிந்து அறைக்குத் திரும்பி ரஜாய்க்குள் புகுந்துகொண்ட போது ஒரு குழந்தையைத் தூக்கிக் கொஞ்சி முத்தமிட வேண்டும் போலிருந்தது. தாங்கள் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாத தால் மற்றவர்களின் குழந்தைப் பேறின் போது அதை ஆடிப்பாடி கொண்டாடுகிறார்கள் அலிகள்.

நான் எப்படிக் கொண்டாடுவது? இந்த முப்பத்திரண்டு வயதுக்குப் பிறகும் திருமணம் உண்டா?

ஆனால், திருமணம் வேண்டாம் என்று வைராக்கியமாக இருந்தது நான்தானே? அதன் விளைவுகளையும் நான்தானே அனுபவித்தாக வேண்டும்?

இப்போது இந்த முப்பத்திரண்டு வயதில் தன் முடிவைப் பற்றி சந்தேகம் எழுந்தது காஞ்சனாவுக்கு. வயதுதான் காரணமா? கண்ணாடி முன் நிற்கும் போதுதான் தெரிகிறது, ஒன்றிரண்டு முடி நரைக்க ஆரம்பித்திருப்பது. கண்களைச் சுற்றி எப்போதும் அகலாத கரு வளையம்...

கன்னம் கொஞ்சம் கொஞ்சமாக வற்றிக்கொண்டு வருகிறது. தோலின் பளபளப்பும் குறைந்துவிட்டது. வயதானால் நிறம் கூட மாறுமா என்ன?

திருமணம் வேண்டாம் என்ற அவளுடைய முடிவிற்குக் காரணம் அவளா? அவளுடைய மூன்று மூத்த சகோதரிகளின் வாழ்க்கையைப் பார்த்த யாருமே அப்படிப்பட்ட முடிவுக்குத்தானே வர முடியும்? மூத்தவள் மீனாட்சிக்கு ஏதோ உறவொன்று சொல்லி பெரிய இடத்தில் அமெரிக்க மாப்பிள்ளையை சம்பந்தம் செய்தார்கள். அப்போதே சந்தேகப்பட்டிருக்க வேண்டும்– அமெரிக்க மாப்பிள்ளைக்கு ஏன் இப்படி ஒரு நடுத்தரக் குடும்பத்தில் பெண் எடுக்கிறார்கள் என்று. திருமணம் முடிந்து ஆறே மாதத்தில் டிவோர்ஸ் வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தாள். மாப்பிள்ளைக்குக் கண்ணுக்குப் புலப்படாத உடல் ஊனம். ஊனம் பெரிய விஷயமில்லை. எவ்வளவு பெரிய ஊனத்தையும், அன்பும், சிநேகிதமும் சரி பண்ணிவிடும். ஆனால், திருமணம் ஆனதிலிருந்தே மாப்பிள்ளை அவளைத் தொட்டதில்லை. அன்பாகவும் தொடவில்லை. ஆசையாகவும் தொடவில்லை.

இரண்டாமவள் வனஜாவுக்கு மாமியார் கொடுமை. கொத்தடிமையைப் போல் நடத்தினாள் மாமியார். இந்தப் பக்கம் திரும்பினால் ஒரு இடி. அந்தப் பக்கம் திரும்பினால் ஒரு குட்டு. எதற்கெடுத்தாலும் அவள் வேலைக்குப் போவதைப் பற்றிய குத்திக் காட்டல். வேலைக்குப் போகாமல் இருந்து விடுகிறேன் என்றால் கணவனின் வற்புறுத்தல். தினமும் வீடு துடைக்க வேண்டும். எச்சில் டம்ளரை பாத்திரத்தோடு போட்டு தேய்க்கக் கூடாது. அது தனி, பாத்திரம் தனி.

“பெட்ஷீட்டையெல்லாம் ஏன் தினமும் மாற்றுகிறாய்? அப்படி என்ன உடம்பு சுகம் வேண்டிக் கிடக்கிறது? குடும்பப்

பெண்ணாக லட்சணமாக இருக்க வேண்டாம்? இப்படி தினம் ஒரு பெட்ஷீட் மாற்றினால் நீ வாங்கும் சம்பளம் பெட்ஷீட் வாங்கவே போறாதே?" (வனஜாவிடம் "என்னடி விஷயம்?" என்று கேட்டால், "தினமும் சித்ரா படுக்கையில் போய்விடுகிறாள். அதனால்தான் தினமும் அதை மாற்ற வேண்டியிருக்கிறது. இது மாமியாருக்கும் தெரியும். இருந்தும் அப்படிச் சொல்கிறாள்" என்பாள்). 12 லிட்டர் குக்கரை கீழே எடுத்து வைக்கும்போது கனம் தாங்காமல் எப்போதாவது சுட்டுக்கொண்டால் அதற்கும் ஒரு இடி. ("உனக்கு சமையலில் கவனம் இல்லை. எதை நினைத்துக்கொண்டு சமைக்கிறாய்?") குழந்தைக்கு ஏதேனும் ஆசைப்பட்டு வாங்கிக்கொண்டு வந்தால் சுய சம்பாத்தியம் என்ற திமிரில்தான் காசைக் கரியாக்குகிறாள் என்று நாள் பூராவும் புலம்பல்.

மூன்றாமவள் சந்திரா. திருமணமாகும் போது அவள் அரசாங்க வேலையில் இருந்தாள். ஆனால், வேலைக்குப் போகக் கூடாது என்று தடுத்து விட்டார் கணவர். இப்போது இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு ஒருவர் சம்பளத்தில் குடும்பம் நடத்த முடியவில்லையென்று, அரசாங்க வேலைக்குப் போகக்கூடிய வயதையெல்லாம் தாண்டி, ஒரு தனியார் பள்ளியில் 500 ரூபாய் சம்பளத்திற்கு ஆசிரியையாக வேலைக்கு போய் வந்து கொண்டிருக்கிறாள். இந்தச் சம்பளத்தில் பள்ளிக்குப் போய் வர பஸ் செலவு ரூ. 100, பஸ் பயணத்தின் கூட்ட நெரிசல், தலைவலி, காப்பி செலவு எல்லாம் உபரி உபத்திரவம். சம்பளத்தில் ரூ. 300 மிஞ்சினாலே அதிகம். ஆனால், அந்த முன்னூறு ரூபாய்க்கு வீட்டில் தேவை இருக்கிறது என்கிறாள். இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால் அவள் கணவரின் சிகரெட் மற்றும் வாரத்திற்கு நான்கு சினிமா என்ற செலவே மாதம் ரூபாய் முன்னூறு ஆகிக் கொண்டிருக்கிறது. இப்போது இதையெல்லாம் யோசித்து கூட்டிக் கழித்துப் பார்ப்பதற்கு காரணம் என்ன? வயதா? ரகுவா?

ரகு ஒரே பள்ளியில் தன்னோடு ப்ளஸ் டூ வரை படித்தவன். பள்ளியில் படித்த வரை ஒரு வார்த்தை கூட இருவரும் பேசிக் கொண்டதில்லை. திடீரென்று பதினாறு ஆண்டுகளுக்குப்

பின் ஒருநாள் காலை மண்டி ஹவுஸ் பஸ் நிறுத்தத்தில் நின்றுகொண்டிருந்த போது அவன், "நீங்கள் காஞ்சனாதானே?" என்று கேட்டபோது அவளுக்கு அவனைத் தெரியவில்லை. "எனக்கும் நாகூர்தான். உங்களோடுதான் ப்ளஸ் டூ வரை படித்தேன்" என்றான்.

அப்போதும் அடையாளம் தெரியாமல், பிறகு அவன் தன் பெயரைச் சொன்ன போதுதான் புரிந்தது.

ரொம்பவும் தற்செயலான சந்திப்பு. பொதுவாக அவள் காலையில் எழுந்து ப்ரெட், பட்டர், டீ என்று காலை உணவை முடித்துக்கொண்டு அந்த லேடீஸ் ஹாஸ்டல் இருக்கும் மண்டி ஹவுசிலிருந்து சாஸ்திரி பவன் வரை அலுவலகத்திற்கு நடந்தே போய்விடுவது குளிர்காலத்தில் அவள் வழக்கமாக இருந்தது. அன்றைக்கு டில்லியின் ஜனவரி மாதத்துக் குளிரோடு பனி மூட்டமும் சேர்ந்துகொண்டது. பத்து அடி தூரத்துக்கு மேல் எதுவும் தெரியவில்லை. எல்லாம் ஒரே வெள்ளையாக இருந்தது. வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் புகை புகையாய் வந்துகொண்டிருந்தது. இந்தப் பனி மூட்டத்தில் நடப்பது சிரமம் என்று தோன்றியதால் அன்றைக்கு பஸ்சிலேயே போய் விடலாம் என்று நிறுத்தத்தில் நின்ற போதுதான் ரகுவை சந்தித்தது...

பிறகு சந்திப்பு அடிக்கடி நிகழ்ந்தது. அனேகமாய் அவனைச் சந்தித்த இந்த ஒரு மாத காலத்தில் தினமுமே அவனைப் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கிறோம் என்று நினைத்தபோது ஆச்சரியமாக இருந்தது. ரவீந்திர பவன் புல்வெளியில் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். இடையில் தேசிய நாடகப் பள்ளி வாசலில் இருக்கும் டீக்கடையில் டீ. பிறகு அங்கிருந்து நடந்தே ரெஃப்யூஜி கேம்ப்புக்குப் போய் சாப்பாடு. அங்கேதான் தந்தூரி ரொட்டியும், சப்ஜியும் ருசியாகவும், மலிவாகவும் இருக்கும். சில நாட்களில் ரெஃப்யூஜி கேம்ப் வரை போகாமல் பெங்காலி மார்க்கெட்டிலேயே சோலே பட்டூரா சாப்பிட்டு விட்டு ஹாஸ்டல் வரை வருவார்கள். ஹாஸ்டல் வாசலில் நின்றுகொண்டே பேச்சு. கடைசியில் ரகுவுக்கு முனிர்க்கா போவதற்கு கடைசி பஸ்ஸுக்கான நேரம் வரும் வரை பேசி விட்டு அவசர அவசரமாக ஓடுவான்.

பேச்சு. பேச்சு. பேச்சு. என்ன பேசுவார்கள் என்றே தெரியவில்லை. சில நாட்களில் நடந்தே இண்டியா கேட் வரை சென்று அங்கே புல்வெளியில் அமர்ந்து ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக் கொண்டே பேச்சு. ஆனால், இண்டியா கேட்டில் சில பிரச்சினைகள். ஒன்று, போலீஸ் எட்டு மணிக்கு மேல் உட்கார விட மாட்டார்கள். இரண்டாவது, வேறு விதமான சிக்கல். ஒருநாள் அவர்கள் ஐஸ்க்ரீம் சாப்பிட்டுக் கொண்டே சோடியம் வெளிச்சத்தில் நடந்து சென்று கொண்டிருந்த போது அவர்களைக் கடந்து சென்ற இரண்டு பேரில் ஒருத்தன் "டேய் மச்சி, செம கட்டையைத் தள்ளிகிட்டுப் போறான் பார்" என்றான்.

"யோவ், என் தங்கச்சியா" என்று பதிலுக்குக் கத்தினான் ரகு.

"கோச்சுக்காத நைனா. நீ நம்ம ஆளுன்னு தெரியாம சொல்லிட்டேன். அதுக்காக நீ தங்கச்சினு சொல்லி காதுல பூ சுத்துறியே."

ரகுவும் நானும் சிரித்துக்கொண்டோம். "ஏன் அப்படிச் சொன்னாய்?" என்று கேட்டேன்.

"சும்மா தமாஷ்தான். இந்த இடத்தில் இரண்டே இரண்டைத்தான் சொல்ல முடியும். ஒன்று தங்கை, இல்லாவிட்டால் மனைவி. இரண்டாவதைச் சொன்னால் நீ சண்டைக்கு வந்துவிடுவாய் என்றுதான் அப்படிச் சொன்னேன்."

ரகு பல விஷயங்களில் வித்தியாசமானவனாக இருந்தான். சாப்பிட்டு விட்டு பணம் நான் தருகிறேன் என்று சொன்னால் உடனே சரி என்று சொல்லிவிடுவான். அனாவசியமாக அசடு வழிவதில்லை. மிகவும் வெளிப்படையாக இருந்தான். ஆனால், அவன் தன்னை அடிக்கடி ஒரு மார்க்சிஸ்ட் என்று சொல்லிக்கொண்டதுதான் வினோதமாக இருந்தது. மார்க்சிஸ்ட் என்றால் இப்படித்தான் 'லோட்டோ' ஷூவும், லீவைஸ் ஜீன்சுமாகப் போட்டுக்கொண்டு ஆபிசில் வேலை பார்ப்பார்களா?

"பிறகென்ன? என்னை குர்த்தா போட்டுக்கொண்டு தாடியும், பீடியுமாக அலையச் சொல்கிறாயா? அதெல்லாம் ஜே.என்.யு. மார்க்சிசம். என்னால் அது முடியாது. மேலும் நான் ஒரு

'ஆக்டிவிஸ்ட்' அல்ல. மார்க்சிசம் மீது நம்பிக்கை இருக்கிறது. அவ்வளவுதான்!" என்று தயாராக பதில் சொல்வான்.

சில நாட்கள் ஹாஸ்டலில் இருந்து பிரகதி மைதான் போவோம். பிரகதி மைதான் ஒரு அருமையான இடம். மல்லிகைக் கொடி காட்டைப் போல் பெருகி அடர்ந்திருக்கும். கூடை கூடையாய் பூத்திருக்கும் மல்லிகை. இங்கு யாரும் இதைத் திரும்பிப் பார்க்க மாட்டார்கள். இங்கு யாரும் பூ வைத்துக் கொள்வதில்லை. நான் போய் பூக்களைப் பறித்துக் கொண்டிருக்கும்போது ரகுவும் சேர்ந்து வந்து பறிப்பான்.

**இதுவரை இந்தக் கதையைப் பொறுமையாகப் படித்து வந்த வாசகரே! கதையை ஆரம்பித்துவிட்டேனே தவிர எப்படி முடிப்பது என்று தெரியவில்லை. ஒரு கதை என்றால் அதன் முடிவு எதிர்பாராத விதமாக இருக்க வேண்டும். உதாரணமாக ரகுவுக்கு வேறோர் இடத்தில் திருமணமாக வேண்டும். இல்லாவிட்டால் அவனுக்குக் குறைந்தபட்சம் வேற்றூருக்காவது மாற்றலாகி அவன் காஞ்சனாவை மறக்க வேண்டும் அல்லது காஞ்சனா ஒரு பணக்கார வாலிபனை மணந்து கொண்டு ரகுவை மறக்க வேண்டும். அல்லது காஞ் சனாவிடம், "நான் உன்னைக் காதலிப்பதாக என்றைக்குமே சொன்னதில்லையே? நாம் காதலர்களாக அல்ல-என்றைக்கும் இனிய சினேகிதர்களாகவே இருப்போம்" என்று ரகு டயலாக் பேசி அவள் மனதை உடைக்க வேண்டும். இப்படியெல்லாம் நடந்தால்தான் இது ஒரு நல்ல கதை.**

**ஆனால், என்ன செய்வது? கதையைப் போலவே நிஜ வாழ்வில் நடக்காமல் போவதாலும், அந்த ரகு வேறு யாருமல்ல - நான்தான் என்பதாலும், என்னதான் இருந்தாலும் கதையின் பொருட்டு, நடந்ததை வேறொன்றாக மாற்றிச் சொல்லி என்னை ஏமாற்றிக்கொள்ளக் கூடாது என்பதாலும் நடந்ததைச் சொல்லி விடுகிறேன்.**

**ஒருநாள் பிரகதி மைதானில் கை நிறைய மல்லிகைப் பூக்களைப் பறித்து காஞ்சனாவின் கையில் கொடுத்து அவளது இரண்டு கரங்களையும் பற்றி, "இந்தக் கணம் என் வாழ்க்கையின் மிக முக்கியமான கணம்; இப்படி உனக்காக மல்லிகைப் பூக்களை பறிப்பதை விட மார்க்சிசம் கூட எனக்குப் பெரிதல்ல" என்று**

சொன்னான் ரகு. திருமணத்துக்குப் பிறகு ரகுவுக்கும் காஞ்சனாவுக்கும் அன்பையும் சிநேகத்தையும் பற்றி நினைக்க நேரமில்லாமல் போயிற்று. ரேஷன் கார்டும் மண்ணெண்ணை க்யூவும் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டன. காஞ்சனாவுக்கு சமையலையும் கவனித்துக்கொண்டு ஆபீசுக்கும் சென்று வருவது நரகமாகத் தோன்றியது. அதிகாலையில் பால் பூத்துக்கு எதிரே முக்கால் மணி நேரம் க்யூவில் நின்று பால் வாங்கும் லட்சக்கணக்கான டில்லிவாசிகளுள் ஒருத்தானாக முகமற்றுப் போனான் ரகு.

தினமலர் - கதைமலர்
ஜனவரி. 1993

## பாக்தாத் பேரழகி (அல்லது)
## இட்லி மிளகாய்ப்பொடி செய்வது எப்படி?

"நீங்கள் ஏன் இப்போதெல்லாம் சிறுகதையே எழுதுவதில்லை?"

நண்பர்களிடமிருந்து அடிக்கடி நான் எதிர்கொள்ளும் கேள்வி இது.

'இது என்ன முட்டாள்தனமான கேள்வி?' என்று மனதில் தோன்றும். ஆனால் மனதில் தோன்றுவதையெல்லாம் வெளியே சொல்லி விடுகிறோமா என்ன?

*ராஸ லீலா*வில் வரும் நூறு அத்தியாயங்களையும் நூறு சிறுகதைகளாக எடுத்துக்கொள்ள வேண்டியதுதானே? சிறுகதை என்று தனியாக ஒன்றை எழுத வேண்டுமா என்ன?

மேலும், என்னைப் பொறுத்தவரை ஒரு சிறுகதை எழுத வேண்டுமானால் அது என் கையில் இல்லை. அச்சிறுகதை என் கனவில் வர வேண்டும். ஆக, கடந்த ஐந்தாண்டுகளாக நான் சிறுகதை எழுதவில்லை என்றால் கடந்த ஐந்தாண்டுகளாக

எனக்குக் கனவே வரவில்லை என்றுதான் பொருள்.

ஆனால், கனவில் வரும் கதை என்பதற்காக ஒருவிதமான ஸர்ரியல் தன்மை கொண்டதாகவோ, நனவுலகிலிருந்து விலகி வெகு தொலைவில் சஞ்சரிக்கும் ஒன்று என்பதாகவோ தயவு கூர்ந்து நினைத்து விடாதீர்கள். மிகச் சாதாரணமான, எவ்வித அர்த்த முக்கியத்துவமும் இல்லாத அன்றாட வாழ்க்கைச் சம்பவங்கள்தான் கனவில் வரும். ஆனால் பன்றிகூட குட்டியாக இருக்கும்போது அழகாகத்தான் இருக்கும் என்றபடி என்னதான் அன்றாட வாழ்க்கைச் சம்பவமாக இருந்தாலும், அது கனவில் வரும்போது வேறொரு சௌந்தர்ய ரூபத்தைக் கொண்டு விடுகிறது. பால் நெய்யாக மாறும்போது எத்தனை ஊடக மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதை யோசித்துப் பாருங்கள்.

பால் - மோர் - வெண்ணெய் - நெய்.

அதேதான் இங்கேயும். கீழ்க்காணும் சமன்பாட்டை கவனியுங்கள்:

அன்றாட சம்பவம்

(நிகழ்வு)

↓

கனவு

↓

கதை

இவ்வளவுக்குப் பிறகும் என் கதை தட்டையாக இருக்கிறது என்றால், கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். வேறு என்ன செய்வது? இவ்வளவு சுற்றுப்புறச் சீரழிவிற்குப் பிறகும் வற்றாத ஜீவநதியைப் போல் இந்த சரீரத்திலிருந்து சுக்கில நீரைப் பெருக்கெடுத்து ஓட வைத்த இறைவன் கல்பனா சக்தியை மட்டும் வறண்ட பூமியாகப் படைத்துவிட்டானே, என்ன செய்வது? சே... இதற்குக்கூட இந்த உதாரணம்தானா என்று அலுத்துக் கொள்வான் அலெக்ஸ்.

ஆனால் எனக்கு இது ஒரு தீராத பிரச்சினை. பிறகென்ன? போகம் செய்ய ஸ்த்ரீகள் கிடைக்காத அத்தனை தினங்களிலும் சுயபோகம் செய்தாக வேண்டியிருக்கிறது. சமயங்களில், இரண்டு முறை. அந்த சுக்கில நாயை[1] வெளியேற்றினால்தான் மனம் லகுவாகிறது. இல்லாவிட்டால் அது தேன்கூட்டைச் சுற்றி வரும் தேனீக்களாகத் தொடர்ந்து இடைவிடாமல் ரீங்கரித்துக் கொண்டே இருக்கும். நாயை வெளியேற்றத் தவறினால் ரீங்காரம் அதிகமாகி அதுவே நம்மை அதிகாரம் செய்ய ஆரம்பித்து விடும். இந்த சூட்சுமத்தைச் சரிவர அவதானிக்காதவர்களே பாலியல் குற்றங்களில் ஈடுபடத் துவங்கி விடுகின்றனர்.

ஸ்திரீகள் கிடைக்காத தினம் என்றா கூறினேன்? தவறு. அது ஒரு இலக்கணப் பிழை. எங்கே, உங்களுடைய நடுவிரலையும் கட்டை விரலையும் கொண்டு ஒரு சொடக்கு போடுங்கள். அடுத்த நிமிடம் உங்கள் கண்ணெதிரே நிற்பாள் ஒரு மொராக்கோ தேசத்து தேவதை.

அவள் பெயர் என்ன? ம்... பொறுங்கள்... யெஸ். ஞாபகம் வந்துவிட்டது. ஸமீரா. பாக்தாத் பேரழகிகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? தமிழ்ப்படம் இல்லை ஐயா! ஆயிரத்தோரு அராபிய இரவுகளில் வரும் பாக்தாத் பேரழகிகளைச் சொல்கிறேன். அப்பேர்ப்பட்ட ஒரு அராபிய அழகி ஸமீரா.

தொழில்: காசு கொடுப்பவருக்குக் காதலியாக இருப்பது.

(கிழக்கு ஐரோப்பிய நாடுகள், ரஷ்யா, மொராக்கோ போன்ற தேசங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான பெண்கள் இந்தக் காதலை தங்கள் தொழிலாக ஏற்றுக்கொண்டு கிளம்பி யிருக்கிறார்கள். உலகளாவிய காதல்!)

ரூ. 25,000/- கொடுத்தால் உங்களை நிழலைப் போல் பின் தொடர்வாள் ஒரு மொராக்கோ தேசத்து தேவதை. டிஸ்கோவுக்குப் போகலாம்; தண்ணியடிக்கலாம்; சே, ஆதார விஷயத்தை விட்டு விட்டு வேறு ஏதேதோ சொல்லுகிறேன்; போதும் போதும்

1. பேய் என்றுதான் வந்திருக்க வேண்டும். இருந்தாலும் லயம் கருதி நாய் என்று குறிப்பிடுகின்றேன்.

என்று போகம் பண்ணலாம். இரண்டு மூன்று தினங்கள். முதல் தடவைதான் 25,000. அடுத்தடுத்த தடவைகளில் 15,000தான். ஒருமுறை பழகிவிட்டால் ஏஜெண்டுக்குக்[2] கிடைத்துவிடுகிறதே, அப்புறமென்ன?

என்ன, ஏதோ ப்ராத்தல் ஹவுஸ் விளம்பரம் மாதிரி தெரிகிறதா? வாழ்க்கை ஐயா வாழ்க்கை...

ஒரே ஒரு விஷயம் சொல்கிறேன், கேளுங்கள். மனிதனுக்கு பசி என்ற ஒரு உணர்வு இல்லையென்றால், வாழ்க்கை எப்படி இருக்கும்? இந்தக் கதையைப் படிப்பதை நிறுத்திவிட்டுக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

உலக வாழ்க்கையே ஸ்தம்பித்துவிடும்... பால் கிடைக்காது; சோறு கிடைக்காது; தண்ணீர் கிடைக்காது; வீடு, கட்டிடம், ஆஸ்பத்திரி, ஆகாய விமானம், ரயில், பஸ், கார், சட்டைத் துணிமணி, ரேடியோ, டிவி, காகிதம், கதை, பத்திரிகை, அரசியல், கலாச்சாரம், கடவுள்... எதுவுமே இருக்காது.

காட்டில் கூட வாழ முடியாது. பசி இல்லையென்றால் நீங்கள் விலங்குகளைக் கூட வேட்டையாட வேண்டிய அவசியமிருக்காதே?

மனித இனமே தற்கொலை செய்துகொண்டு மடிந்து போகும். பசிக்கே இத்தனை வலிமை இருக்கிறதென்றால், காமத்தைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? சென்ற மாதம்தான் ஸமீராவோடு அறிமுகம். வழக்கமாக நாங்கள் கூடும் டீக்கடை[3].

நான். பாலு என்கிற பாஸ்கர் அய்யேயெஸ். நிக்கி. ரவி.

---

2. மாமா, பிம்ப், விபச்சாரம் போன்ற வார்த்தைகளை அகராதியிலிருந்து ஒழித்து விடவேண்டும் என்ற கருத்து உடையவன் நான். ஆனால் சில உயர்மட்ட பாலியல் தொழிலாளிகள் தம்மிடம் வரும் வாடிக்கையாளர்கள் தங்களுடன் அந்தரங்கமாக இருப்பதை கைத்தொலைபேசியில் படம் பிடித்து வைத்துக்கொண்டு 10 கோடி கொடு, 20 கோடி கொடு என்று மிரட்டும்போது என்னுடைய முற்போக்கு சிந்தனை அடிபட்டுப் போகிறது.

3. டீக்கடை: சென்னையிலுள்ள ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலிலுள்ள பார். இதையே நாங்கள் செல்லமாக டீக்கடை என்று அழைப்பது வழக்கம்.

(இதில், நிக்கி தவிர மற்ற பெயர்களெல்லாம் ராஸ லீலாவிலேயே அறிமுகமானவை. இதுதான் சிறுகதையில் பிரச்சினை. இவர்களையெல்லாம் இங்கே நான் மீண்டும் அறிமுகப்படுத்தியாக வேண்டும். ம்ஹூம். அதை நான் செய்யப்போவதில்லை. பாலு என்கிற பாஸ்கர் அய்யேயெஸ் என்ற பெயர் மட்டும் சற்றே மாறுதலுக்கு உட்பட்டிருக்கிறது. அவனுடைய தற்போதைய பெயர்: கேக்கஸ் பாலு. இதில் 'கேக்கஸ்' என்பது கக்கூஸ் என்ற சொல்லின் பிருத்தானிய மரூஉ. காந்தி என்ற பெயர் கேண்டி என்று பிரிட்டிஷ்காரர்களால் அழைக்கப்பட்டதை நினைவு கூர்க. பாலு கக்கூஸுக்குப் போனால் வெளியே வர முக்கால் மணி நேரம் ஆவதால் இந்தப் பெயர்.)

ரவிதான் ஸமீராவை அழைத்து வந்தான். ஸமீரா, பாலுவை விட ஆங்கிலத்தில் தேர்ச்சி கொண்டவளாக இருந்தாள்.

Oh God!
My name is Samira.
This is good.
This is no good.
I like beer.
I no like whisky.

மொத்தமாக ஒரு 50 வார்த்தைகள் இருக்கலாம். எனக்கு ஒரு 50 அரபி வார்த்தைகள் தெரியும் என்பதால் அதை வைத்து அவளைக் கவர்வதற்கு முயற்சி செய்துகொண்டிருந்தேன்.

"அல் கூப்ஸ் என்றால் ப்ரெட்தானே?"

கண்களில் ஆச்சரியம் பொங்க "யேஸ்" என்றாள்.

"அல் ஹம்பி என்றால் ந்யூட்தானே?"

மீண்டும் கண்களில் ஆச்சரியம் பொங்க "யேஸ்" என்றாள்.

ம்ஹூம். ஆட்டத்தில் எங்கோ தவறு இருக்கிறது. இப்படியே போனால் 50 கேள்விகளோடு ஆட்டம் முடிந்துவிடும் என்பதால் வேறு விதமாக ஆரம்பித்தேன்.

நான் மொராக்கோ சம்பந்தமாக சுமார் ஐந்து ஆண்டு காலம் தீவிரமாகப் படித்திருந்தேன் என்ற வகையில் அவளிடம் பல சம்பாஷணைகளை உருவாக்கினேன்.

"நீங்கள் எந்த ஊர்?"

(காஸா ப்ளாங்க்கா)

"ரபாத் சென்றிருக்கிறீர்களா?"

"அல் கூப்ஸ் அல் ஹாஃபி நாவலை எழுதிய முகமத் ஷுக்ரி பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

"உங்கள் பெயரில் ஒரு எகிப்தியப் பாடகி இருக்கிறாரே... அவர் பாடல்கள் உங்களுக்குப் பிடிக்குமா?"

"ரய் இசை கேட்பதுண்டா?"

(Oh God! I like!)

"எந்தப் பாடகரை மிகவும் பிடிக்கும்?"

(ஷாப் பிலால்)

"எனக்குப் பிடித்தவர் ஷாப் ஹாஸ்னி."

(Oh God! He very good!)

இந்த இடத்தில் பாலு குறுக்கிட்டான்.

"No calling God. See time. 3 O'clock. 1 O'clock God eating. sleeping. 4 O'clock get up. Now no disturb God."

'கெட் அப்' என்று சொன்னபோது ஆள்காட்டி விரலை புருவத்தின் மீதும், கட்டை விரலை கண்ணின் கீழேயும் வைத்துக் கண்ணை அகலப்படுத்தி, அகலப்படுத்திக் காண்பித்தான் பாலு.

பியரைக் குடித்துக்கொண்டிருந்தவள், சிரித்ததால் புரையேறி, அவள் உதவிக்கு நானும் பாலுவும் சென்று, என்னென்னவோ

ரகளையாகி விட்டது. சுமார் 10 நிமிடம் சிரித்துக்கொண்டே யிருந்தாள்.

மொத்த பாரும் எங்களையே பொறாமையால் எரித்துக் கொண்டிருந்தது. இந்த நேரத்தில் தன் இருக்கையை விட்டு எழுந்த பாலு, ஸமீராவின் பக்கவாட்டில் போய் நின்றுகொண்டான்.

"என்ன விஷயம்?" என்று கேட்டதற்கு "அண்ணி விழுந்து விழுந்து சிரிக்கும்போது அவளுடைய இடுப்பு தெரிகிறது. அதை பாரில் உள்ள அத்தனை பேரும் வெறித்துப் பார்க்கிறார்கள். அதை மறைத்துக் கொண்டு நிற்கிறேன்" என்றான்.

ஒரு நாகரிகம் கருதியே பாலு 'இடுப்பு' என்று சொல்லி யிருக்க வேண்டும். மற்றபடி இந்தக் காலத்து மோஸ்தருக்கு ஏற்ப ஸமீரா தன் ஜீன்ஸை தொப்புளுக்குக் கீழே சரியாக ஒரு சாண் விட்டு அணிந்து கொண்டிருந்ததால், தெரிந்தது இடுப்பு அல்ல; அவளுடைய புட்டம்தான் அப்பட்டமாகக் காட்சியளித்துக்கொண்டிருந்தது.

"அது சரி, அது என்னடா அண்ணி?" என்று கேட்டதற்கு "ரவி அண்ணனின் தோழி எனக்கு அண்ணிதானே?" என்று எதிர்க்கேள்வி போட்டான் பாலு.

பொதுவாக மதியம் 12.30க்குச் செல்லும் நாங்கள் 3 மணிக்கு டீக்கடையிலிருந்து கிளம்பிவிடுவோம். அன்று 4 மணியாகியும் கிளம்பும் எண்ணமே தோன்றவில்லை. விட்டால் அண்ணி, அண்ணி என்று சொல்லி பாலுவே ஸமீராவைக் கவிழ்த்து விடுவான் போலிருந்தது. அந்த 'Eating, Sleeping' மேட்டருக்குப் பிறகு பாலுவும், ஸமீராவும் ரொம்பவும் அந்நியோன்னியமாகி விட்டது போல் தோன்றியது. அந்த நேரத்தில் ரவி "ஒரு சின்ன வேலை; வந்துவிடுகிறேன்" என்று சொல்லி கையோடு ஸமீராவையும் அழைத்துக்கொண்டு கிளம்பினான்.

ஸ்காட்ச் எத்தனை சுற்று சென்றது என்ற கணக்கே மறந்துபோனது.

அது ஒரு மொராக்கோ தினம்!

பாலுவுக்கு மொராக்கோ எங்கே இருக்கிறது என்ற பூகோள அறிவை ஊட்டுவதற்கான கடமை நிக்கியிடம் வந்து சேர்ந்தது.

சத்யாவிடம் (மேனேஜர்) சொல்லி அட்லஸை எடுத்து வரச் செய்தோம். இரண்டு பேர் சேர்ந்து தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டுவந்தார்கள்.

நிக்கி, நான், பாலு மூன்று பேரும் மொராக்காவுக்குள் மூழ்கினோம்.

மொராக்கோ இலக்கியம் பற்றி நீண்டதொரு லெக்சர் கொடுக்க ஆரம்பித்தேன். பாலுவும், நிக்கியும் 'ஒன்றுக்கு வருகிறது' என்று சொல்லி நழுவினார்கள்.

ஆறு மணி அளவில் ரவியும், ஸமீராவும் திரும்பினார்கள். குளித்து, ஆடை மாற்றி ஃப்ரெஷ்ஷாகத் தெரிந்தார்கள் என்பதை நாங்கள் மூவரும் சாடையாக கவனித்து வைத்துக் கொண்டோம்.

இப்போதும் ஸமீராவுடன் தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறோம். மொராக்கோவுக்கு வரச் சொல்லி அழைத்துக் கொண்டிருக்கிறாள் – குறிப்பாக பாலுவை.

பாருங்கள், ஒரு தவறு நடந்து விட்டது. இந்தக் கதைக்கும் ஸமீராவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றாலும் இந்த விஷயமே இத்தனை பக்கங்களை விழுங்கி விட்டது. இதனால்தான் நான் சிறுகதையின் பக்கமே தலை வைத்துப் படுப்பதில்லை. அதற்குத்தான் போர்ஹேஸ் மாதிரி ஆட்கள் இருக்கிறார்களே...

ஸமீரா வந்துவிட்டுப் போன பிறகு - யார் கண்பட்டதோ தெரியவில்லை - நிக்கிக்கு ஒரு பிரச்சினை ஆகிப் போனது.

யெஸ். இப்போதுதான் கதை துவங்குகிறது. அலெக்ஸ் அடிக்கடி சொல்லுவான், "இந்த நாட்டில் யாருக்கு, எப்போது, என்ன நடக்கும் என்று யாருமே சொல்ல முடியாது" என்று.

பாருங்களேன்... முன்பெல்லாம் "தோழர் யு.ஜி.ல இருக்கார்" என்ற ஒரு வாக்கியத்தைக் கேட்டால் 'ஒரு புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்த தோழர் அன்டர் க்ரௌண்டில் இருக்கிறார்' என்றுதானே அர்த்தப்படுத்திக்கொள்வோம்?

ஆனால் இப்போது?

ஒரு கோடீஸ்வரனான நிக்கியும் சில தினங்கள் தலைமறைவாக வாழும்படி நேர்ந்தது.

ராஸ லீலாவில் நிக்கியின் பெயர் வேறு. இப்போது நாமகரணத்தை மாற்றியதன் காரணம்: தமிழக அரசியலில் நடந்த ஒரு திடீர்த் திருப்பம். அதன் காரணமாக ஒரு மந்திரிக்கும் நிக்கிக்கும் பனிப்போர் ஒன்று தொடங்கியது. மந்திரியைத் தாக்க ஆரம்பித்தான் நிக்கி.

புழுதானே என்று அதை ரொம்பவும் நசுக்கினீர்களானால் - அது புழுவாகவே இருந்தாலும் வாலைத் தூக்கி எதிர்க்கும் அல்லவா? இந்தப் புழு வாலைத் தூக்கிக் கொண்டு நிக்கியின் காதுக்குள் புகுந்துவிட்டது.

திடீரென்று நிக்கியின் புகைப்படம் தமிழர்களிடையே பிரபலமா யிற்று.

சுமார் 20 ஆண்டுகளாக தன்னை அடையாளம் தெரியாதவனாக வைத்துக்கொண்டிருந்தவன் நிக்கி. ஒரே கணத்தில் அந்தக் கண்ணாடி மாளிகை உடைந்து நொறுங்கியது.

காரணம்: ஒரு பெண். அந்தப் பெண்ணுக்கும் நிக்கிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று எனக்குத் தெரியும். ஊருக்குத் தெரியுமா!

இந்த இடத்தில் இன்னொரு விஷயம்: "அந்த மொராக்கோ பேரழகியிடம் நீ ஏன் ஈடுபாடு காட்டவில்லை?" என்று நிக்கியிடம் கேட்டபோது "அவன், அவன் வேலையைப் பாக்குறான்; நாம், நம்ம வேலையப் பாப்போம்" என்று சொல்லியபடி *சரஃபோஜி மகாராஜாவின் நளபாகக் குறிப்புகள்* என்ற புத்தகத்திலிருந்த சில

அய்ட்டங்களை எனக்குப் படித்துக் காண்பிக்க ஆரம்பித்தான்.

அப்பேர்ப்பட்ட நிக்கி, குறுஞ்செய்தி அனுப்பி தன்னை ஈவ் டீஸிங் செய்வதாக போலீஸில் புகார் செய்துவிட்டார் அந்தப் பெண். ('ர்'-க்குப் பதிலாக 'ள்' என்று போட்டு என்னை வம்பில் மாட்டி வைத்துவிடாதீர்கள் சாமிகளா!)

ஊடகங்கள் மூலமாக உலகெங்கும் பரவியது அச்செய்தி. அமெரிக்கா வாழ் தமிழர்களே சுமார் 100 பேர் எனக்கு போன் போட்டு இது பற்றி எழுதுமாறு வேண்டினார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஒருவர் அழுதே விட்டார். நிக்கி ஒன்றும் அவருக்குச் சொந்தக்காரன் அல்ல. ஆனாலும் என் கதாபாத்திரமாக அவருக்கு அறிமுகமானவன்.

நிக்கி தலைமறைவாகிவிட்டான். அந்த நிலையிலும் என்னை வேறொரு எண் மூலமாகத் தொடர்பு கொண்டு ஒரு விஷயத்தைச் சொன்னான்.

"சனிக்கிழமையன்று உன் நண்பன் மித்திரனை நேர்முகத் தேர்வுக்கு வரச் சொல்லியிருந்தேன். தயவுசெய்து அவரைச் சந்திக்க முடியாத நிலையில் இருக்கிறேன், தவறாக நினைக்க வேண்டாம் என்று சொல்லி விடு."

ஐயா, நான் ஸ்த்ரீலோலன்தான்; ஆனால் இந்த உலகில் யார்தான் ஸ்த்ரீலோலன் இல்லை என்று தயவு செய்து எனக்குச் சொல்லுங்கள்.

விவிலியத்தில் என்ன சொல்லியிருக்கிறது. அடுத்த ஸ்த்ரீயை கண் கொண்டு நோக்கினாலே அது விபச்சாரம். இல்லையா?

இந்த விவகாரத்தைப் பற்றி நினைக்கும் போது எனக்கு ஒரு ஜென் கதை ஞாபகம் வருகிறது. அக்கதை பின்வருமாறு:

## அப்படியா?

ஒரு ஊரில் ஒரு ஜென் துறவி இருந்தார். அதே ஊரில் ஒரு இளம் பெண்ணும் இருந்தாள். பணக்கார வீட்டுப் பெண். திருமணமாகாத அந்தப் பெண் கர்ப்பவதியாக இருப்பதை அறிந்த

அவள் பெற்றோர் "யாரடி அவன்?" எனக் கேட்க அவள் துறவியைக் கை காட்டினாள். அதிர்ச்சியடைந்த பெற்றோரும் உற்றோரும் துறவியிடம் சென்று விஷயத்தைக் கூற அவர் "அப்படியா?" எனக் கேட்டார்.

பெண்ணுக்குக் குழந்தை பிறந்தது. குழந்தையைக் கொண்டு போய் துறவியிடம் கொடுத்தனர் பெற்றோர். அவரும் அக்குழந்தையைக் கண்ணே போல் கருதி வளர்த்து வந்தார்.

சில ஆண்டுகள் சென்று அப்பெண்ணின் மனசாட்சி உறுத்தியது. பெற்றோரிடம் சென்று உண்மையைக் கூறினாள். குழந்தைக்குத் தகப்பன் வேறொருவன். அதிர்ச்சியடைந்த பெற்றோர் துறவியிடம் சென்று விஷயத்தைக் கூறி குழந்தையைத் திருப்பிக் கேட்டனர்.

அதற்கும் துறவி "அப்படியா?" என்று கேட்டபடி குழந்தையை அவர்களிடம் கொடுத்தார்.

நிக்கி தலைமறைவாக இருந்தபோது என்னுடைய தொலைபேசியும் உளவுத்துறையின் கண்காணிப்பில் இருந்ததெனத் தெரிந்தது. அப்போது ஒரு நாள் என்னைத் தொடர்பு கொண்ட அலெக்ஸ், "என்ன ஒரு துரதிர்ஷ்டம் பார் உனக்கு" என்றான். "என்ன?" என்றேன். "எழுதியவனை விட்டு விட்டு அவனுடைய கதாபாத்திரத்தைத் துரத்திக் கொண்டிருக்கிறார்களே, என்ன ஒரு irony!"

அதாவது, இவ்வளவும் எனக்கு நடந்திருந்தால் at least இந்நேரம் என்னுடைய நாவலாவது பல்லாயிரம் பிரதிகள் விற்றிருக்குமாம்!

உண்மைதான். அப்படி ஒரு எதிர்பார்ப்பு இருந்ததால்தான் நானும் வெளியூர் செல்லும்போதெல்லாம் 6' x 6' அறையில் தங்கி, பொது கக்கூஸில் மலஜலம் கழித்து, மின்விசிறி இல்லாமல் தூங்கி எப்படியெப்படியோ ட்ரெய்னிங் எடுத்துக்கொண்டிருந்தேன். எல்லாம் வீணாயிற்று.

பாருங்கள். இன்னமும் இந்தக் கதை மெய்ன் கதைக்கு

வராமல் உபகதைகளிலேயே உலவிக் கொண்டிருக்கிறது. இதோ வந்துவிட்டேன்...

தலைமறைவு வாழ்விலிருந்து மீண்ட நிக்கியை முந்தா நாள் மதியம் டீக்கடையில் வழக்கம் போல் சந்தித்தேன்.

அன்றைய தினம் நானும் நிக்கியும்தான். தனியாகப் பேசி நாளா யிற்று என்பதால் இருவரும் மட்டுமே சந்தித்தோம்.

டீக்கடையில் எங்களுடைய இருக்கையில் - நாங்கள் வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி - எப்போதும் 'Reserved' என்ற அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டிருக்கும். அன்றைய தினம் எங்கள் இருக்கையின் பக்கத்தில் இருந்தவர்கள் டாஸ்மாக் பாரில் இருப்பது போல் உரக்கக் கத்திக்கொண்டிருந்ததால் "இனிமேல் இந்த வரிசை முழுவதுமே Reserved பலகையை வைத்துவிடுங்கள்" என்று சத்யாவிடம் கூறினான் நிக்கி.

அந்த பார் 'ட'வைத் திருப்பிப் போட்டது போல் இருக்கும். எனவே ஒரு வரிசை எங்களுக்கு. மற்றொரு நீள் வரிசை, டாஸ்மாக் பாரில் இருப்பது போல் உரக்கக் கத்திக் கொண்டிருப்பவர்களுக்கு.

இப்போது கதையின் க்ளைமாக்ஸுக்கு வந்துவிட்டோம்.

எனக்குக் கேரளத்துச் சிகப்பு அரிசி (உனக்கலரி) தான் பிடிக்கும் என்பதால் அந்த அரிசியை சென்னைக்கு அனுப்பி வைக்கும்படி ஏற்பாடு செய்தான் நிக்கி.

அடுத்து, உனக்கலரியைச் சமைப்பதற்கு சில டிப்ஸையும் தந்தான்.

அந்த அரிசியை நாம் சமைப்பது போல் குக்கரில் வைத்து அவிக்கக் கூடாது. அதற்கென்று கும்மட்டி அடுப்பு இருக்கிறது. Cast ironஆல் (தேன் இரும்பு) செய்தது. இதில் நிலக்கரியைப் போடக் கூடாது. மரக்கரிதான் போடவேண்டும். அதைப் பற்ற வைப்பதற்கு உதவக் கூடியது, தேங்காய் சௌரி. வெண்கலப் பானையில்தான் உனக்கலரியை உலை வைக்க வேண்டும். பிறகு வடித்துவிட்டு மத்தி மீன் குழம்பு ஊற்றிச் சாப்பிட்டால்... வர்ணனை வேண்டாம். சாப்பிட்டுப் பாருங்கள்.

எனக்குக் கும்மட்டி அடுப்பு என்றால் புரியவில்லை. "அண்ணாச்சி அடிக்கடி சொல்வாரே, கேள்விப்பட்டதில்லை?"

"என்ன?"

"கூதிக்கும் கும்மட்டி அடுப்புக்கும் வித்தியாசம் தெரியாத பய!"

எங்கள் குழுவைச் சேர்ந்த நார்பர்ட் என்பவனைத்தான் அண்ணாச்சி அப்படிக் குறிப்பிடுவார். அவர் சொல்வதன் அர்த்தம் விளங்குகிறதா, இல்லையா?

சரி, விளங்காதவர்களுக்கு இது:

மேலே குறிப்பிட்ட இரண்டு அயிட்டங்களுமே தீக்கங்குகளாக இருக்கும் என்பதால் நார்பர்ட் கூதி என்று நினைத்துக்கொண்டு கும்மட்டி அடுப்பில் ஆணுறுப்பை விட்டு விடுவானாம்! அதாவது, போதை அதிகமாகிவிட்டால் நார்பர்ட்டுக்கு ஏற்படும் தடுமாற்றத்தையே அண்ணாச்சி இத்தனை வடிவாகக் குறிப்பிடுவார். ஆனால் இவ்வளவு விளக்கியும் எனக்குக் கும்மட்டி அடுப்பு பற்றி விளங்காததால் நிக்கி அதைப் படமாகவே வரைந்து காண்பித்தான்:




கும்மட்டி அடுப்பு, வெண்கலப் பானை, மரக்கரி, தேங்காய் சௌரி எல்லாவற்றையும் என்னிடம் சேர்ப்பித்து விடும்படி தன் உதவியாளர்களிடம் உத்தரவிட்டான் நிக்கி.

அடுத்து, இட்லி மிளகாய்ப் பொடி செய்வது எப்படி என்ற வினா அடியேனால் முன் வைக்கப்பட்டது. தன் தெலுங்குத்

தோழிக்கு போன் போட்டான் நிக்கி. அவள் கூறிய செய்முறை பின் வருமாறு:

மிளகாய், கடலைப் பருப்பு, துவரம் பருப்பு, சீரகம், தனியா, கறி வேப்பிலை – இது அவ்வளவையும் எண்ணெய் லேசாக விட்டு (Shallow fry) வறுத்துக்கொள்ள வேண்டும். பிறகு சூடு ஆறியதும், அதை மிக்ஸியில் போட்டு அடித்து, அத்துடன் புளி, பூண்டு ஆகியவற்றையும் சேர்த்து மீண்டும் ஒருமுறை அடித்தால் இட்லி மிளகாய்ப் பொடி ரெடி!

## அனுபந்தம்-1

இந்தக் குறிப்பிட்ட விஷயத்தை கதையின் இண்டு இடுக்கில் எப்படியாவது சேர்த்து விட வேண்டும் என்று பார்த்தேன். முடியவில்லை என்பதால் இங்கே அனுபந்தமாக வருகிறது.

நிக்கி தலைமறைவாக இருந்த காலகட்டத்தில் மீண்டும் ஒரு மொராக்கோ தேசத்துப் பேரழகி வந்தாள். இந்த முறை அழைத்து வந்தவன் வேறொரு நண்பன். எங்கள் குழுவைச் சேர்ந்த அத்தனை பேருமே 'நிக்கிக்குக் கம்பெனி கொடுக்கிறோம்' என்று சொல்லி அவனையே தொற்றிக்கொண்டு அவன் கூடவே தலைமறைவாகி விட்டிருந்தனர்.

இந்தப் பேரழகிக்கு நன்றாக ஆங்கிலம் தெரிந்திருந்தது. அன்றைய தினம் பேரழகியுடன் சென்ற நண்பர் பெயர் சேகர். அவருக்கு தினமும் முதுகு தேய்த்துவிடுவது அவரது சகதர்மிணி. அந்த மொராக்கோ பேரழகியுடன் சென்ற மறுநாள், வழக்கம் போல் குளியலறையில் அமர்ந்திருக்கிறார் சேகர். அவருக்காக வெந்நீரைப் போட்டு எடுத்துக்கொண்டு அவரது சகதர்மிணி, அப்படியே அந்த வெந்நீரை அவர் முதுகில் ஊற்றிவிட்டாராம். இப்போது சேகர் முதுகில் காயத்துடன் மருத்துவமனையில் இருக்கிறார்.

சேகரின் சகதர்மிணி அவர் முதுகில் வெந்நீரைக் கொட்டியதன் காரணம் என்ன தெரியுமா? சேகர் எப்போதும் வெள்ளை ஜட்டிதான் அணிவார். ஆனால், அன்றைய தினம் அவர்

அணிந்திருந்தது ஜட்டி அல்ல. பெண்கள் அணியும் பேண்டீஸ். அதுவும் ரோஸ் நிறம்!

## அனுபந்தம்-2

கதையை எழுதி முடித்த பிறகு, அதை எடிட் செய்வதற்காக 'நிக்கியை மீண்டும் டீக்கடையில் சந்தித்தேன். அப்போது இட்லி மிளகாய்ப்பொடி பற்றிய வேறொரு தகவலையும் கூறினான் அவன்.

திருநெல்வேலிச் சீமையில் சைவப் பிள்ளைமார் சமூகத்தில் இட்லி மிளகாய்ப்பொடி செய்வதே அரியதொரு சடங்காக நடைபெறுவது வழக்கமாம். வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு சாவகாசமாக மூன்று மணி அளவில் மிளகாய்ப் பொடிக்குத் தேவையான விஷயங்களை வறுத்து எடுத்து கல்லுரலில் இட்டு உலக்கையால் இடிப்பார்கள். அநேகமாக இதைச் செய்வது, வீட்டிலிருக்கும் வயதான கைம்பெண்கள். அவர்களுக்குத்தான் அந்தக் கைப்பக்குவம் வரும். அதே நேரத்தில் இன்னொரு பெண்மணி ஒரு ஈடு இட்லியை வைப்பாள். (மாவை வேட்டித் துணியில்தான் இடுவது. இந்தக் காலம் போல் எண்ணெய் தடவி அல்ல.) மிளகாய்ப் பொடி இடிக்கும் சப்தம், அதன் மணம் இரண்டும் வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கும் ஆண்களை எழுப்பிவிடும். இப்போது, உரலிலிருந்து பொடியை எடுத்த பிறகு, அதில் ஒட்டிக்கொண்டிருக்கும் பொடி வீணாகி விடக் கூடாது என்பதால் இட்லியை உரலில் போட்டு துளாவிப் பிசைந்து எடுத்து ஆளுக்கு ஒரு பிடி கொடுப்பார்கள், பெண்கள். அதற்குள் காப்பியும் தயாராகி விடும்.

"இன்னிக்கி மொளாப் பொடி தாயராகுதுலே, வந்துரு" என்பதாக இது பற்றி ஆண்களிடையே அன்றைய தினம் செய்தி பரவும் என்று முடித்தான் நிக்கி. ஆனால் அவன் அதோடு விடவில்லை. மிளகாய்ப் பொடியை கல்லுரலில் இடித்த அந்தப் பெண்களின் வாழ்க்கையோடு இக்காலப் பெண்களை ஒப்பிட ஆரம்பித்தான்.

அந்தப் பெண்கள்தான் எவ்வளவு சுதந்திரமாக வாழ்ந்தார்கள்; இப்போதைய பெண்களைப் போல் ஆபீஸுக்குப் போய் எவனோ

முகம் தெரியாத ஒருவனுக்கு சலாம் போட வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்ததா; ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உடல் உழைப்பின் அத்தியாவசியம்; ஆட்டுக்கல்லைத் தூக்கியெறிந்து புரட்சி செய்த பெண்கள் இப்போது கர்ப்பப்பை பிரச்சினை, மாதவிடாய்ப் பிரச்சினை என்று லோல்பட்டு மாதம் 1000, 2000 என்று ஃபீஸ் கட்டி யோகா மையங்களுக்குச் சென்று ஆட்டுக்கல் இல்லாமலேயே ஆட்டுக்கல்லில் மாவு அரைப்பது போல் தோன்றும் சக்கி சாலினாஸனாவைப் பயிற்சி செய்துகொண்டிருக்கும் கொடுமை என்று ஒன்றன் பின் ஒன்றாக விஷயங்களை அடுக்க ஆரம்பித்தான். கடைசியாக வெகு ஆவேசமாகக் கேட்டான் நிக்கி: தமிழ்நாடு பூராவும் பாலிதீன் உறைகளில் கிடைக்கும் இட்லி மிளகாய்ப் பொடியை நீ சாப்பிட்டுப் பார்த்திருக்கிறாயா? சொல்லிவைத்தாற்போல் மண்ணைச் சாப்பிடுவது போல் இருக்கும். அதே போல் 10 ரூபாய்க்கு பாலிதீன் உறைகளில் கிடைக்கும் இட்லி மாவு. அதற்குப் பேர் இட்லியா? வெறும் களி... களி... என்று கத்தினான் நிக்கி.

மை டியர் ரீடர்ஸ், இனியும் கதையை வளர்த்திக்கொண்டு செல்ல விரும்பவில்லை. கதை இட்லி மிளகாய்ப் பொடியிலிருந்து திசை மாறி ஆணாதிக்கச் சிந்தனைகளின் பக்கம் செல்வதாகத் தோன்றுகிறது. எனவே, வந்தனம்.

செப்டம்பர், 2007

இறக்கை, உயிரோசை இணையதளம்

# சிக்கனம்

“பணத்தை கன்னாபின்னாவென்று கணக்கு வழக்கில்லாமல் செலவு செய்பவர்களிடம் பணம் தங்காது!” என்பான் என் நண்பன் நிக்கி; அவன் ஒரு கோடீஸ்வரன். அவனுடைய நண்பன் ரவியும் ஒரு கோடீஸ்வரன். எதற்கு இந்த விபரம் என்று கேட்கிறீர்களா... சொல்கிறேன்.

நாங்கள் நண்பர்கள் ஐந்தாறு பேர். அவ்வப்போது ஒரு குறிப்பிட்ட ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சந்தித்துப் பேசுவோம். கூடவே மது அருந்துவதும் உண்டு. உடனே, எங்களைக் குடிகாரர்கள் என்று எண்ணி விட வேண்டாம்.

ஒரு மாதுவின் துணை இல்லாமல் இரண்டு ஆண்கள் பல மணி நேரம் பேசிக்கொண்டிருக்க வேண்டும் என்றால், மதுவின் துணை வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள், 'வேறு மாதிரி' ஆட்களாக இருக்க வேண்டும் என்பது அடியேனின் கருத்து. ஆனால், எங்களுடைய சந்திப்புக்கான செலவு, மாதம் ஒன்றரை லட்சம்.

நிக்கியும், ரவியும் ஒரு முடிவு செய்தனர். நகரின் ஓரத்தில் கடற்கரை அருகே ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்து, அதை நம்முடைய சந்திப்புக்கான கெஸ்ட் ஹவுஸாக ஆக்கினால் என்ன?

எனக்கு அந்த ஐடியாவில் உடன்பாடு இல்லை. ஆனால், அதை நான் எப்படி சொல்ல முடியும்? நான் ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளில் மாட்டிக்கொண்டிருந்தேன்.

முக்கியமாக, உடைப் பிரச்சினை. கடந்த பத்து ஆண்டுகளாக என் நண்பன் வெங்கிதான் என்னுடைய, 'காஸ்ட்யூம்' பிரச்னையைத் தீர்த்து வைத்துக்கொண்டிருந்தவன். நல்ல நல்ல விலையுயர்ந்த ஆடைகளை வாங்கித் தருவான். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக அவன் மது அருந்துவதை நிறுத்திவிட்டான்; அவ்வளவுதான், என்னுடைய உடை சப்ளையும் நின்று போனது!

ம்... பாருங்கள். குடி குடியைக் கெடுக்கும் என்றார்கள். என்னுடைய விஷயத்தில் ஒருத்தன் குடியை நிறுத்தியது, என் குடியைக் கெடுத்து விட்டது.

"உன் உடையை நீயே வாங்கிக்கொள்ள வேண்டியதுதானே? அடுத்தவனை ஏன் எதிர்பார்க்கிறாய்?" என்கிறீர்களா? நான் ஒரு எழுத்தாளன் ஐயா, எழுத்தாளன். எழுத்தாளனுக்கு முன்னால் என்ன அடைமொழி வர வேண்டும்? அதை நீங்களே போட்டுக் கொள்ளுங்கள்.

வெங்கியின் மனைவி கூட கேட்டார்களாம், "என்ன இப்போதெல்லாம் இவருடைய செலவு பட்ஜெட் ரொம்பவும் சுருங்கிப் போய்விட்டதே? என்ன விஷயம், சின்ன வீடு கின்ன வீடு வைத்திருந்து, அதை இப்போது ஒதுக்கிவிட்டாரா..." என்று. அதாவது, அந்தக் கேள்வியின் அர்த்தம் என்னவென்றால், ஒரு சின்ன வீட்டை வைத்துப் பராமரிப்பதை விட தன் நண்பர் குழாமுக்கு அதிக செலவு செய்திருக்கிறான் வெங்கி.

சரி, அது போகட்டும். என் பிரச்சினைக்கு வருகிறேன். ஒரு நாள் நிக்கி போன் செய்தான். "டீக்கடைக்கு வருகிறாயா?"

அப்போது மதியம் மணி பனிரண்டரை. அவசர அவசரமாகக்

கிளம்பியதில், சட்டையில் இடுப்புக்குக் கீழே ஒரு ஓட்டை இருப்பதை கவனிக்கவில்லை. டீக்கடையின் உள்ளே நுழையும் போதுதான் கவனித்தேன். இப்போது என்ன செய்வது? சட்டையை இன்சர்ட் செய்யலாம் என்றாலும், அதற்கு டாய்லட் வரை போக வேண்டும்.

ஒரு ஐடியா உதித்தது. ஓட்டை இருந்த பகுதிக்குப் பக்கத்தில் தான் பாக்கெட் இருந்ததால் ஒரு கையைப் பாக்கெட்டுக்குள் விட்டுக்கொண்டேன். ஓட்டைப் பிரச்சினை தீர்ந்தது.

திரும்பி வரும்போது என்ன செய்தேன் என்று கேட்கிறீர்களா? ம்ஹூம்; ஞாபகம் இல்லை. இது ஒரு பக்கம் இருக்க, கெஸ்ட் ஹவுஸ் போட்ட பிறகும் செலவில் ஒன்றும் மிச்சப்படுத்தியதாகத் தெரியவில்லை.

கெஸ்ட் ஹவுசில் ஒரு பாரை செட்டப் செய்ய வேண்டியிருந்தது. அவ்விஷயத்தில் ரவியைப் பாராட்டியே தீர வேண்டும். சென்னை யிலேயே அப்படி ஒரு அழகான பாரை பார்க்க முடியாது என்ற வகையில் அதை அமைத்திருந்தான். நீலம், பச்சை, தங்கம், கறுப்பு, சிவப்பு என்று ஐந்து நிறங்களில் கிடைக்கும் ஸ்காட்ச் விஸ்கியிலிருந்து, உலகில் கிடைக்கும் மிக அற்புதமான மது வகைகள் அனைத்தும் அந்தக் கண்ணாடி அடுக்குகளில் வெகு அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்.

ஜானி வாக்கர் என்று அழைக்கப்படும் அந்த ஸ்காட்ச் வகையறாவில், ப்ளூ லேபிள்தான் காஸ்ட்லியான ஐட்டம். ஒரு முழு பாட்டில் விலை பல ஆயிரம் ரூபாய். அதே ஜாதியில் மற்ற சரக்குகளின் விலை படிப்படியாகக் குறையும். நிக்கி வழக்கமாகக் குடிக்கும் ப்ராண்ட் கறுப்பு, விலை 1,500 ரூபாய்.

"நான் மட்டும் பணக்காரனாக இருந்தால் ப்ளூ லேபிள்தான் சாப்பிடுவேன்!" என்று நினைத்துக் கொள்வேன். பணத்தைச் செலவு செய்யும் விஷயத்தில் என்னை யாருமே அடித்துக்கொள்ள முடியாது என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அருணாச்சலம் என்ற படத்தில் 30 கோடி ரூபாயை 30 நாளில் செலவு செய்ய ரஜினிகாந்த் என்ன பாடுபடுவார்! என்னிடம்

அதைக் கொடுத்துப் பாருங்கள்; எந்தச் சிரமமும் இல்லாமல் பத்தே நாளில் அதைக் காலி பண்ணிவிடுவேன்.

வெறும் வாய்ச் சவடால் இல்லை. ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன், கேளுங்கள். சென்ற ஆண்டு நானும், என் நண்பரும் பாரிஸ் சென்றிருந்தோம். நண்பர் ஒரு கோடீஸ்வரர். அவர்தான் செலவு செய்து என்னை அழைத்துச் சென்றிருந்தார்.

இரண்டே நாளில் இரண்டு லட்சம் காலி. இவ்வளவுக்கும் திருவல்லிக்கேணியில் 100 ரூபாய் வாடகையில் கிடைக்கும் படு மட்டமான ரூமைப் போன்ற ஒரு ரூமில்தான் தங்கினோம். வாடகை என்ன தெரியுமா? ஒரு நாளைக்கு 5000 ரூபாய். உடனே பாரிஸ் அவ்வளவு காஸ்ட்லியான ஊரா என்று கேட்டு விடாதீர்கள். நம்முடைய பணத்தின் மதிப்பு அவ்வளவு கம்மி.

பாரிஸில் ஒரு காபி குடித்தால் 210 ரூபாய் ஆகிறது என்றால், இந்தியர்கள் அதிர்ச்சி அடைகின்றனர். கலாம் சார் அடிக்கடி 'வல்லரசு, வல்லரசு' என்கிறாரே... ஒரு ரூபாயின் மதிப்பு ஒரு யூரோவுக்குச் சமம் என்ற நிலை ஏற்பட்டால்தான் இந்தியாவை உண்மையில் வல்லரசு என்று சொல்ல முடியும்.

இந்தப் பொருளாதார விஷயமெல்லாம் கிடக்கட்டும்... ரவியின் கெஸ்ட் ஹவுசுக்கு வருவோம். உலகின் மிகச் சிறந்த மது வகைகள் அடுக்கப்பட்டிருந்தாலும் அந்த பார் ஒரு வேஸ்ட் என்றுதான் சொல்லுவேன்.

ஆமாம்... அதிலிருந்து நீங்கள் எதையுமே எடுத்துக் குடிக்க முடியாது. உங்களுக்கு வேண்டியதை நீங்கள் வெளியிலிருந்துதான் வாங்கிக் கொண்டு வர வேண்டும்.

"இது என்னடா கொடுமை?" என்று ஒருநாள் நிக்கியிடம் புலம்பினேன்.

அவன் சொன்ன பதிலிலும் ஒரு வாஜிக் இருந்தது. என்னவென்றால், எங்கள் குழுவைச் சேர்ந்த நண்பர்கள் அனைவரும், அவர்களுக்குப் பிடித்ததை எடுத்துக் குடித்துவிட்டால் அந்த விமரிசையான

பார் ஒரே வாரத்தில் காலியாகி விடுமே? அதனால்தான் அந்த சிஸ்டம் என்றான் நிக்கி.

ம்... கேட்பதற்குச் சரியாகத்தான் இருந்தது. ஆனால், என் சக சிறுபத்திரிகை இலக்கியவாதிகளுடன் ஆளுக்குப் பத்து, இருபது ரூபாய் என்று பீராய்ந்து, ஓல்ட் மாங்க் ரம் வாங்கி அடிப்பதில் உள்ள சுதந்திரம் இந்த பாரில் இல்லையே என்று நினைத்துக் கொள்வேன்.

ஆனால் ஒரு சலுகை உண்டு. நீங்கள் எந்த பாட்டிலை வேண்டுமானாலும் எடுத்துக் காலி செய்யலாம்; 24 மணி நேரக் கெடுவுக்குள் அதே பாட்டிலை வாங்கி அந்தக் கண்ணாடி அடுக்கில் வைத்து விட வேண்டும்.

என்னதான் இருந்தாலும், அந்த கெஸ்ட் ஹவுஸ் எனக்கு உளவியல் ரீதியான தொந்தரவைத்தான் கொடுத்துக்கொண்டிருந்தது. காரணம், டீக்கடையின் மாதச் செலவு ஒன்றரை லட்சம் என்றால், கெஸ்ட் ஹவுசின் செலவும் கிட்டத்தட்ட அதேதான் ஆனது.

மாத வாடகை 30 ஆயிரம் ரூபாய். குளிர்சாதனம் மற்றும் மின்சார செலவு. பணிப்பெண்களின் ஊதியம். நேப்பாளி காவல்காரனின் சம்பளம்...

அவன் அந்த வீட்டு அவுட்ஹவுசில் தங்கிக்கொண்டான். மற்ற இத்யாதி செலவு வேறு. இப்படி சாமியார் பூனை வளர்த்த கதையாக அந்த கெஸ்ட் ஹவுசின் பராமரிப்புச் செலவு ஒன்றரை லட்சத்தை எட்டியது.

ஒரு வேடிக்கையைக் கேளுங்கள்... எனக்கு இந்தப் பணக்காரர்களின் உலகத்தை அவர்களோடு எவ்வளவுதான் நெருங்கிப் பழகினாலும் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அன்றைய தினம் கெஸ்ட் ஹவுசில் முதல் முறையாகச் சந்திக்கிறோம்... வழக்கமாகக் கூடும் நான்கைந்து நண்பர்கள்.

ரவி ஒரு ஐடியாவை முன் வைத்தான். அதாவது நாம் தினந்தோறும் சோடா வாங்குகிறோம். ஒரு நாளைக்கு 15 சோடா என்றால், அதனால் ஏற்படும் மாதாந்திர செலவு 500

ரூபாய். அதற்கு நாமே ஏன் ஒரு சோடா மேக்கரை வாங்கி வைத்துக்கொள்ளக் கூடாது?

இந்த அருமையான ஐடியாவுக்காக ரவியை மெத்தப் பாராட்டிய நிக்கி, சோடா மேக்கர் தயாரிக்கும் கம்பெனிகளுக்கெல்லாம் போன் போட்டான். ஒரு சோடா மேக்கரின் விலையே 3000 ரூபாய்தான் என்று தெரிந்தது.

கிட்டத்தட்ட அந்த சோடா மேக்கர் விஷயமே அன்றைய மெயின் சப்ஜெக்டாக ஓடிக்கொண்டிருந்தது. ஆனால், ஒரே ஒரு டெக்னிகல் பிரச்சினையால் அத்திட்டம் கைவிடப்பட்டது. அதாவது, சோடா மேக்கரில் ஏதாவது கோளாறு நேர்ந்தால், அதைச் சரி செய்வது ஆகாத காரியம்; மீண்டும் ஒரு புதிய சோடா மேக்கர்தான் வாங்க வேண்டும்.

'சரி, சோடாவே வாங்கிக்கொள்ளலாம்' என்று மூன்று மணி நேர விவாதம் மற்றும் முயற்சிக்குப் பிறகு முடிவு செய்யப்பட்டது.

அடப்பாவிகளா! எனக்கு என்றைக்குமே பணக்காரனாக வேண்டாம் என்று தோன்றியது. இதற்கிடையில், ரவியின் சொத்து மதிப்பு 200 கோடி இருக்கும் என்பதையும் உங்களுக்கு நான் சொல்லியாக வேண்டும். இவ்வளவுக்குப் பிறகும் நிக்கியிடம் எனக்குச் சில விஷயங்கள் பிடித்திருந்தன.

ஒரு நாள் டீக்கடையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். தந்தூரி சிக்கனை சாப்பிட்டதில் கையில் மசாலா ஒட்டிக்கொண்டது. டீக்கடையில் வழக்கமாக வெள்ளைத் துணியாலான நாப்கின் கொடுப்பார்கள். அதை ஒரு பக்கம் நகர்த்தி வைத்துவிட்டு பணியாளரை அழைத்து டிஷ்யூ பேப்பர் கேட்டான் நிக்கி.

ஏனென்று கேட்டேன். அதற்கு நிக்கி சொன்ன பதில்: துணியில் துடைத்தால் அந்தக் கறையை எடுக்க தண்ணீர் அதிகம் செலவாகும். பேப்பர் டிஷ்யூ என்றால் துடைத்துத் தூக்கிப் போட்டு விடலாம்.

மற்றொரு சம்பவம்:

சிவாஜி படத்தில் வரும் இங்கிலீஷ் பாடல் ஸ்டைலில் ஒரு பாட்டு... மிகவும் உன்னிப்பாகக் கேட்டால்தான் அதில் வரும் தமிழ் வார்த்தைகள் புரியும். ஆங்கில எழுத்து, 'ஓ'வுக்கு அடுத்த எழுத்தை வைத்துப் பாடப்பட்ட அசிங்கமான வார்த்தைகளைக் கொண்ட பாடல்.

'இது எப்படியோ நிக்கியின் மொபைல் போனுக்கு வந்திருக்கிறது. மிகவும் குதூகலத்துடன் எல்லாரிடமும் அதைப் பாட விட்டுக் காண்பித்துக்கொண்டிருந்தான்.

ஒருநாள் தன் மனைவியிடம் அதைப் போட்டுக் காட்டி யிருக்கிறான். அந்த அம்மையாருக்கு ஒன்றும் புரியவில்லை என்றதும், தன் மகளைக் கூப்பிட்டு கேட்கச் சொல்லியிருக்கிறான்.

கல்லூரியில் படிக்கும் அந்தப் பெண் தன் அம்மாவிடம், "அப்பா இன்னமும் நம் கிச்சா மாதிரியே இருக்கிறார்!" என்று சிரித்துக் கொண்டே சொல்லியிருக்கிறாள்.

கிச்சா, நிக்கியின் 18 வயது மகன்!

தினமலர், வாரமலர்
மார்ச், 2008

# பின்தொடரும் நிழல்

அது ஒரு வியாழக்கிழமை; காலை ஏழு மணி இருக்கும். வீட்டைப் பெருக்கிக்கொண்டிருந்த என் சகதர்மினி மீரா திடீரென்று, "வியாழக்கிழமையும் அதுவுமா இப்படியா ஒரு ஜீவனைக் கொல்றது... சாயி ராம்!" என்று வருத்தத்துடன் சொன்னாள்.

"என்னம்மா, என்ன சொல்கிறாய்?" என்று கேட்டபோது, என் கட்டிலுக்குக் கீழே நசுங்கிக் கிடந்த ஒரு மரவட்டையைக் காண்பித்தாள்.

ஆம்! தூங்கியெழுந்ததும் அந்தக் காரியத்தைச் செய்தவன் நான்தான். எனக்கு மரவட்டை என்றாலே பயம். கட்டிலை விட்டு எழுந்ததும் கீழே பார்த்தால் மரவட்டை. பயத்தில் என்ன செய்கிறேன் என்றே தெரியாமல், செருப்பைப் போட்டு அதை ஒரு நசுக்கு நசுக்கினேன். நரநரவென்ற சப்தத்துடன் செத்துப் போனது மரவட்டை. அதோடு அதை மறந்து போனேன்.

இப்போது மீரா சொன்னதும், ஏதோ ஒரு கொலை செய்துவிட்டது போல் தோன்றியது. வியாழக்கிழமை பாபாவுக்கு உகந்த நாள்.

இன்றைக்குப் பார்த்து இதை நான் செய்திருக்கக் கூடாதுதான். ஆனால், வெள்ளிக்கிழமை செய்திருந்தாலும், இதையேதான் சொல்லியிருப்பாள் மீரா. என்ன, கடவுளின் பெயர்தான் மாறியிருக்கும்!

ஒருநாள் கூட தப்ப முடியாது. ஒவ்வொரு நாளுமே ஒவ்வொரு கடவுளுக்கு உகந்த நாள்தான். செய்தது தப்பு; பேசாமல் ஒரு குச்சியால் எடுத்து வெளியே போட்டிருக்கலாம். அனாவசியமாக எந்த உயிரையும் இனி கொல்வதில்லை என்று சங்கல்பம் செய்து கொண்டேன். அனாவசியமாக என்ற வார்த்தையைக் கவனித்துக் கொள்ளுங்கள். நான் ஒரு தீவிர அசைவம். உணவில் குறைந்தபட்சம் ஒரு சுட்ட கருவாடாவது இருக்க வேண்டும் என்று நினைப்பவன்; இல்லாவிட்டால், அது எவ்வளவு சுவையான உணவாக இருந்தாலும் இறங்காது. ஆனால், அசைவ உணவைப் பொறுத்தவரை தமிழ்நாடு கொஞ்சம் பிரச்சினையான இடம்தான். சிங்கப்பூரிலிருந்து என் நண்பர் கவுதம் இங்கே வந்தபோதுதான் அதை உணர்ந்தேன்.

கவுதம், சிங்கப்பூரிலேயே பிறந்து வளர்ந்தவர். அவருக்கு காபி, டீ தவிர மற்ற எல்லாவற்றிலும் அசைவம் இருக்க வேண்டும். காலையில் ஆப்பம் அல்லது இடியாப்பத்தோடு பாயா. கீரையில் நெத்திலி பொடி. பிரெட் என்றால் அதில் சார்டின் மீன்.

கவுதம் பரவாயில்லை. அவர் மகன் இன்னும் மோசம். ஒரு முறை, மேல் படிப்புக்காக அமெரிக்கா செல்லும்போது, கவுதமின் மனைவி சென்னைவாசி என்பதால், மனைவியையும், மகனையும் சென்னையில் விட்டுவிட்டுச் சென்றார்.

பையனுக்கு நம்மூர் உணவு பிடிக்கவில்லை. இங்கே அசைவக்காரர்கள் என்ன செய்கிறார்கள்? ஞாயிற்றுக்கிழமை ஒருநாள்தான் கறி வாங்கக் கிளம்புகிறார்கள். அந்த நாட்களில் ஏதோ ரஜினியின் புதுப்படம் ரிலீஸ் ஆன மாதிரி மட்டன் கடைகளில் கூட்டம் அலை மோதுகிறது. இதெல்லாம் சைவர்களுக்குத் தெரியாத பிரச்சினை. இதில் இன்னொரு சிக்கல் என்னவென்றால், பெரும்பாலான கடைகளில் கிடைப்பது செம்மறி ஆட்டுக்கறிதான். கடித்தால் ஜவ்வு மாதிரி சவுக் சவுக்

என்று மென்றுகொண்டே இருக்க வேண்டியதுதான். நூற்றில் ஒரு கடையில்தான் வெள்ளாடு கிடைக்கும்.

நிலைமை இப்படியிருக்க, கவுதமின் பையன் சாப்பாட்டில் தொட்டுக் கொள்ள ரத்தப் பொரியல் கேட்டான்.

கவுதமின் மாமனார் ஒரு கோடீஸ்வரர். இருந்தாலும், ரத்தப் பொரியலுக்கு எங்கே போவார்? அதெல்லாம் நட்சத்திர ஹோட்டல்களில் கிடைக்காது. முனியாண்டி விலாசில் வாங்கிக் கொடுக்க அவர்களுக்கு பயம்.

"ரத்தப் பொரியல் இல்லாவிட்டால், மூளை வறுவல் கொடுங்கள்!" பையன் கொடுத்த சலுகை!

ஒருநாள் எனக்கு அழைப்பு வந்தது; போய்ப் பார்த்தேன். சிங்கப்பூரில் கொழுகொழு என்று இருந்தவன் இப்போது இளைத்துத் துரும்பாக மாறியிருந்தான்.

மூளை, ரத்தம் எல்லாம் கூடப் பரவாயில்லை... வேர்க்கடலையில் சென்னாங்குனி போட்டுக் கேட்கிறான்.

சென்னாங்குனி மீன் நம் விரல் நகம் சைசுக்கு இருக்கும். மலேசியா, பர்மா போன்ற கிழக்காசிய நாடுகளில் வேர்க்கடலையில் கூட சென்னாங்குனி மீனைப் போட்டுத்தான் சாப்பிடுகிறார்கள்.

கவுதமின் பையனைப் பார்த்தபோதுதான் நான் ஏன் இப்படி ஒரு மீன் பைத்தியமாக இருக்கிறேன் என்பதே எனக்கு விளங்கியது. காரணம், என் அம்மாச்சி. அம்மாச்சி ஒரு பர்மீஸ்காரி. என் அம்மா வழித் தாத்தா ரங்கூனில் வியாபாரம் செய்துகொண்டிருந்த போது ஒரு பர்மாக்காரியையே மணம் செய்துகொண்டிருந்தார்.

சின்ன வயதில் அந்தத் தாத்தாவைப் பார்த்திருக்கிறேன். சட்டையை உள்ளே விட்டு லுங்கியை அதற்கு மேல் கட்டிக்கொண்டிருப்பார். 'யார்ரா இது பைத்தியம்?' என்று அப்போது நினைத்துக் கொள்வேன். பர்மாவின் தேசிய உடை லுங்கிதான். சென்ற ஆண்டு தாய்லாந்து சென்றிருந்தபோது, பர்மாவுக்கும் விசிட் அடித்தேன். நரகத்தை நேரில் பார்த்தது போல் இருந்தது; முக்கியமாக, செக்ஸ் தொழில்.

உலகில் எல்லா நாடுகளிலும் அந்தத் தொழில் செழிப்பாகவே நடந்துகொண்டிருந்தாலும், பர்மாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருப்பதை கவனித்தேன்.

பர்மாவின் செக்ஸ் தொழிலாளிகள் முக்கால்வாசிப் பேர் சிறுமிகள். 12 வயதிலிருந்து 16 வயது இருக்கலாம். அதிலும், ஒரு நாள் யாங்கூன் நகரின் பிரதான சந்தை வழியே நடந்துகொண்டிருந்தபோது, என்னை இன்பத்துக்கு அழைத்த சிறுமியின் வயது பத்துதான் இருக்கும். பணத்தைக் கொடுத்துவிட்டு பேசிப் பார்த்தபோது, அது சிறுமி அல்ல; சிறுவன் என்று தெரிந்தது. பணத்துக்காக சிறுமி வேடம் போட்டிருக்கிறான்.

நான் கொடுத்த தொகை நம்மூர் பணத்தில் ரூ. 50. அதற்கே என் காலைத் தொட்டு வாங்கிக்கொண்டான் சிறுவன்! ஆனால், அதற்குப் பிறகு நடந்ததுதான் பர்மியர்களின் இயல்பை எனக்குக் காட்டியது. அவனுக்குத் தெரிந்த பத்து, இருபது ஆங்கில வார்த்தைகளைக் கொண்டு, அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டுக் கிளம்பினேன். கிளம்பும்போது பணத்தை என்னிடம் திருப்பிக் கொடுத்தான் சிறுவன். ஒன்றும் செய்யாமல் வாங்கிக்கொள்ள மாட்டானாம்! ஒருகணம் ஆடிப் போய் விட்டேன். பிறகு வற்புறுத்தி அவனிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு வந்தேன். பிறகு தாய்லாந்து திரும்பியபோதுதான் தெரிந்தது – அந்நாட்டிலுள்ள பாதி செக்ஸ் தொழிலாளிகள் பர்மாவிலிருந்து இறக்குமதியானவர்கள் என்று.

தாய்லாந்து இப்போது வேகமாக முன்னேறி வருவதால் அங்குள்ள பெண்கள் இந்தத் தொழிலுக்கு வருவதில்லையாம். ஜாடையில் பர்மியப் பெண்களுக்கும், 'தாய்' பெண்களுக்கும் அதிக வித்தியாசம் தெரியவில்லை என்பதால், 'இறக்குமதி' கன ஜோராக நடந்து வருகிறது. ஜாடை என்றதும் ஞாபகம் வருகிறது. பர்மாவில் என்னிடம் எல்லாரும் பர்மிய மொழியிலேயே பேசத் துவங்கிவிட்டனர். உங்களுக்கு முற்பிறவி என்பதில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, இந்த ஜீன் விஷயத்தை நம்பித்தான் ஆக வேண்டும். ஒரு பெண் சொன்ன விபரம் கேட்பதற்கே பயங்கரமாக இருந்தது.

செப்டம்பர் மாதம் 15, 1997. நூறு பேர் கொண்ட ராணுவத் துருப்பு ஒன்று, ஒரு பர்மிய கிராமத்தினுள் நுழைகிறது. ராணுவ ஆட்சிக்கு எதிரானவர்களை இப்படித் தேடுவது அங்கே அடிக்கடி நடக்கும் விஷயம். அப்படித் தேடும்போது ராணுவத்தினர் அந்த இடத்திலுள்ள பெண்களைக் கற்பழித்துக் கொன்று விடுவது வழக்கம். இதையெல்லாம் அங்கே யாரும் தட்டிக் கேட்க முடியாது. மீறிக் கேட்டால் ராணுவம் துப்பாக்கியால் தட்டி விடும். இதற்குப் பயந்து அந்த கிராமத்தினர் அனைவரும் ஒரு காட்டுக்குள் சென்று பதுங்கி விட்டனர். ஆனால், தீவிரமான தேடுதலுக்குப் பிறகு அவர்கள் ராணுவத்திடம் சிக்கிக்கொண்டனர்.

பெண்கள் 40; ஆண்கள் 50. ஆண்கள் அனைவரையும் கட்டிப் போட்டு, அவர்கள் முன்னிலையில் அந்த 40 பெண்களையும் ஒருவர் பாக்கி விடாமல் ராணுவத்தினர் கற்பழித்திருக்கின்றனர். இரண்டு இரவுகளும், இரண்டு பகல்களும் நீண்டது அந்த வன்கலவிச் சம்பவம்.

பிறகு, அத்தனை பேரையும் சுட்டுக் கொன்றது ராணுவம். இதில் தப்பிப் பிழைத்த ஒரே ஒரு பெண் பர்மிய எல்லையைக் கள்ளத்தனமாகக் கடந்து தாய்லாந்து வந்துவிட்டாள். பாங்காக்கின் சிவப்பு விளக்குப் பகுதி ஒன்றில் ஒருநாள் அந்தப் பெண்ணை நான் சந்தித்தேன். எனக்கு தாத்தாவின் ஞாபகம் வந்தது. யார் கண்டது? ஒருவேளை, இவள் எனக்கு உறவுக்காரியாகக்கூட இருக்கலாம்!

தினமலர், வாரமலர்
ஏப்ரல், 2008

# கையருகே ஆகாயம்

ராமசாமியை எனக்கு முன்பின் தெரியாது. என் வாசகர் என்று அறிமுகமானார். ஓரிரு மாதப் பழக்கத்திற்குப் பிறகு, "நீங்கள் பாரீஸ் பற்றி நிறைய எழுதியிருக்கிறீர்கள். உங்களோடு ஒருமுறை அங்கே போக வேண்டும்" என்றார்.

எனக்கும் ஒரு துணை கிடைத்தது என்ற சந்தோஷத்தில் உற்சாக மாகக் கிளம்பினேன். அப்போது டிசம்பர் மாதம். டிசம்பர் என்றால் எனக்கு மிகவும் இஷ்டம்.

என் பிறந்த நாள் டிசம்பரில்தான். வருடா வருடம் டிசம்பர் மாதம் பாரீஸுக்குச் சென்று என் பிறந்த நாளை நானே கொண்டாடுவது வழக்கம். ஐரோப்பாவில் குளிர்காலம் வித்தியாசமாக இருக்கும். ஊட்டியில் கூட குளிர் காலத்தில் குளிர் ஜீரோ டிகிரிக்குப் போகும் என்றாலும், அதே ஜீரோ டிகிரி ஐரோப்பாவில் வேறு மாதிரி இருக்கும். காலம் காலமாக வெப்பத்தைக் காணாமல் குளிரிலேயே உறைந்து கிடப்பதால் ஐரோப்பிய மண்ணின் குளிருக்கு வீரியம் அதிகம். ஆனால், ராமசாமியால் எப்படி அந்தக் குளிரைத் தாங்க முடியும்?

"நாம் ஏப்ரல், மே கோடைக் காலத்தில் போகலாம்" என்றேன். அவர் கேட்கவில்லை. இப்போதே கிளம்பினால்தான் ஆயிற்று

என்று ஒற்றைக்காலில் நின்றார். ராமசாமி, நாமக்கல்லில் ஒரு கோடீஸ்வரர்; பண்ணையார். ஏகப்பட்ட லாரிகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஆனால், பார்ப்பதற்கு ஏதோ டாஸ்மாக் பாரில் எடுபிடி வேலை செய்பவர் போல் தோற்றம் தருவார். காலில் ரப்பர் செருப்பு; அதிலும் ஒரு அறுந்த வாரை ஊக்கு போட்டு மாட்டியிருப்பார். சுருக்கம் விழுந்த சட்டை. எவ்வளவு அவசரமாக இருந்தாலும் ஆட்டோவில் ஏற மாட்டார்; எல்லாவற்றுக்கும் பஸ் தான்.

"இப்படியெல்லாம் பாரீஸ் வந்தால் குளிரில் விறைத்துச் செத்துப் போய் விடுவீர்" என்று எச்சரித்தேன். பாரீஸ் போய் வாங்கினால், நம்மூர் காசுக்கு விலை ஐந்து மடங்கு ஆகி விடும் என்று சொல்லியும் கேட்கவில்லை. பிறகு கட்டாயப்படுத்தி ஷூ, ஸ்வெட்டர் எல்லாம் வாங்கச் செய்தேன். ஜீரோ டிகிரி குளிரில் வாழ வேண்டுமானால், ஒருவர் குறைந்தபட்சம் 12 கிலோ எடையுள்ள கம்பளி உடுப்புகளை அணிந்திருக்க வேண்டும்.

கம்பளி சாக்ஸ், குளிர் நாடுகளுக்கேற்ற ஷூ (அதன் விலை இந்தியாவில் ரூ. 10,000), கையுறை, ஸ்வெட்டர், கம்பளி கோட்டு, மப்ளர், குல்லாய் என்று இத்தனை உருப்படி தேவை. ஆனால், ராமசாமி ரூ.300க்கு ஒரு ஷூவை வாங்கினார். கோட்டு இல்லை; மப்ளர் இல்லை; கையுறை இல்லை; எதுவுமே இல்லை. கிளம்பிவிட்டார். விமானத்திலேயே பிரச்சினை ஆரம்பமாகிவிட்டது. ராமசாமியிடம் ஒரு விநோத பழக்கம் என்னவென்றால் அவருக்கு அருகிலேயே, அவரைத் தொடக்கூடிய தூரத்திலேயே நீங்கள் அமர்ந்திருந்தாலும் எங்கோ அடுத்த வயக்காட்டில் நின்று கொண்டிருக்கும் ஒருவரைக் கூப்பிடுவது போன்ற குரலில் பேசுவார்; கத்துவார் என்பதே சாலப் பொருத்தம்.

விமானத்தில் அவருக்குப் பக்கத்து சீட்டுதான் எனக்கு. ஆனாலும், வானில் பறந்துகொண்டிருக்கும் மற்றொரு விமானத்தில் அமர்ந்திருக்கும் ஒருவரோடு பேசுவதாக நினைத்து, என் செவிச் சவ்வுகளைக் கிழித்துக்கொண்டிருந்தார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த ஒரு வெள்ளைக்காரர், ராமசாமியிடம் மெதுவாகப் பேசுமாறு கேட்டுக் கொண்டபோது, இரண்டு நிமிடம்

அடங்கிவிட்டு, பிறகு, மீண்டும் அதே உச்சத்தில் ஆரம்பித்தார். நான் சைகையில் வெள்ளைக்காரனைக் காண்பித்தேன். உடனே சப்தமாக, "அவங்கெடக்கான்... நம்ப ஊருக்கு வந்துட்டு அவன் என்ன நம்பள நாட்டாமை பண்றது?" என்றார்.

"இது உம்முடைய நாமக்கல் அல்ல; இப்போது நாம் ஆகாயத்தில் 30 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருக்கிறோம். அநேகமாக துருக்கியாக இருக்கலாம்... " என்று அவரிடம் சொல்ல நினைத்தேன். ஆனால், அதற்கும் ஏதாவது குதர்க்கமாக பதில் சொல்வார். அதனால் கண்களை மூடித் தூங்க ஆரம்பித்தேன். தூக்கம் வரவில்லை; இருந்தாலும், கண்களைத் திறக்க அச்சமாக இருந்தது. எவ்வளவு நேரம் அப்படி இருக்க முடியும்? பிறகு லேசாகக் கண்ணைத் திறந்து பார்ப்பேன். அவ்வளவுதான், எலியைக் கவ்வுவதற்காகப் பாயும் பூனையைப் போல் பாய்ந்து பிடித்துக் கொள்வார்.

பிறகு, மறுபடியும் ஆரம்பிக்கும் கச்சேரி. இப்போது முன்னை விட சுதி ஏறியிருக்கும். ஆமாம். விமானத்தில் தரும் ஸ்காட்ச் விஸ்கியை அதற்குள் நாலைந்து ரவுண்ட் போட்டிருப்பார். ஏதாவது சுவாரசியமாக இருந்தாலும் கேட்டுக்கொண்டிருக்கலாம். எல்லாம் அவருடைய மனைவியைப் பற்றிய புகார் கதைகள். ஆனால், எனக்கு என்னவோ அந்தப் பெண்மணி மீது மதிப்புதான் கூடியது. இப்படி 24 மணி நேரமும் தவளையைப் போல் கத்திக்கொண்டிருக்கும் மனிதரோடு இத்தனை வருடம் குடித்தனம் நடத்தி இருக்கிறாளே, அவள் எப்பேர்ப்பட்ட பொறுமைசாலியாக இருக்க வேண்டும்!

பாரிஸ் விமான நிலையத்திலிருந்து வெளியே வந்ததும் என் தோள் பையைத் திறந்து ஒரு பொருளை எடுத்து "இதோ பாருங்கள் பெருமாள்" என்று பெருமையுடன் காண்பித்தார் ராமசாமி. இந்த இடத்தில் ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டும். எனக்கு அந்த ஆண்டுதான் இதய அறுவை சிகிச்சை நடந்திருந்ததால், சுமை எதுவும் தூக்க வேண்டாம் என்று எச்சரித்திருந்தார் மருத்துவர். ஆக, என் பையையும் ராமசாமியேதான் தூக்கி வர வேண்டியிருந்தது. உண்மையில் எனக்கு இத்தனை உதவி

செய்த ஒரு நண்பர் மீது பொல்லாங்கு சொல்வது பற்றி எனக்கே நாணமாகத்தான் இருக்கிறது. என்ன செய்ய? என் தொழில் அப்படி!

என் கைப்பையிலிருந்து ராமசாமி எடுத்துக் காண்பித்த பொருளைப் பார்த்ததும் நான் ஒருகணம் ஆடிப் போய் விட்டேன். விமானத்தில் போர்த்திக்கொள்வதற்காக போர்வை கொடுப்பார்கள் அல்லவா, அந்தப் போர்வையை என் பையில் வைத்து எடுத்து வந்திருக்கிறார்! அந்தக் குளிரிலும் எனக்கு வேர்த்துவிட்டது. மாட்டியிருந்தால் அவமானமாகப் போயிருக்குமே? "இங்கே குளிர் அதிகமில்லே? அதுதான் எடுத்து வைத்துக்கொண்டேன்" என்றார். எனக்கு வந்த கோபத்தில் எதுவும் பேசவில்லை. விமான நிலையத்திலிருந்து டாக்சி பிடித்து லாட்ஜில் ரூம் போட்டோம். ஆனால், அதிலும் ஒரு சிக்கல் இருந்தது. நாங்கள் சென்ற இடம் கார் து நோர் என்ற பாரிஸின் வடக்குப் பகுதி. அங்கே வசிக்கும் பெரும்பான்மையோர் வட ஆப்ரிக்க நாடுகளைச் சேர்ந்த கறுப்பின முஸ்லீம் மக்கள் மற்றும் இலங்கைத் தமிழர்கள். சிறிய லாட்ஜுகளின் உரிமையாளர்கள் பலரும் அல்ஜீரியர்கள். அவர்களிடம் சென்று, "எங்கள் இருவருக்கும் ஒரே அறை வேண்டும்... " என்று சொன்னதும் சைத்தானை நேரில் கண்டது போல், "ஹராம், ஹராம்..." என்று கத்தினார்கள்.

இந்த இடத்தில் எனக்கு ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. என் நண்பர் ஒருவரின் மகன் அமெரிக்காவில் வேலை செய்கிறான். அவன் ஒரு அமெரிக்கப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டான். விசனத்தில் இருந்த நண்பருக்கு ஆதரவாக என் மற்றொரு நண்பனான நிக்கி என்ன சொன்னான் தெரியுமா? "சந்தோஷப்படுங்கள், அட்லீஸ்ட் அவன் ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டானே என்று!" புரிகிறதா?

அதாவது, அந்த அல்ஜீரியர்கள் என்னையும், ராமசாமியையும், ஹோமோ என்று நினைத்து விட்டனர். பிறகு ஒரு மூன்றாந்தரமான விடுதியில் ரூம் போட்டோம். விடுதி உரிமையாளர் ஒரு வயதான ப்ரெஞ்சுக்காரி என்பதால் பிரச்சினை இல்லை. பிரச்சினை வேறு ரூபத்தில் முளைத்தது.

ரூமுக்கு வந்த கொஞ்ச நேரத்தில் குளிர் ஜுரம் கண்டவனைப் போல் வெடவெட என்று நடுங்க ஆரம்பித்தார் ராமசாமி. உடம்புக்கு ஒண்ணுமில்லை. ஐரோப்பியக் குளிரை அவரால் தாங்க முடியவில்லை. அவ்வளவுதான், அறையை விட்டு ஆள் வெளியே வரவே இல்லை.

மதிய உணவுக்கும், இரவு உணவுக்கும் மட்டும்தான் வெளியே வந்தார். வடக்கு பாரிஸில் நாங்கள் தங்கியிருந்த இடத்தின் பெயர் லா சப்பல். இது ஒரு குட்டி யாழ்ப்பாணம். திரும்பின இடமெல்லாம் தமிழ்க் கடைகள். அதனால், தமிழ்ச் சாப்பாட்டுக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், இவ்வளவு தூரம் வந்து, இவ்வளவு பணம் செலவு செய்து ரசமும், சாம்பாரும் சாப்பிட வேண்டுமா என்பதுதான் என் கேள்வி. இருபத்து நாலு மணி நேரமும் அறையிலேயே அடைந்து கிடந்து, சாம்பார் சாதம் சாப்பிடுவதற்கு ஒரு ஆள் ஏன் பாரிஸ் வரை வர வேண்டும்?

அறையில் மற்றொரு பிரச்சினை, சிகரட். ராமசாமிக்கு விழித்திருக்கும் நேரமெல்லாம் வாயில் சிகரட் புகைந்து கொண்டிருக்க வேண்டும். அதிலும், அவர் குடிக்கும் சிகரட், இந்த உலகத்திலேயே படு மட்டமான ரகம். எங்களுடைய நிதி நிலைமை தனித்தனி அறைகளில் தங்குவதற்கு அனுமதிக்கவில்லை. இது எல்லாவற்றையும் கூட மன்னித்துவிடுவேன். ஆனால், ஸ்பெய்னிலிருந்து நாங்கள் பாரிஸுக்கு வந்த ரயில் பயணத்தில் ராமசாமி செய்த ஒரு காரியத்தை மட்டும் என்னால் மன்னிக்கவே முடியாது.

பிரான்சிலிருந்து ஸ்பெய்ன் சென்று விட்டு, அங்கிருந்து பாரிஸுக்கு ரயிலில் திரும்பிக் கொண்டிருந்தோம். முந்தின தினம்தான் கிறிஸ்துமஸ். அது ஒரு பகல் நேரம். வரும் வழியெல்லாம் கிறிஸ்துமஸ் மரங்களிலும் மற்றும் பெயர் தெரியாத ஆயிரக்கணக்கான மரங்களிலும் பனித்துகள்கள் பொடிப் பொடியாக விழுந்து, மரங்களையே மறைத்துக் கொண்டிருந்தன. இந்த இடத்தில் வாசகர்கள் என்னை மன்னிக்க வேண்டும். அந்தப் பரவசமான காட்சியை வார்த்தைகளில் விவரிக்க இயலாதவனாக இருக்கிறேன். ஒரு மகா அற்புதம் கண்முன்னே விரிந்து கிடந்தது. ஒரு மணி நேரத்துக்கு ஒரு ஸ்டேஷன் வரும்.

அப்புறம் வருவதெல்லாம் அந்த அற்புதம்தான். அந்த ரயிலைத் தவிர அங்கே மனித வாழ்வின் சுவடே தெரியாமல் கிடந்தது. எதிரே தூங்கிக்கொண்டிருந்தார் ராமசாமி. ஆம், சொல்ல மறந்து விட்டேன். அவர் சிகரட் குடிக்காத நேரத்திலெல்லாம் தூங்கிக் கொண்டிருந்தார். உட்கார்ந்தபடி தூக்கம், நின்றபடி தூக்கம். மனிதர் சல்லாப நேரத்தில் கூட தூங்கிக்கொண்டிருந்திருப்பாரோ என்ற அச்சம் ஏற்பட்டது எனக்கு. எழுப்பிவிட்டு அந்த அற்புதத்தைப் பார்க்கச் சொன்னேன். கண்களில் எந்த பாவமும் இன்றி ஜன்னலுக்கு வெளியே வெறித்துப் பார்த்துவிட்டு மீண்டும் தூங்க ஆரம்பித்தார். காலை எட்டு மணியிலிருந்து மாலை ஆறு மணிக்கு பாரிஸ் வந்து சேரும் வரை தூக்கம்தான். ஆனால், சைத்தான் எனக்குள்ளேயும் இருக்கிறான் என்று தோன்றியது. கடவுள் உனக்கு சொர்க்கத்தைக் காண்பித்தான். அதைப் பார்த்து அனுபவிப்பதை விட்டுவிட்டு, உன்னை எவன் பக்கத்திலிருப்பவனின் தூக்கத்தைப் பற்றி எண்ணி எரிச்சலடையச் சொன்னது? பாரிஸ் வந்ததுமே பயணத் தேதியை முன்னதாகவே மாற்றிக்கொண்டு ஊருக்கு வந்து சேர்ந்தேன்.

சென்னை வந்து இரண்டு வாரம் இருக்கும். ராமசாமிக்கு போன் போட்டேன். அந்த எண் உபயோகத்தில் இல்லை என்று தெரிந்தது. அப்போது ஒருநாள் – ஒரு பெண்ணிடமிருந்து எனக்கு போன் வந்தது. ராமசாமியின் மனைவி. அப்போதுதான் முதல் முறையாக என்னோடு பேசுகிறார். அவர் கேட்ட முதல் கேள்வி:

"ராமசாமி எங்கே?"

"அடப்பாவி, நாங்கள் வந்தே இரண்டு வாரம் ஆகிறதே! இன்னுமா அவர் ஊர் வந்து சேரவில்லை?"

ராமசாமியின் மனைவி உஷ்ணமாகி விட்டார்...

"ராமசாமி காணவில்லை என்று நான் போலீஸில் புகார் கொடுக்கப் போகிறேன். போலீஸ் உங்களிடம் வருவார்கள். தயாராக இருங்கள்."

தினமலர், வாரமலர்
மே, 2008

# வெளியிலிருந்து வந்தவன்

இரவு ஒன்பது மணி சுமாருக்கு அந்தச் சம்பவம் நடந்தது. வீட்டுக் கதவை 'பட பட'வென்று யாரோ தொடர்ந்து தட்டினார்கள். இந்த நேரத்தில் யாராக இருக்கும் என்று யோசித்தபடி வந்து பார்த்தால் வெளியே சுந்தரம். பார்த்த மாத்திரத்தில் தெரிந்து விட்டது – நிறை போதையில் இருந்தான்.

மது, மாது, சூது என்ற மூன்று தீமைகளில் (?) கடைசி இரண்டைப் பற்றியும் எங்களுக்குள் அவ்வளவு பிரச்சினை இல்லை. (எங்களுக்குள் என்பது என்னையும் என் மனைவி ஜென்னியையும் குறிப்பது). அந்த இரண்டும் என்னை அண்டவே அண்டாது என்பதில் ஜென்னி உறுதியாக இருந்தாள். ஆனால் அந்த முதல் விஷயம்தான் உதைத்தது.

அதனால் என்னை ஒரு குடிகாரன் என்று நினைத்துவிடாதீர்கள். நான் குடிப்பதில்லை. ஆனாலும் என் நண்பர்கள் பலருக்கும் இந்தப் பழக்கம் இருந்தது. இதைப் பற்றி நான் ஆதரவாகப் பேசியதுதான் ஜென்னியை கலவரப்படுத்தியது என்று சொல்ல வேண்டும்.

இப்படியான ஒரு தினத்தில்தான்.

- சுந்தரம்.

என் வீட்டு முகவரி இவனுக்கு எப்படித் தெரிந்தது?

குடித்திருந்தாலும் சுந்தரம் புத்திசாலி. என் எண்ண ஓட்டத்தைப் புரிந்துகொண்டு விட்டான்.

“நீதானே உன் விலாசம் கொடுத்தாய்? ஞாபகம் இல்லை? இதோ பார்.”

- சொல்லிக்கொண்டே தள்ளாடியபடி தன் ஜோல்னாப் பையிலிருந்து டைரியை எடுத்து பக்கத்தையும் புரட்டிக் காண்பித்தான்.

உருப்பட்டாற்போல்தான். அவன் டைரியில் என் முகவரியை நானே என் கைப்பட எழுதியிருந்தேன்.

‘இப்போது ஜென்னி வந்து பார்த்தால் என்ன சொல்வது? இவனை எப்படி பாதுகாப்பாக வெளியேற்றுவது? நாளைக்கு ஆபீஸ் வேறு இருக்கிறதே?’ என்று பலவிதமாய் குழம்பிக்கொண்டிருந்த போது ஜென்னியே வந்துவிட்டாள்.

அவளிடம் சுருக்கமாக அறிமுகப்படுத்தினேன். விமானம் திடீரென்று நடு வானில் பழுதடைந்துவிட்டால் ஒரு விமானியின் மூளை எவ்வளவு சடுதியில் வேலை செய்யுமோ அந்த அவசரத்தில் யோசிக்க ஆரம்பித்தது என் மூளை.

“சரி சுந்தரம்... கிளம்பு... பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் வந்து உன்னை ஏற்றி அனுப்புகிறேன்” என்றேன்.

“என்னாழ் நழக்க முழியாது, அதனால்தான் உன் வீழ்முக்கு வந்தேன்” என்று பதில் சொன்னான் சுந்தரம்.

இப்போது இவனை தங்கச் சொல்லிவிட்டு பிறகு ஜென்னியிடம் பிரச்சினை வைத்துக் கொள்வதில் எனக்கு இஷ்டம் இல்லை.

“பரவால்ல... என் தோளைப் பிடிச்சுக்கிட்டு நட... பஸ் ஸ்டாண்ட் பக்கத்திலதான்” என்றபடி கைத்தாங்கலாகவே அவனை அழைத்துக் கொண்டு கிளம்பினேன்.

தெருமுனை தாண்டி மெயின் ரோடு வரை சமாளித்து நடந்தவன் பஸ் ஸ்டாண்ட் வருவதற்குள் தரையில் சாய்ந்துவிட்டான்.

தூக்கிவிட்டேன். மறுபடியும் விழுந்தான். நல்ல பளுவாக இருந்தான். இல்லாவிட்டால் விக்கிரமாதித்தன் வேதாளத்தைத் தூக்கிக்கொண்டு போவது போல் போய்விடலாம்.

எல்லோரும் எங்களை வேடிக்கை பார்த்துக்கொண்டே சென்றார்கள். அவர்கள் என்னையும் அவனோடு சேர்த்தே நினைத்திருப்பார்கள் என்பது கொஞ்சம் அவமானமாக இருந்தது.

திடீரென்று போலீஸ் பயமும் தொற்றிக்கொண்டது. இரவில் வரும் ரோந்துப் போலீசார் எங்கள் இருவரையும் அள்ளிப் போட்டுக் கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? இரவு முழுவதும் லாக்கப்பில் அல்லவா இருக்க வேண்டும்? ஜென்னி என்னவெல்லாம் நினைத்துக் கவலைப்படுவாள்?

என்ன இது முட்டாள்தனம் என்று நொந்துகொண்டேன். முகவரியைக் கொடுத்ததே தவறு. அதைவிடத் தவறு, இந்த நிலையில் இவனை இங்கே அழைத்துக்கொண்டு வந்தது...

இவ்வளவு யோசனைகளுக்கிடையிலும் அவனை நான் தூக்கி விடுவதும் அவன் கீழே விழுவதுமான காட்சி தொடர்ந்து கொண்டேதான் இருந்தது.

எவ்வளவு நேரம் ஆகியிருக்கும் என்றே தெரியவில்லை. சுந்தரத்தின் வேஷ்டி சட்டையெல்லாம் சேறும் சகதியுமாய் ஆகியிருந்தது.

களைப்பும் சோர்வுமாய் அந்த நடைபாதையிலேயே உட்கார்ந்தேன்.

சாலை ஓரத்தில் தேங்கிக் கிடந்த தண்ணீரில் விழுந்திருந்த சுந்தரத்தின் வாயிலிருந்து விளங்காத சொற்கள் பல வெளியேறிக் கொண்டிருந்தன.

ஒருகணம் இவனை இப்படியே போட்டு விட்டுப் போய் விட்டால் என்ன என்று தோன்றியது. பிறகு அப்படித் தோன்றியதற்காக எனக்குள் நான் கூனிக் குறுகிப் போனேன்.

சில சந்தர்ப்பங்களில் மனிதனுக்கு எவ்வளவு பாதகமான யோசனைகளெல்லாம் வருகின்றன என்று ஆச்சரியமும் கொண்டேன்.

இப்படியே நீண்ட நேரம் போராடி வீட்டுக்கு அவனைக் கொண்டு வந்து சேர்த்தபோது வாசல்படியிலேயே உட்கார்ந்திருந்தாள் ஜென்னி.

"என்னங்க இது... எங்கே போயிருந்தீங்க? எனக்கு என்ன செய்றதுன்னே தெரியலே" என்று சொன்னவளின் கண்கள் கலங்கியிருந்தன.

"அதெழ்ழாம் ஒன்னும் பயப்பழாதே தங்கச்சி. ஒரு சின்ன ப்ழாப்ழம். அழான் லேட்."

"சரி வா... சுந்தரம். தூங்கலாம்" என்றேன்.

"என்ன கண்ணாயிழம்... சாப்பிழாம எப்பழி நூங்கழது?"

"இந்த நிலைமையில் உன்னால் சாப்பிட முடியுமா?"

"சாப்பிழாம எனக்கு தூக்கம் வழாதே." குடித்திருப்பவனிடம் விவாதம் வைத்துக்கொள்ளக் கூடாது என்று எண்ணி "என்ன சாப்பிடறே, குழம்பு சாதமா? தயிர் சாதமா?" என்று கேட்டேன்.

"ழாத்திழிலெ நா சோழு சாப்பிழ மாட்டனே. இழ்ழி ழோசை..."

எங்கள் பேச்சை கவனித்துக்கொண்டிருந்த ஜென்னி என்னைத் தனியாக அழைத்து "தோசை மாவு இல்லை. உங்க ஃப்ரெண்ட் சப்பாத்தி சாப்பிடுவாரான்னு கேளுங்க... சட்டுன்னு போட்டுத் தந்திர்றேன்... தொட்டுக்க குழம்பு இருக்கு" என்றாள்.

"என்னது, ராத்திரி பன்னண்டு மணிக்கு சப்பாத்தியா? நீ வேற நாளைக்கு ஆபீஸ் போகணும்... விடு."

இப்படி நான் சொல்லி முடிப்பதற்குள் "சப்பாழ்ழி போகும்" என்ற பதில் வந்தது சுந்தரத்திடமிருந்து.

இரண்டு மூப்பாழ்மூழி - ஸாரி, சப்பாத்தி சாப்பிட்டுவிட்டு தட்டிலேயே கை கழுவி விட்டு அந்த இடத்திலேயே சுருண்டான் சுந்தரம்.

'இரவில் வாந்தி எடுத்து வைத்து விடாமல் இருக்க வேண்டுமே' என்று பயந்துகொண்டே வந்து படுத்தேன். அதற்குள் தூங்கிப் போயிருந்தாள் ஜென்னி.

காலை நேர அவசர ஓட்டத்தில் அவனை எப்படி கவனிப்பது என்ற கவலை எழுந்தது. எழுந்து கொள்வானா, எழுந்ததும் கிளம்புவானா, குளிக்க வேண்டும் சாப்பிட வேண்டும் என்று சொன்னால் என்ன செய்வது? அவசரத்தில் நானும் ஜென்னியுமே காலை டிபனை வீட்டில் சாப்பிடாமல் ஆபீசுக்கு எடுத்துக்கொண்டு போய்தான் சாப்பிடுவோம். சமயங்களில் டிபன் செய்யவே நேரம் இல்லாவிட்டால் ஆபீஸ் கேண்டீனில்தான் டிபன். கார்த்திக் (என் பையன்) எழுந்தால் சுந்தரத்தைப் பார்த்து என்ன நினைப்பான், அவனுடைய மதிப்பீட்டில் நான் எவ்வளவு தூரம் தாழ்ந்து போவேன், ஜென்னி இதையெல்லாம் எப்படி எடுத்துக்கொள்வாள் என்றெல்லாம் பலவாறாக யோசித்துக் கொண்டே என்னையும் அறியாமல் உறங்கிப் போனேன்.

காலையில் எழுந்து எழுப்பிப் பார்த்தேன். சில வித்தியாசமான சப்தங்களைக் கொடுத்துவிட்டு புரண்டு படுத்தானே ஒழிய எழுந்து கொள்ளவில்லை.

வாசலை ஒட்டி படுத்துக் கிடந்த அவனை கால்களைப் பிடித்து இழுத்து ஓரமாய்க் கிடத்தினேன்.

கார்த்திக் எழுந்து வந்து 'இந்த அங்கிள் யார்?' என்று கேட்டான். (அங்கிள் என்ற வார்த்தையை அவன் சற்று தயக்கத்துடனேயே சொன்னதாக எனக்குத் தோன்றியது).

"ஊரிலிருந்து வந்திருக்கிறார்... உடம்பு சரியில்லை."

கார்த்திக் பள்ளிக்குக் கிளம்பிச் சென்ற பிறகு சுந்தரத்தை மீண்டும் எழுப்ப முயன்றேன். மணி அப்போது ஏழரை. இன்னும் ஒரு மணி நேரத்தில் ஆபீஸ் கிளம்பியாக வேண்டும்.

"கொஞ்சம் மோர் வேண்டும்" என்றான் சுந்தரம். இருந்த தயிரில் கொஞ்சம் நீர் கலந்து மோராக்கிக் கொடுத்தேன்.

குடித்துவிட்டு மீண்டும் சாய்ந்துவிட்டான். அவன் தாடியில் சிந்தியிருந்த மோரைத் துடைத்து விட்டேன்.

அரை மணி நேரம் சென்று மீண்டும் எழுப்பிப் பார்த்தேன், பயனில்லை.

"நாம் ஆபீஸ் போக முடியாது. மட்டம் போட்டு விட வேண்டியது தான்" என்றாள் ஜென்னி.

சுமார் ஒரு மணி இடைவெளி விட்டுவிட்டு எழுந்து மோர் கேட்டான் சுந்தரம். மதியம் எழுப்பி மோர் சாதம் சாப்பிட வைத்தேன். சாப்பிட்டு முடித்ததும் கிளப்பி விட்டு விடவேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டேன்.

ஆனால் அதுவும் முடியாமல் போனது. சாப்பிட்டவுடன் மீண்டும் தூங்கிவிட்டான்.

எப்போது இவன் எழுந்து கொள்வான் என்ற கவலை ஏற்பட்டது எனக்கு. ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று ஆகி விட்டால் என்ன செய்வது என்ற பயமும் பிடித்துக்கொண்டது. இடையில் அம்மாவோ அப்பாவோ தாம்பரத்திலிருந்து வந்துவிட்டால் அவர்கள் என்ன நினைப்பார்கள்? அவர்களிடம் என்ன சொல்லி சமாளிப்பது? மனசில் என்னென்னவோ யோசனைகள் வந்து மோதிக் கொண்டிருந்தன.

நான்கு மணி ஆகியும் அவன் எழுந்து கொள்ளாததைப் பார்த்து அவன் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பினேன்.

"எழுந்து கொள் சுந்தரம்... நாங்கள் கொஞ்சம் அவசரமாக வெளியே கிளம்ப வேண்டும்" என்று சமயோஜிதமாக ஒரு பொய்யைச் சொன்னேன்.

எழுந்து முகம் கழுவிக்கொண்டவன் சட்டை அழுக்காகி விட்டது என்று சொல்லி என்னிடமிருந்து ஒரு சட்டை வாங்கிப் போட்டுக் கொண்டான்.

"என்ன கிளம்பலியா... வாங்க... அப்படியே உங்களோடயே நானும் கிளம்பிடறேன்."

'அடக் கடவுளே... இது என்ன புதுப் பிரச்சினை' என்று நினைத்தபடி இதை எப்படி சமாளிப்பதென யோசித்தேன். ஆனால் அன்றைக்கென்று பார்த்து என் மூளை ஒழுங்காகவே வேலை செய்தது. (பொதுவாக ஆபத்து நேரங்களில் என் மூளை ஸ்தம்பித்து விடுவதுதான் வழக்கம்!)

"இல்லை சுந்தரம்... ஜென்னி கிளம்ப முன்னே பின்னே ஆகும்... நீ கிளம்பு" என்றேன்.

"அப்படியா... அதுவும் சரிதான்" என்றவன் ஜென்னியிடம் "வர்றேன் தங்கச்சி... ரொம்ப சிரமம் கொடுத்திட்டேன். மன்னிக்கணும்" என்று இரண்டு கைகளையும் கூப்பி வணங்கிவிட்டுக் கிளம்பினான்.

வீதி வரை சென்று வழி அனுப்பிவிட்டு வீட்டுக்குள் தயக்கத்துடன் நுழைந்தேன். ஜென்னியை இனிமேல் எப்படி எதிர்கொள்வது என்ற பயம் கவ்வியது.

அப்போது "ஏங்க... உங்க ஃப்ரெண்ட் ரொம்ப பாவம் இல்லீங்க?" என்றாள் ஜென்னி. அவள் குரலில் உண்மையான வருத்தம் தொனித்தது.

அம்பலம் இணையதளம்

# அவ்வா

ஒரு ஐப்பசி மாதத்து அடைமழை இரவின் போதுதான் அந்த நாயின் தீனமான அழுகைச் சத்தம் கேட்டது.

அந்தத் திரு.வி.க. வீதியில் நாய்கள் அதிகம். அதிலும் விதவிதமான நாய்கள். பல இனத்தைச் சேர்ந்த நாய்கள். நறுக்கிவிட்டதைப் போல் குட்டி வாலும் நீண்டு மெலிந்த உடலும் கொண்ட டாபர்மேன் வகை நாய்கள் கூட தெருவில் கேட்பாரற்று அலைந்து கொண்டிருக்கும்.

எனக்கானால் நாய்களைக் கண்டால் பிடிக்காது. இரவுகளில் இந்த நாய்கள்தான் பெரும் பிரச்சினை. மரணத்தின் வருகையை அறிவிப்பது போன்ற இதுகளின் ஊளைச் சத்தத்தைக் கேட்டு உறக்கம் கலைந்து எழும் அவந்திகா 'சூ... சூ...' என்ற அதுகளை விரட்டிக்கொண்டிருப்பது இன்னொரு பிரச்சினை.

மனிதக் குரல் கேட்டு மிரண்டு ஓடி, தெரு மூலையில் நின்றுகொண்டு மீண்டும் ஓலமிடும். அல்லது தங்களது திராச் சண்டையை ஆரம்பிக்கும். அந்தச் சண்டையில் அடுத்த தெரு நாய்களும் கலந்துகொள்ளும். உச்ச ஸ்தாயியில் பல விதமாய்க்

குரைத்து மூர்க்கமாகச் சண்டையிடும். நீண்ட நேரம் நீடிக்கும் அச்சண்டை எந்த இலக்கும் இல்லாமல் தானாகவே ஓய்ந்து போகும்.

காலையில் எழுந்து "இரவெல்லாம் தூக்கமில்லை, கண் எரிகிறது" என்பாள் அவந்திகா.

பகலில் பரம சாதுவாக எல்லாம் குப்பைத்தொட்டியில் இரை தேடிக்கொண்டிருக்கும். அப்போது அதுகளைப் பார்த்தால் பாவமாக இருக்கும்.

எங்கள் தெரு குப்பைத்தொட்டி கொஞ்சம் விசேஷமானது. முனிசிபாலிடியில் குப்பைத்தொட்டி என்று நான்கு உயரமான சுவர்களும், கதவு அளவுக்கு ஒரு திறப்பும் கொண்ட ஒரு ஸ்ட்ரக்சரைக் கட்டிக் கொடுத்துக் "குப்பைகளைத் தயவுசெய்து குப்பைத்தொட்டியில் போடவும். உங்கள் சுற்றுப்புறம் அழகாக இருக்க உதவுங்கள்" என்று எழுதியும் கொடுத்திருந்தார்கள்.

ஆனாலும், எங்கள் தெரு ஜனங்கள் அந்தச் சுவர்களுக்கு உள்ளே போடாமல் மிகச் சரியாக வெளியில்தான் குப்பையைப் போடுவார்கள். சுவரைச் சுற்றிலும் குப்பை மலையாய்ச் சேர்ந்த பிறகு, குப்பையை உள்ளே போட நினைக்கும் சிலர் கூட சுவரை நெருங்க முடியாமல் வெளியிலேயே போட்டு விட வேண்டியிருக்கும்.

"சிவிக் சென்ஸே இல்லாத ஜனங்கள். இவ்வளவு பெரிய குப்பைத் தொட்டியைக் கட்டிக் கொடுத்தும் எங்கே போடுகிறார்கள் பாருங்கள்" என்பாள் அவந்திகா.

உண்மைதான். அளவில் பெரியதுதான். எப்போதாவது வெளியூர் போகும்போது, ஊருக்கு வெளியே இந்த மாதிரி ஸ்ட்ரக்சர்களைப் பார்த்திருக்கிறேன். மேலே கூரை ஒன்று இருக்கும். அதுதான் வித்தியாசம். அந்த ஸ்ட்ரக்சர்களுக்கு வெளியே நரிக்குறவர் குடியிருப்பு, அம்பேத்கர் குடியிருப்பு என்று ஏதாவது எழுதியிருக்கும்.

இந்தக் குப்பைத்தொட்டியைப் பார்க்க எனக்கு விநோதமாக

இருக்கும். அதில் என்னென்னவெல்லாம் கிடக்கும் என்று பார்க்க உள்ளுக்குள் ஒரு ஆசை கிளம்பும். இரை தேடும் நாய்களை விரட்டி விட்டு ப்ளாஸ்டிக் டப்பாக்களையும், பாலிதீன் கவர்களையும் சேகரித்துக் கொண்டிருப்பார்கள் சில பேர்.

ஆனால் எங்கள் தெருவை அடுத்த பாரதியார் தெரு ஜனங்கள் பரவாயில்லை. அங்கே குப்பைத்தொட்டியும் இல்லை. குப்பையும் இல்லை. சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு மையத்தில் உறுப்பினராகி மையம் அனுப்பி வைக்கும் வண்டிகளில் தங்கள் குப்பைகளைச் சேர்த்துவிடுகிறார்கள்.

அவந்திகாவுக்கும் அதில் சேர்வதில்தான் விருப்பம். ஆனால் அதற்கு அவள் வேலைக்கு முழுக்குப் போட வேண்டியிருக்கும். ஏனென்றால் மையத்தின் பையன் காலை பதினோரு மணிக்குத் தான் இந்தப் பக்கம் வருவான்.

பாரதியார் தெரு மக்கள், சுற்றுப்புறச் சூழல் மீது கொண்ட ஆர்வத்தால் அந்தத் தெரு நாய்களின் பாடு மிகவும் திண்டாட்டமாகப் போய் விட்டது. அன்றைக்குப் பாருங்கள். நான் ஆபிஸ் முடிந்து வந்து கொண்டிருந்தபோது அந்தக் காட்சியைக் காண நேர்ந்தது. எலும்பும் தோலுமாய் நறுங்கிப் போயிருந்த நாய் ஒன்று காய்ந்த மனிதப் பீயைத் தின்றுகொண்டிருந்தது. எனக்கு ஒரு மாதிரி மனசே சரியில்லாமல் போய்விட்டது.

அவந்திகா ஆபீசிலிருந்து வந்ததும் அவளுக்கு டீ போட்டுக் கொடுத்து விட்டு இதைச் சொன்னேன்.

“பாரேன். முறுக்கு சாப்பிடுவதைப் போல் அந்தப் பீயை ‘நறுக் முறுக்’குனு சாப்பிடுது. பாவமா இருந்திச்சும்மா.” அவ்வளவுதான். குடித்துக்கொண்டிருந்த டீயோடு வாந்தியெடுத்து விட்டாள்.

“சரியான முட்டாள்ப்பா நீ. இப்படியா டீ குடிச்சுக்கிட்டு இருக்கும் போது இதைச் சொல்றது?”

அன்று இரவு அவள் சாப்பிடவில்லை. தொடர்ந்து ஓக்களித்துக் கொண்டே இருந்தாள்.

"குடலே வந்திடும் போலருக்கே. இந்த வாந்தியை நிறுத்த ஏதாவது செய்யேன்."

காய்ந்த உப்பு நாரத்தங்காயைப் பிய்த்துக் கொடுத்துத் தூங்கச் செய்தேன்.

அவளைப் பார்த்தாலும் பாவமாகத்தான் இருந்தது. ஆனால் ஆச்சரியமாகவும் இருந்தது. பீ என்று சொன்னால் வாந்தி வந்து விடுமா? உங்களுக்கு வருகிறதா?

எனக்கு சான்ஸே இல்லை. எங்கள் ஜாதியே பீயெடுக்கும் ஜாதிதான். நான்தான் கொஞ்சம் படித்து கிடித்து வேறு வேலைக்கு வந்து விட்டேன்.

என் தம்பி இன்னமும் பீதான் எடுத்துக்கொண்டிருக்கிறான். அவனுக்கு என்னைப் போல் படிப்பு வரவில்லை. ஆனால் தைரியசாலி. பட்லர் இங்கிலீஷ் பேசுவான். அதைப் பார்த்து எனக்கு ஆத்திரமாக வரும். ஒழுங்காகத் தெரிந்தால் பேச வேண்டும். இல்லாவிட்டால் பேசக் கூடாது. ஒழுங்காகத் தெரிந்த எனக்கே இங்கிலீஷ் பேச வராதது இன்னமும் ஒரு குறையாகத்தான் இருக்கிறது. ஆனால், என் தம்பி அந்த பட்லர் இங்கிலீஷை வைத்தே பெரிய ஆளாகி விட்டான். ஜெர்மன் எம்பஸியில் வேலை. இங்கிலீஷையே தப்பும் தவறுமாக உளறிக் கொட்டும் அந்த நாய் இப்போது ஜெர்மனில் பிளந்து கட்டுகிறது. இப்போது ஜெர்மனியில் இருக்கிறான். டாய்லெட் க்ளீனர் வேலையில் இருந்தாலும் வீடு, கார் எல்லாம் வைத்திருக்கிறான்.

"ஏன்டா இப்படி ஜெர்மனிக்குப் போயும் நம்மோட குலத் தொழிலைத்தான் செய்யணுமாடா?" என்பேன்.

"அடப் போண்ணே நீ வேற... அந்த ஊரு டாய்லெட்டெல்லாம் நம்ம சினிமா ஸ்டாருங்க கன்னம் மாதிரி இருக்கும். இன்னோரு விஷயம். அந்த வெள்ளக்காரப் பயலுவளோட பீ கூட நாற மாட்டேங்குது."

"அப்படியா? அப்ப அதையே தின்னுக்கிட்டு அங்கயே இரு."

"தின்னாலும் தப்பில்லே. நம்ம அவ்வா குடுத்த சாப்பாட்டை விட நல்லாத்தான் இருக்கும்." (தம்பி சொன்னதைப் பற்றி விளக்க வேண்டுமானால் ஒரு ஆயிரம் பக்கங்களாவது எழுத வேண்டும். ஆனால் இந்தக் கதையோ நாய்களைப் பற்றியது. கதையின் இடையே புகுந்ததும் அல்லாமல் ஒரு முக்கியப் பிரச்சினையை வேறு கிளப்பி விட்டுவிட்டான். அதைப் பற்றி சுருக்கமாகப் பார்த்துவிட்டுக் கதையைத் தொடருவோம்).

அவ்வாவுக்கு சித்தூர்தான் சொந்த ஊர். அங்கே பிழைக்க வழியில்லாமல் தஞ்சாவூர் ஜில்லா வந்து எப்படியோ நாகூரில் கூடாரம் போட்டுவிட்டார்கள். பணக்கார வீடுகளின் எடுப்புக் கக்கூசில் பீ அள்ளுவதுதான் வேலை. அப்பா சின்ன வயதிலேயே செத்துவிட்டார். கக்கூஸ் எடுக்கும் வீடுகளில் அரிசியும், மிஞ்சிய சோறும் கொடுப்பார்கள். அரிசியை அப்படியே பத்திரப்படுத்திவிட்டு சோற்றை உபயோகித்துக்கொள்ளும். அந்தச் சோற்றைக் காய வைத்து எடுத்து வைத்துக் கொண்டு அவ்வப்போது வெந்நீர் விட்டுக் கலக்கிக் கொடுக்கும் அவ்வா. அந்தச் சோறு காயும்போது ஒரு நாற்றம் நாறும் பாருங்கள். பீ நாற்றமெல்லாம் பிச்சையெடுக்க வேண்டும். அரிசி இருந்தால் புயல் மழைக் காலங்களில் பட்டினி கிடக்காமல் வயிறு நிரம்பும். வெட்டாற்று வெள்ளம் ஊருக்குள் பாயும்போது அதன் தலைவாசலில் இருப்பது எங்கள் தொம்பங்குடிசைதான்.

சில வருடங்களுக்கு முன் நாகூர் போயிருந்தபோது அந்தப் பெயரை 'தொல்காப்பியர் சதுக்கம்' என்று மாற்றியிருந்ததைப் பார்த்தேன். ஆச்சரியமாக இருந்தது. தொல்காப்பியருக்கும் எங்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? அவரும் அவ்வாவைப் போல் பீ அள்ளியிருக்கிறாரா? அவர் எங்கள் ஜாதியைச் சேர்ந்தவரா? ஆனால் பெயர்தான் மாறியிருந்ததே ஒழிய மற்றதெல்லாம் அப்படியேதான் இருந்தது. ஊரில் எடுப்புக் கக்கூசுகள் மறைந்து ஃப்ளஷ் அவுட் டாய்லெட் வந்திருந்தது. எங்கள் ஜனமும் நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்களாக மாறியிருந்தார்கள். ஊரைப் பெருக்கிச் சுத்தம் செய்யும் வேலை.

அவ்வா என் தங்கையோடு அவள் வீட்டுக்குப் போய் விட்டது.

தங்கை கணவரும் என்னைப் போல் படித்தவர். போலீஸ் இன்ஸ்பெக்டர்.

அவ்வாவுக்கு என் மீது கோபம். நம் ஜாதிப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளாமல் அய்யர் வீட்டுப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டேன் என்று. அய்யர் இல்லை, அய்யங்கார் என்று சொன்னால் அதற்குப் புரியாது.

வாந்தியெடுத்து விட்டுத் தூங்கிக்கொண்டிருந்த அவந்திகாவிடம் இதையெல்லாம் சொல்ல நினைத்தேன். 'நீ எங்கள் அவ்வா மாதிரி பீ அள்ளியிருந்தால் என்ன ஆகியிருப்பாய் அவந்திகா?' அவந்திகா எனக்காக பெங்களூர் போர்க் சமைத்துத் தருகிறாள். மிக ருசியாக, ஐந்து நட்சத்திர ஓட்டலின் செஃப் போல. நன்றி. ஆனால், நான் இருபது வயது வரை மனிதப்பீயை மட்டுமே உணவாகக் கொண்ட கருப்புப் பன்றிகளையே சாப்பிட்டு வளர்ந்தவன் என்று உனக்குத் தெரியுமா? அதையெல்லாம் பேச ஆரம்பித்தாலே 'வேண்டாம், பழசை விடு' என்பாள்.

தெருவில் நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது. ஒருநாள் வீட்டு மாடியில் உலர்த்தியிருந்த என் சட்டைகளைத் துண்டு துண்டாய்க் கிழித்துப் போட்டிருந்தன நாய்கள்.

எனக்கு சட்டைகள் என்றால் மிகவும் விருப்பம். அழகழகான சட்டைகள். மாடியிலிருந்து கீழே பார்த்தேன். அடுத்த வீட்டு மாடியின் படிக்கட்டில் நான்கைந்து நாய்கள் தூங்கிக் கொண்டிருந்தன. சத்தம் செய்யாமல் கீழே வந்தேன். எவர்சில்வர் பாத்திரத்தில் வெந்நீர் வைத்து நன்றாகக் கொதிக்க விட்டு, வெகு பத்திரமாக என் மீது சிந்தி விடாமல் இரண்டு பக்கமும் துணி கொடுத்து மேலே எடுத்துச் சென்று மாடியின் கைப்பிடிச் சுவரில் வைத்து விட்டு ஓசையெழுப்பாமல் கீழே பார்த்தேன். நாய்கள் தூங்கிக்கொண்டிருந்தன. வெந்நீரை அவற்றின் மேல் சாய்த்தேன். செவிச்சவ்வுகளே கிழிந்து விடுகிறாற் போல் கத்திக்கொண்டு ஓடின நாய்கள்.

காட்டூர் கந்தன் இப்படித்தான் கத்தினான். அவ்வா அவன்

முகத்தில் வெந்நீரை ஊற்றியபோது.

அவ்வா நிறைய பன்றிகள் வைத்திருந்தது. ஆனால், அதற்கு உடம்பு முடியாமல் போனபோது பன்றிகள் ஒவ்வொன்றாய்க் குறைய ஆரம்பித்தன. அதை விற்று வருகிற பணத்தில்தான் என் படிப்பும், தங்கையின் படிப்பும் நடந்துகொண்டிருந்தது. நல்லவேளை. தம்பிக்குப் படிப்பு வரவில்லை. ஒன்பதாம் கிளாசுக்கு மேல் தாண்டாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்தான். இல்லாவிட்டால் அவன் செலவும் சேர்ந்திருக்கும்.

நான் பி.எஸ்ஸி. ஃபைனல் இயர் படித்துக்கொண்டிருந்தேன், ஹாஸ்டலில் தங்கி. ஸ்டடி ஹாலிடேஸில் ஊருக்கு வந்திருந்தேன். ஹாஸ்டல் ஃபீஸ், எக்ஸாம் ஃபீஸ் என்று பணம் கட்ட வேண்டியிருந்தது. வீட்டிலிருந்த கடைசிப் பன்றியையும் விற்று விட வேண்டியதுதான்.

“பொட்டப் பன்னி. குட்டி போட்டா நமக்குத்தான் நல்லது. விய்க்கணுமா அவ்வா?” என்று கேட்டபோது, “அதையெல்லாம் யோசிக்க முடியாது. நீ வேலைக்குப் போய்ட்டா நூறு பன்னி வாங்கலாம்” என்று சொல்லி விற்றுவிட்டது அவ்வா. விற்ற விஷயம் எப்படியோ பன்றிக்குத் தெரிந்து போய் வீட்டை விட்டு ஓடி விட்டது.

பதைபதைப்புடன் கையில் சுளுக்கியோடு எங்கெங்கோ தேடியலைந்தது அவ்வா. எங்குமே கிடைக்கவில்லை. கடைசியில்தான் விஷயம் தெரிந்தது. காட்டூர் கந்தன் எங்கள் பன்றியைப் பிடித்து விற்றுவிட்டான் என்று.

காட்டூர் கந்தன் திருச்சிக்குப் பக்கத்திலுள்ள காட்டூரில் ஒரு கொலை செய்துவிட்டு எங்கள் ஊருக்கு வந்து பதுங்கியவன். அதற்குப் பிறகு இங்கேயே தங்கிவிட்டான். பக்கத்திலுள்ள மேட்டுத்தெருவில்தான் அவன் குடிசை. எந்த வேலைக்கும் போகாமல் சிறு வியாபாரிகளை மிரட்டிப் பணம் பறித்து வாழ்ந்துகொண்டிருந்தான். அவ்வப்போது திருடுவதும் உண்டு. ஊரில் அவனைக் கண்டால் எல்லோருக்கும் ஒரு பயம் உண்டு.

அவ்வா நேராகக் கந்தனின் குடிசைக்குப் போனது. அப்போது

கந்தன் குடிசையில் இல்லை. பக்கத்தில் வந்து விசாரித்தவர்களிடம், "அவன் மட்டும் உண்மையிலேயே ஆம்புளையா இருந்தா என் வூட்டுப் பக்கம் வரச் சொல்லுங்க" என்று சொல்லிவிட்டு வந்துவிட்டது அவ்வா.

எனக்கு உள்ளுக்குள் திகில். 'இன்று ஒரு கொலைதான் விழப் போகிறது' என்று முடிவு கட்டிவிட்டேன். என் உயிரைக் கொடுத்தாவது அவ்வாவின் உயிரைக் காப்பாற்றுவது என திட்டம் செய்து கொண்டேன். 'நான் செத்தால் கூடப் பரவா யில்லை. அவ்வா செத்துவிட்டால் தம்பி தங்கைகளின் கதி?' ஆனால் அவ்வாவிடம் இது பற்றி நான் ஒன்றும் பேசிக் கொள்ளவில்லை.

அடுப்பைப் பற்ற வைத்து சோற்றுப்பானையை வைத்துவிட்டு அரிசியைக் களைய ஆரம்பித்தது. அப்போது அங்கே புயலைப் போல் வந்தான் கந்தன்.

"ஏய் வாடி வெளியே... எவடீ என்னெ ஆம்பளயான்னு கேட்டது?"

"டேய் கந்தா... எம் பன்னியத் திருடி வித்தியா நீ?"

"ஆமான்டீ, வித்தேன். என்னடீ பண்ணுவே? பீ அள்ளுற தேவுடியா செறுக்கிக்கு அவ்வளவு திமிரா? வாடீ... நான் ஆம்பளயா இல்லையான்னு காமிக்கிறேன்" என்று சொல்லியபடி ஒரே தாவாகத் தாவி அவ்வாவின் முடியைப் பற்றியிழுத்தான்.

நான் செய்வதறியாமல் திகைத்து நின்றேன்.

கண்ணிமைப்பதற்குள் ஒருக்கணம் அவன் கையைத் தட்டி விட்டு உள்ளே ஓடிய அவ்வா அடுப்பில் கொதித்துக்கொண்டிருந்த வெந்நீரை எடுத்து வந்து அவன் முகத்தில் ஊற்றியது.

இதைச் சிறிதும் எதிர்பார்க்காத கந்தன் பன்றியைப் போல் அலறினான். மறுபடியும் உள்ளே ஓடிய அவ்வா அடுப்பில் எரிந்து கொண்டிருந்த கொள்ளிக்கட்டையை எடுத்து வந்து அவன் ஆண்மையில் ஓங்கிச் செருகியது.

நல்ல வேளையாக அவ்வா ஜெயிலுக்குப் போகவில்லை. கந்தனை என்ன செய்வதென்று போலீஸே திணறிக்கொண்டிருந்தது போலும், விபத்தில் மரணம் என்று சொல்லி கேஸை முடித்துவிட்டது போலீஸ்.

அதற்குப் பிறகு அந்த நாய்கள் மாடிப்பக்கம் வரவில்லை.

காலையில் எழுந்ததும் முதல் வேலையாக சத்தம் வந்து கொண்டிருந்த திசையில் தேடிப் பார்த்தேன்.

ஒரு சின்னஞ்சிறிய நாய்க்குட்டி. பிறந்து சில தினங்களே ஆகியிருக்கும் போல் தோன்றியது. முட்புதரில் சிக்கிக்கொண்டு குளிரில் நடுங்கியபடி கிடந்தது. அருகில் சென்றபோது குரைத்தது.

கவனமாக முட்களை விலக்கி விட்டுக் குட்டியை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் வந்தேன். ஆர்வமாக வந்து பார்த்துவிட்டுச் சென்ற அவந்திகா கம்பளியைக் கொண்டுவந்து போர்த்தினாள். ஒரு கிண்ணத்தில் பால் ஊற்றிக் கொடுத்தேன்.

ஆவலுடன் குடித்துவிட்டு, ஓட முடியாமல் விழுந்தும் எழுந்தும் தடுமாறி வந்து என் மடியில் ஏறிக்கொண்டது அந்த நாய்க்குட்டி.

ஆறாம்திணை இணையம்

# உன்னத சங்கீதம்

*Notes on Skiing and Zen Buddhism* என்ற என்னுடைய நாவலை எழுதுவதன் நிமித்தமாக அப்போது நான் இமயமலைகளில் அலைந்து கொண்டிருந்தேன். லஹௌல் ஸ்பித்தியிலிருந்து கிளம்பி திபெத் சென்று மீண்டும் லஹௌல் ஸ்பித்திக்கே திரும்பிக் கொண்டிருந்தேன். வழித்துணையாக வந்தவள் காமினி. இமாசல பிரதேசத்தின் பூர்வகுடியைச் சேர்ந்தவள். கூடவே கஸான்ஸாகிஸின் புத்தகங்கள். இது பற்றி இந்தக் கதையில் இவ்வளவுதான் சொல்ல முடியும். மற்ற விவரங்கள் அனைத்தையும் Notesஇல் பார்ப்போம். ஆனால் அந்தப் பயணத்தில் நான் சந்தித்த ஒருவரைப் பற்றி இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. ஏதோ ஒரு மடாலயத்தை நோக்கிக் கால்நடையாகச் சென்றுகொண்டிருந்தார் அந்த புத்த பிக்கு. சில தினங்கள் நாங்களும் அவருடனே பயணம் செய்ய நேர்ந்தபோது ஓய்வுக்காக ஒரு இடத்தில் முகாமிட்டோம்.

